5-3-1990 ஆம் நாளிட்டு பொதுப்பணித்துறை அரசு செயலாளர் அவர்கள் அனுப்பிய நே.மு. கடிதத்தில் மின்வாரியத்திற்கு அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், நகராட்சிகள் ஆகியவை செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகை நிலுவையில் உள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார். தமிழ்நாடு மின்சார வாரியம் மிகுந்த நிதி நெருக்கடியில் இருப்பதால் மின் கட்டண பாக்கித் தொகையை உடனடியாக கட்ட தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார். ஆனால் அம்மக்களின் அன்றாடத் தேவையை மனதில் கொண்டு 30-6-1990-க்குள் மின் கட்டணத் தொகை கட்ட காலக் கெடுவும் அளித்துள்ளார். இது குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு 30-6-1990-க்குள் மின் கட்டண பாக்கித் தொகையை கட்ட துரித நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[திரு. கோ. சி. மணி] [1990 ஏப்ரல் 16

2. இந்நிலையில் மின் கட்டணம் செலுத்தாத மதுரை, உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் நிதி வசதி இல்லாததால் குடிதண்ணீர் மேல் நிலை தொட்டிகளுக்கு மின் கட்டணம் செலுத்தாததற்காக 7–4–1990 அன்று மின் துண்டிப்பு செய்ய எவ்வித அடிப்படைக் காரணமும் இல்லை.

3. இதே போல் மதுரை மாவட்டத்தில் தேனி, சின்னமனூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் கட்டணம் செலுத்தாததற்காக மின் இணைப்பு துண்டிக்கப்பட எவ்வித அடிப்படைக் காரணமும் இல்லை.

11–20 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 13 ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மின் இணைப்பிற்கு மின் கட்டணம் முழுவதுமாக செலுத்தத் தவறினால், முன் அறிவிப்பு எதுவுமின்றி மின் துண்டிப்பு செய்யப்படும் என்று மின்வாரியம் அறிவித்துள்ளது. உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம் ஊராட்சி மன்றங்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாக, ஊராட்சி மன்றங்களுக்கு மின் கட்டணமாக ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 250 ரூபாய் இதுவரை செலுத்தியுள்ளது. மேலும் தற்சமயம் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை செலுத்த உத்தமபாளையம் பொதுநிதியிலும், ஊராட்சிகளின் நிதியிலும் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், ஊராட்சிகளில் பணி புரிகிற சுகாதார சிப்பந்திகள், எழுத்தர்களுக்குக் கூட கடந்த ஆறு மாத காலமாக சம்பளம், பொங்கல் கருணைத் தொகை ஆகியவை வழங்கப்படவில்லை. எனவே, உத்தமபாளையம், ஊராட்சி ஒன்றியத்திலும், அனைத்து ஊராட்சிகளிலும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பிற்குரிய மின் கட்டணம், நிதி வரும் தேதி வரையில் தவணை நீடித்து தரவேண்டும். மின் துண்டிப்பு செய்வதைத் தவிர்க்க வேண்டும். மின் துண்டிப்புச் செய்வதைத் தவிர்க்கும்படியும், இலவசமாக விவசாயிகளுக்கு 10 குதிரைத் திறன் வரையிலுள்ள அந்த பம்பு செட்டுகளுக்கு சலுகை அளித்துள்ளதைப் போல, குடிநீர்ப் பிரச்சினை என்ற காரணத்தால், இதற்கும் சலுகை தரவேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எல்லைகளில் 1988 முதல் மார்ச் 1990 வரை மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை 98,788 ரூபாய். அதேபோல் சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்டவகைகளில் செலுத்த வேண்டிய தொகை 51,778 ரூபாய். சின்னமனூர் ஊராட்சி, உத்தமபாளையம் ஊராட்சி இவைகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்

வேண்டிய நிலை இருப்பதாக மின் வாரியத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது உண்மை. ஆனால் துண்டிக்கப்படவில்லை. 3–6–1990 வரை கால நீட்டிப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. இதற்கிடையில் இந்த நிதியை செலுத்திவிட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியினருக்கு, வேறு ஒன்றியங்களில் நிதி இருக்கக்கூடிய ஒன்றியங்களில் தவணை முறையில் பெற்று, அந்த நிதியைச் செலுத்தி, இந்தக் கடனை அடைப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, சின்னமனூர், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குடிநீர் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. அதைப்போல தமிழகத்தில் ஏராளமான ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளில் நிதிநிலை இல்லாத காரணத்தால், மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. மின் கட்டணம் விவசாயிகளுக்கு ஒரு குதிரை வேகத்திற்கு 75 ரூபாய் என்று இருந்ததை இந்த அரசு 50 ஆக குறைத்திருக்கிறது. ஆனால், கிராமக் குடிதண்ணீர்க் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார்களுக்கு ஏராளமாக மின் கட்டணம் வருகிறது. அதிலும் கிராமக் குடிநீர்க்கிணறுகளில் ஆழ்க் குழாய்க் கிணறுகளில் இப்போது எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தால், இரவு பகல் முழுவதும் மோட்டார் ஓட வேண்டிய காரணத்தால், ஒவ்வொரு மோட்டாருக்கும் மாதம் 600 ரூபாய் 700 ரூபாய் வரை மின் கட்டணம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலையில், ஊராட்சிகளில் பணியாற்றுகிற துப்புரவுத் தொழிலாளர்களுக்குக்கூட 5 மாதம், 6 மாதமாக அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத ஊராட்சிகள் ஏராளமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில், எத்தனை தவணை கொடுத்தாலும் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலைதான் ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் இருக்கிற காரணத்தால் இந்த அரசு கிராம மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குகின்றவைகளுக்காக மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள மோட்டார்களுக்கு இங்கே விவசாயிகளுக்குக் கொடுத்திருப்பதைப் போல, ஒரு குதிரை வேகத்திற்கு 50 ரூபாய் மின் கட்டணம் செலுத்துகின்ற அந்த வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, தேனி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், பாக்கி அனைத்தும் செலுத்தப்பட்டு விட்டது. இப்படி ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நெருக்கடி நிலை இருப்பதையொட்டி, அவற்றைப் பரிசீலித்து ஆய்வு செய்து, அரசாங்கத்திற்கு ஒரு தாக்கீது அனுப்பியதற்குப் பிறகு, அதைப்

பற்றி புனராலோசனை செய்யலாம் என்று அரசு கருதுகிறது. அதற்காக இந்த கமிட்டி விரைவில் அமைக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ரூ. 31,88,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்களை முறையாக நடத்துவதை உத்தரவாதம் செய்ய கூட்டுறவு தேர்தல் கமிஷன் ஒன்றை நிறுவ வேண்டுவதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு குறைந்த பட்சம் ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் துவக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

பற்றி புனராலோசனை செய்யலாம் என்று அரசு கருதுகிறது. அதற்காக இந்த கமிட்டி விரைவில் அமைக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ரூ. 31,88,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்களை முறையாக நடத்துவதை உத்தரவாதம் செய்ய கூட்டுறவு தேர்தல் கமிஷன் ஒன்றை நிறுவ வேண்டுவதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்திற்கு குறைந்த பட்சம் ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் துவக்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 31,88,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

1990 ஏப்ரல் 16]

(ஆ) கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,79,33,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

11-25 மணி

திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு ரேஷன் கடை அமைப்பது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,79,33,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற மக்களுக்கு குடும்ப அட்டைகளை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,79,33,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு குடும்ப கார்டுக்கும் மாதம் 20 கிலோ அரிசி ரேசன் கடை மூலமாக வழங்குவது சம்பந்தமாக விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,33,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வழங்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை *நான் படித்ததாக அவைக்

*223—286—ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

குறிப்பில் ஏற்றிக் கொண்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துரைகளை வழங்கிய பின்னர் பதிலுரையாக நான் விளக்க உரையைத் தெரிவிக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த கூட்டுறவு மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, கூட்டுறவுத் துறை என்பது 40, 45 ஆண்டுகளாக இந்தியத் திருநாட்டில் நல்ல முறையில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு இருந்தாலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலே நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருந்தது. இடையிலே ஒரு கால கட்டத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் தொய்வுற்று இருந்தன. நாம் வழங்கிய கடன்களை விவசாயிகள் பல்வேறு இயற்கைச் சீற்றத்தாலும், பல்வேறு காரணங்களுக்காக கட்ட முடியாமல் இருக்கும்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் சிறிது காலமாக நலிவுற்றிருந்தன. இதை மனதிற் கொண்டு, முன்பிருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு, அதே நேரத்திலே கூட்டுறவுச் சங்கங்களுடைய வளர்ச்சியை மனதில் கொண்டும், பல்வேறு வட்டிச் சலுகைகளை அளித்தும், சிறு விவசாயிகளுக்கு கடன் சலுகைகளை அளித்தும், விவசாயிகள் மகிழ்ச்சியுறத் தக்க வகையிலும், கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்ற நோக்கத்தோடும், வட்டிச் சலுகைகளையும், கடன் சலுகைகளையும் அளித்து, விவசாயிகள் பயனடையும் வகையில் பல சலுகைகளை அறிவித்திருந்தார்கள். அவர் அறிவித்த பிறகு, இங்கே பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் கூட பல்வேறு குறைகளைச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அறிவித்ததிலே ரூ. 69 கோடியை இங்கே அரசுக்கு அளித்துவிட்டு, மீதியிருக்கின்ற தொகையை அளிக்கவில்லை என்று இந்த மாமன்றத்திலே அடிக்கடி சொல்லப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்த சலுகையானது, ஓராண்டிலேயே ரூ. 70 கோடியை அரசாங்கத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுத்து விட்டார்கள். மீதம் இருந்த தொகையைக் கொடுப்பதற்குள் அவர் மறைந்து விட்டார். இந்த அரசினுடைய சுமை என்று இங்கேயிருக்கின்ற அமைச்சர்கள் சொல்வதோடு, சென்ற ஆண்டு ரூ. 39 கோடியை தள்ளுபடி பண்ணியிருக்கிறோம் என்று இந்த மாமன்றத்திலே கூட்டுறவுத் துறையில் சொல்லப்பட்டிருந்தது. அந்த ரூ. 39 கோடி என்பதை இங்கே பல்வேறு வகையான வட்டிச் சலுகையாக அறிவித்திருக்கிறார்கள். அந்த வட்டிச் சலுகைகள் என்பது, இங்கே தெரிவித்துக் கொள்வது எல்லாம், நானும் ஒரு விவசாயி என்ற முறையிலே இங்கேயும் பல விவசாய நண்பர்கள் இருப்பார்கள், எந்தெந்த வட்டிகள்; எந்தெந்த வகையில் அந்தச் சலுகைகள்

என்பது கூட என்னைப் போன்ற விவசாயிக்கே கூட புரியவில்லை என்றால், அங்கேயிருக்கிற சாதாரண மக்களுக்கு எப்படிப் புரியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் சொல்லும்போது இந்தக் கூட்டுறவுத் துறையில் அளிக்கின்ற சலுகைகளை எந்தெந்த வகையில், எந்தெந்த வட்டிகளுக்காக அளிக்கிறோம் என்பதை ஆங்காங்கே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னால் ஒரு அட்டவணையிலே எழுதிப் போட்டால் அங்கேயிருக்கின்ற விவசாயிகள் பார்த்துக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். அத்தோடு இந்தக் கூட்டுறவுத் துறையிலே விவசாயிகளுக்குக் கடன் அளிப்பதிலே, அங்கே, சொத்து மதிப்பு எல்லாம் எடுத்து, மேல் சங்கங்களில் கொண்டு போய்க் கொடுத்து, அங்கே அனுமதி பெற்றுக் கடன் தருகிறார்கள். அப்படிக் கடன் தருகிறபோது நீண்டகால மாகிறது. விவசாயிகள் குறுகிய பயிர் வைக்கும்போது அந்தக் கடன்கள் அவர்களைச் சென்றடைவது இல்லை. அதுமட்டுமல்ல. அந்த ஆஸ்தி பொறுப்பு எல்லாம் எடுத்த பிறகு, அவர்கள் பெற்றுக்கொண்ட பிறகு கடன் கோருகிறபோது பணத்தைஇருகூறாகக் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு 5 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு ரூ. 10,000 கடன் வழங்குகிறோம் என்றால், ரூ. 5,000 பணமாகத் தருகிறார்கள்.

11-30 மணி

அந்தப் பணத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்கிறார்கள். இதில் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் கவனிக்க வேண்டும். அப்படி இரண்டு பிரிவாக பணத்தைத் தருவதோடு மட்டும் அல்ல அதில் ஒரு பகுதியைப் பிரித்து பூச்சி மருந்தாகத் தருகிறார்கள். பணத்தை இப்படி இரண்டாகப் பிரித்துத் தருவதால் அந்த விவசாயிகள் பயன் அடையத் தக்க வகையில் அது தரப்படவில்லை என்பதை உங்கள் மனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். அதிலே ஒரு பகுதியை உரமாக தருவதிலே—உரங்கள் டான்பிட் என்ற நிறுவனத்திடமிருந்து மாவட்ட சங்கங்களுக்கு வந்து பிறகு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருகிறது. அந்த உரங்கள் ஒரே வகையான உரங்களாக சில கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்றன. அங்கே இருக்கிற நிலத்திற்கு ஏற்ப விவசாயிகளுடைய பயிருக்கு ஏற்ப உரங்கள் இடப்பட வேண்டுமென்றால் அந்த உரங்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே கிடைப்பதில்லை. டான்பிட் நிறுவனத்திடமிருந்து வருகின்ற உரங்களின் விலை ஒரு குறிப்பிட்ட விலையாக அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. நான் சொல்வதெல்லாம் வெளியே இருக்கிற உரக் கடைகளில் தங்களுடைய லாபத்தைக் கூட குறைத்துக் கொண்டு, அதாவது பல சதவீதத்தைக் குறைத்துக் கொண்டு, அதாவது இன்றைக்கு 60 ரூபாய்க்கு ஒரு பூச்சி மருந்து விற்கின்றது என்றால் அவர்களுடைய கமிஷன் 5 ரூபாய். ஆனால் நிறைய விற்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவர்கள் போட்டி போட்டு 56 ரூபாய்க்குக் கொடுப்பதற்கு முன் வருகிறார்கள். ஆனால் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே இருப்பவர்கள் கமிஷனை அதிகமாக வைத்து 60 ரூபாய்க்கு

ஒரு ரூபாய் கூட குறைக்க முடியாது என்ற நிலையில் அந்த உரங்களை கட்டாயப் படுத்தி விவசாயிகள் எடுத்துத்தான் ஆக வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதினால் பாவம் விவசாயிகள் அந்த உரங்களை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்திற்கு உள்ளாகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது எல்லாம் விவசாயிகள் வேண்டுமென்றால், அதாவது விரும்புகிறவர்கள் உரத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று வையுங்கள் இல்லை என்றால் அதை கேஷ் ஆகவே அதாவது பணமாகவே விவசாயிகளுக்கு தருவதற்கு முன் வந்தால்தான் விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்று நம்முடைய தமிழகத்திலே அறிமுகமாகியிருக்கிற பூச்சி மருந்துகளிலே களைக்கொல்லி மருந்து என்பது மிகவும் முக்கியமானது. அது விவசாயிகளுக்கு மிகவும் தேவையான ஒன்று. ஆனால், தற்போது இரண்டு மூன்று மாதகாலமாக, அந்தப் பூச்சி மருந்துகள் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைப்பது இல்லை. இந்தப் பூச்சி மருந்து வாங்க வேண்டி, மானியத்திலே பூச்சி மருந்து வாங்க விவசாயிகள் சென்றால் அந்தப் பூச்சி மருந்து விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. ஆகவே, அதிலும் கேஷாக பணமாக விவசாயிகளுக்குத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமாக வட்டி விகிதாச்சாரத்திலே பெருவிவசாயிகள் என்றும் சிறு விவசாயிகள் என்றும் வட்டிகளை பிரிக்கிறார்கள். சலுகைகளைப் பிரிக்கிறார்கள். நான் கேட்பது எல்லாம் நம்முடைய நாட்டிலே பெரு விவசாயிகள் எங்கே இருக்கிறார்கள். நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு 15 ஏக்கர் வைத்திருப்பவர்கள்தான் பெரு விவசாயிகளாக கருதப்படுகிறார்கள். ஆனால், அவர்களும் அரசாங்கம் கொடுக்கும் அந்தப் பணத்தைப் பெற்றுத்தான் விவசாயம் பண்ணுகிறார்கள். அதிலே பெரிய விவசாயிகள் சிறிய விவசாயிகள் என்று பார்த்தால் எப்படி? விவசாயிகளுடைய கஷ்டம் ஒன்றுதான். ஆகவே, விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்த வட்டி விகிதாச்சாரத்தை ஒருமுனைப்படுத்த வேண்டும் என்ற என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசினர் நம்முடைய கூட்டுறவுத் துறை மூலமாகவோ அல்லது நேஷனல் வங்கி மூலமாகவோ விவசாயி

களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள் தேர்தல் காலத்திலே. அதிலே அங்கம் வகிக்கிற வகையிலே நீங்கள் இருப்பதால், அந்த அரசிலே பங்கு கொள்ளுகிற வகையிலே நீங்கள் இருப்பதால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற நிலையை நீங்கள் யோசித்து செய்தால் நன்றாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன். இதை நான் ஏன் கேட்கிறேன் என்றால் கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் அந்தக் கூட்டுறவுச் சங்க அதிகாரிகளிடத்திலே மற்ற சிப்பந்திகளிடத்திலே இதைச் சொல்லி பணத்தைப் போய் கேட்கிறபோது அந்த விவசாயிகளுக்கு சொல்லப்படுகிற பதில் என்னவென்றால் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள் —— மத்திய அரசு சொல்லியிருந்தாலும் அதையெல்லாம் மாநில சட்டமன்றம் என்ன சொல்கிறது என்று பார்த்துத்தான் அந்தக் கடனைத் தரவேண்டும் என்று சொல்கிற அளவிலே நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையை தெளிவுபடுத்தி விவசாயிகளுக்கு மீண்டும் அந்தக் கடன் கிடைக்கச் செய்து, அதை அவர்கள் மீண்டும் செலுத்தி, அந்தச் சங்கங்களை மீண்டும் உயிர்ப்பித்து செயல்பட வைத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைச் சொல்லி இந்தக் கொள்கையிலே தெளிவு இல்லை என்றால் இந்த ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களிலே நஷ்டம் ஏற்படுகிற நிலைமை ஏற்படும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன், அரசாங்கத் துறையிலே இருப்பவர்களுக்கும் தனியார் துறையிலே இருப்பவர்களுக்கும் பல்வேறு குடும்ப நலத் திட்டங்களின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் அளிக்கப்படுகிறது. அது போன்று விவசாயிகளுக்கும் கூட்டுறவுத் துறையிலே அந்த குடும்ப நலத் திட்டங்களுக்கானக் கடன்கள் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டத்தை புதுப்பித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு என்ன காரணம் என்றால் விவசாயிகள் ஏதோ விவசாயம் செய்கிறார்கள், பயிர் செய்கிறார்கள் பிறகு வருவதில் எதையோ திருப்பி கடனை அடைக்கிறார்கள். சில நேரங்களில் மானாவாரியாக பயிர் போடுகின்றவர்கள் நஷ்டம் அடைகிறார்கள். அவர்களுடைய வீடுகளிலே நல்ல காரியங்கள் நடக்கும்போது, 10 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால் ஒரு கல்யாணம் நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள் அல்லது வீடு கட்டுவதற்கு என்று வைத்துக் கொள்ளுங்கள் அந்த நேரங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுத்து உதவினால் அவர்கள் மிகப் பயன் அடைவார்கள். அவர்கள் இது குறித்து வெளியே சென்று வட்டிக்கு கடன் வாங்கினால் அந்தக் குடும்பம் சீரழிகின்ற நிலையில் போய் விடும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. அ. பாப்பா சுந்தரம்] [1990 ஏப்ரல் 16

11-35 மணி

அதே போல நகைக்கு கடன் தருகிறார்கள், நமது கூட்டுறவு வங்கியிலே. கூட்டுறவுச் சங்கத்திலே ஒரு வேடிக்கை $16\frac{1}{4}$ சத விகிதம் என்று ஆக்கியிருக்கிறார்கள். ஆனால், நேஷனலைஸ்டு வங்கிகளிலே 12 சதவீதம் தருகிறார்கள். நமது வங்கிகளிலே மட்டும் $16\frac{1}{2}$ சதவீதமும், அதைத் திருப்ப கொஞ்சம் தாமதம் ஏற்பட்டால் அதை 18 சதவீதம் என்று ஆக்கியிருக்கிறார்கள். இது மார்வாடி வட்டியை விடவும் கூட வருகிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். விவசாயச் சலுகைகளைப் பொறுத்த வரையில், அந்த வட்டியைக் குறைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன். அதோடு, இந்த கூட்டுறவுத் துறையிலே ரிசர்வ் வங்கி யிலிருந்து மாநில வங்கி, மாநில வங்கியிலிருந்து மத்திய வங்கி, மத்திய வங்கியிலிருந்து கீழே இருக்கின்ற வங்கி இப்படி 4 தட்டு களாக பிரித்துக் கொடுப்பதை விடவும், 3 விகிதாச்சாரத்திலே நிர்வாகச் செலவிற்காக வட்டி சதவிகிதத்தை குறைத்து, நேரடி யாக அங்கேயிருக்கின்ற சங்கங்களுக்கு இங்கேயிருந்து கொடுத்து விட்டால், அந்த வட்டி சதவிகிதம் குறையும். நிர்வாகச் செலவு குறையும். இந்தச் சுமை விவசாயிகளுக்கும் குறையும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல நிலவள வங்கியில் கடன் தருவதாக அறிவித் திருக்கிறீர்கள். அவர்களுக்கு விவசாயக் கடன்கள் நிலம் வாங்கு வதற்காகவும், மோட்டார் வாங்குவதற்காகவும், அடிக் கிணறு வெட்டுவதற்காகவும், சீர்திருத்தம் செய்வதற்காகவும் பல சலு கைகள் அளித்து, சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று கடன் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு சாதா ரண விவசாயி அங்கு கூட்டுறவு நிலவள வங்கியிலே கடன் பெறு வது என்றால் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதிலே, சட்டச் சிக்கல் இருக்கிறது. கூட்டுறவு நிலவள வங்கிக்குச் சென் றால், ஒருத்தருக்கு பூர்வீக நிலம் இருந்தால் அந்த நிலத்திற்குள்ள பத்திரம் வேண்டும் என்று சொல்கிறார்கள். பத்திரம் எங்கே இருக்கிறது ? நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒருவருக்கு சொந்த நிலம் இருந்தால் அந்த பத்திரம் இல்லாமல் இருக்கிறது. அதிலே சிக்கல் ஏற்படுகிறது. கூட்டுறவு வங்கியிலே நாம் முக்கியமாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது 600 அடிக்குள்ளே இருக்கின்ற கிணறுகளுக்கு லோன் இல்லை என்று சொல்லப்படு கிறது. அப்படி கிணறு வெட்டுவதற்கோ, மோட்டார் வாங்கு வதற்கோ கடன் வசதி அளிக்கப்படுவதில்லை. இன்றைக்கு வளர்ந்து வருகின்ற சமுதாயத்திலே பசுமைப் புரட்சி என்று சொல்கிறோம். கிணறுகளை அடிக்கடி பக்கத்திலே வெட்டி பாசன வசதியை உண்டாக்குகின்ற நேரத்திலே, உணவு உற் பத்தியைபெருக்குகின்ற நேரத்திலே இதையெல்லாம் கவனத்திலே கொண்டு,அந்தச் சட்டத்தை எளிதாக்கி, நீங்கள் கூட்டுறவு வங்கி கள் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் பெறுவதற்கு, ஆவன செய்

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சிறப்பு அங்காடிகளிலே—பல வகைகளிலே பல கிராமங்களிலே இருந்தாலும்—சில அத்தியாவசிய பொருள்கள் தட்டுப்பாடு இருக்கிறது. உதாரணமாக கிராமப்புறத்திற்கு தேவையான மண்ணெண்ணை, பாமாயில், சர்க்கரை போன்ற பொருள்கள் சில கடைகளில் கிடைப்பதில்லை. நீங்கள் சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் சொன்னதெல்லாம், ஏதோ மத்திய அரசு மேலேயிருந்து பாமாயில் தரவில்லை என்று சொன்னீர்கள். இப்போது உங்களைச் சார்ந்த அரசு இருக்கிறது. நீங்கள் பாமாயிலைப் பெற்று இங்கே எங்களுக்கு எல்லாம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், எண்ணை என்பது எட்டாத விலையில் இருக்கிறது. அது ஏழை எளியவர்கள் சிந்திக்க முடியாத விலையில் இருக்கிற காரணத்தால் பாமாயில் இந்த நேரத்தில் மிக மிக முக்கியமாக தேவைப்படுகிற ஒரு அம்சமாக இருக்கிறது.

அதோடு கூட்டுறவுத் துறையிலே பல்வேறு கட்டங்களிலே தேர்தலை அறிவித்தீர்கள். இரண்டு முறை தேர்தலை அறிவித்து அரசால் செலவு செய்யப்பட்டும், தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு முறையிலே தேர்தல் வந்தால்தான் கூட்டுறவு நாட்டுயர்வு என்பதற்கு ஒப்பாக அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே இருக்கின்ற அதிகாரிகள், அங்கே இருக்கின்ற கூட்டுறவில் இருக்கின்ற விவசாய மக்களை அதிகம் தெரியாதவர்கள். அவர்களை புரிந்துக் கொள்ளாதவர்கள். அங்கே இருக்கின்ற லோக்கல் பாடி என்பவர்களை வைத்தால்தான் அங்கே சிறப்பாக பணி நடைபெறும் என்பதை என்னுடைய கொள்கையாகச் சொல்லி, தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியில் இருக்கின்ற மணப்பாறைக்கு குடிநீர்த் திட்டம் வழங்குவதாக சென்ற வாரம் சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறீர்கள். நமது மாண்புமிகு முதலமைச்சருடைய தொகுதி என்னுடைய தொகுதி. நானும் முதலமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வருகின்ற நேரத்திலே அங்கே இருக்கின்ற மணப்பாறைக்குக் குடிநீர் வழங்குவதற்கு அடிக்கல் நாட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

***டாக்டர் து. இருஷ்ணமூர்த்தி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றாரும் போற்றத் தக்க வகையிலே இலக்கியச் சுவையுடன் நிதிநிலை அறிக்கையை படைத்துள்ள என்னுடைய ஒப்பற்றத் தலைவருக்கு வணக்கத்தையும், மானிய கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

11–40 மணி

இன்றைய மானியக் கோரிக்கையிலே கூட்டுறவுத் துறைக்கும், நுகர் பொருள் கழகத்திற்கும் செயல்பட கிட்டத்தட்ட 32 கோடி ரூபாயும், $3\frac{3}{4}$ கோடி ரூபாயும் முறையே அமைச்சர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். இந்த இரண்டு துறைகளும் பொது மக்களுடைய அன்றாட வாழ்க்கையிலே மிக நெருங்கிய தொடர்புள்ளவை. அது வயிற்றுப் பசியைப் பொறுத்தது என்ற காரணத்தாலே, அதை நாம் ஒதுக்கி, அவர்களுக்கு அளிப்பதிலே மாற்றுக் கருத்து இல்லை.

ஆயினும், இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய நோக்கமானது பல வகைப்பட்ட முறையிலே, நடுத்தர, பின் தங்கிய, மற்றும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் பல்வேறு வங்கிகளின் மூலமாகவும், கார்ப்பரேஷன் மூலமாகவும், குறுகிய கால நிதியுதவி, குறுகிய கால, நீண்ட கால நிதியுதவி, வேளாண்மைக்காகவும், மற்றும் வேளாண்மை சார்ந்த பண்ணைகள் அமைக்கவும் வழங்குவதன் மூலமாகவும், கைவினைஞர்கள் சுயமாக கைத்தொழில்கள் அமைக்கவும், நலிந்தோர்களுக்கு கைத்தொழில்களுக்கு வேண்டிய உபகரணங்கள் அளிப்பதன் மூலமாகவும் நல்ல பணியாற்றுகிறது. அதன் நோக்கமும் நன்கு செயல்படுகிறது. என்றாலும், நமது முதல்வர் அவர்கள் அறிவித்ததைப் போல, கையெழுத்திட்ட மை உலரும் முன் அந்தப் பயன் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற எண்ணத்திற்கும், தலைவருடைய நோக்கத்திற்கும் ஈடாக இருக்கிறதா என்றால் அது கேள்விக்குறிதான். இத்தகைய குறைகளை அகற்ற, அலுவலர்கள் தங்கள் மெத்தனப் போக்கைக் கொஞ்சம் கைவிட்டு,உணர்வு பூர்வமாக செயலாற்ற முனைந்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், இதற்கெல்லாம் காரணம், என்னவென்றால் கடந்த காலத்தில் அவர்கள் அவ்வாறு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். என்றால் அது மிகையாகாது. அதை அவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இதிலே முக்கியமாக, அந்தக் கடனுதவிகள், குறுகியக் கால கடனாயினும் சரி, குறுகிய, நீண்ட காலக் கடனாயினும் சரி, அது எந்தப் பயனுக்காக விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறதோ, விவசாயி என்பவர்கள் அநேகமாக பெரும்பான்மையோர் எந்த விவரமும் அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது, அவர்கள் விவரம் தெரியாமல் அந்தத் தொகைகளை, அந்த மானியங்களை வேறு விதமாக செலவிட்டு, அதைத் தங்களுடைய தொழிலுக்கோ, விவசாயத்திற்கோ முன்னேற்றம் ஏற்படாத நிலையில் பழைய நிலையிலே,இருந்து கொண்டிருப்பதை நேரடியாகக் காண்கிறோம். ஆகவே, அந்தக் கண்

1990 ஏப்ரல் 16] [டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி]

காணிப்பாளர், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இதைக் கருத்தில் கொண்டு, அந்த மானியத்தின் நிதியுதவியை விவசாயி, அந்தப் பயனை அடைய வேண்டிய நிலைக்கு அதைப் பயன்படுத்துகிறாரா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். மாறாக, என்ன நடக்கிறதென்றால், மிக வருந்தத்தக்க வகையிலே அந்த விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய மானியத்தை அவர்களுக்குக் கிடைக்கவிடாமல் இவர்களே பங்கு போட்டுக்கொள்கிற அளவிலே ஒரு துரதிருஷ்டவசமான நிலைமையை நான் இங்கே குறிப்பிட்டு, அவைகளையெல்லாம் நிச்சயமாகக் களைந்தெறியப்பட வேண்டிய அளவில் ஒரு கடுமையான நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நுகர் பொருள் விநியோகம் என்று வரும் போது, விவசாயிகள் இங்கே மக்களுடைய உபயோகத்திற்காக உண்டாக்கிய விளை பொருட்களை, கொள்முதல் செய்வதிலேயும், அவற்றை நல்ல முறையிலே எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய செயலிலேயும், ''ஆர்ட்டிபிஷயல் ஸ்கார்சிட்டி'' எல்லாம் வந்துவிடாதளவிற்கு செய்ய வேண்டிய அமைப்பிலே, அமைப்பினுடைய சட்டத் திட்டங்களும் எழுத்தளவிலே நல்லமுறையில் இருந்தாலும் கூட இன்று மக்களின் ஜனத் தொகை தலைக்கு மேலே வெள்ளம் போய் விட்டது என்று சொல்லும் அளவிலே, ''எக்ஸ்ப்ளோஷன் ஆப் பாப்புலஷேன்'' என்ற நிலையிலே உள்ள அந்த நிலையில் கூட, நுகர்பொருள் கழகத்தினுடைய சேவையினாலே ஓரளவிற்கு எல்லோரும் தேவையான பொருட்களை வாங்க முடிந்தாலும் அங்கேயும் நிர்வாகக் கேட்டினாலே பல இழப்புக்கு, அறியாத மக்கள் ஆட்படுகிறார்கள்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமேயானால், அரிசியோ, சர்க்கரையோ வாங்கச் செல்லும்போது, 4 கிலோ, 5 கிலோ என்று அதனுடைய எடை இருக்க வேண்டுமென்றால், அதை ஆராய்ந்து பார்த்தால் குறைந்தது $\frac{1}{4}$ கிலோவோ, $\frac{1}{2}$ கிலோவோ நிச்சயமாக பெரும்பான்மையான இடங்களில் குறைகிறது. இதைப்பற்றி அந்த விற்பனையாளரிடம் நாம் ஏதாவது, என்ன இப்படிச் செய்திருக்கிறீர்கள், என்று கேட்போமேயானால்—கேட்டும் இருக்கிறேன்—பலர் வெளிப்படையாக கெஞ்சுகின்ற ஒரு தோரணையிலே, நாங்கள் என்ன செய்வது சார், எங்களுக்கு அந்த மூட்டைகளை, மூட்டை மூட்டையாக அவர்கள் கொடுக்கும் போதே அவை குறைகின்றது, நாங்கள் என்ன செய்வோம்? என்று அவர்கள் மன்னிப்புக் கோரும் அந்த ஒரு தொனியிலே சொல்லுகிறார்கள்.

11–45 மணி

இந்தத் தவறானது, இந்த முறைகேடானது நிச்சயமாக களையப்பட வேண்டும். ஏன் என்றால் கொஞ்சம் கொஞ்சமாக இருந்தது, இப்போது பல மூட்டைகளாக ஆகி, அதை எப்படியோ திருடி,

[டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி] [1990 ஏப்ரல் 16

எடுத்து அதை சுய நலத்திற்காக விற்று பலன் அடைகிறார்கள் சமூக விரோதிகள். அவர்களை எல்லாம் அந்த செயலில் ஈடு பட முடியாமல் தடுப்பதற்கு வேண்டிய எல்லாவிதமான எச்சரிக்கைகளை எடுத்து இந்த நுகர்பொருள் கழகத்தை சீராக, செம்மையாக நடத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதிரி சில தவறுகள் நடைபெறாமல் நீக்குவதற்காக இப்போது அமுதம் அங்காடிகளில் அனேகமாக உள்ளூரில் இருக்கும் சில நபர்களை தான் விற்பனையாளர்களாக அமர்த்தப்படுகிறார்கள். இந்த முறையை விடுத்து வேறு ஊரிலிருந்து அந்த விற்பனையாளர்களை அமர்த்தினால் இந்த முறை தவிர்க்க படுமா என ஆராய்ந்து அந்தப் பொறுப்பில் இருப்பவர்கள் அதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக அந்தக் கடைகளில் வழங்கப்படும் பொருள்கள் அரிசி, சர்க்கரை மற்ற பண்டங்கள் மாதத்தில் எந்த நாட்களில் அங்கே கிடைக்கும் என்று அதை பெறுபவர்களுக்கு தெரியாததால் ஏதோ ஒரு நாளில் வருகிறார். இவர் சொல்லிவிடுகிறார் இல்லை என்று. ஆனால், சிலருக்குக் கொடுக்கிறார்; ஆகவே, சிலருக்குக் கொடுத்து விட்டு அதற்குப் பின்னால் வந்தவர்களுக்கும், முன்னால் வந்தவர்களுக்கும் இல்லை என்று சொல்லிவிட்டு இதனால் மிகுந்த அந்தப் பொருட்களை தப்பான முறையில் அதிகமான விலைக்கு விற்று, அங்கே ஊழல் தாண்டவம் ஆடிக்கொண்டு இருப்பதை நாம் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும். இதை நிச்சயமாக களைந்து எறிய பொறுப்பில் இருப்பவர்கள் முனைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால், இவை எல்லாம் கடந்த கால பழக்கமாகி விட்டதால் அவர்களைக் கட்டாயப்படுத்தினால் ஒழிய அல்லது அதற்குரிய சிலருக்கோ, பலருக்கோ தண்டனைகள் வழங்கப்பட்டால் ஒழிய அவர்கள் திருந்த மாட்டார்கள் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு பொறுப்பில் இருப்பவர்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொள்முதலுக்கு வருவோம். இப்போது எங்கள் வட்டமான சிதம்பரம் வட்டம் ஏகபோக கொள்முதலின் பிடிப்பில் இருக்கிறது. ஆகவே, அங்கே விளைபொருள்கள் முக்கியமாக நெல் அரசு வைத்திருக்கும் ஏகபோக கொள்முதல் நிலையங்களில்தான் விற்று ஆகவேண்டும். வேறு வழி கிடையாது. அப்படி இருக்கும் போது விவசாயிகள் அங்கே தன்னுடைய விளை பொருளான நெல்லை எடுத்துச் செல்லும்போது ஒரு மூட்டைக்கு 70 கிலோ அதற்கு ஒரு விலை என்று நிர்ணயித்து

இருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். இந்த 70 கிலோ என்பதை சாக்கிற்காக ஒரு கிலோ என்று சொல்லி 71 கிலோ ஆகிறது. பிறகு சாம்பிளுக்காக எடுத்துக் கொள்கிறார்கள். ஏதோ ஒரு 100 மூட்டை, 50 மூட்டை வந்த இடத்திலே ஒரு 1/2 கிலோ, 1/4 கிலோ என்று சாம்பிள் எடுத்தால் போதும் என்ற நிலை இருக்கிறது. ஆக, இந்த அனுமதி அளவுக்கு மேல் எடுத்து அதை தவறாகப் பயன்படுத்திக் கொண்டு எடை போடும் வேலையில் இருப்பவர்களும், பொறுப்பில் இருப்பவர்களும் ஒவ்வொரு மூட்டைக்கும் ஒரு குவளையை, படியை வைத்துக்கொண்டு ஒரு கிலோ அளவுக்கு மேல் அள்ளி அள்ளி வைத்து விடுகிறார்கள். மேலும், மாற்றும்போது இந்த இடத்திலிருந்து அடுத்த இடத்திற்கு மாற்றும் போது அந்த நெல் மணி கீழே நிறைய இறைந்து இருப்பதை நானே பல நேரங்களில் கண்ணால் பார்த்து இருக்கிறேன். பின்னால் அதை அவர்கள் அள்ளிக் கொண்டு சென்று தன் சுய நலத்திற்கு வைத்துக்கொள்கிறார்கள். இப்படி எல்லாம் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து அவர்கள் உற்பத்தி செய்த விளைப்பொருட்களை அங்கே விவசாயிகள் பெரும்பாலான மக்கள் விபரமறியாதவர்கள் என்று சொன்னால் மிகையாகாது. அந்த அளவுக்கு இருப்பவர்களை ஏமாற்றி இப்படி எல்லாம் அவர்களிடமிருந்து 70 கிலோவுக்குப் பதிலாக 73 கிலோ, 74 கிலோ எடுத்து விடுகிறார்கள். போதாதற்கு சாம்பிள் என்று சொல்லி அதிலே 1 கிலோ, $1\frac{1}{2}$ கிலோ எடுத்து விடுகிறார்கள். கீழே விழுந்து கிடப்பது குறைந்தது ஒரு மூட்டைக்கு 1/2 கிலோ, 3/4 கிலோ, 1 கிலோ என்று அதையும் எடுத்து விடுகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு மூட்டைக்கு 4, 5 கிலோ ஏமாற்றி எடுத்துவிடுகிறார்கள். மேலும், பணம் பட்டுவாடா செய்யும்போது ஒவ்வொரு மூட்டைக்கும் ஏதோ காரணத்தைச் சொல்லி இடத்திற்கு ஏற்றவாறு 2 ரூபாய், 3 ரூபாய், 5 ரூபாய் கணக்குக் காட்டி ஏமாற்றி விடுகிறார்கள். ஏதோ, கணக்குக் காட்டி அவர்களை ஏமாற்றி விடுகிறார்கள்.

11–50 மணி

நானே நேரில் ஒரு இடத்தில் என்னப்பா, ஒரு மூட்டைக்கு 1/2 கிலோ எடுக்கிறாயே என்று கேட்ட போது, அந்தப் பையன் சொல்கிறான், சத்துணவுக்காக எடுக்கப்படுகிறது சார் என்று. இப்படி, ஒரு அரசின் மீது தப்பான ஒரு எண்ணத்தையும், ‘‘பேட் இம்ப்ரஷன்’’ என்று சொல்லக்கூடிய ஒரு எண்ணத்தையும் ஏற்படுத்துகிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். ஆகையினால், இம்மாதிரி தவறுகள் ஏற்படாமல் இருக்க அலுவலர்கள் நிச்சயமாக, அந்தப் பொறுப்பிலே விடும் நபர்கள் சரியாக நடப்பதற்கு நீங்கள் கண்காணிக்கச்சுக வேண்டும். அப்படி நடக்கத் தவறினால் நிச்சயமாக அவர்களைத் தண்டிக்கவோ, விலக்கவோ நீங்கள் யோசனை செய்யக் கூடாது. ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், சில நேரங்களிலே ஒரிருவரைப் பற்றி

நான் மேலதிகாரிகளிடம் இது பற்றி குறிப்பிட்டு கூறியபோது, அதை விசாரணை செய்யவோ அல்லது தண்டிக்கவோ இல்லாமல் மிக மிக அலட்சியப்படுத்தி இருக்கிறார்கள். நாமும் கடுமையாக ஏதாவது அவர்களிடம் சொல்லும்போதுதான் ஓரிருவரை அம்மாதிரி விசாரணை செய்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் பெரிய அதிகாரிகளுக்குத் தெரியுமோ தெரியாதோ, அவர்களெல்லாம் இதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று இந்த அரசுக்கு நல்ல பெயரைத் தேடித்தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு நல்ல நோக்கத்துடன் செய்யும் காரியங்களை கெடுத்து விடாமல் நடக்த வேண்டியது அவர்களுடைய பொறுப்பு என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, விவசாயிகளுடைய பிரச்சினையை நாம் கருணையோடு பார்க்க வேண்டும். ஏனென்றால், ஒரு பக்கம் அவர்களுடைய விலைபொருள்களுடைய விலையைக் கட்டுப்படுத்தி விடுகிறோம். மறுபக்கம், விவசாயிகளுக்கும் எல்லா மனிதர்களைப் போன்று, எல்லாவிதமான தேவையும் அவர்களுக்கு உண்டு. ஆனால், எல்லா விலையும் ஏறிக்கிடக்கிறது. இந்த நிலைமையிலே அவர்களுக்கு கட்டுப்பாட்டு விலையிலே கிடைக்கக் கூடியதை ஏமாற்றுக்காரர்கள் எடுத்துச் செல்ல விடக் கூடாது. அவர்கள் மனம் நோகக் கூடாது. இந்தியத் துணைக் கண்டமானது பெரும்பான்மையான விவசாயிகளைக் கொண்டது என்ற அடிப்படையிலே நீங்களெல்லாம் இதை கண்ணுற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்து, ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த வட்டமானது ஏகபோக கொள்முதலின் பிடியில் உள்ளது, தஞ்சாவூர் ஜில்லாவைப் போல. ஆனால், தஞ்சாவூர் ஜில்லாவிலே ஏகபோக கொள்முதலை அரசு செய்வதினாலே அங்குள்ள விவசாயிகளுக்கு பல சலுகைகளை அரசு அளித்திருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டங்களும் அம்மாதிரி ஏகபோக கொள்முதலுக்கு ஆட்பட்டிருக்கிறது. இருந்தாலும், தஞ்சாவூர் மாவட்டத்திலே இப்போது ஒரு விவசாயி, நீருக்கு வேண்டிய ஆதாரத்தை தயாராக வைத்துக்கொண்டு மின்னிணைப்பு கேட்டாரானால் உடனே கொடுக்கிறார்கள். ஆனால், சிதம்பரம், காட்டுமன்னார்குடி போன்ற இடங்களில் அப்படி கொடுப்பதில்லை. சாதாரணமாக கொடுப்பது போல, பிரையாரிட்டியிலிருந்து, 7, 8 வருடங்களுக்குத் தள்ளிப் போடுகிறார்கள். ஆகையால், அதை மாற்றி தஞ்சாவூர் மாவட்டம் மாதிரியே, இங்குள்ள விவசாயிகளுக்கும் ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 16] [டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி]

அதைப்போலவே, விவசாயத்திற்கு வேண்டிய, குறிப்பாக உழுவதற்கு டிராக்டர்கள் சலுகை வாடகையிலே தஞ்சாவூரிலே கிடைக்கிறது. அப்படி இங்கே கிடைப்பதில்லை. அதேமாதிரி பவர்டில்லர்கள் அங்கே அதிகமாகக் கொடுக்கிறார்கள். இங்கே, சலுகை அளவிலே கொடுப்பதில்லை. இதையெல்லாம் நீக்கி எப்படி தஞ்சாவூர் மாவட்டத்திற்கு சலுகை கிடைக்கின்றனவோ அதை தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டங்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட்டு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இந்த சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டமும் தஞ்சாவூரைப்போல் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டு இருக்கிறதேயொழிய அங்கே தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வந்து அங்கே ஒரு ஆயிரம் பேர் வேலை செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையை அமைப்பாரேயானால் அதை மிகவும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்காக நன்றி கூறவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைப் போலவே, அங்கே பாசனத்திற்கு வேண்டிய நீர் இப்போது குறைந்து போனதாலே கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ இலட்சம் ஏக்கருக்கு பாசனம் கொடுக்கக்கூடிய வீராணம் ஏரியானது இப்போது வரண்டு போய் இருப்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அந்த இலாக்காவினருக்குத் நிச்சயமாகத் தெரியும். ஆனால், அதைச் செம்மைப்படுத்த மழைத் தண்ணீரை சேர்த்து வைக்கவோ அல்லது வடவாற்றின் வழியாக லோயர் அணைக்கட்டிலேயிருந்து வரும் தண்ணீரை தேக்கி வைக்கவோ, அதைச் சேதப்படுத்தாமல் பயன்படுத்தவோ எந்த விதமான முயற்சியும் இதுவரையில் கிட்டத்தட்ட 7, 8 வருடங்களாக எடுக்கபடவில்லை. ஆகவே, இந்தத் தொகுதிக்காக அரசு இதை செய்துதரவேண்டுமென்று நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

11-55 மணி

அதைப்போல மத்திய அரசின் உணவு தானிய உற்பத்தி சிறப்புத் திட்டம். இந்தத் திட்டத்திலே, 8 மாவட்டங்களை இணைத்திருக்கிறார்கள். அதிலே தென்னாற்காடு மாவட்டமும் ஒன்று. ஆகையினால் விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசன வசதி மற்றும் விவசாய சாதனங்கள் எல்லாம் கிடைக்காத நேரத்தில், சிறப்பு உற்பத்தித் திட்டத்தின் மூலமாவாவது கிடைப்பதற்கு தேவையான காரியங்களையும் செய்து தருமாறு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. விவசாயிகள் தொடர்பான கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழக விவசாயிகள் கூட்டுறவுப் பயிர் கடன், நிலவள கடன் (டிராக்டர் கடன்கள் நீங்கலாக) போன்றவைகளை, அவர்கள் சிறு விவசாயிகளா, பெரிய விவசாயிகளா என்று வித்தியாசம் பார்க்காமல் அனைவருக்கும் கடன்களைரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் மத்தியிலே உள்ள தேசிய முன்னணி அரசு 10 ஆயிரம் ரூபாய் வரையில் உள்ள விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரே குழப்பமாக இருக்கிறது. பாங்கியில் வாங்கிய விவசாயிகள் கடன்களை ரத்து செய்வோம் என்று சொல்லியிருப்பது குழப்பத்தைத் தருகிறது. எங்கள் பகுதியில் பாங்கியில் கடன் வாங்குவது மிகவும் குறைவுதான். கூட்டுறவுச் சங்க கடன்கள்தான் அதிகம். அதை தேசிய முன்னணி அரசு தள்ளுபடி செய்யுமா ? அதற்கு தமிழக அரசு பூரண பொறுப்பேற்றுக்கொள்கிறதா என்பதை அமைச்சர் விளக்கமாக தனது பதிலில் தெரிவிக்க வேண்டும். அவரிடமிருந்து மிகவும் விளக்கத்தை எதிர் பார்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதில் மாநில அரசின் பங்கு என்ன, மத்திய அரசின் பங்கு என்ன என்னென்ன வகையான கடன்களை தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக அமைச்சர் அவர்கள் தனது பதிலில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாங்கு கடன்களை மட்டும் தான் மத்திய அரசு தள்ளுபடி செய்யுமா ? கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்யாதா என்பதையும் விளக்க வேண்டும். ஏழை விவசாயிகள், வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கிற ஏழை விவசாயிகள், பாங்க் கடன்கள் பல இடங்களில் வாங்கியிருக்கிறார்கள். ஒருசில பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்க கடனும், சில இடங்களில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கடன்களும் வாங்கியிருக்கிறார்கள். சில இடங்களில் ஆடு மாடு வாங்கவும், வண்டி மாடுகள் வாங்கவும் கடன்களை வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்களை மத்திய அரசு ரத்து செய்யுமா என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பாக பணி செய்பவர். நிச்சயமாக இதற்கு விளக்கம் சொல்வார் என்று கருதுகிறேன். கடந்த ஆண்டிலும் விவசாயிகள் கடன்களை ரத்து செய்வோம் என்று அமைச்சர் சொல்லியிருந்தார். இந்த ஆண்டு உணவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்று இருக்கிற மாண்புமிகு பொன்முத்துராமலிங்கம் அவர்கள் செயல்படுத்துவோம் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பைச் செய்வார்கள் என்று கருதுகிறேன்.

1990 ஏப்ரல் 16] [திரு. ஆர். சிங்காரம்]

தமிழக அரசு விவசாயிகளுக்கு எந்த காரியத்தையும் செய்யாமல், கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்யாமல் இருக்கிறது என்பது அவர்களிடம் ஒரு குறையாக இருக்கிறது. ஆகவே, அவர்களின் கடன்களை ரத்து செய்ய வேண்டும். ஆனால், இந்த அரசு கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற உணர்வோடு இல்லை. இதையெல்லாம் தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டும். அந்தக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும். விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம், உப்பு உற்பத்தியாளர் சங்கம் போன்ற ஏராளமான கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு தேர்தல் நடத்துவோம் என்று அறிவித்துக் கொண்டே இருக்கிறீர்கள். முதலமைச்சரும் சொன்னார், அமைச்சர்களும் சொன்னார்கள். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், அது நடக்காது என்பதுதான். கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடந்தால் காங்கிரஸ் பேரியக்கம், அண்ணா தி.மு.க. பேரியக்கம் போன்றவை ஒன்று சேர்ந்து, அந்த தேர்தலில் வெற்றி பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அந்த தேர்தலை நடத்த அரசாங்கம் முன்வராது என்பதை நான் பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன்.

ஏனென்றால், அங்கே உறுப்பினர்கள் சேர்க்கும்போது விவசாயிகளை மட்டும் சேர்க்காமல் எல்லா தரப்பு உறுப்பினர்களையும் சில மாதங்களுக்கு முன்பு சேர்த்திருக்கிறார்கள். அதற்காக ஆட்சேபம் நாங்கள் செய்திருக்கிறோம். நல்ல விவசாய சங்கங்களாக அவை செயல்பட வேண்டுமென்றால், விவசாயம் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை மட்டும் தான் அங்கே சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். கிராமங்களில் நிரந்தரமாக குடியிருப்பவர்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டுமென்று விதிமுறைகளையும் வழிமுறைகளையும் நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

12-00 மணி

அதே நேரத்தில் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுகிற பணியாளர்களைப் பற்றி ஒரு சின்ன வினா எழுப்ப விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், கூட்டுறவு மத்திய சங்க ஊழியர்கள், அரசு ஊழியர்கள் என்று இருக்கிறார்கள். உதாரணமாக பேராவூரணி கூட்டுறவுச் சங்கத்தை எடுத்துக்கொண்டால் அதிலே இருக்கின்ற செயலாளர் மத்திய வங்கியினுடைய

ஸ்டாஃப். அப்படி மத்திய வங்கியினுடைய ஸ்டாஃபாக இருக்கக்கூடிய அந்தச் செயலாளருக்கு கூட்டுறவுச் சங்கம்தான் சம்பளம் கொடுக்கிறது. 2,500 ரூபாயில் இருந்து 3,000, 3,500 என்று அவர்களுடைய மேக்ஸிமம் சர்வீஸ்-க்குத் தகுந்த மாதிரி சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்தக் கிளைதான் அந்த சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படி இல்லாமல் மத்திய வங்கிதான் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்ற நிலைைய ஏற்படுத்த வேண்டும். கிளை சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதால்தான் அவர்களுக்கு நஷ்டம் வருகிறது. மாதத்திற்கு 2,000 ரூபாய் என்றால் வருடத்திற்கு என்ன கணக்கு வருகிறது என்பது நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டும். எனவே தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் செயலாளர்களாக இருப்பவர்களுக்கு அரசோ அல்லது மத்திய வங்கிகளோதான் சம்பளத்தை அளிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கிளைச் சங்கம் சம்பளத்தை வழங்கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் சங்கத்தில் நஷ்டம் வரும்.

இப்படிப்பட்ட ஊழியர்கள் தமிழகத்தில் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும், அதன் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 17,382 கிராம கூட்டுறவு அங்காடிகளிலும் மொத்தம் பணிபுரிகின்ற ஊழியர்கள் சுமார் ஒரு இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் அரசு அளிக்கின்ற பல்வேறு வகையான திட்டங்களைக் கிராம மக்களுக்கு நேரடியாகச் செயல்படுத்துகிறவர்கள். உதாரணமாக கடன் வழங்குதல், உரம் மற்றும் இடுபொருள் வழங்குதல், அத்தியாவசியப் பொருட்கள் வழங்குதல், இலவச அரிசி வழங்குதல் போன்ற பணிகளை எல்லாம் இவர்கள் செய்கிறார்கள். இவர்களுக்கு என்ன சம்பளம் தெரியுமா? 300 ரூபாயிலிருந்து 600 ரூபாய் வரை. இவர்களுடைய க்வாலிஃபிக்கேஷன் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ். அதே நேரத்தில் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த ஒரு அரசு ஊழியருக்கு சுமார் 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாய் வரையில் சம்பளம் தரப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த சங்கத்தில் இருக்கின்ற இந்த ஊழியர்களுக்கு மிகக் குறைவான சம்பளம் தரப்படுகிறது. மத்திய வங்கி, கிளை வங்கி போன்ற எல்லா வங்கி ஊழியர்களையும் அரசே எடுத்துக் கொள்ள வேண்டும், அவ்வாறு எடுத்துக்கொண்டு அரசு ஊழியர்களுக்கான அனைத்துச் சலுகைகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். அப்படி வழங்கினால்தான் சம உரிமை கிடைப்பதாக அர்த்தம். ஆனால் அதைச்செய்யாமல் இந்த அரசு பின்னோக்கி போய்க்கொண்டிருக்கிறது. எனவே உடனடியாக அவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 16] [திரு. ஆர். சிங்காரம்]

நான் சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் பேசினேன். அவ்வாறு பேசிய பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒன்றை அறிவித்தார்கள். சொன்னதைச் செய்வோம் என்றார்கள். செய்வதைத்தான் சொல்வோம் என்றார்கள். ஆனால் சொன்னதைச் செய்யவும் இல்லை. செய்வதை நீங்கள் சொல்லவும் இல்லை. அந்த அளவிலே சென்ற அவையிலே நீங்கள் அறிவித்தீர்கள். 5 பெர்சன்ட் பஞ்சப்படி அடிப்படைச் சம்பளத்தில் கொடுப்பது என்றும் 10 சதவீதம் வருங்கால வைப்பு நிதியில் அமல்படுத்தப்படும் என்றும், கூட்டுறவுப் பயிற்சி பெறாத ஊழியர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களை நிரந்தரப் படுத்துவது என்றும் சம்பளத்தை மாற்றியமைப்பது என்றும் பயிற்சி பெற்றவர்கள் உள்ள கூட்டுறவு வங்கிகளில் உள்ள அயல் பணி ஊழியர்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அந்த ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் சென்ற கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு என்ன ஆயிற்று? ஒன்றுமே ஆகவில்லை. அந்த அறிவிப்பு அப்படியே அவையில் இருக்கிறது. அது புஸ்தகத்தில் வந்திருக்கிறது. ஆகவே சொன்னதைச் செய்வோம் என்று சொல்கிற இந்த அரசு உடனடியாக அதைத் தெளிவுபடுத்த வேண்டும் அவ்வாறு தெளிவுபடுத்தி அந்த ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும்.

அதே நேரத்தில் டெபுட்டி ரிஜிஸ்ட்ரார், ஜாயின்ட் ரெஜிஸ்ட்ரார் இவர்கள் எல்லாம் கவர்ன்மெண்ட் ஸ்டாப்ஃ. ஆனால் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற அந்த சொசைட்டி ஊழியர்கள் எல்லாம் அந்தக் கிளையினுடைய ஸ்டாஃப். அவர்களுக்கு அந்தக் கிளைதான் சம்பளம் கொடுக்க வேண்டும். இந்த வித்தியாசமான சூழ்நிலையை மாற்ற வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. படித்த டீ.ஆர். ஆஃபீசிலே இருக்கின்ற ஊழியர் 3,000 ரூபாய் சம்பளம் பெறுகிறார். ஆனால் பி.ஏ. படித்துவிட்டு கோ-ஆப்பரேட்டிவ் பேங்கிலே வேலை செய்கிற ஊழியர்களுக்கு 600 ரூபாய் தான் சம்பளம் தரப்படுகிறது. இது என்ன கொடுமை? எனவே தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வித்தியாசத்தைப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் ஒரே மாதிரியான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்றால் அவர்களை உடனடியாக அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு நிறுவனத்தில் கூட்டுறவு பயிற்சி பெறாமல் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு பயிற்சி கொடுக்க நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பயிற்சி பெறாதவர்களுக்கு தபால் மூலம்

பயிற்சி கொடுப்பதாகவும், அந்தப் பணியாளர்களை நிரந்தரம் செய்வதாகவும் கூறினார்கள். ஆனால் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

நியாயவிலைக் கடைகளில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கவில்லை. அவர்கள் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்திருந்தாலும் 250 ரூபாய்தான் சம்பளம். அதே நேரத்தில் அங்கே 'பேக்கர்' என்ற அளவையாளர்கள் என்ற ஒரு நியமனத்தை நீங்கள் போடச் சொல்லி இருக்கிறீர்கள். அதற்கான அரசாணை உண்டா? இல்லை. அதற்கான நேரடியான உத்தரவு உண்டா? இல்லை. ஆனால் அந்த அங்காடியிலே 10 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும். 26 நாட்களுக்கு அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு வழிமுறையில் டெலிபோனிலோ, அல்லது நேரிலோ சொல்லி இருக்கிறீர்களே தவிர வேறல்ல. ஒன்றிய செயலாளர் லெட்டர் கொடுத்தால் தான் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நியதியை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தாலே கட்சிகளைப் புகுத்தும், கட்சித் தொண்டர்களை அங்கே ஊக்குவிக்கும், அவர்களுக்கு வாழ்வளிக்கும் என்ற உணர்வுக்கேற்ப தான் நீங்கள் செயல்படுகிறீர்கள். தயவுசெய்து ஒரு நியாயமான உணர்வோடு நீங்கள் செயல்பட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

12-05 மணி

அந்த அளவிற்கு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். 3 டையர் சிஸ்டம் முறை வழங்கப்பட்டிருக்கிறது என்று. மாநில வங்கி ஒரு ரேட்; மத்திய வங்கி ஒரு ரேட்; அங்கே கிளைகளுக்கு என்று வருகிறபோது, ஒரு ரேட், அப்படி அங்கே வருகிறபோது, அவர்களுக்கு 2 சதவீதம் வட்டி; இவர்களுக்கு 2 சதவீதம் வட்டி. ஆக, ஏழும் நான்கும், 11 அல்லது 12 அல்லது 14 சதவீதம் வட்டி வருகிறது. ஆகவே, இந்த 3 டையர் சிஸ்டத்தை எடுத்து விட்டு, நேரடியாக அந்த கிளையை—சங்கமே, கொள்முதல் செய்ய வேண்டும் என்ற சூழ்நிலையை, இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு நல்ல யோசனை என்று நான் கருதுகிறேன். நிர்வாகத்தில் திறமை இருக்கிற நீங்கள், அப்படி திறமை இருப்பது உண்மையானால், இதை நேரடியாகச் செய்து, விவசாயிகளின் வட்டி சுமையை குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் சொன்னார்கள் — அந்த வங்கியிலே கடன்கள் கொடுக்கப்படுகின்றன; ஆனால் வட்டிகள் அதிகமென்று சொன்னார்கள். நகைகளுக்காக வட்டி வசூலிக்கப்படுகிறது. அது நேஷனலைஸ்டு பேங்கிலே 12 சதவீதம் வட்டி, ஆனால், அந்த

1990 ஏப்ரல் 16] [திரு. ஆர்.சிங்காரம்]

வங்கியிலே 14 சதவீதம் ; அதுவும் 3 டையர் சிஸ்டம். அதற்கு மேலே இருக்கிற ஸ்டேட் பாங்கிற்கு 1 சதவீதம் வட்டி, மிடிலில் இருக்கிற பேங்குக்கு 2 சதவீதம் வட்டி, ஆக இப்படிப்பட்ட கிளைகளில் அதிகமாக வட்டி வசூலிக்கப்படுகிறது. அதையும் குறைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது, ஆளுங்கட்சியினுடைய தலையீடு மிக அதிகமாக இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெளிவாக ஒன்றை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில், திருமருகல் ஒன்றியத்தில், கணபதி புரத்தில், சேஷமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஒன்று இருக்கிறது. அந்த வங்கியிலே நீண்ட நாள் பணிபுரிந்த பயிற்சி பெறாத திரு. ஜெயராமன் என்பவரை நிர்வாகம் நிய மித்தது. 'ஆடிட் ரிப்போர்ட்' டிலே, அவர் தவறு செய்திருக் கிறார் என்று கூறி, அவரை நிர்வாகம் நீக்கிவிட்டு, அதே நிர் வாகத்தில், பயிற்சி பெற்ற நீண்டநாள் பணியாற்றிய, சர்வீஸ் ஹாண்டான ஞானசுந்தரம் என்பவரை முறையாக அறிவித்தது. நிர்வாகம் இதை முறையாக அறிவித்த பிறகு, அந்தப் பணியில் பணிபுரிந்த ஜெயராமன் - 'சார்ஜ்' கொடுக்கவில்லை. டீ.ஆர். உத்தரவு போட்டிருக்கிறார் ; பாங்க் உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால், - 'சார்ஜ்' கொடுக்காமல், உயர்நீதிமன்றத்திற்கு வழக் கிற்குப் போயிருக்கிறார். வழக்கை மீறி, மீண்டும் வேலையில் சேர வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். தயவு செய்து, மாக்சிமம் பணி செய்த, சர்வீஸ் ஹாண்டான அங்கே பயிற்சி பெற்ற திரு. ஞானசுந்தரம் என்பவரையே நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து, அமைச்சர் அவர்களிடத்திலே சிபாரிசு வந்திருக்கிறது. அமைச்சர் அவர்களும் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற சில அமைச்சர்களும் போன் செய்து, போட்டிப் போட்டுக்கொண்டிருப்பதாகக் கேள் விப்பட்டேன். ஞானசுந்தரம் ஒரு கோஷ்டியாகவும், ஜெய ராமன் ஒரு கோஷ்டியாகவும் இயங்குவதாகக் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் ஈடுபட வேண்டாம் என்பதைப் பணிவன்போடு வேண்டிக் கொண்டு, நியாயத்தை நிலைநாட்டுங்கள் என்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில், நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில், 5 ஆயிரம் தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று அறிவித்தீர்கள். நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மே தின விழாவிலும், ஆகஸ்ட்டிலும் அறிவித்தார்கள். 5 ஆயிரம் தொழிலாளர்களும் உடனடியாக செப்டம்பரிலிருந்து,

நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். ஆனால், அந்த சொல் என்னவாயிற்று? செய்வதெல்லாம் சொல்வார்கள்; சொல்வதை செய்கின்ற அரசு, செய்வதைத் தான் சொல்கின்ற அரசு என்று சொன்னீர்கள். ஏன், இதுவரை செய்யவில்லை என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். அதற்கான அறிவிப்பு ஏதாவது இருக்குமா என்று பார்த்தேன்; கிடைக்கவில்லை.

அதே நேரத்தில், நான் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இங்கே செக் போஸ்ட் முறை இருக்கிறது. மாவட்ட பார்டரிலும் செக் போஸ்ட் இருக்கிறது. அந்த செக் போஸ்ட்டில் பணி யாற்றிய ரெவின்யூ துறையைச் சேர்ந்த, டெபுடி தாசில்தார் எல்லாம் அங்கு இல்லை. போராட்டத்திலே சென்று விட்டார்கள். அங்கே 'மீனியல்ஸ்,' ஒரு சாதாரண டெம்ரவரி ஹாண்ட்ஸ் மட்டும் போட்டுவிட்டு, ஒரு போலீஸ்காரரை மட்டும் உடனிருக்க செய்திருக்கிறார்கள். அங்கே பார்டரில் இருக்கிறவர்கள் நிரம்பக் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். மூட்டைகள் லாரி லாரியாகப் போய்க்கொண்டிருக்கின்றன. நான் நினைக்கிறேன், ஒரு வேளை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கழகக் கண்மணிகளுக்கு வாய்ப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்தப் போராட்டத்தை நீங்கள் முடிவுக்கு கொண்டு வராமல், நீட்டித்துக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளட்டும் என்ற காரணத்தினால்தான் நீங்கள் இவ்வாறு செய்துகொண்டிருக்கிறீர் கள். (மணியடிக்கப்பெற்றது).

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகிற பேச்சில், தொங்காம் போக்காக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உதவி செய்வதற்காகத்தான் இந்த ஸ்டிரைக்கை பயன்படுத்துகிறோம் என்ற அபாண்டமான குற்றச்சாட்டை, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி குறிப்பிட்டு, அவரிடத்தில் ஆதாரம் இருந்தால், அமைச்சரிடம் சொல்லலாமே தவிர, இப்படி, பொதுப்படையான குற்றச்சாட்டை, உறுப்பினர் கூறக் கூடாது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அவ்வாறு உறுப்பினர் பேசுவதை அனுமதிக்கக்கூடாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள், தன்னிடம் ஆதாரங்களை வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வர்கள் கடத்திச் செல்கிறார்கள் என்று சொன்னால், அவருடைய வாதம் சத்தான வாதமாக இருந்திருக்கும். மானசீகமான

கருத்துக்களைத் தெரிவிக்க முற்பட்டால் — எனக்கு வந்த தகவல்களையெல்லாம் நான் இந்த மன்றத்திலே திரு. சிங்காரம் அவர்களைப்போல் தெரிவிக்க ஆரம்பித்தால், திரு. சிங்காரம் அவர்களுக்கு நெருக்கடியான சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

12–10 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு சிங்காரம் அவர்கள் சொன்னதைப்பற்றி நாமெல்லாம் வருத்தப்படத் தேவையில்லை. அவர்கள் தன்னைப் போல நம்மை நேசிக்கிறார். கவர்னர் ஆட்சியில் அவர்கள் செய்ததை இந்த ஆட்சிக் காலத்தில் செய்கிறார்களா என்று சந்தேகப்படு கிறார்கள், அவ்வளவுதான்.

திரு. ஆர். சிங்காரம்: துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் ஆட்சியில் நியாயம் நடந்தது, நீதி நடந்தது என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் நியாயம் நடந்தது என்று சொன்னார்கள். ஒரு சில குறைகள் இருக்கலாம். அதற்காக நாம் வருந்த வேண்டிய அவசியம் இல்லை. தவறுகள் எங்கும் நடக்கலாம், அதை நான் இன்றும் ஏற்றுக்கொள்கிறேன். அன்றும் ஏற்றுக் கொண்டேன். கவர்னர் ஆட்சி என்பது காங்கிரஸ் ஆட்சி அல்ல. அது சுத்தமான கவர்னர் ஆட்சி, அதிகாரிகள் ஆட்சி. ஆகவே, அவர்கள் சொன்னார்கள். தி.மு.க. ஆண்டது, அ.தி.மு.க. ஆண்டது, காங்கிரஸ் ஆண்டது, நாங்கள் ஆளவேண்டாமா? ஆகவே, கவர்னர் ஆட்சியை எங்கள் ஆட்சி என்று சொன்னார்கள், ஆகவே, நீங்கள் ஆளுகிறபோது பாரபட்சம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள். மாண்புமிகு நேரு அவர்களிடம் கேட்டேன். அவர்கள் பதிலே சொல்லவில்லை. அவர் சொன்னது உண்மை.....—

திரு. ஐ. பெரியசாமி: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி கவர்னர் ஆட்சி காங்கிரஸ்காரர்களுக்காகவா அல்லது மக்களுக்காகவா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ''Point of Order''–இல் யார் மீதும் யாரும் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அதை இந்த அவை இனியும் அனுமதிக்காது. திரு. சிங்காரம் அவர்கள் அரை மணித்துளியில் முடித்துவிட வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : துணைத்தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கவர்னர் ஆட்சியை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தால் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்காது. அது எங்களுக்குத் தெரியாது. ஆளவும் உங்களுக்குத் தெரியும், எதிர்த்துப் பேசவும் உங்களுக்குத் தெரியும். எல்லா சக்தியும் உங்களுக்கு இருக்கிறது. பேசத் தெரிந்தவர்கள், பேசியே ஆட்சிக்கு வந்தவர்கள். எங்களுக்கு அதெல்லாம் தெரியாது. மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அதற்கு போக விரும்பவில்லை. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடத்தில் சரியாக முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு மணித் துளிகள் கூடுதலாகவே கொடுத்தாகிவிட்டது. பிரச்சினை இல்லாமல் பேசினால் முடித்து விடலாம்.

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதிலே ஒவ்வொரு ரூபாய் ஈரப்பதத்திற்கு என்று வசூலிக்கிறார்கள். அதற்கு ரசீது கிடையாது. பல முறை இந்த அவையில் இதுபற்றி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறித்துக்கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதியில் கட்டயங்காடு, கல்லூரணிக்காடு, ஒமியூர்பாலச்சேரிக்காடு, வத்தலக்காடு ஆகிய ஊர்களில் கிராம அங்காடிகள் துவங்க வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறேன். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, உடனடியாக அதைத் துவங்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அனைவருக்கும் புதிய கார்டுகள் வழங்க வேண்டும். புதியதாக கார்டு வழங்க எடுத்த நடவடிக்கையை ஏனோ நிறுத்திவிட்டீர்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. புதியதாக எல்லோருக்கும் கார்டு வழங்கப்படும். ஏழைகள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுக்கு வேட்டி, சேலை வழங்கப்படும், அரிசி வழங்கப்படும், உணவு வழங்கப்படும் என்று எல்லாம் சொன்னீர்கள். புது கார்டு வழங்க லிஸ்ட் எடுத்தீர்களே, ஏன் அதை மூடி வைத்து விட்டீர்கள், முடக்கி வைத்து விட்டீர்கள்? என்ன காரணம்? நிர்வாக திறமை இல்லையா? நிர்வாகத் திறமையை யாராவது கற்றுக் கொடுக்க வேண்டுமா? யோசனை கேளுங்கள். நாங்கள் சொல்கிறோம். உடனடியாக புதிதாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் இல்லாதவர்களுக்கு 100 சத வீதம் பரிசோதனைக்கு பின்னால் வழங்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே, அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது என்பதை மாண்புமிகு சிங்காரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் ; தலைவர் அவர்களே, அந்த ஆணை எங்களுக்கு வரவில்லை. தாலுக்கா ஆபீஸ்லே யாரும் கிடையாது. தாலுக்கா ஆபீஸ் எதுவும் இயங்கவில்லை. நுகர்பொருள் வாணிபக் கழகமும் சரி, ரெவின்யூ டிபார்ட்மென்ட்டும் சரி, எதுவும் இயங்கவில்லை. தயவு செய்து ரெவின்யூ டிபார்ட்மென்ட் அதிகாரிகளுடைய போராட்டத்தை விரைவாக முடிவிற்கு கொண்டுவர வேண்டும். செக் போஸ்ட் எல்லாம் மோசமாகி விட்டன. கிட்டத்தட்ட 26 நாட்களாக மினியல்சும், போலீஸ் காரரும்தான் இருக்கிறார்கள். ஏன் சார் அரிசி போகாது, நெல் போகாது? உடனடியாக அவர்கள் பிரச்சினைக்கு முடிவு ஏற்படுத்த வேண்டும். பொது மக்களுடைய பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. அவை ஒன்றும் தீர்க்கப்படவில்லை. ஆகவே, அவையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு மீண்டும் நன்றி கூறி, நான் கூறிய கோரிக்கைகளை, கருத்துக்களை அரசு கவனித்து, ஏழை மக்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய வகையில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

12-15 மணி

*திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கூட்டுறவு மற்றும் உணவு வழங்குதல் துறைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுதான் நாட்டுயர்வு என்று சொல்வார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் எல்லாம் உறுப்பினர்களாகச் சேர்ந்தவர்கள் நடத்துகிற ஒரு அங்கமாக நாட்டிலே விளங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை என்று சொன்னால், சாதாரண மக்கள் எல்லாம் சலுகைகளைப் பெற்று, தங்களுடைய அபிவிருத்திகளைச் செய்வதற்கு ஏதுவாக ஒரு இயக்கம் வேறு எதுவும் இல்லை. நாட்டிலுள்ள தேசிய வங்கிகள் எல்லாம் தெரிந்தவர்களுக்கும், அதிலே பணங்களைப் போடுகிறவர்களுக்கும் தான் கடன்களை வழங்குகிற ஒரு காலம் இருந்தது. அதற்குப் பின்னாலே கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் ஆரம்பித்து கிராமங்களிலே, கிராமத்தினுடைய தொடக்க வங்கிகள் எல்லாம் ஆரம்பித்து, அதிலே விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கியதன் மூலம் பயிர்களை அபிவிருத்தி செய்கிற ஒரு நல்ல நடவடிக்கையின் காரணமாக விவசாயிகள் நல்ல பலனைப் பெற்றார்கள். 1976 வரை கூட்டுறவுச்

சங்கங்கள் எல்லாம் மிகச் சிறப்பாக பணியாற்றின. 1976 வரை கூட்டுறவுச் சங்கங்கள் தான் நெல் கொள்முதலைக் கூடச் செய்தன. மிகச் சிறப்பாக இருந்தன. இப்போது இந்த சிவில் சப்ளைஸ் கொள்முதல் செய்கிறபோது, கூட்டுறவுச் சங்கங்களும் கொள்முதல் செய்தால் மிக நன்றாக இருக்கும். ஒருவருக்கொருவர் போட்டி மனப்பான்மையிலே கூட காரியங்களைச் செய்வார்கள். ஏன் என்றால், கூட்டுறவுச் சங்கங்களிலும் தராசுகள் இருக்கின்றன. சாக்குகள் இருக்கின்றன. எல்லா வகையான ஆவணங்களும் இருக்கிற காரணத்தால், அதையும், கூட செய்யலாம் என்று நான் என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கூட்டுறவுச் சங்கங்கள் கொஞ்ச காலமாக நலிந்திருக்கின்றன. காரணம் கடன் பெற்றவர்கள் எல்லாம் கொடுப்பதற்கு வழியில்லாமல் போய்விட்டது. 1976-லே தண்ணீர் வரவில்லை. அந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தை பொருத்தவரையில் மேட்டூரிலே இருந்து தண்ணீர் வராமல் விவசாயம் பாதிக்கப்பட்டது. விவசாயம் பாதிக்கப்பட்ட பின்னர் கடன்களை வாங்கியவர்கள் திரும்பச் செலுத்துவதற்கு வழியில்லாமல் போய்விட்டன. கடன்கள் நிலுவையிலே இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் தங்ளுடைய கடன்களைத் தள்ளுவார்களோ அரசாங்கம், தன்னுடைய கடனைத் தள்ளிவிட ஏதாவது பரிசீலனை செய்வார்கள் என்ற எண்ணத்திலே, விவசாயிகளுடைய காலம் எல்லாம் கழிந்து கொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இன்னும் கூட எந்த அரசாங்கம் வந்தாலும் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்யும் என்கிற எண்ணத்தில் தான் விவசாய மக்கள் எல்லாம் வாழ்கிறார்கள். இப்போது மத்திய அரசு 10 ஆயிரம் வரை கடனைத் தள்ளுபடி செய்யும் என்கிற நிலையிலே அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம், நாங்கள் எல்லாம் இந்த எண்ணத்தைச் சொன்னதற்குக் காரணம்—அரசாங்க ஊழியர்களுக்கு கிட்டத்தட்ட 445 கோடி ரூபாய் அளவிற்கு அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஏன் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஓரளவிற்குச் செய்தால் என்ன என்ற எண்ணம் கூட விவசாயப் பெருமக்களுக்கு இருக்கிறது. அது ஒருவேளை நியாயமான காரணமாகக் கூட இருக்கலாம். அந்த வகையிலே அந்த விவசாயக் கடன்களைத் தள்ளுகிற அளவிற்கு மத்திய அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் உள்ளதை 10 ஆயிரம் என்று சொல்வதை நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்க ஆவண செய்ய வேண்டும் விவசாயிகளில் அதுவும் பெருவிவசாயி, சிறு விவசாயி என்று வித்தியாசம் கூட இருப்பதாகச் சொல்கிறார்கள். பெருவிவசாயி, சிறு விவசாயி என்ற நிலை இல்லை. காரணம் விவசாயிகள் எல்லோருமே நலிந்த நிலையில்தான் இருக்கிறார்கள். அரசாங்கத்

1990 ஏப்ரல் 16] [திரு. எம். இராமச்சந்திரன்]

திற்குநெல்லைக் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டும். விளைகிற நெல்லை எல்லாம் அரசாங்கத்திற்குத் தரவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதுதான் சட்டமும்கூட. ஆகவே தனக்கு வைத்தது போக மீதம் உள்ளவைகளை அரசாங்கக் கொள்முதல் நிலையங்களுக்குத் தரவேண்டும் என்ற முறை இருக்கிறது அதே சமயத்தில் விவசாயிகள் சில சமயங்களில் கஷ்டப்படுகிற நிலை வருகிறது. அதற்கு ஏதாவது அரசாங்கம் ஒரு காரியத்தைச் செய்தால்தான் விவசாயிகளை ஊக்குவிக்கிற ஒரு நிலை இருக்கும். அரசாங்கம் பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறது. இப்போது வட்டி கொடுப்பதிலே கூட அதிலே போடுகிறவர்களுக்கு கூடுதலாக $2\frac{1}{2}$ சதவீதம் அதிகம், மற்ற வங்கிகளை விட கூடுதலாக வட்டி தருகிற ஒரு இயக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதே போல் சாதாரண ஆதிதிராவிட மக்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். அந்த வங்கிகளிலே கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கவேண்டும். அவர்களை எல்லாம் ஊக்குவிக்க வேண்டும். ஏன் என்றால், அவர்கள் ஏழை எளியவர்கள் என்ற காரணத்திற்காக ஒரு 100 ரூபாயை மானியமாகக் கொடுத்து, அவர்களை, 20 ஆயிரம் பேர்களைக் கிட்டத்தட்ட உறுப்பினர்களாகச் சேர்க்கவேண்டும் என்ற நிலையில் இந்த அரசு முயற்சித்து இருக்கிறது.

அதேபோல், நபார்டு என்கிற ஒரு வங்கி இருக்கிறது. அதிலே பலவகையான நல்ல லாபங்கள் இருக்கின்றன. அரசாங்கத்திற்கு, மக்களுக்கு நல்ல லாபங்கள் இருக்கின்றன. அரசாங்கம் அந்த நபார்டு வங்கி மூலமாக ஸ்கீமை நடைமுறைப் படுத்துகிற போது, அதிலும் பல நல்ல லாபங்கள் இருக்கிற காரணத்தால், இப்போது அந்தக்கடனைக் கொடுத்தால், மத்திய அரசும், அதிலேயிருந்து சலுகைகளைத் தருகிற காரணத்தால், நல்ல திட்டம் இது. அந்ததிட்டம், எல்.டி., பாங்க் ஏதாவது நிலவள வங்கிகள்மூலமாக செயல்படுத்தப்படுகிறது. அதிலும் சில சிரமங்கள் இருக்கின்றன. அது என்னவென்று சொன்னால், நிலவள வங்கிகள் மூலமாக அதை நடைமுறைப்படுத்துகின்றபோது, அதிலே அந்த பொருளாதாரக் குறைவு இருக்கிறது. அதிலே பணச் சிக்கல் இருக்கிறது. எல்லோருக்கும் கொடுக்கக் கூடிய அளவிற்கு அதில் பணம் இல்லை. ஆகவே தேசிய வங்கிகள் கொடுத்தாலும் அந்த நபார்டு முறைகளிலே அடங்கும் நிலையை செயல்படுத்துவதிலே கொஞ்சம் கஷ்டம் இருக்கும்.

12–30 மணி

அதேபோல் கடன் தருகிறார்கள். கடன் முடிந்தவுடனே 15 நாட்களிலே கடன்களை தரவேண்டிய நிலையிருக்கிறது. அந்த 15 நாட்களில் கடன்களைக் கொடுத்தால் முதலில் உரத்தைக் கொடுத்துவிட்டு பிறகு பணத்தைக் கொடுக்கின்ற நிலை

இருக்கிறது. முதலில் உரத்தை வாங்கிவிட்டு பின்னர் பணத்தை வாங்கமுடியாத நிலை இருக்கிறது. அந்த உரத்தை வாங்குவதற்கு முன்னாலே அந்த சாகுபடிக்கு ஏற்ற காரியங்களுக்காக பணம் தேவைப்படுகிறது. எனவே முதலில் பணத்தைக் கொடுத்துவிட்டு, பின்னால், உரத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்த பணம் தேவைப் படுகிறது. அதற்குப் பிறகுதான் உரம் போட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, முதலில் பணத்தைக் கொடுத்து விட்டு பின்னர் உரத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்புத் திட்டம் என்று சொல்லி விவசாயிகளுக்குச் சில பல கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே தஞ்சை மாவட்டம் மற்ற மாவட்டங்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. இத்திட்டத்திலே விவசாயப் பெருமக்களுக்கு இடுபொருள்களாக பல பொருட்களை வழங்கி, விவசாயிகளுக்கு நிறைய மானியங் களைக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்றும், அப்போது தான் விவசாயிகளை ஊக்குவிக்க முடியும் என்கின்ற நிலையிலே எல்லா பொருட்களையும் இடுபொருட்களையும் மானியமாக வழங்கி, அந்த விவசாயத்தை மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே கூட்டுறவு அங்காடிகளின் மூலமாக செயற் படுத்துகிறார்கள். அது நல்ல திட்டம் தான். அதுபோன்று அங்காடி மூலமாக இந்த உரங்களை வழங்குகின்ற முறை இருக்கின்றபோது அந்த விவசாயிகளுக்கு நல்ல வாய்ப்பிருக்கிறது. இப்படி பல விதமான முறைகளில் நடக்கிறபோது, விவசாயி களுடைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் வைக்கவில்லை. என்று சொன்னார்கள். அதிலே ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். கவர்னர் ஆட்சிக் காலத்தில் உறுப்பினர்கள் எல்லாம் சேர்க்கப்பட்டனர். உறுப்பினர்கள் எல்லாம் சேர்க்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் அந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலைவர்களாக வரப்போகிற வாய்ப்பு இருக்கிறது என்று அவர்கள் அறிந்த பிறகு, தேர்தலை தள்ளி வைத்துவிட்டார்கள். அதுதான் நடைமுறை. அதற்குப் பின்னால் போனமுறை சட்டமன்றத்தில் இதே நிகழ்ச்சி வருகிற போது கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே ஒரு பிரச்னை வருகிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னதன் பேரில் தான் அங்கே தேர்தலை தள்ளி வைக்கக் கூடிய நடைமுறை ஏற்பட்டது. இது அவைக் குறிப்பில் இருக்கிறது. அந்த வகையிலே மேலும் அந்த நடைமுறையில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென்ற உத்தரவாதத்தை கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கி றார்கள். மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அட்டைகள் வழங்கவில்லை என்று கூட சொன்னார்கள். கொள்கைக் குறிப்புகளை படித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். அட்டைகள் கண்டிப்பாக வழங்கப்படும்.

உண்மையில் அட்டைகள் இல்லாதவர்களுக்கு வழங்க முடியாத நிலையில் சில ஏழை எளிய மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் உண்மையாக அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னார்கள். நூற்றுக்கு நூறு சதம் அட்டைகள் வழங்கப்படும் என்று. ஆகவே அந்த வகையில் அட்டைகள் பின்னர் வழங்கப்படும் என்ற நிலை இருக்கின்ற காரணமாகத் தான் கூட்டுறவுச் சங்கத்திலே எவ்வளவோ நல்ல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல அதிகமான பளு ஏற்பட்டிருக்கிறது. அரிசி வழங்குதல், மற்ற உணவுப் பொருட்கள் வழங்குதல் போன்றவற்றில் அங்காடி நல்லமுறையில் நிர்வகிக்கப்படுகின்ற பொறுப்பு கூட்டுறவில் இருக்கிறது. ஆகவே அந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகமான பளு, கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த கஷ்ட நிலையைப் போக்குகிற வகையில் செயல்பட வேண்டும். ஆனால் முந்தைய அரசில் பல சிக்கல்கள் இருந்தன. அரிசி கொண்டு வர முடியவில்லை. கோதுமையைக் கொண்டு வர முடியவில்லை. பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் இந்த அரசு ஆட்சிக்கு வந்ததுமே மத்தியிலிருப்பவர்கள் 40,000 டன் கொடுத்தார்கள். நமக்கு போதுமானது அல்ல, சத்துணவிற்காக 1.66 இலட்சம் டன் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு மற்ற உணவு விநியோகம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 40,000 டன் அரிசி கொடுத்தாலும், ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அரிசி வழங்க முடியவில்லை. ஆகவே கார்டுகளுக்கு கொடுக்க முடியவில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு மத்தியிலே அரசின் மாற்றம் ஏற்பட்ட பிறகு இன்றைக்கு 75,000 டன் வரை அரிசியைக் கொடுப்பதற்கு வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே அரிசி கொடுக்க முடியாத நிலை இல்லை. ஏற்கெனவே பெரிய கஷ்டங்கள் இருந்தன. அந்த அங்காடிகளில் பெரிய கஷ்டங்கள் இருந்து தப்புகள் நடக்கின்றன. அரிசியை எல்லாம் அவர்கள் எடுத்து, வெளியிலே விற்று விடுகிறார்கள். அதிலே விற்பனையாளர்கள் பல தப்புகளை செய்கிறார்கள் என்று எல்லாம் சுட்டிக் காட்டப்பட்டு, அமைச்சர்கள் எல்லாம் மாவட்டந்தோறும் கூட்டங்களைப் போட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கலந்து கொண்டோம். ஆனால் இப்போதெல்லாம் அப்படிப்பட்ட தவறுகள் குறைந்திருக்கிறது. இன்றைக்கு தப்புகள் எவ்வளவோ குறைந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்ததற்கு பின்னாலே ஒவ்வொரு மாவட்டம் வாரியாக சென்று கூட்டம் கூட்டி நடவடிக்கை எடுத்ததற்குப் பின்னாலே இன்றைக்கு அந்த அங்காடிகளிலே வேலை செய்கிறவர்கள் தப்புகளை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். தப்பு முழுவதுமாக நீங்கி விட்டது என்று சொல்லவில்லை, ஆனால் தப்புகள் ஓரளவு

குறைந்து இன்றைக்கு அந்த மாதிரியான பிரச்சினைகள் என்னை போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருவதில்லை. ஆகவே தப்புகள் குறைந்திருக்கின்றன. அரிசி நல்லபடியாக வழங்கப்படுகிறது. மக்களுக்கு அது குறித்து ஒரு தெளிவான நல்ல எண்ணம் அரசின்மீது வந்திருக்கிறது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

12-25 மணி

அடுத்து கூட்டுறவு அங்காடிகளில் ஒரு கஷ்டம் இருக்கிறது. வெளியே விலை உயர்கிறபோது இங்கே விலை குறைச்சலாக இருக்கும். சிறப்பு அங்காடிகளில் பார்த்தால் மார்க்கெட்டில் வெளியே விலை உயரும்போது அங்கே விலை குறைவாக இருக்கும், ஆனால் வெளியே விலை குறையும்போது அந்த ஏற்ற இறக்கத்தை இங்கே சரி செய்ய முடியாத நிலை இருக்கும். அது மாதிரியான ஒரு சூழ்நிலை இந்த கூட்டுறவு அங்காடிகளில் இருக்கிறது. அதனால் வெளியே விலை குறையும்போது அந்த அங்காடிகளில் வியாபாரம் சிரமமாக இருக்கிறது. ஜனங்கள் அங்கே போய் வாங்க மாட்டார்கள். ஏன் வாங்க மாட்டார்கள் என்றால் வெளியே விலை குறையும் போது இங்கே சற்று ஏற்றமாகத்தான் இருக்கும் ஏனென்றால் அதற்கேற்றார்போல் இங்கே குறைக்க முடியாது. அதுமாதிரி சூழ்நிலை இருக்கிறது.

தஞ்சாவூரில் ஒரு அங்காடி, காவேரி சிறப்பு அங்காடி என்ற ஒன்று இருந்தது. அதற்கு நம்முடைய கலைஞர், அவர்கள் பெயரை அந்த கட்டிடத்திற்கு வைத்து கலைஞருடைய சிறப்பு அங்காடி என்று போடப்பட்டிருந்தது அந்தக் கட்டிடத்திற்கு. அதற்கு பின்னாலே வந்தவர்கள் அதை நீக்கி விட்டு அப்படியே வைத்து விட்டார்கள். திரு. நடராசன் அவர்கள் எம்.எல்.ஏ. வாக இருந்தபோது அந்த அங்காடி மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருந்தது. 76-க்கு முன்னாலே பார்த்தால் காவேரி சிறப்பு அங்காடி தஞ்சாவூரிலே மிகச் சிறப்பாக நடைபெற்றது. மிக நன்றாக பணியாற்றி கூட்டம் கூட்டமாக மக்கள் அங்கு போய் வாங்கினார்கள் என்கிற தன்மையெல்லாம் அப்போது பார்த்தோம். அந்த அளவுக்கு சிறப்பாக விளங்கிய அந்த அங்காடி இன்றைக்கு நலிவுற்று இருக்கிறது. எப்போது பார்த்தாலும் வெளியே கடைகளிலே நிறைய கூட்டம் இருக்கும். இங்கே அங்காடியில் கூட்டமே இல்லை என்கிற நிலைமை இருக்கிறது. அதை சிறப்பாக செயல்படுத்த வேண்டிய நிலையில் காரியங்களை ஆற்ற வேண்டும் என்று சொல்லி அடுத்தபடியாக நம்முடைய நுகர்பொருள் கழகத்திற்கு வருகிறேன்.

நெல்லை எல்லாம் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கிறது. விவசாயிகளுடைய நிலங்களிலே விளைகிற நெல்களையெல்லாம் கொள்முதல் செய்ய வேண்டும்

என்ற நிலையில் இப்போது சாகுபடியே குறைந்திருக்கிறது. 1976-க்கு முன்னாலே இருந்த இரண்டு போக சாகுபடியே இப்போது போய்விட்டது. 1976-லே கலைஞருடைய ஆட்சி கலைக்கப்பட்டதற்கு பின்னாலே நான் கூட சொல்வது வழக்கம் எங்களுடைய ஊரிலே, கலைஞருடைய ஆட்சி இறக்கப் பட்டதற்கு பின்னாலே ஆற்றிலே தண்ணீரே வருவது நின்று போய் விட்டது என்று. மேட்டூரிலே 1976-க்கு பின்னாலே தண்ணீரே வருவதில்லை. அப்படி வராமல் மழையை நம்பியே விவசாயம் செய்தார்கள். அதனால் இப்போது இரண்டு போக சாகுபடி இல்லை. ஒரே ஒரு சாகுபடிதான் பண்ண முடிகிறது. அந்த ஒரு சாகுபடியிலும் தனக்கு வைத்திருப்பது போக மீதம் உள்ளதை அரசாங்கத்திற்கு விற்று விடுகிறார்கள்.

கலைஞர் அவர்கள் ஒரு தடவை மானியம் கொடுக்கிற போது முதன் முதலில் வண்டிச் சத்தம் என்று போட்டு 15 ரூபாயை விவசாயிகளுக்கு உயர்த்திக் கொடுத் தார்கள். எந்த மாநிலத்திலேயும் இதற்கு முன்னால் அந்த மாதிரி கிடையாது. அந்த நடைமுறையை முதலில் ஏற்படுத்திக் கொடுத்தவர் கலைஞர் அவர்கள். அதிகமாக விவசாயிகளுக்கு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் இப்படி 15 ரூபாயை வண்டிச் சத்தமாக போட்டு விவசாயி களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கொடுத்தவர் கலைஞர் தான். அப்போது அதிகமாக விளைந்த காலம். ஆனால் இப்போதும் ரூ. 35-ஐ, ஊக்கத் தொகையாக நம்முடைய அரசாங்கம் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்கின்ற முறையில் சிறப்பாக செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே பல தப்புகள் நடந்துள்ளன. ஈரப் பசைக்கு என்று ஒரு ரூபாய் எடுக்கப்படுகிறது. அத்தோடு மூட்டைக்கு ஒரு ரூபாய் வாங்குகிற நிலைமையெல்லாம் அதிலே செய்கிற உதவியாளர் கள் எல்லாம் செய்து வருகிறார்கள் என்பது நடைமுறையில் இருப்பது. அந்த மாதிரி முறைகளை எல்லாம் மாற்றி தயவுசெய்து விவசாயிகளுக்கு நல்ல காரியங்களை செய்து தர வேண்டும் என்று கேட்டு இதிலே விவசாயிகளுக்கு பல திட்டங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். விவசாயி களுக்கு கூட்டுறவு சங்கங்கள் எப்படி எல்லாம் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்திலே பல திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது கூட்டுறவு சங்கங்களும் நுகர் பொருள் கழகமும் சிறப்பான முறையிலே இயங்கி வருகிற காரணத்தால் இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே உணவுத் துறை சம்பந்தமாக பொது வினியோக முறையிலேயும் கொள்முதல் சம்பந்தப்பட்ட

சில விஷயங்களைப் பற்றிய கருத்துக்களையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஒட்டு மொத்தமாக நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கும்படியான அத்தனை குடும்பங்களுக்கும் நாம் ஒரு கோடியே முப்பது லட்சம் கார்டுகளுக்கு உணவு பங்கீடு செய்யும் முறை தமிழ் நாட்டிலே இருந்துக் கொண்டிருக்கிறது. இந்த விநியோகத்தில் கடுமையான அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு புதிய மத்திய அரசு வந்ததற்குப் பிறகு அந்த தட்டுப்பாடு குறைந்து நமக்கு அதிகப்படியான அரிசி கிடைத்திருக்கிறது. ஆனாலும் அரிசியினுடைய விலை சற்று கூடி அது மேலே தான் போய்க் கொண்டிருக்கிறது. வெளி மார்க்கெட்டிலேயும் விலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நாம் போடுகிற நியாய விலைக் கடைகளிலேயும் அரிசி விலை அதிகரித்து இருக்கிறது. இப்படி பொது விநியோகம் பண்ணுவதில் பொது மக்களுக்கு இருக்கும்படியான முக்கியமான கஷ்டங்கள்

12-30 மணி

இப்படி விநியோகம் நடப்பதில் பொது மக்களிடமிருந்து வந்திருக்கும்படியான முக்கியமாக அவர்களுடைய குறைபாடுகளிலிருந்து எடுத்துக்காட்டுவது ஆயிரத்திலிருந்து 1,500 கார்டுகள் வரைக்கும் சில கடைகளிலே கார்டுகள் அதிகமாக இருந்திருக்கிறது. இது நகரங்களிலே இருக்கும்படியான அம்சம். கிராமங்களிலே சில இடங்களிலே அவ்வளவு இருக்காது. கார்டு அதிகம் உள்ளதை இப்போது 800 கார்டுகளாக குறைப்பதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. இது நல்ல அம்சமாகும். ஆனால் நாங்கள் கேட்பதெல்லாம் 500 கார்டுகளுக்கு ஒரு கடையாகும். ஆனால் பொறுப்பும், செலவும் இருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் நாம் ஊழலைத் தடுப்பதற்கும், ஒழுங்கான விநியோக முறைக்கும் அது தேவைப்படுகிறது என்பது எங்களுடைய உறுதியான கருத்து. அது மாதிரி இதற்கு அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து முன்பு புதிய கார்டுகளை எல்லா இடத்திற்கும், எல்லா குடும்பத்திற்கும் கொடுப்பது என்று தீர்மானித்து, போலிக் கார்டுகளை கள்ளத்தனமாக கார்டுகளை பயன்படுத்துவதை தடுப்பதற்கான முயற்சி என்ற முறையில் புதுக் கார்டுகளை கொடுக்க திட்டமிட்டார்கள். 10 இலட்சம் போலிக் கார்டுகள் புகுந்துள்ளது என்பதைக் கூடச் சொன்னார்கள். உண்மைதான். ஏராளமாக போலிக் கார்டுகள் இருந்திருக்கிறது. ஏழை மக்களிடமிருந்து 20, 30, 50 கார்டுகளை வாடகைக்கு பிடித்துக்கொண்டு பல பேர்கள் பயன்படுத்துவதும் உண்டு. இப்படிப்பட்ட தன்மைகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இப்போது நிலைமை என்னவென்றால் நாம் கார்டுகளை எல்லாம் அச்சிட்டு அவற்றை கொடுக்கவில்லை. விட்டுவிட்டோம். பல இடத்திலே ஜென்வின் கேஸ்களுக்கு—பல குடும்பங்களுக்கு கார்டு இல்லாமல் இருக்கிறது. அந்தக் கார்டுகளை கொடுப்பதற்கு அதை நூற்றுக்கு நூறு தணிக்கை செய்து பார்த்து உண்மையான தணிக்கை செய்து

கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உண்மை யான கார்டு தான் கொடுக்க வேண்டும் என்பதிலே நமக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அந்த கார்டு கொடுக்கிற வேலையை உடனடியாக நாம் காலம் நீட்டாமல் செய்ய வேண்டி யிருக்கிறது. பல குடும்பங்கள் இதனாலே கஷ்டத்திற்கு ஆளாகி யிருக்கின்றன. குடும்பக் கார்டு இல்லாத அப்படிப்பட்ட குடும் பங்களுக்கு அதை உடனடியாக கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எங்களுடைய கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 8,87,812 கார்டுகள் அந்த மாவட்டத்தில் இருக் கின்றன. 1,95,186 கார்டுகள் கோவை மாநகரத்திலே கிட்டத் தட்ட 10,11 இலட்சம் ஜனங்கள் இருக்கிற இடத்திலே ஏற் கனவே கார்டுகள் கொடுக்கப் போகிறார்கள் என்று சொன்னதை வைத்துக்கொண்டு கார்டு இல்லாத பல குடும்பங்கள் தாங்கள் விண்ணப்பம் போடுவதை நிறுத்திக் கொண்டார்கள். ஏனென் றால் எல்லோரும் வீடு வீடாக வந்து கணக்கு எடுத்து புதுக் கார்டு கொடுப்பார்கள் என்று சொன்னதால். அதை நிறுத்தியவுடனே அவர்களுடைய நெருக்கடி ஜாஸ்தியாகிவிட்டது. அவர்களுடைய நிர்பந்தம் இப்போது அதிகம் வந்திருக்கிறது. அது நியாயமான விஷயம். நான் விசாரித்துப் பார்த்ததில் கோவை நகரத்தில் மட்டும் இப்போது ஒரு மாத காலத்திற்குள்ளே இருநூற்று சொச்சம் கார்டுகளுக்கு விண்ணப்பம் வந்து காத்திருக்கிறது. ஆனால் இன்னும் விநியோகம் ஆகவில்லை. அதை உடனடியாக கொடுப்பதற்கு காலதாமதம் இல்லாமல் பரிசீலனை நடத்திக் கொண்டே உண்மை என்று கண்டு பிடிப்பதை அவ்வப்போது விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமங்களில் இருக்கும் கடைகள் பொருத்தவரையிலும், 2, 3, 4 கிராமங்கள்—குட்டி கிராமங்கள் ஒரு வட்டத்திற்குள்ளே இருப்பதை சேர்த்து 3 கடையாக வைத்திருக்கிற நிலைமை உண்டு. அப்படி வரும்போது இதிலே என்ன ஆகிறது என்றால் 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் என்று மக்கள் போக வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் இப்படி 800 கார்டுகள் என்ற எண்ணிக்கை எல்லாம் பார்க்காமல் 200 கார்டுகள் இருக்கின்ற கிராமமாக இருந்தாலும் கூட அந்த இடத்திற்கும் ஒரு கடை ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். 250 கார்டுகள் இருந்தால் ஒரு கடை உண்டாக்குவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று இந்த மன்றத்திலே கூட தெரிவிக்கப்பட்டிருக் கிறது. அதற்கு ஒரு நிபந்தனை வருகிறது. யாராவது கட்டிடம் சும்மா கொடுக்க வேண்டும். கிராமப்புறங்களில் பணக்காரர்கள் கட்டிடம் வைத்திருப்பார்கள். அவர்கள் நமக்கு கொடுத்தால் சரிதான். அப்படி கட்டிடம் கொடுக்கவில்லை என்றால், கொடுக்கவில்லை என்பதற்காக ஏழை எளியவர்கள் கூலி வேலை முடித்து மாலை 6 மணியளவில் வீட்டிற்கு வந்து சேர்கிறவர்கள் மறுபடியும் 3 கிலோ மீட்டர் தூரம் போய் வாங்குவது என்பது சாத்தியம் இல்லாமல் இருக்கும். அதை கணக்கில் எடுத்துக்

கொண்டு நெளிவு சுளிவாக 200 கார்டுகள் வாங்கக்கூடிய அளவிற்கு அந்தக் கடைகளை உருவாக்க வேண்டும். ஃபிரீ கட்டிடம் கிடைக்குமா என்று பார்க்க வேண்டியது கிடைக்க வில்லை என்று சொன்னால் அரசே ஒரு கட்டிடத்தை ஏற்பாடு செய்து அதை தடுக்காமல் சப்ளை செய்ய வேண்டும். அதற்கென நேரத்தை சரியாக நிர்ணயம் செய்யாததால் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறது. மாலை 4 மணியிலிருந்து இரவு 8 மணி வரைக்கும் கட்டாயமாக கிராமங்களிலே கடைகள் திறந்திருக்க வேண்டும். அதற்கு மேலே திறந்து நடத்துவது என்பது அவர் களுடைய இஷ்டம். அதே மாதிரி நகர் கடைகள் எல்லாம் முழு நேரமும் வேலை செய்யக்கூடிய கடைகளாக இருக்க வேண்டும். அப்படி கடைகளைப் பொறுத்தவரையிலும் அந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது.

12–35 மணி

சமையல் எண்ணெய் வினியோகம் சம்பந்தப்பட்ட வரையில் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், பாமாலின் என்பது கிராமத்திலே எங்கேயும் கிடையாது. வரக்கூடியது, நமக்குக் கிடைக்கக்கூடியது 2,000 டன் கிடைக்கிறது. அது சத்துணவுக் கூடத்திற்குக் கொடுக்கிறதற்கு சரியாகப் போய்விடுகிறது. அதற்கு மேல் நமக்கு எண்ணெய் கிடையாது. தேவை நமக்கு 13,000 டன் என்பதையும் சொல்லியாகி விட்டது.இந்த பிரச்சினையையும் தீர்ப்பதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? இது ஒரு முக்கியமான அம்சம். என்னைக் கேட்டால், மத்திய சர்க்காரை அணுகி, ஏற்கெனவே ஜனங்கள் மத்தியில் இந்த பாமாயில் என்கி கிறபோது ஆரம்பத்திலே அவர்களுக்கு இது என்ன எண்ணெயோ என்ற பயம் இருந்தது. அது போய், அதுதான் உள்ளதிலேயே குறைந்த விலைக்குக் கிடைக்கிற எண்ணெய் என்பதனாலே அந்த எண்ணெயை அவர்கள் விரும்புவதால், ஏழை மக்கள், சாதாரண மக்கள், நடுத்தர மக்களுக்கு இது கட்டாயம் தேவை. அதனாலே நம்முடைய கோட்டாவை அதிகப்படுத்தி, வெளியி லிருந்து இறக்குமதி பண்ணுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை நமது அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்தி, கொண்டு வர வேண்டும்.

நான் விசாரித்தேன். கோவை மாவட்டத்திலே அவர்களைக் கேட்டபோது 195 கிலோ லிட்டர் தான் அவர்களுக்கு எண்ணெய் சப்ளையானது. அது ஒரு கார்டுக்கு ஒரு கிலோ கொடுத் தால் அதோடு சரி. அந்தஅளவுக்குத்தான் இருக்கிறது. அப்படிக் கொடுத்த பிறகு பல மாதங்களுக்கு இல்லை. அப்படிப் போகிறது. அந்த நிலையிலே திட்டவட்டமான மாற்றங்கள் கொண்டு வரப் பட வேண்டும். ஏழை மக்களிடத்திலிருந்து அதனுடைய டிமான்ட் அதிகமாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். மற்ற எண்ணெய்களைப் பொறுத்தவரையில், கடுமையான நிலை ஏற்பட்டிருக்கிறது. எண்ணெய் விலையேற்றம். எள் எண்ணெயை விட, தேங்காயெண்ணெய்க்கு விலையேற்றம்

அதிகம் என்பது, நம்மைப் பொறுத்த வரையிலும் நாம் 30, 40 ஆண்டுக் காலத்திலே எந்த எண்ணெயினுடைய விலையும் இப்படி வந்ததை நாம் பார்த்தது இல்லை. அந்த விலையேற்றத்தைக் குறைப்பதற்கு வேண்டிய ஒரு சரியான நடவடிக்கையை, ஒரு திட்டமிட்ட நடவடிக்கையை அரசு உருவாக்க வேண்டியது அவசியம். அதைச் செய்தால் தான் அதைக் கட்டுப்படுத்த முடியும். இல்லையென்று சொன்னால், எண்ணெயினுடைய விலையேற்றம், 'எடிபிள் ஆயில்' பயன்படுத்த முடியாமல் போகக் கூடிய அபாயம் இருக்கிறது. இந்த எண்ணெய் விஷயத்தில், அதேமாதிரி, நியாய விலைக் கடைகளில் இன்றைக்கும் பழைய வாசனைகள் நீடிக்கிறது. ஊழல்கள் பல இடங்களிலே நடக்கிறது.

கொள்கைக் குறிப்பிலே 11-வது ஷரத்திலே ஒன்று கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு கடைக்கும் ஒரு விழிப்பு, கண்காணிப்புக் குழு என்று ஒரு குழு இருந்த போதிலும் அந்தக் குழுவிலே அரசியல் கட்சியினுடைய பிரதிநிதிகள் யாரும் இல்லை. டாக்டர்கள் இருக்கிறார்கள். பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். வேறு என்னென்னமோ ஆட்கள் இருக்கிறார்கள். அதை ஒரு லிஸ்டிலே கொடுத்திருக்கிறார் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அந்தக் குழுக்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பதே நமக்குப் புரியவில்லை. இப்போது நான் குடியிருக்கிற ஏரியாவில் இப்படி ஒரு குழு இருக்கிறதா, இல்லையா என்பதே அநேகமாக வெளியே தெரியாது. அந்தக் குழுவினுடைய நடவடிக்கைகள் இல்லை என்று சொன்னால்—ஸ்டாக் வைத்திருக்கிறார்களா, திருட்டுத்தனமாக விற்பனை செய்யப்படுகிறதா என்றால், ஏழைகளினுடைய கார்டுகளை ஏமாற்றி எடுக்கிற அந்த அரிசி, மற்ற தானியங்கள், எண்ணெய் எல்லாம், மண்ணெண்ணெய் உட்பட பெட்டிக் கடையிலே கொண்டு போய், அதுடபிள், ட்ரிபிள் விலைக்கு விற்கிற நடவடிக்கைகள் நடக்கின்றன. இதையெல்லாம் கண்காணிப்பதற்கு அரசியல் கட்சிகளினுடைய பிரதிநிதிகளையும் கொண்ட குழுவாக அது இருக்க வேண்டும். அது இல்லையென்றால் பிரயோசனம் இல்லை. எந்தக் கட்சியாகவும் இருக்கட்டும், ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி, ஆளாத கட்சி, எந்தக் கட்சியாக இருந்தாலும் இது பொதுவாக ஜனங்களுக்கு நடக்க வேண்டிய ஒரு நல்ல காரியம். ஆகவே, அந்தக் குழுக்களை அமைப்பது என்பதிலே, அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகளும் இருந்து அந்தக் குழுக்கள் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

கோதுமை உபயோகப்படுத்துவது என்பது இப்போது அதிகமான பழக்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. அதுவும் இந்த கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை கேட்டால் இது ஒரு நல்ல அம்சம். அதிகப்படியான கோதுமையைப் பயன்படுத்தும்படியாக, அரிசியே உண்டு கொண்டிருக்கிற மக்கள் இதையும் பயன்படுத்துவது என்பது ஒரு நல்ல

அம்சம். அது வளர்க்கப்படவேண்டியது. இதிலே கோதுமை ஏராளமாக நமக்குக் கிடைக்கிறது என்று அதற்கு கணக்கு எல்லாம் கொடுத்திருக்கிறார். அந்தக் கோதுமையினாலே செய்யப் படக்கூடிய அன்றாடம் அநேகமாக நகரங்களிலே தவறாமல், பயன்படுத்துகிறதோடு இப்போது கிராமங்களிலே கூட பரவி யிருக்கிறது, ரொட்டி உபயோகப்படுத்துவது. அந்த ரொட்டி பேக்கரி பொருட்களுக்கு சேல்ஸ்டாக்ஸ் போடுவது என்பது ஒரு பெரிய கஷ்டத்தை உருவாக்கியிருக்கிறது என்று அதை அந்த உற்பத்தியாளர்கள் அத்தனை பேர்களும் முறையீடு செய்திருக் கிறார்கள். நாங்களும், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அவர்களுடைய பிரதிநிதிகளை வைத்துப் பேசி ஒரு மெமோ ரண்டம் கொடுத்திருக்கிறேன். தயவு செய்து அந்த ரொட்டி பொருட்களுக்கு சேல்ஸ்டாக்ஸை எடுத்து விட வேண்டும் என்பது நமது கோரிக்கை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

12–40 மணி

அதற்கு அடுத்தது சர்க்கரை. நமக்கு இப்போது கிடைக்கும் சர்க்கரை ஒரு ஆளுக்கு 425 கிராம் தான். அது மேலே போக வில்லை. சர்க்கரை உற்பத்தி என்னவானாலும், அல்லது என்ன நிலை ஏற்பட்டாலும் அந்த 'பெர் ஹெட் கன்சம்ப்ஷன்' அதிகமாக நமக்குக் கிடைக்கிறது. அதற்குமேல் கிடைக்கவில்லை. உண்மை யிலேயே அந்த சர்க்கரையினுடைய அளவை கொஞ்சம் அதிகப் படுத்த வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்கு நமக்கு எடுக்க முடியுமோ அதைப் பார்த்து செய்ய வேண்டியதிருக்கிறது. அந்த சர்க்கரையினுடைய அளவை அதிகப்படுத்த வேண்டும். அத னுடைய விலையும் அப்படித்தானே? (குறுக்கீடு) 75 கிராம் அதிகமாக இருக்கும் அது. அதனுடைய விலையும் அப்படித் தான். உண்மையைச் சொன்னால் ஒரு 2, 3 வருடத்திற்கு முன் னால் கள்ள மார்க்கெட்டில் என்ன விலைக்கு விற்றதோ அந்த விலை தான் இப்போது உண்மை மார்க்கெட்டில், நல்ல மார்க் கெட்டில், வெள்ளை மார்க்கெட்டில் விலையாக விற்கிறது. 5 1/4 ரூபாய்க்கு, 5 1/2 ரூபாய்க்கு விற்கிறது. அப்புறம் பிரி மார்க்கெட் விலையைப் பார்த்தால் 7 ரூபாய், 8 ரூபாய் வரைக் கும் அது விற்கிறது. ஆனால் விவசாயிகள் பிரச்சினை வேறு இருக்கிறது. கரும்புக்கு என்ன விலை கிடைக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதை நான் இதிலே மிக்ஸ் செய்யவில்லை. நம்முடைய விவசாய நண்பர்கள், கூட்டுற வுத்துறை பற்றி பேசும்போது அதைப்பற்றி பேசுவார்கள். ஆகவே சர்க்கரை அளவு கொஞ்சம் உயர்த்தி 500 கிராம் கொடுப்பது என்பது நல்லது. அது போதாது ஆகவே இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த விலையைக் குறைப்பதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய நாட்டில் ஏற்பட்டு இருக்கக் கூடிய பொதுவான நிலை விலைவாசி ஏற்றத்தை கட்டுப்படுத்தி

1990 ஏப்ரல் 16] [திரு. கே. ரமணி]

அதை தடுத்து நிறுத்துகின்ற வகையில் தான் இந்தஅத்தியாவசிய பண்டங்களை அரசு எடுத்து வினியோகிப்பது என்ற ஒரு ஆயுதத்தை பயன்படுத்தி விலைவாசியைக் குறைப்பதற்கு அது இட்டுச் செல்ல வேண்டும் என்ற கொள்கையோடு, மத்திய அரசும் கொள்கை பிரகடனம் செய்கின்றது. நாம் அதை ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, விலையை குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை நம் பக்கத்தில் தேவை இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதில் வேலை செய்யக்கூடிய ஊழியர்கள் பற்றி சில முக்கிய மான அம்சங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏன் என்றால் இந்த ஊழல்களுக்கு எல்லாம் அதிலே பல ஆட்கள் இன்றைக்கு இறையாகி இருக்கிறார்கள். உதாரணமாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சார்பில் சேல்ஸ்மேன் ஆக இருக்கக்கூடிய ஒரு ஆளுக்கு 500 ரூபாயிலிருந்து 800 ரூபாய் வரை சம்பளம் கொடுக் கப்படுகின்றது; பேக்கராக இருக்கிற ஒரு ஆளுக்கு 300 ரூபாயி லிருந்து 500 ரூபாய் வரை சம்பளம் கொடுக்கப்படுகின்றது; ஆனால் கூட்டுறவுக் கடைகளில் அதே வேலையைச் செய்யும் சேல்ஸ்மேன் என்ற ஆளுக்கு 350 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை சம்பளம் கொடுக்கிறார்கள். பேக்கர்களுக்கு 250 ரூபா யிலிருந்து 400 ரூபாய் வரை சம்பளம் கொடுக்கிறார்கள். பிரைமரி கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டிகள் நடத்தக்கூடிய சில கடை களில் அவர்களுக்கு 250 ரூபாய்க்கு மேல் சம்பளம் இல்லை. ஒரே மாதிரி வேலை செய்கிற ஊழியர்கள் இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய ஒட்டு மொத்த உழைப்பாளி மக்கள் பல்வேறு விவசாய கூலி தொழிலாளர்கள் ஆகியோரை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். அந்த தொழிலாள மக்களுடைய கோரிக்கைகளும், அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இவ்வளவு குறை வான பல தரப்பட்ட சம்பளங்கள் ஒரே மாதிரி வேலைக்குச் சரியா? அவை இரண்டும் அரசாங்கத்தினுடைய தலைமையின் கீழ் இருக்கக்கூடிய அமைப்புகள், ஒரே மாதிரி ஊதியம் தேவை அவற்றில் ஏற்படுகின்ற ஒரு அடிப்படையான ஒரு 'ஸ்ட்ரக்சுரல் சேன்ஜ்' கொண்டு வருவதற்கு, அடிப்படை சம்பள மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு ஒரு நடவடிக்கையை நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக செய்ய வேண்டும். அவர் இந்த விஷயத்தில் விவரம் தெரிந்தவர்; தொழிலாளர் வர்க்கத்தினுடைய கொள்கைகளையும், குறிக்கோள்களையும் எப்படி நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று தெரிந் தவர்; ஒரு 'ஸ்ட்ரக்சுரல் சேன்ஜ்' கொண்டு வந்து ஒரு குறைந்த பட்ச நியாயமான சம்பளம் அவர்களுக்கு முழுமையாக வித்தி யாசம் இல்லாமல் ஏற்படுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அடுத்து ஒரு முக்கியமான விஷயம். கோவை சிந்தாமணி சம்பந்தமான விஷயம். அங்கே 72 இலட்ச ரூபாய் திருட்டு போய் விட்டது என்று ஒரு தொழிற்சங்கத்தின் சார்பில் 5, 6

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 16

வருடங்கள் அந்த ரிப்போர்ட்டுகளை நாங்கள் கொடுத்துக் கொண்டே வந்தோம். ஆனால் கடைசி கட்டத்தில்தான் அது வெளி வந்தது,

இந்த அரசு வந்த கொஞ்ச காலத்திற்குப் பிறகுதான் அது வெளிப்பட்டு அந்த விஷயம் வந்தது. பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் மத்தியில் ஒரு பெரிய வேதனை மட்டும் அல்ல, அவநம்பிக்கை தோன்ற ஆரம்பித்து வந்ததை மாற்ற தொழிற்சங்கத்திலிருந்து நாங்கள் கூட்டம் போட்டு அந்த மக்களுக்கு நாங்கள் எடுத்துச் சொன்னோம் அவநம்பிக்கை ஏற்படக் கூடாது, அந்த ஸ்தாபனம் ஜனங்களுக்கு சேவை செய்வதற்காக நாமே பாடுபட்டு உருவாக்கப்பட்ட சுமார் 50 கோடி ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யக் கூடிய பெரிய ஸ்தாபனம், இந்தியாவிலே ஒரு முதல்தரமான ஸ்தாபனமாக அது வளர்ந்து இருக்கிறது. அந்த ஸ்தாபனத்திலே சில கெடுதல்கள் ஏற்பட்டது, அதை துடைப்பதற்கு நாம் எல்லாம் ஒன்றாக நிற்க வேண்டும், ஜனங்கள் அந்த ஸ்தாபனத்திலிருந்து வெளியேறுவது சரியல்ல என்று சொல்லி அந்த ஜனங்களுக்கு உணர்வை ஊட்டி, அதன் அடிப்படையில் இன்றைக்கு வியாபாரம் கொஞ்சம் அதிகமாகி அது முன்னுக்கு வந்து கொண்டு இருக்கிறது. ஆனால் நான் இன்றைக்கு ஒரு எச்சரிக்கையாக நமது அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள முடியும், அது அவருக்கும் தெரியும், தெரியாதது அல்ல, நான் சொல்ல விரும்புவது மறுபடியும் அந்த ஊழல் பேர்வழிகள் அதற்குள்ளே சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சில விவரங்களை நான் அமைச்சருக்குக் கொடுத்து இருக்கிறேன். ஊழல் தலை தூக்க முடியாத அளவுக்கு அக்கும்பலை களைந்து எறிந்துவிட வேண்டும். கோ-ஆப்பரேட்டிவ் உத்தியோகஸ்தர்கள் 10 பேர்கள் அந்த ஊழலில் சிக்கினவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இன்றைக்கு ஜாமீனில் வெளியில் இருக்கிறார்கள். 1 வருடம், 2 வருடம், 3 வருடத்திற்குள் என்று அந்த கேஸ் நடந்து முடியாமல் காலம் நீட்டித்துக்கொண்டே போனால் இதில் சில நியாயங்கள் பிறக்குமா ; உண்மை குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியுமா ; இந்த மாதிரி நடவடிக்கைகளில் டிலே தானே நம்முடைய பிரதான விரோதி, கால நீட்டிப்பு என்பது தான் நம்முடைய பிரதான விரோதி. உண்மை கண்டுபிடிக்க முடியாமல் போகக் கூடும். மறுபடியும் அந்த ஊழல்கள் தலை தூக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதை கட்டாயமாக தடுக்க வேண்டும்.

12-45 மணி

அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு எண்ணெய் தொழிற்சாலையைப் பற்றி நான் இங்கே பேசி இருக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை வந்து பார்த்தார்கள். அது ஒரு அற்புதமான பெரிய எண்ணெய் தொழிற்சாலை. அந்த

1990 ஏப்ரல் 16] [திரு. கே. ரமணி]

எண்ணெய் தொழிற்சாலையை நாசப்படுத்திவிட்டார்கள். அதை இன்றைக்கு திரும்பவும் புதுப்பித்து நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்தால் எண்ணெய் வினியோகத்திற்கு எடிபிள் ஆயில் வினியோகத்திற்கு கடலை எண்ணெய்யும் சரி, நல்லெண்ணையும் சரி அல்லது சூரியகாந்தி எண்ணெய்யும் சரி; இதை எல்லாம் உற்பத்தி பண்ணக்கூடிய ஒரு பெரிய ஸ்தாபனம் அது. அந்த சிந்தாமணி கூட்டுறவு அங்காடிக்கு மட்டுமல்ல நம்முடைய கோவை மாவட்டத்தையும் தாண்டி பிற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு, அங்கேயிருந்து எண்ணெய் சப்ளை செய்ய முடியும். ஆகவே, அதிலிருந்து ஊழல்களை துடைத்தெரிந்து அந்த எண்ணெய் தொழிற்சாலையை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது, அரிசியினுடைய விலையை நமது அரசாங்கம் ஏற்றியிருப்பதை நான் குறிப்பிட்டு கூற விரும்புகிறேன். அரிசி விலையை ஏற்றியிருப்பதைப் பற்றி நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன். சாதாரண ரகம் $1\frac{3}{4}$ ரூபாய் இருந்தது 2 ரூபாய் ஆகியிருக்கிறது. சன்ன ரகம் $2\frac{1}{4}$ ரூபாய் இருந்தது இப்போது 3 ரூபாயாக ஆகியிருக்கிறது. மிகச் சன்ன ரகம் $2\frac{1}{2}$ ரூபாய் இருந்தது $3\frac{1}{2}$ ரூபாயாக ஆகி இருக்கிறது. உண்மையாகவே நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலே மிகச் சன்ன ரகத்தை நீங்கள் விட்டுவிடுங்கள். இருந்தாலும் அதை ஏழைகள் சாப்பிடக் கூடாது என்பதில்லையே. மற்ற ரகங்களைப் பற்றிச் சொல்கிறேன். விலை எட்டி பிடிக்க முடியாத நிலையில் இருக்கிறது. இல்லை என்றால் சன்ன ரக அரிசியைமட்டும் அவர்களால் சாப்பிட முடியாதா என்ன? இந்த விலைவாசி ஏற்றம் என்பது உண்மையாகவே மக்கள் மத்தியிலே வேதனையை உண்டாக்கி இருக்கிறது. அந்த உண்மையை நான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த விலையைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இனிமேல் விலையேற்ற மாட்டோம், மத்திய சர்க்கார் கொஞ்சம் விலை ஏற்றியிருக்கிறது என்று இங்கே தெரிவிக்கப்பட்டது. அது நமக்கு சரியான பதிலாக ஆகாது. இந்த அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை நிலவரம் என்னவென்று சொன்னால், ஜனங்களுக்கு மத்தியில் இந்தப் பிரச்சினைதான் தவறான முறையில் திருப்பிவிட்டு மக்களுடைய ஒற்றுமைக்கும் கூட இடையூறு விளைவிக்கக்கூடிய பிரச்சினையாக இது ஆகிக் கொண்டு வருகிற காரியங்களை பல பேர்கள் செய்கிறார்கள். இதை இந்த அரசு உணர வேண்டும். ஆகவே, அரசு அரிசி விலையைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். $1\frac{3}{4}$ ரூபாய் என்பதை 2 ரூபாயாக்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அது புழுங்கல் அரிசி. ஜனங்கள் அதிகப்படியாக விரும்புவது புழுங்கல் அரிசியைத்தான். பச்சரிசியாக இருந்தால் கண்டிஷன் கிடையாது. ஆனால்

பச்சரிசி அதிகமாக ஸ்டாக் இருக்கிறதென்றால் 25 சதவீத பச்சரிசி என்று வற்புறுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை கொஞ்சம் கவனத்தில் எடுத்து, அரிசி விலையை குறைக்க வேண்டுமென்பது எங்களுடைய திட்டவட்டமான கருத்து. மத்திய அரசு விலையேற்றி இருக்கிறது. அண்டை மாநிலங்களைப் பார்க்கும்போது நம்முடைய மாநிலத்தில் பெரிய விலை உயர்வு இல்லை என்று சொல்வது போன்ற வாதங்கள் சரியல்ல. இதை நாம் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எல்லா அரசுகளும் இந்த வாதத்தைத் தான் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

இன்னொன்று, நாம் இலவச அரிசியைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இலவச அரிசி கொடுப்பது நல்லது; நாங்கள் வரவேற்கிறோம். அது அரசாங்கத்தினுடைய ஒரு விஷேசமான திட்டம். ஒரு ஸ்பெஷல் ப்ரோகிராம் அது. அதை அரசாங்கம் தனியான நிதியைக் கொண்டுதான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். அந்த விஷயத்தை இந்தக் கணக்கோடு சேர்த்து அதற்கு நியாயம் கற்பிப்பது சரியல்ல. ஏழை மக்களுக்காக, இந்த அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று திட்டவட்டமாக நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, நெல் கொள்முதல் செய்வதிலே நமக்கு வந்து இருக்கக் கூடிய சில முக்கியமான விஷயங்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், நாம் தஞ்சாவூரிலே தான் அதிகமாக நெல் கொள்முதல் செய்கிறோம். நெல் கொள்முதல் பண்ணக் கூடிய பல்வேறு கொள்முதல் நிலையங்களில் சிறிய தராசு வைத்துத்தான் அவர்கள் எடை போடுகிறார்கள். அவர்களுக்கு வே-பிரிட்ஜ் மாதிரி ஆட்டோமாட்டிக்காக இருக்கக் கூடிய மெஷின் டிவைஸ் கிடையாது. என்ன நடக்கிறது என்று கேட்டால், அதிலே மூட்டைகளை எடை போட்டு, அப்படி அப்படியே வைத்து விடுகிறார்கள். அங்கே இருக்கக் கூடிய தொழிலாளிகள். அதை உடனடியாகத் தைப்பது கிடையாது. அப்படி மூட்டைகளிலே நிரப்பி, நிரப்பி, எடை போட்டு வைத்து வைத்து, பின்னாலே தான் அவைகள் தையல் போடப் படுகின்றன. தையல் போடும்போது அதிலேயிருந்து நெல்லை கொஞ்சம் எடுத்துவிடுகிறார்கள். அரசு இதைக் கண்காணித்து தடுக்க வேண்டும். இதற்கு சில யுக்திகளை நாம் கண்டுபிடித்து ஆக வேண்டும். இதை அரசு செய்ய வேண்டும். பிறகு எடை போடப்படுவது முடிந்து அந்த நெல் மூட்டைகளை அவர்கள் அங்கிருந்து கொண்டு போகிற வரைக்கும், அதற்கு சரியான கண் காணிப்பு தேவை.

அடுத்ததாக, இந்த நெல் மூட்டைகளை எல்லாம் தூக்கக் கூடிய தொழிலாளிகள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் இருக்கக் கூடிய 5 ஆயிரம் தொழிலாளர்கள், இந்த வருடம் ஆகஸ்ட் 15 ஆம் தேதி, அவர்களை, அந்த 5 ஆயிரம் தொழி

1990 ஏப்ரல் 16] [திரு. கே. ரமணி]

லாளர்களை பர்மனென்ட் ஆக்குவோம் என்று அரசு சொல்லி இருக்கிறது. அவர்கள் கடின உழைப்பாளிகள். இங்கே, மட்டுமல்ல, பல்வேறு இடங்களிலே இருக்கக் கூடியவர்கள், கோயம்பத்தூரிலே இருக்கக் கூடிய சிந்தாமணியை எடுத்துக் கொண்டால் அங்கேயும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட உழைப்பாளிகளை நிரந்தரமாக்குவதற்கும், அவர்களை அரசு ஊழியர்களாகவும் ஆக்க வேண்டும். காரணம், அரசாங்கத் தினுடைய ஒரு பகுதியாகத் தான் அந்த இலாக்கா இருக்கிறது. அதே மாதிரி, நியாய விலைக் கடைகளிலே வேலை செய்யக்கூடிய வர்களுக்கும் கொடுக்கும்படியான சம்பளத்திலும் ஒரு அடிப் படை மாற்றத்தை கொண்டு வந்து ஒழுங்குபடுத்த வேண்டும். இப்படிப்பட்ட முறை வந்தால் அந்த ஊழியர்களுடைய மத்தி யிலே மன எரிச்சல் ஏற்பட்டு தகராறுகள் உருவாவதற்கு வழி இல்லாமல் தடுக்க முடியும். விநியோகம் ஒழுங்காக நடக்கும். இந்த கள்ள மார்க்கெட் நடவடிக்கைகளுக்கு அவர்களை பயன் படுத்துவோருக்குக் கூட அவர்கள் இணங்காமல் அவர்களைப் பாதுகாக்க முடியும். அப்படிப்பட்ட முறையில் அந்த நட வடிக்கையையும் எடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

12-50 மணி

திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91-ஆம் ஆண்டு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியத்தில் கூட்டுறவுத் துறை பற்றி எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் இடையே அமைக்கப்பட்ட பாலம்தான் கூட்டுறவு என்றார் பெருந்தன்மைக்கும் பெருமைக்கும் உருவாய்த் திகழ்ந்த நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். கூட்டுறவு, அது கோவர்த்தனத்தை விட ஒரு பெரிய குடை ; அதன் கீழ் கோகுலம் மட்டுமல்ல, குவலயமே தங்குகிறது என்றான் இன் றைய கவிஞன் ஒருவன். மேகங்கள் கூடி மழையைத் தருவது போன்று மக்களுக்கு நன்மைகளைக் கொடுப்பதாகக் கூட்டுறவு இருக்கவேண்டும் ; அது காகங்கள் கூடி, இருப்பதைப் பகிர்ந்து கொண்டு போவதைப் போல அமையக்கூடாது என்றார் நமது போற்றுதலுக்குரிய முதல்வர் கலைஞர் அவர்கள். அத்தகைய கூட்டுறவு ஒரு மகத்தான மக்கள் இயக்கம். கூட்டுறவால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. நுகர்வோர் நலனுக்கு ஒரு பாதுகாப்புக் கேடயமாக இருப்பது கூட்டுறவு அமைப்புதான். ஆனால், கூட்டுறவு பற்றிய முழுமையான செய்திகள், மக்களை குறிப்பாக, இளைஞர்களைச் சென்று அடையவில்லையென்று நான் சொல்வேன். எனவே, கூட்டுறவுக் கல்வியைப் பள்ளி, கல்லூரிகளில், உரிய முறைகளில், பாடமாக, கற்பிக்க, தக்க முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். தற்போது, வணிக இயலைச் சிறப்பாகப் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே, கூட்டுறவு ஒரு சிறு பாடப் பகுதியாக வைக்கப்பட்டுள்ளது. இது

போதுமான பலனைத் தரவில்லை. எனவே, பள்ளி, கல்லூரிகளில் எல்லா பாடப் பிரிவு மாணவர்களுக்கு தமிழ், ஆங்கில மொழி பாடங்களிலும், கூட்டுறவு ஒரு பாடப் பகுதியாகக் கறபிக்கப்பட வேண்டும். அத்துடன் கூட்டுறவுப் பயிற்சிக்கும், பட்டப் படிப்புக்கும் அஞ்சல் வழி கல்வியினை அரசு விரைவில் துவக்கவேண்டும். சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை பதிலுரையின்பொழுது, அமைச்சர் அத்தகைய உத்தேசம் உள்ளதாகக் கூறினார்கள். கூட்டுறவுத் தேர்தல்களை 1990 ஆகஸ்ட் அளவில் தொடங்கி, 1990 நவம்பர் அளவில் முடிக்க இருப்பதாக அரசு கூறி இருப்பது வரவேற்று பாராட்டுக்குரியது. அத்தகைய நிலையிலே, தேர்தல்களை அரசு நடத்தி முடிக்க வேண்டும்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986-லே கூறியபடி, மாவட்ட-மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் நீதிமன்றங்களை விரைவாக அமைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொது விநியோக முறையில் ஈடுபட்டுள்ள வருவாய்த் துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத் துறை, இவற்றுக்கு இடையில் இணைந்து செயல்படும் தன்மை குறைவாக உள்ளது. இவை ஒருங்கிணைந்து செயல்படத்தக்க நடைமுறைகள் விரைவிலே மேற்கொள்ளப்பட வேண்டும்.

நியாயவிலைக் கடைகளுக்கான வடிவமைப்பினை பொது மக்களிடமிருந்து கேட்டு பெற்று, செயல்பட அரசு முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

மகளிரின் பங்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் மிகவும் குறைவாக இப்பொழுது உள்ளது. பெண்கள் அதிகம் பங்குபெறும் வகையில் அவர்களை ஊக்கப்படுத்தஅரசும் கூட்டுறவுத் துறையும் முன் வரவேண்டும். எந்த விஷயத்தையும் துணிவுடன் எதிர்த்து, பரிகாரம் காண வேண்டுமென்று துணிவை நாம் இலகுவில் கையாள்வதில்லை. காரணம், எதையும் சகித்துக் கொள்ள வேண்டுமென்று காலம், காலமாக, நமக்குக் கற்பிக்கப்பட்டு வந்திருக்கிறது.

நுகர்வோர் பாதுகாப்பு கருதி, அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ள நாம் பெரும்பாலும் முன் வருவதில்லை. இளைஞர்களை, கூட்டுறவு அமைப்புக்கள் தங்கள் உறுப்பினர்களாக்கி, கூட்டுறவின் குறிக்கோள்களை உணர்த்துவதற்காக, விரைவான திட்டங்களை வகுத்து, கூட்டுறவின் கொள்கைகளை, அதன் நன்மைகளை, உறுப்பினர்களும் எல்லோரும் தெரிந்துகொள்ளச் செய்வது, மிகமிக, அத்தியாவசியமானதாகும். கடந்த ஆண்டு கூட்டுறவு மானியக் கோரிக்கையின்பொழுது, அமைச்சர் அவர்கள் பதில் உரை அளிக்கையில், நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஒன்று முன்னாள் நீதிபதி திரு. அப்துல்காதர் தலைமையில் அமைக்கப்படுவதாகக் கூறினார்கள். அதன் செயல்பாடுகள் குறித்து, பேரவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 16] [திரு. எஸ். என். எம். உபயதுல்லா]

1989-90 ஆம் ஆண்டு தமிழகத்தில் முதன் முறையாக நிலவள வங்கிகளில் நகைக் கடன்கள் கொடுக்க தமிழக அரசு அனுமதி அளித்த காரணத்தால், குறிப்பாக, விவசாயிகள் பெரும் பயன் பெற்று வருகின்றனர். நலிவடைந்திருந்த நிலவள வங்கிகளும் பொருளாதார ரீதியாக வலுப்பெற தொடங்கியிருக்கின்றன. விவசாயிகள் பெரும் பயன் பெறுகின்ற காரணத்தால் விவசாய மாவட்டமான தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இதை மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன்,

12-55 மணி

நிலவள வங்கிகள் நகைக் கடன் மற்றைய தொழில் கடன்களை எல்லாம் கொடுத்து, வங்கிகளுடைய நடைமுறைகளைச் செயல்படுத்த ஆரம்பித்துள்ளதால் விவசாயிகள் கடன் பெறும் போது நிலவள வங்கிகளிலே நடப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்கு போன்றவற்றைத் தொடங்கி வைத்துக்கொள்வதை நடைமுறைப் படுத்தினால் தவணை முறையில் செய்யும் பட்டுவாடா கடன் நிலவள வங்கிகளுடைய நிதிநிலையை பெருமளவுக்கு அபிவிருத்தி செய்யும். எனவே இதுபற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு அறிவித்துள்ள விவசாயக் கடன் தள்ளுபடியை மாநில அரசு அமல்படுத்திகிறபோது சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்கிற பாகுபாடின்றி கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பது விவசாயிகளுடைய பெரும் குரலாக உள்ளது. மண்வெட்டி, பூச்சிமருந்துத் தெளிப்பான், களைமிதிக்கும் கருவி தார்படுதா போன்ற விவசாய அத்தியாவசியப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மானிய விலையில் எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

நகர கூட்டுறவு வங்கிகளில் புதிதாகத் திருத்தி அமைக்கப் பட்ட கூட்டுறவுச் சட்டத்தால் இயக்குநர் குழுவில் கூட்டுறவுத் துறை அலுவலர் சார் பதிவாளர் நிர்வாக இயக்குநராக இடம் பெறுகின்றார். அதனால் கூட்டுறவு நகர வங்கிகள் சம்பளம் மற்றும் இதர படிகள் மாதம் ரூபாய் 3,000 முதல் ரூபாய் 4,500 வரை அளிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு உள்ளதை பல நிர்வாகங்களுக்குச் சேர்த்து குழு நிர்வாக இயக்குநராக மட்டும் இருந்தால் போதும் என்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நகர வங்கிகளில் இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மகளிர் 30 சதவீதம்—3 பேர் ; ஆதிதிராவிடர் 18 சதவீதம்—2 பேர் ; பொது உறுப்பினர்கள் 52 சதவீதம்—4 பேர் என்று உள்ளது. இதை நகர வங்கிகளுடைய உறுப்பினர்களின்

எண்ணிக்கைக்கு ஏற்ப உயர்த்த வேண்டும். உதாரணமாக தஞ்சை மாவட்டத்திலே மிகப் பழமையான நிக்கல்சன் கூட்டுறவு வங்கியில் ஏற்கெனவே 21 இயக்குநர்கள் இருந்தனர். தற்போது அது 9 பேர் என்ற அளவிலே குறைந்துள்ளது. எனவே உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இயக்குநர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

கூட்டுறவு மத்திய வங்கியின் பொறுப்பில் உள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் மற்றும் உரம், பூச்சிமருந்து போன்றவைகளை வழங்கிய பிறகு 6 மாத காலத்திற்கு போதிய வேலையின்மையாலும் கிடங்குகள் காலியாக இருப்பதாலும் 1972-லே கழக அரசு இருந்தபோது இருந்த நிலை போல முழு அளவில் கூட்டுறவுச் சங்கங்களே கொள்முதல் பணியில் ஈடுபடாவிட்டாலும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக முகவர்களாக கொள்முதல் பணிக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றினால் விவசாயிகளுக்கு கிராமங்களில் நெல்லைப் போட வசதி ஏற்படும். அதேநேரத்தில் அரசுக்கு கொள்முதல் கூடுதலாகும் வாய்ப்பு உண்டு. நலிவடைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களும் புத்துயிர் பெறும். இது பற்றி அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் அரசு ஊழியர்களை அயல் பணியில் (எஃப். எஸ்) சொந்த மாவட்டத்தில் கால அளவு இன்றி பணியாற்ற அனுமதிக்கலாம். இதற்குத் தடையாக உள்ள 1985 லே போடப்பட்ட அரசு ஆணையினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை சாமியப்பா கூட்டுறவு பயிற்சி நிலையத்தில் மாணவ மாணவிகள் 600 பேர் கூட்டுறவுப் பயிற்சி பெறுகின்றனர். தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த மாணவ மாணவிகள் பயிற்சி பெறவேண்டியிருப்பதால் இதில் 150 பேர் அதிகமாகப் பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவும், அதிலே பயிலக்கூடிய மாணவ மாணவிகளுக்கு தங்கும் விடுதி வசதி ஏற்படுத்திடவும், சுற்றுப்புறச் சுவர்கள் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு 12 ஏக்கர் நிலம் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில்தான் அதிகமான கூட்டுறவு நிறுவனங்களும், இரண்டு மத்திய கூட்டுறவு வங்கிகளும் உள்ளன.

13-00 மணி

எனவே தமிழ்நாட்டில் உள்ள 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களையும், 2 கூட்டுறவு பயிற்சிக் கல்லூரிகளையும் இணைத்து.

1990 ஏப்ரல் 16] [திரு. எஸ். என். எம். உபயதுல்லா]

தமிழ்நாடு கூட்டுறவு பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்திட நம்முடைய போற்றதலுக்குரிய முதல்வர் அவர்களும், நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் முன்வரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் பேரவை 16-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை 13-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் 16-00 மணியளவில் பேரவை கூடியது.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது இங்கு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதவனின் வருகை உலக மக்களுக்கு ஒரு நம்பிக்கை. கூட்டுறவு ஏழை எளியவர்க்கு ஒரு புத்துயிர். புத்துயிர் தரும் கூட்டுறவின் முதல் விதை இந்தியாவில் தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திரூர் கிராமத்தில் 1904-ல் ஊன்றப்பட்டது. இன்று அது ஆல்போல் தழைத்து இந்தியா முழுவதும் பரவியுள்ளது. இந்த அபரிதமான வளர்ச்சி ஏழைகளுக்கு கேடயமாக விளங்குகிறது ; பாதுகாக்கவும் செய்கின்றது. அவ்வகையில் சாதி, மத இன பேதமின்றி கூட்டுறவு கொள்கையின் மேல் நம்பிக்கை உள்ள கூட்டுறவின் சேவை தேவையான அனைவருக்கும் கூட்டுறவு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்றது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்புகள் இல்லாத துறையே இல்லை. 15 பிரிவுகளாக பிரிக்கப்பட்ட துறைகளால் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. இதுபோன்று மிகத் தெளிவான முறையில் வகுக்கப்பட்ட கூட்டுறவு நிர்வாக அமைப்பு வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதே தமிழகத்தின் தனிச் சிறப்பு ஆகும். சான்றாக விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்துக்கும் ஒரு பதிவாளர், நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என ஒரு துணி நூல் இயக்குநர், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என பதிவாளர், இப்படியாக அனைத்து தொழில் மற்றும் வேலை அடிப்படையில் சிறந்ததொரு நிர்வாகம் இங்கு மட்டுமே உள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் முதுகெலும்பாய் விளங்கும் விவசாய கூட்டுறவுச் சங்கங்களையும் நுகர்வோர் மற்றும் விற்பனை சங்கங்களையும் மிகத் தெளிவாக வரையறுத்து அதனை பதிவாளர் மேம்படுத்தி வருகிறார். இவரது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் சங்கங்கள் முறையே மாநில, மாவட்ட மற்றும் கிராமிய அளவிலே செயல்பட்டு வருகின்றன. முக்கியமாக மாநில கூட்டுறவு வங்கியும், மாவட்ட கூட்டுறவு சங்கங்களும் தேவை

யான நிதிவசதிகளை அளிப்பதோடு அவற்றை மேம்படுத்தவும், கட்டுப்படுத்தவும் செய்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள பல சங்கங்கள் பல மேலை நாடுகளுக்கு குறிப்பாக ஆசிய நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியதை அனைவரும் அறிவோம். சான்றாக, கோயம்புத்தூரிலுள்ள சிந்தாமணி மொத்த கூட்டுறவு விற்பனை சங்கம், துடியலூரிலுள்ள விவசாய சேவை சங்கம், கோ–ஆப்டெக்ஸ் மற்றும் கும்பக்கோணம் கூட்டுறவுச் மத்திய வங்கி ஆகியவை ஆகும். இத்தகைய கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வந்த தமிழ்நாட்டில் உண்மையான கூட்டுறவுக்கு ஒரு சங்கத்தைக் கூட சான்றாக காட்டுவதற்கு இன்று இயலவில்லை. 1975-76-ல் கும்பக்கோணம் கூட்டுறவு மத்திய வங்கி இந்தியாவிலேயே முதன்மை வங்கியாக சான்று பெற்றது. அந்தக் காலத்தில் எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பேற்று இருந்த காலத்தில் அந்த வங்கி முதன்மையான வங்கியாக பெயர் பெற்றது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும் என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு ஒரு மக்கள் இயக்கம். இதன் தனிச் சிறப்பு அதன் மக்களாட்சி முறை. ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் கூட்டுறவுகள் நிர்வகிக்கப்படுகின்றன. உறுப்பினர்களே இதன் சொந்தக்காரர்கள்; நாட்டாண்மைக்காரர்கள் ஆவார்கள். தாம் சார்ந்த சங்கங்களுக்கு தங்களது இடத்திற்கும், தேவைக்கும் ஏற்ப தனிச் சிறப்போடு நடைபெற்று வந்த இதன் ஆட்சி முறைக்கு கடந்த காலத்தில் 1976 முதல் சரிவு ஏற்பட்டது. மாநில மற்றும் மத்திய கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபைகள் 1976-ல் கலைக்கப்பட்டன. இதையடுத்து 1985-ஆம் ஆண்டு அனைத்து பிரதம விவசாய சங்கங்களின் நிர்வாக சபைகளும் கலைக்கப்பட்டன. மீண்டும் 1989-ஆம் ஆண்டு அனைத்து இதர கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபைகளும் கலைக்கப்பட்டன. கைதேர்ந்த மக்களின் நலனில் அக்கறை கொண்ட பொது சேவையில் ஈடுபாடு கொண்ட பலர் அடங்கிய நிர்வாக சபைக்குப் பதிலாக தனி அலுவலர் என்ற அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அதனால் கூட்டுறவின் தனிச் சிறப்பு மங்கி மறைந்துபோனது உண்மை. இதை நாம் அனைவரும் அறிவோம்.

நமது கூட்டுறவின் தனிச்சிறப்புகள் மறைந்த போதிலும் இன்றைய நம்முடைய கழக ஆட்சி கூட்டுறவுகளின் இன்றியமையா சேவையை உணர்ந்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவையெல்லாம் ஏழை மக்களுக்கு விடிவெள்ளி. குறிப்பாக பொது வினியோக முறை என்ற திட்டம் கிராமிய அளவிலான அனைத்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் செயல்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களின் சிரிப்பில் இறைவனைக் காணும் நமது திராவிட முன்னேற்றக் கழக

ஆட்சியில் தொடர்ந்து அம்மக்களுக்கு நல்வாழ்வு அமைந்திட அவர்களின் அடிப்படைத் தேவையான உணவையும், உடையையும் இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்தின் தேவையை அறிந்து வழங்கி வருகிறோம். இத்தகைய சீரான சிறப்பு மிக்க அமைப்புகள் இந்தியாவில் பிற மாநிலங்களில் எங்கும் இல்லை. பல மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கிவரும் தமிழக கூட்டுறவு இயக்கம் மேலும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதே இம்மக்களின் நலனை விரும்பும் அனைவரது எண்ணமாகும். இந்த வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் தடைகளை சீர்படுத்துவதும், இருக்கின்ற அமைப்புகளையும், முறைகளையும் மேம்படுத்துதல் ஒன்றுதான் நாம் செய்யும் கடமையாகும்.

16–05 மணி

ஏழை விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்ட கிராம கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட பணியோடு பொது வினியோகத் திட்டம், வங்கியியல் நடவடிக்கைகள் மற்றும் பல சேவைத் திட்டங்களைச் செயல்படுத்தி மக்களுக்குச் செவ்வனே செயலாற்றி வருகின்றன. இச்சங்கங்களின் செயல் திறனைக் குறைத்து மதிப்பிட இயலாது. ஆயினும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புவது, இங்கு பணியாற்றும் பணியாளர்களின் சிறப்புத் தன்மையை, மிகக் குறைந்த ஊதியம், அதிக வேலைப்பளு மற்றும் பொறுப்புகள், விடுமுறையின்மை ஆகியவற்றில் இவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள் என்பதை அரசு அறிந்துள்ளது குறித்து பணியாளர்களுக்கும் மகிழ்ச்சி, அவர்களது மகிழ்ச்சி நீடித்திட உற்சாகத்தோடு உழைத்திட நாம் வேண்டுவது ஊதிய உணர்வும், பணிப் பாதுகாப்பும், வேலைப் பளுக்குறைப்பும் ஆகும். இதற்கு அவசியமாக தேவையான அளவிற்கு பணியாளர்களை நியமிப்பது மிக அவசியம். ஊதிய உயர்வு கொடுப்பது அவர்கள் தங்களது பணியினைச் செவ்வனே செய்து முடிக்க உந்துதலாக இருக்கும். இத்தகைய நியமனங்களும் ஊதிய உயர்வும், எந்த வகையிலும் அரசின் நிதி வசதியைப் பாதிக்காது என்பதும் உண்மை.

1976 முதல் கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பாக மாநில மற்றும் மத்திய கூட்டுறவுச் சங்கங்களில் நிரந்தரப் பணி நியமனங்கள் ஏதும் நடைபெறவில்லை. பதவியிடங்கள் பல காலியாகவே உள்ளன. மிகவும் அத்தியாவசியமான நிலையில் கூட பணி நியமனங்கள் மிகக் குறைந்த அளவில் தினக்கூலி அடிப்படையில் செய்யப்பட்டுள்ளன. இதனால் பணியில் தேக்கம் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம். மேலும் தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்படுவோர் தகுந்த பயிற்சியும் போதிய கல்வியறிவும் இல்லாதவர்கள் என்பதும் உண்மை. ஆகவே

அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் உடனடியாக பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதன் மூலம் தேங்கி கிடக்கும் கூட்டுறவு சேவைப் பணிகளை திறம்பட செயலாற்ற முடியும். இதனால் அரசுக்கும் எந்த நிதி நெருக்கடியும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு இளங்கலை, முதுகலை பட்ட வகுப்புகள் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பொரையார் கல்லூரியில் எம்.பில்., பி.எச்.டி. என்கிற ஆராய்ச்சிப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. இங்கு பட்டம் பெறுகின்ற மாணவர்கள் கூட்டுறவுத் துறையில் பல பதவிகளில் திறம்படச் செயலாற்றி வருவதை அரசும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் நன்கு அறிவர். இவர்களுக்குப் பணிப் பயிற்சியிலிருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் பணிப்பயிற்சிக்காக அரசு செலவழிக்கும் தொகையும் மிச்சப்படுகிறது. ஆகவே இத்தகைய பட்டம் பெற்றவர்கள் நேரடியாக விவசாயம், மருத்துவம், படித்தவர்களுக்குக் கொடுக்கப்படும் நேரடி நியமனங்கள் போல் இத்துறையில் இவர்களை மட்டுமே நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவின் மேன்மையைப் பெரிதும் எடுத்துரைத்தவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் நேரத்தில் அவர் பெயரால் விளங்கும் பல்கலைக் கழகத்தில் கூட்டுறவுத் துறையைத் தொடங்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் இருக்கும் கூட்டுறவு கல்வி, நிதி மற்றும் கூட்டுறவு நிதியிலிருந்து வளர்ச்சி ஆராய்ச்சியில் ஈடுபடும் இம்மாணவர்களுக்கு நிதி உதவி அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற கழக அரசின் கொள்கைப்படி ஏற்கனவே அறிவித்தபடி தனிச் சிறப்பு மிக்க தமிழக கூட்டுறவு இயக்கம், தான் இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்டிட மக்களாட்சி முறையினைச் செயல்படுத்துதல் அவசியமி. கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடந்து ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் மக்களாட்சி முறையினை, அதன் செயல்பாட்டினை நடைமுறைப் படுத்தி செயலாற்றிட வைக்கும் களம்தான் கூட்டுறவு. ஆகவே உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்திடுதல் அவசியம். பண்டித ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டபடி ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் மக்களாட்சி முறை இல்லை என்றால் அது கூட்டுறவாக நிச்சயமாக இருக்க

1990 ஏப்ரல் 16] [திரு. எம். முகமது சித்திக்]

முடியாது. வேறு பிற அமைப்பாகத்தான் இருக்க முடியும். ஆகவே அண்ணா வழி வந்த நம் கழக ஆட்சி மககளாட்சி முறை யினை நிலை நிறுத்திட உடனே தேர்தல் நடத்துவது அவசியம். தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாக சபை தங்கள் சங்கத்திற்கு ஏற்றவாறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும் பொழுது சிறப்பாக ஏழை எளிய மக்களுக்குப் பணியாற்ற முடியும் என்பதோடு அரசின் பணிப்பளுவும் குறையும் என்பது உண்மை. ஆகவே தமிழகம் தன்னிகரற்ற சிறப்போடு விளங்கிட பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும். பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட வேண்டும். தனி பயிற்சி பெற்ற கூட்டுறவு பட்டதாரிகளை, நேரடி நியமன அடிப்படையில், கூட்டுறவுத் துறையில் பணியமர்த்துதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில், கூட்டுறவுத் துறை, ''டிபார்ட்மென்ட் ஆப் கோவாபரேஷன்'' உடனடியாகத் தொடங்க ஆவன செய்ய வேண்டும்.

16-10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் முடிந்தது. ஒரே மணித் துளிதான் இருக்கிறது.

திரு. எம். முகமது சித்திக்: சில பிரச்சினைகளைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, எல்.டி. பாங்க் பல ஆண்டுகளாக செயல்பட்டு வந்தது, கடந்த நான்கைந்து வருடங்களாக மயிலாடுதுறைக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆகவே, அந்த எல்.டி. பாங்கை என்னுடைய தொகுதியில் கடைமடைப் பகுதியான தரங்கம்பாடியில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் அமுதம் அங்காடி இல்லாத குறை மக்களிடம் பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. கார்டுகள் இருக்கின்ற பகுதிக்குத்தான் அமுதம் அங்காடி ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டம் அரசிடம் இருந்தாலும் கூட, இரண்டு மைல் அல்லது 3 மைல்கள் அளவிற்கு நடந்து வந்து, அந்தப் பகுதியிலிருக்கின்ற மக்கள் அங்காடியிலிருந்து பொருட்களை வாங்குவதில் மிகவும் சிரமம் அடைகிறார்கள். கார்டு அடிப்படையில் அந்த அமைப்புகளை செய்வதை, சில இடங்களில் மக்களின் நலனைக் கருதி, பகுதி நேர அங்காடிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான், கூட்டுறவு மற்றும் நுகர் பொருள் வழங்குதல் மானியக் கோரிக்கை மீது என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல முன் வருகிறேன். கூட்டுறவு ஸ்தாபனமானது, பொதுவாக, தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும், முக்கியமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், பொருளா தார மேம்பாட்டுக்கும், அயராது பாடுபட்டுக்கொண்டு வரு கிறது. இந்த கூட்டுறவு ஸ்தாபனத்திலே 3 அம்சங்கள் இருக் கின்றன. ஒன்று, 'அக்ரிகல்ச்சுரல் கிரேடு' விவசாயிகளுக்கு கடன் கொடுப்பது : விவசாயிகளுக்கு கடன் கொடுத்த பிறகு, அவர்கள் தயார் செய்யக்கூடிய விளைபொருட்களுக்கு மார்க்கெட் ஏற்பாடு செய்வது : மூன்றாவது பொது விநியோகத் திட்டம். இந்த மூன்று அம்சங்களுக்கு கூட்டுறவு மிகவும் முக்கியமாக பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே, தமிழ் நாட்டிலே, 'தமிழ்நாடு ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்க்' 1905—லே நிறுவப்பட்டது. அந்த கோவாபரேடிவ் பாங்க், 'நாபார்டு' மூலமாக கொடுக்கக் கூடிய கடனை, 'டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் பாங்க்' மூலமாகவும், 'ஃபெடரேஷன் ஆப் டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் சென்டர்' மூலமாகவும், கிராமப் புறத்திலே இருக்கக்கூடிய 'பிரைமரி கோவாபரேடிவ் பேங்க்' மூலமாகவும், கடனை விநியோகம் செய்து வருகிறார்கள். அதே நேரத்திலே, கடன் கொடுப்பது, கடன் வாங்குவது 'டார்கெட் அண்டு அச்சிவ்மெண்ட்' முக்கியமல்ல. விவசாயிகளுக்கு எது முக்கியமென்றால், உரிய நேரத்திலே கடன் கொடுக்கப்பட வேண்டும். ஏ.சி.எல். தயார் செய்கிறார்கள். ஏ.சி.எல். தயார் செய்த பிறகு, 'ஆனுவல் பிளான்' தயார் செய்கிறார் கள். அதே நேரத்திலே, விவசாயிகள் பயிர் செய்து, அறுவடை ஆகிற நேரத்திலேகூட, ஏ.சி.எல். கொடுத்து சாங்ஷன் செய்வதில்லை. அந்த நேரத்திலே கடன் போர்ஷன் 30 சதவீதம் கைண்ட் போர்ஷன் 70 சதவீதம் அவர்கள் உரிய நேரத்திலே கொடுக்காத காரணத்தினால், கடன் வாங்கி பயிர் செய்து வரக் கூடிய உரத்தை 50சதவீதம் கூடவிற்க வேண்டிய நிலைமை ஏற்படு கிறது. ஆதலால் உரம் தேவையில்லை என்று கருதுகிறேன். நானும் ஒரு விவசாயிதான். இப்போது இருக்கிற திட்டப்படி 70 சதவீதம் 'ஆன்வல் பிளானில்' தயார் செய்வது ஒரு நல்லமுறை இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அதை நீங்கள் ரிவைஸ் செய்து, கடன் போர்ஷன் 70 சதவீதம் ஆகவும், கைண்ட் போர்ஷன், 30 சதவீதம் ஆகவும் செய்தால் நல மாக இருக்குமென்பது என்னுடைய அபிப்பிராயம். 'நாபார்டு' திட்டத்தின் மூலம், 'ஸ்டேட் கோவாபரேடிவ் பேங்கில்' சென்ட் ரல் பேங்குக்கு பணம் கிடைக்கிறது. அந்த பணம் கிடைக்கிற நேரத்திலே, 'ஐ.ஆர்.டி.பி. லோன் எல்லாம் நாம் பிளாக்கிலே

1990 ஏப்ரல் 16] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

கொடுக்கிறோம். ஐ.ஆர்.டி.பி. லோன் எல்லாம், நேஷனலைஸ்டு பேங்குக்குச் செல்கிறதே தவிர, கோவாபரேடிவ் பேங்குக்கு கிடைப்பது இல்லை. கிராமப்புறத்திலே 'கிராஸ் ரூட்'டிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு 'ஈஸி அப்ரோச் இருக்க வேண்டும். கிராமங்களிலே இருக்கக்கூடிய 'பிரைமரி கோவா பரேடிவ் பேங்கு'க்கெல்லாம் கொடுத்தால்தான், அவர்களுக்கு உடனடியாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். அதே நேரத்திலே, எல்.டி. பேங்கிலே கேட்டால் எங்களுக்கு பணம் 'புரொவைட்' பண்ணவில்லை என்று குறை சொல்கிறார்கள். பிரைமரி கோவாபரேட்வ் பாங்கிலும் பணம் இருப்பதில்லை. ஆதலால் நமக்கு 'நாபார்டி'லிருந்து, ஒரளவிற்கு பணம், 'செட்—அபார்ட்' பண்ண வேண்டும். 'ஐ. ஆர். டி. பி' பணத்தை விநியோகம் பண்ணுவதற்கு எப்படி பாங்கிலே செட்—அபார்ட் பண்ணுகிறார்களோ, அதேபோல், 'பிரைமரி கோவா பரேடிவ் பேங்'குக்கு, 'நாபார்டு' திட்டத்தின் கீழ், 'ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்க்' மூலமாகவும், 'சென்ட்ரல் கோவாப ரேடிவ் பாங்க்' மூலமாகவும் ஒரு தேவையான பணத்தை 'செட்—அபார்ட்' செய்தால் அது கிராமங்களிலே இருக்கக்கூடியவர்களுக்கு 'ஐ.ஆர்.டி.பி.' லோன் நேரத்திலே விநியோகப் படுத்துவதற்கும், விவசாயிகள், அதைப் பெற்று உடனடியாக உபயோகப்படுத்து வதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்று என்னுடைய யோசனையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

16–15 மணி

தமிழ் நாட்டில், மொத்தமாக 71 லட்சம் அக்ரிகல்சுரல் ஃபேமிலிஸ் இருக்கின்றன. இதிலே, 61 லட்சம் பேமிலீஸ் ''ஸ்மால் அண்டு மார்ஜினல்'' குடும்பங்களாக இருக்கின்றன. இதிலே என்னுடைய கோரிக்கை என்னவென்றால் 90 சதவீதம் ''சொசைட்டி கவரேஜ்'' கொண்டுவர வேண்டும். அக்கிரி கல்சுரில் 90 சதவீதம் சொசைட்டி கவரேஜுக்குக் கொண்டுவர வேண்டும். சொசைட்டியில் எல்லோரும் கம்பல்சரி மெம் பராக இருக்க வேண்டும் என்று ஒரு திட்டம் இருக்கிறது. ஸ்மால் பார்மர்ஸ், மார்ஜீனல் பார்மர்ஸ் 61 இலட்சத்தில் 71 சதவீதம் சேர்க்க வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. அதில் 73 அல்லது 72 சதவீதம் தான் டார்ஜெட் அச்சீவ் பண்ணி இருக்கிறோம். அதில் ஒன்றும் கஷ்டம் இல்லை. ஸ்பெஷல் ஆபிசர்களிடம் போனால் மெம்பராக சேர்த்துக் கொள்வதில்லை; சேர்க்க முடியாது என்று சொல்கிறார்கள். நாம் கோவாபரேடிவ் கவரேஜ் என்று கொடுக்கிறோம். 'நான்ஃபார்ம் செக்டார்' 'பார்ம் செக்டார்' ஆகியவைகளில் இருக்கிற மெம்பர்களை சேர்ப்பதற்கு ஸ்பெஷல் ஆபீசர்கள் இஷ்டப்படுவதில்லை. அந்தக் குறையை தங்கள் மூலம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். யார் மெம்பராக சேர விரும்புகிறார்களோ அவர்களை கட்டாயமாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு உத்திரவு வழங்கினால் நன்றாக இருக்கும் என்று நான்

தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கோவாபரேடிவ் இயக்கத்திலே கவரேஜ் என்று சொல்கிறோம். கோவாபரேடிவ் எல்லாம் கவரேஜுக்கு வர வேண்டும் என்று சொல்கிறோம். அதேநேரத்தில் மெம்பர்ஷிப் என்ரோல் பண்ணுவதற்கு அவர்கள் தயாராகஇல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரிசி விநியோகத் திட்டம். நான் இதைப்பற்றி ஏற்கனவே பட்ஜெட்டில் சொல்லி இருக்கிறேன். ஒரு கிலோ அரிசி $3\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்றார்கள். $2\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்ற அரிசி $3\frac{1}{2}$ ரூபாய்க்கு உயர்த்தியாகிவிட்டது. இலவச அரிசி ஏழை எளியவர்களுக்கு மூன்று முறை கொடுக்கப்படுகிறது. மூன்று முறைக்கு ஒருவருக்கு 15 கிலோ ஆகிறது. அந்த 15 கிலோவுக்கும் கணக்குப் போட்டால் 52 $\frac{1}{2}$ ரூபாய் ஆகிறது. நீங்கள் அவர்களுக்கு வருடம் பூராவும் கொடுப்பது 144 கிலோ. அந்த 144 கிலோவில் 15 கிலோவைத் தள்ளி விடுங்கள். 129 கிலோ கொடுக்கிறீர்கள். 129 கிலோவுக்கு 129 ரூபாய் அதிகம் போகிறது. நீங்கள் கொடுக்கிற அந்த அரிசித் திட்டத்திலே யாருக்கு இலவச அரிசி கொடுக்க வேண்டுமோ அவர் 129 ரூபாய் அதிகமாகச் செலுத்த வேண்டி இருக்கிறது. அந்த 129 ரூபாயில் 52 $\frac{1}{2}$ ரூபாயைக் கழித்துவிடுங்கள். மீதம் அவன் பாக்கெட்டிலிருந்து கொடுக்க வேண்டி இருக்கும். இது நல்ல திட்டமா? நீங்களே யோசனை செய்யுங்கள். ஆதலால் நீங்கள் இந்த உண்மையை மனதில் கருதி செயல்பட வேண்டும். 'நான்—ஃபார்ம் செக்டாரில்' விவசாயியாக இல்லாதவன்—கூலியாக இருக்கிறவன், லேபரர் ஒரு வருடத்திற்கு $72\frac{1}{2}$ ரூபாய் அவன் பாக்கெட்டிலிருந்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால் இது நியாயமான முறையா என்பதை யோசனை செய்யுங்கள். நீங்கள் இலவசமாக அரிசி கொடுப்பதை நிறுத்திவிடலாம். அது ஒன்றும் அவசியமில்லை.

I am not against it. பிராக்ட்டிகலாக சொல்ல வேண்டும் என்று சொன்னால் இலவச அரிசி அவர்கள் வருடம் பூராவும் 15 கிலோ அரிசி வாங்கினால் அவர் 72 $\frac{1}{2}$ ரூபாய் அவனுடைய பாக்கெட்டிலிருந்து போகிறது. 15 கிலோ அரிசி அவனுக்கு கொடுக்கிறீர்கள். பிறகு வருமான வரம்பை ஆயிரம் ரூபாயாக ஏற்றினீர்கள். 5 முறை என்று கொடுத்ததை 3 முறையாக ஆக்கினீர்கள். வருமான வரம்பு 300 ரூபாயாக இருந்ததை ஆயிரம் ரூபாயாக உயர்த்தினீர்கள். ஐந்து முறை கொடுத்து வந்ததை 3 முறையாக குறைத்து விட்டீர்கள். This is not practcally used அதனால் தயவு செய்து அந்த முறையைக் கைவிட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். நான் கிராமத்தில் இருப்பதால் அந்த கஷ்டம் எனக்குத் தெரிகிறது.

1990 ஏப்ரல் 16] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

அடுத்து விவசாயிகளுக்கு கடன் 'ரைட்-ஆப், பண்ணு கிறார்கள். 10 ஆயிரம் 'ரைட்-ஆப்' பண்ணுகிறேன் என்று சொன்ன உடன் யாரும் கடனை கட்டமாட்டேன் என்கிறார் கள். வசூல் கூட பண்ணுவதில்லை. அதனால் அவனுடைய பாரோயிங் கெப்பாசிட்டி போய்விடுகிறது. மேலும் அவன் பயிர்ச் சாகுபடி செய்ய பண வசதி இல்லை. அவன் கடன் வாங்கியது 10 ஆயிரம். 'ரைட் ஆப்' இல்லை என்று சொல்லி இருந்தால் அவன் கஷ்டப்பட்டு எப்படியாவது கட்டி இருப்பான். அவனுக்கு அந்த வாய்ப்பாவது இருந்தது. இப்போது அந்த வாய்ப்பு போய்விட்டது. He has lost borrowing capacity அது போய்விட்டதால் மீண்டும் அவன் லோன் வாங்க முடிய வில்லை. கடன் வாங்கி பயிர் செய்ய முடியவில்லை. லோன் பர்டன் என்பது எல்லா விவசாயிகளுக்கும் இருக்கிற ஒன்று தான். மார்ஜினல் ஃபார்மர்ஸ், ஸ்மால் ஃபார்மர்ஸ், பிக் ஃபார்மர்ஸ் எல்லோரும் ஈகுவல் தான். விவசாயிகளுக்கு எப்போதும் ஒன்று மழை இல்லாமல் போய்விடுகிறது அல்லது மழை அதிகமாகப் பெய்துவிடுகிறது. அதனால் நேசுரல் வேகரீஸ் விவசாயிகளுக்கு மட்டும் உண்டு. எப்போதும் உண்டு. கடந்த 5 அல்லது 6 ஆண்டு களாக பயிர் சாகுபடி செய்ய வசதி இல்லை. கிணற்றில் தண் ணீர் இல்லை. லோன் பர்டன் எல்லோருக்கும் ஈகுவலாக இருக் கிறது. அதை சென்ட்ரல் கவர்ன்மென்ட் ரைட்-ஆப் பண்ணும் புரபோசல் இருக்கிறது. அதுபற்றி ஸ்டேட் கவர்ன்மென்ட்டில் இருக்கக்கூடிய திட்டம் என்ன? உத்தேசம் என்ன? அது உங் களுக்குத் தெரியாமல் இருக்காது. அந்த விவசாயிகள் எல்லாம் பெரிய ஆசை வைத்துக்கொண்டு லோன் ரைட்-ஆப் ஆகும், லோன் ரைட்-ஆப் ஆகும் என்று சொல்லி அந்தப் பணத்தை கட்டாது பாங்குகள் எல்லாம் டார்மன்ட் ஸ்டேஜுக்கு வந்து இருக்கிறது. அதனால் நம்முடைய மாநில சர்க்கார் ஒரளவு அட்லீஸ்ட் 50 சதவீதம் கொடுக்கிற வாய்ப்பு உண்டாக்குமா னால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய யோசனை. அதே நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் 10 ஏக்கர் அல்லது 5 ஏக்கருக்கு மேல் வைத்து இருப்பவர்களுக்கு கூட வட்டியையாவது தள்ளினால் கடனை அரசுக்குக் கட்டுவதற்கு வசதியாக இருக்கும். அந்த கடனை இன்சால்மென்ட் மூலமாகக் கூட வசூல் பண்ணிக்கொள்ளலாம். கடன் வாங்கிய விவசாயிகள் யாருக்கும் அதைத் திருப்பிக் கட்டக் கூடாது என்ற எண்ணம் கிடையாது. எல்லோரும் நேசுரல் வேகரீஸ்க்கு ஆனபடியால் கடனை கட்ட முடியாது; கட்டக் கூடாது என்ற எண்ணம் அவர் களுக்கு கிடையாது. They have lost their borrowing capacity திருப்பிக் கட்டும்தன்மையை அவர்கள் இழந்துவிட்டார்கள். அதனாலே அவர்கள் கட்ட முடியவில்லையே தவிர விவசாயிகள் எப்போதுமே அரசை ஏமாற்ற வேண்டும்; கடனைக் கட்டக்கூடாது என்ற எண்ணம் எப்போதுமே விவசாயிகளுக்குக் கிடையாது. ஆகவே, மறுபரிசீலனை செய்து, குறைந்தபட்சம் அவனுக்கு

16-20 மணி

வட்டியையாவது தள்ளி, இன்ஸ்டால்மெண்ட் மூலமாகவாவது வசூல் செய்வதற்கு ஒரு உத்தரவை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராப் இன்ஷயூரன்ஸ் ஸ்கீம்—பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் நல்ல திட்டம். ஆனால், அது தமிழ்நாட்டிலே எல்லாப் பகுதி களிலேயும் கிடையாது. எல்லாப் பகுதிகளுக்கும் கிராப் இன்ஷ யூரன்ஸ் திட்டத்தை விஸ்தரித்தால் நன்றாக இருக்கும். அதி லும், ஏழு வெரைட்டிகளுக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். ஏழு வெரைட்டிகளுக்குத்தான் கிராப் இன்ஷயூரன்ஸ் இருக் கிறது. சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இரண்டு பங்கு கொடுக்கிறது. ஸ்டேட் கவர்ன்மெண்ட் ஒரு பங்குதான் கொடுக்கிறார்கள். அந்த ஒரு பங்கைக் கொடுக்கக்கூடிய நாம், யோசனை செய்து, எல்லா வெரைட்டிகளுக்கும், ஃபுட் கிராப்ஸ், மில்லட்ஸ் எல்லாம் இருக்கிறது. ஆனால் ஏழு வெரைட்டிகளுக்குத்தான் அந்தக் கிராப் இன்ஷயூரன்ஸ் இருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை, கரும்பு, வாழை, மிளகாய், போன்றவைகளுக்கு—உடனே கெட்டுப் போகக் கூடிய பொருட்கள், எனவே அதற்கு, ஏழு வெரைட்டி களுக்கு இருக்கின்ற அந்தக் கிராப் இன்ஷயூரன்ஸ் திட் டத்தை எக்ஸ்டெண்ட் செய்து, அந்தச் சலுகையை வாழை, மிளகாய் போன்ற பொருட்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராப் இன்ஷயூரன்ஸ் திட்டம் ரொம்ப நல்ல திட்டம். என்னுடைய பகுதியிலே, போன ஒரு வாரத்திற்கு முன்பு சுமார் 152 ஏக்கராக்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்த மாக கால் அட்டென்ஷன் நோட்டீஸ்கூடக் கொடுத்திருக்கிறேன். கிராப் இன்ஷயூரன்சிலே அது இல்லவே இல்லை. என்னுடைய பகுதி சேரவே இல்லை. அமைச்சரவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்வது தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளையும் கிராப் இன்ஷயூரன்ஸ் திட்டத்திலே சேர்க்கும்படி நான் இந்த மன்றத்திலே தாழ்மையோடு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு வரக் கூடிய இந்தப் பெரிய நஷ்டத்திலே, தாங்கள் இந்தக் கடன் நிவாரணம் கொடுப்பதிலே கொஞ்சம் அக்கறை எடுத்து, குறைந்தபட்சம் வட்டியையாவது ஸ்மால் மார்ஜினல் விவசாயிகளுக்குக் கம்ப்ளீட்டாக ரைட் ஆப் செய்யுங்கள். அதில் நம்முடைய ஸ்டேட் கவர்ன்மெண்ட் அக் கறை எடுத்துக்கொள்ள வேண்டும். சென்ட்ரல் கவர்ன்மென்ட்

1990 ஏப்ரல் 16] [திரு. எ. ஏகாம்பர ரெட்டி]

கொடுக்கிறான். கொடுக்கிறான் என்றால், சென்ட்ரல் வந்து எங்கேயிருந்து கொடுப்பார்கள்? இன்னும் மனசு வரவில்லை. வெஸ்ட் பெங்கால் மினிஸ்டர் பத்து நாட்களுக்கு முன்பு ஒன்றைச் சொன்னார். அது ஒன்றும் செய்ய முடியாது. ஸ்டேட் கவர்ன்மெண்ட் இஷ்டப்பட்டால்தான் செய்ய முடியும். அதையெல்லாம் நீங்கள் நம்பாதீர்கள்என்றொரு ஸ்டேட்மென்ட் கொடுத்திருந்ததை நீங்களெல்லாம் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். அந்த ஸ்டேட்மென்டை நாங்களெல்லாம் பார்த்திருக்கிறோம். ஆகவே, மாநில சர்க்கார் அக்கறை எடுத்து, விவசாயிகளுக்கு இந்த நல்ல நேரத்திலே உதவும்படி உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. கோ். பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் மன்றத்திலே வைக்கப் பட்டிருக்கின்ற உணவுத் துறை, கூட்டுறவுத் துறைகளின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, உணவுத் துறை சரியாக நடைபெற்றால்தான் இந்த அரசாங்கம் சீரான முறையிலே, ஒருவித போராட்டமும் இன்றி, சுமுகமான முறையில், நல்லவிதமாக நடைபெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கிறது. உணவுத்துறை எந்த அளவிற்கு மக்களுக்கு நல்ல, குறைந்த விலையிலே, தரமுள்ள உணவாகவும், காலாகாலத்திலே அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு நிலையினையும் ஏற்படுத்தி வருகிறதோ, அதையொட்டித்தான் அரசாங்கத்திலே பல நல்ல வேலைகள் நடைபெறுவதற்கு மக்கள் ஒத்துழைப்பு தருவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தேடிக் கொடுக்கிற ஒரு நிலை இருக்கிறது.

உண்டி குறைந்தாலே எல்லாம் குறைந்து விடும் என்பார்கள். உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதனால் பல பற்றாக்குறை ஏற்பட்டு, நாட்டிலே பல சங்கடங்கள் விளையக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படக்கூடிய ஒரு நிலை இந்த இலாக்காவிற்கு உண்டு. இந்த இலாக்கா திறமையாகவும், செம்மையாகவும் நல்லமுறையிலே நடைபெற்றால் நம்முடைய அரசாங்கத்திற்கு நல்ல பெயரை ஈட்டித் தரக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுத் துறையிலே பரவலாக ஒரு நல்ல முறையிலே நடைபெறவில்லை என்று மக்கள் மத்தியிலே அந்தப் பேச்சு இருக்கிறது. கொள்முதலிலே அதிக விலை கொடுத்து வாங்கு

கிறோம். வாங்குகிறபொழுது அந்த விவசாயிகள் கொடுக்கின்ற அந்த விலைபொருட்கள் என்னதான் நல்ல விலையை நாம் கொடுத்தாலும், உரிய காலத்திலே, நல்லவிதமாக அவர்களுக்குப் போய்ச் சேருவது இல்லை. காலாகாலத்திலே, அவர்கள் குறைப்படாமல், அந்தப் பண்டங்களைப் பெறுவதற்கு நம்முடைய இலாக்கா முயற்சியெடுக்கவில்லை என்ற குறைபாடு பரவலாக இருந்து வருகிறது.

வாங்குகின்ற உணவை, உணவுப் பொருளைத் தக்க சமயத்தில் நல்லவிதமாகப் பக்குவப்படுத்தி மக்கள் மத்தியிலே விநியோகிக்கின்ற நிலையிலே, குறைபாடுகள் ஏராளமாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். எங்கேயோ ஓரிடத்திலே கொள்முதல் செய்து, எங்கேயோ ஓரிடத்திலே கிடங்குகளிலே வைத்து, மறுபடியும் விற்பனை நிலையத்திற்குப் போகின்ற, வேண்டாத விரயங்கள், போக்குவரத்திலே செலவிட்டு அந்தச் சுமையெல்லாம் உணவு பெறுகின்ற, அதாவது உணவு வழங்குகின்ற இந்த இலாக்காவிற்கு வந்து, வாங்கிச் சாப்பிடுகின்றவர்கள் அந்த விலையேற்றத்தினாலே கஷ்டப்படுகின்ற ஒரு நிலை இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

கொள்முதல் செய்கின்ற நெல்லை அந்தந்தப் பகுதியிலே — ரீஜன்வைஸாகப் பிரித்து, அங்கிருக்கின்ற வசதி வாய்ப்புகளை கோடவுன்களிலே வைத்து, அந்த அரவை ஆலையைப் பயன்படுத்தி, நல்லவிதமாக அரைத்து, அந்தப் பகுதிகளுக்கு உணவு வழங்கினால் சிக்கனமாக நாம் வழங்க முடியும்; இந்த விலையேற்றத்தைத் தடுக்க முடியும் என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

பொதுவாக, இன்றையதினம் புழுங்கல் அரிசி சாப்பிடுகின்ற மக்களுக்குப் பச்சையரிசி வழங்குகின்ற நிலையை மாற்ற வேண்டும். இதற்குக் காரணம், நெல் கொள்முதல் செய்கின்றபொழுது இருக்கின்ற ஆலைகளிலே அரவை விடுகின்றபோது, குறிப்பாக முழுமையாக நாம் அதைப்பயன்படுத்தாத காரணத்தால், பச்சையரிசி கொண்டுபோகின்றபொழுது, அதிலே சேதம் ஏற்பட்டு, மக்களுக்கு விரும்பாத ஒரு நிலை ஏற்பட்டு, அது பொதுவாக, நாம் யாருக்கு வினியோகப்படுத்துகிறோம்என்று சொல்கிறோமோ அவர்களுக்குப் போய்ச் சேராமல், மார்க்கெட்டுக்கு வந்து அதிக விலைக்கு விற்கக் கூடிய தவறான காரியங்கள் செய்யப்படும்நிலை ஏற்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

16-25 மணி

அதே போலத்தான் காலாகாலத்தில், எந்த சமயத்தில் விலை குறைவாக இருக்கிறதோ, அந்த சமயத்தில் கொள்முதல் செய்து விநியோகிக்கிறபோது, தரத்தை பார்த்து விநியோகிக்கிற நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும். இந்த ஆண்டு புளி காய்ப்பு இல்லையென்று சொல்கிறார்கள். புளி விலை கிடுகிடுவென்று உயர இருக்கிறது. இதுபோன்று மிளகாய் வற்றல். மக்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்குகிறபோது மிளகாய் வற்றல், புளி, எண்ணெய் போன்றவைகளை பொது விநியோக முறையில் நாம் தக்க முறையில் கொள்முதல் செய்துவைத்து, குறைந்த விலையில்கொடுக்க விலை ஏறாமல் பார்த்துக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் இருக்கிற இலாக்காவாக இந்த இலாக்கா அமைந்திருக்கிறது. பருப்பு வகை, எண்ணெய் வகை, அத்யாவசிய பண்டங்கள் நம்முடைய தமிழ் நாட்டில் மட்டுமல்ல, வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்கிறபோதுகூட தரமுள்ளவையாக காலாகாலத்தில் கொள்முதல் செய்து வைத்து, விநியோகம் செய்தால் விலையேற்றத்தைத் தடுக்க முடியும். அந்த இலாக்கா அந்த அளவிற்கு ஏனோதானோ என்று இருந்துவிட்டு, தக்கசமயத்தில் நடவடிக்கை எடுக்காமல், விலை ஏற்றத்திற்கு உறுதுணையாக போகக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருப்பதை நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவ்வாறு தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் உணவுப்பண்டங்கள் விலையேற்றத்திற்குக் காரணம் உணவு இலாக்காவைச் சாரும். விநியோக முறையில் சீராக இல்லாததால், பொது மார்க்கெட்டில் சரியானமுறையில் மக்கள் அன்றாடம் வாங்கி உண்கிற பொருள்களை வாங்காத காரணத்தால், இன்றையதினம் மார்க்கெட்டில் விலையேற்றம் ஏற்பட்டு, உணவு தானியங்களுடைய விலை கிடுகிடுவென்று உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கலாம். விலை கட்டுப்பாட்டிற்கு இந்த இலாக்காதான் பொறுப்பு. அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் இது இருக்க வேண்டும். பருப்பாக இருந்தாலும், எண்ணெயாக இருந்தாலும் உணவு தானியங்களை யாராக இருந்தாலும், பதுக்கி வைத்து, அதிக விலைக்கு விற்கிற நிலை வருகிறபோது அதைத் தடுப்பதற்கு இந்த இலாக்கா நடவடிக்கையெடுக்க வேண்டும். இதுவரையில் முயற்சி எடுத்ததாகத்தெரியவில்லை. அப்படி தெரியாத நிலையில் இந்த இலாக்கா என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் காலையில் சொன்னதைப் போல, இன்றையதினம் ரெவின்யூ இலாக்கா அதிகாரிகளின் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு நெல் எல்லாம் வெளி மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருப்பதை, இந்த இலாக்கா பெரிய கஷ்டத்திற்கு—உள்ளாகி இருப்பதை பார்க்கிறோம். இதை அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் கொள் முதலில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாம் அதிக இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் மத்திய அரசாங்கத்தில் கேட்கிற போது எல்லாம் கொடுக்கிறார்கள் என்ற உணர்விலே இருந்து விடக்கூடாது என்பதற்காக சொல்கிறேன். அவர்கள் கொடுப்பதற்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள், கொடுக்கிறார்கள். இருந்தாலும் நாம் இங்கே உணவு தானியங்களை வழக்கமாக கொள்முதல் செய்கிற அளவிற்கு கொள்முதல் செய்யாமல் விட்டு விட்டால் அதனால் ஏற்படும் பாதிப்பு நம்மைச் சாரும். அதை தக்கமுறையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சென்ற ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட சமயத்தில் கொஞ்சம் காலதாமதமாக செய்ததால் வெளி மாநிலங்களுக்கு நெல் கொண்டு போகப் பட்டது. இந்த தடவை இந்த ஸ்ட்ரைக்கை உத்தேசித்து உணவு தானியங்களை வெளி மாநிலங்களுக்கு சென்று கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். நம்முடைய ஸ்டாக் அதிக அளவில் இருக்க, எவ்வளவு தேவை, எந்த அளவிற்கு கொள்முதல் செய்வது என்பதையெல்லாம் உணர்ந்து தக்கமுறையில் கொள்முதல் செய்து, வைத்து விநியோகம் சீராக செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கே பார்த்தாலும் எடை குறைவு இருக்கிறது. நல்ல பொருள் கொடுக்க வில்லை என்று சொல்கிற நிலை இருக்கிறது. அரிசி 5 கிலோ வழங்குகிறபோது, எந்த இடத்திலும் இதுவரையிலும் 5 கிலோ அரிசி வழங்கப்படவில்லை. இதை நான் திட்டவட்டமாகச் சொல்லலாம். சென்ற முறை கூட இந்த மன்றத்தில் சொன்னபோது, 5 கிலோ அளவை நீங்கள் ஒரே இடத்தில் தயாரித்து, பைகளில் அடைத்து வழங்கவேண்டும் என்று கூறினேன். பேப்பர் பையோ, துணிப் பையோ எதுவாக இருந்தாலும் 5 கிலோ அரிசியை முழுமையாக ஒரே இடத்தில் அடைத்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதிலே கோடிக்கணக்கான ரூபாய் பைகளுக்காக செலவு செய்கிறோம். அந்த அளவிற்கு ஒவ்வொரு ஊரிலும் பார்த்தால் 3 கிலோ, $3\frac{1}{2}$ கிலோ, 4 கிலோ கொடுத்தாலும் அவர்கள் புண்ணியவான் என்று சொல்கிற நிலை இருக்கிறதே தவிர, எந்த இடத்திலும் 5 கிலோ போய்ச் சேரவில்லை. அதற்கு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த 5 கிலோவை 4 கிலோ

1990 ஏப்ரல் 16] [திரு. கோ. பூவராகன்]

3 கிலோ என்று கொடுக்கிறபோது, இதனால் உணவுப் பண்டங்களின் விலேயேற்றத்தை எந்த அளவிற்கு குறைத்து இருக்கிறோம் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். குறைந்த பட்சம் 3-வது ரகமான அரிசியையாவது, ஏற்கனவே விற்ற விலைக்கு விற்கவேண்டும். சாதாரணமாக, எல்லா மக்களும் பயன்படுத்துகிற புழுங்கல் அரிசியின் விலையேற்றத்தை நீங்கள் நிறுத்த வேண்டும். குறைந்த பட்சம் எந்த அளவிற்கு உங்களால் முடியுமோ, அந்த அளவிற்கு விநியோகிக்க வேண்டும். பச்சை அரிசி முதல் தரம், இரண்டாம் தரம் என்று இருக்கிறபோது, இந்த மூன்றாம் தரம் அரிசியையாவது ஏராளமான மக்கள் பயன்படுத்துகிற அரிசியை, விலை ஏறாமல் நீங்கள் பார்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

16-30 மணி

கிராமங்கள்தோறும் நீங்கள் இந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை நல்லவிதமாக எல்லா இடங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலும் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். பெண்களுக்கு 30 சதவீதம் என்று பஞ்சாயத்து உறுப்பினரிலேயிருந்து, படிப்பிலேயிருந்து, பல பொறுப்புகளிலே 30 சதவீதம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, கிராமப்புறத்திலே உள்ள பெண்களுக்கு 30 சதவீதத்திற்கும் மேலே அதிகமாக பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகளை நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கனவே கூட்டுறவு அமைப்புகள் சரியான முறையில் இல்லை. 15 வருடங்களாக ஏதோ தனிப்பட்டவர்கள் தலைமையில் சர்வாதிகார முறையிலே அந்தக் கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் நடந்து கொண்டு இருக்கின்றனவே தவிர, அதை நாம் நினைக்கபடி, ஜனநாயக முறையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கே வந்திருந்து அவர்கள் பொறுப்பேற்று சரியான முறையிலே நடத்தக்கூடிய அளவிற்கு அந்தக் கூட்டுறவு அமைப்புகள் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

குறிப்பாக புதிய அமைப்புகள் வருகிறபோது, எங்கெல்லாம் 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறதோ, அத்தனைக் கிராமங்களிலும் இந்தப் பெண்களை அதிகமாக உறுப்பினர்களாகச் சேர்த்து நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, இந்த உணவுப் பண்டங்களின் விநியோகத்தை அவர்கள் மூலமாகச் செய்வீர்கள் என்று சொன்னால், சுத்தமாகவும், தரமாகவும், எடை குறைவாக இல்லாமலும் பார்த்துக் கொள்வதற்கு அவர்களால் முடியும் என்ற அந்த நினைப்பு இருக்கிறது. இதை நீங்கள் செய்வீர்கள் என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக எங்கு பார்த்தாலும் கூட்டுறவு அமைப்புகளுக்கு ஏன் தேர்தல் தள்ளிவைத்திருக்கிறார்கள், ஏன் நடத்தக் கூடாது என்ற நினைப்பு இருக்கிறது, உங்களால் தேர்தலை உடனடியாக

நடத்த முடியவில்லை என்றால், நீங்கள் பொதுவாக அதிகாரிகளை நம்புகிறபோது, ஏன் சிறந்த இந்த கூட்டுறவுத்துறையிலே அனுபவம் உள்ளவர்களை பொதுவாக ஸ்பெஷல் ஆபீசரிடத்திலே நியமிக்கக்கூடாது என்றுநான் இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சமாக ஆங்காங்கு முக்கிய கூட்டுறவு அமைப்புகளிலே சிறந்த கூட்டுறவாளர்கள் பொதுமக்களிடத்திலே இருப்பார்கள் என்று சொன்னால், அவர்களை பாரபட்சமின்றி, தனியதிகாரியிடத்திலே அவர்களையும் சேர்த்து, அணைத்து, போட்டால் நல்லவிதமாக அந்த நிர்வாகத்தை சிறந்த முறையில் நடத்த முடியும். குறைந்த காலம் பார்க்கலாம். 1 வருட காலம், அவர்களும் சேர்ந்துத்தான் இருக்கட்டுமே என்ன பெரிய குடிமுழுகி விடப் போகிறது. நீங்கள் 15 ஆண்டுக் காலமாக தனிப்பட்ட முறையில் தனி அதிகாரிகளை நம்பி இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை வைத்திருக்கிறீர்கள். என்ன வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. என்ன நன்மை செய்திருக்கிறார்கள். கிராமப்புற மக்களுக்கு, பொதுமக்களுக்கு இதனால் என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, ஓர் ஆண்டுக்காலத்திற்கு அவர்களையும் அமைத்து, அவர்கள் பொறுப்பிலே விட்டு, அவர்களும் சேர்ந்து இந்த நிர்வாகத்தைச் செம்மையாக நடத்துகிறபோது, அதிலே என்ன குறை காண இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். பல பேர்கள் பலவிதமாகச் சொல்லக்கூடும். ஏன் என்றால், அவர்களுக்கு வேண்டியவர்களைப் போட்டுவிட்டார்கள். அந்தப் பொறுப்பிலே போட்டுவிட்டார்கள், கட்சிக்காரர்களைப் போட்டுவிட்டார்கள் என்றெல்லாம் சொல்லக்கூடும். ஜனநாயக அமைப்பிலே நான் நடத்துகின்ற ஆட்சியிலே யாரைப் போட்டாலும் கட்சிக்காரர்களைப் போட்டுவிட்டார்கள் என்ற குறைபாடு இருக்கும். பாரபட்சம் இல்லாமல் யார் எல்லாம் இந்தப் பதவிக்கு தகுதியாக இருக்கிறார்களோ, கூட்டுறவுச் துறையிலே நல்ல பயிற்சியைப் பெற்றிருக்கிறார்களோ, அவர்களை நீங்கள் இந்தப் பொறுப்பிலே விட்டு, 2 பேர்களும் சேர்ந்து, இணைந்து நல்ல விதமாக ஊர் மக்களுக்கு பொதுப் பணி செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, பொதுவான கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒருங்கிணைப்பு கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்று சென்ற ஆண்டு தென்னாற்காடு மாவட்டத்திலே 12 இலட்ச ரூபாயிலே ஒரு ஒருங்கிணைப்பு வளர்ச்சித் திட்டம் ஆரம்பிப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு கூட ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டு இருந்தது. இதை இந்த 5 ஆண்டுக்காலத்திற்குள்ளாக ஆரம்பிக்க வேண்டும், அதற்காக

862 இலட்ச ரூபாய் செலவிட இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்போது தென்னாற்காடு மாவட்டத்தை விட்டு, மேலும், 2, 3 மாவட்டங்களை எல்லாம் சேர்த்திருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்திற்கே இன்னும் அடியெடுத்து வைக்கவில்லை. 112 இலட்சத்திலே 1 இலட்சம் ரூபாய் கூட செலவு செய்யப்படவில்லை. என்னுடைய தொகுதியிலே, விருத்தாச்சலம் தொகுதியிலே பல இடங்களிலே அதற்கான நல்ல ஏற்பாடுகள் இருக்கின்றன. நீங்கள் அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று அமைச்சரிடத்திலே இந்த மன்றத்திலேயே எடுத்து வைத்திருக்கிறேன், அவர்களும் பார்க்கலாம் என்று சொன்னார்கள். தனி அதிகாரியிடத்திலே இதைப் பற்றி பேசியிருக்கிறேன், அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று எல்லாம் கூட நீங்கள் சொன்னீர்கள். என்னை வைத்துக்கொண்டுகூட சொன்னார்கள். எந்தத் தனியதிகாரிக்கும், விருத்தாசலம் எந்தப் பக்கம் இருக்கிறது என்றுகூட தெரியாது என்று நினைக்கிறேன். இதுவரைக்கும் வந்து முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. என் தொகுதியை விட்டுவிட்டாலும் தென்னாற்காடு மாவட்டத்திலே ஏதாவது ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் அல்லவா? ஓர் ஆண்டுக் காலம் எதற்காக காலதாமதம் ஆனது? எதற்காக இந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்குக் காரணம் பொதுவாக அதிகாரிகள் மத்தியில் ஒரு மதமதப்பான நிலை இருக்கிறது. அவர்களுக்குப் பொறுப்பு இல்லை. ஏன் என்றால், அவர்களை யாரும் கேட்பதற்கு இல்லை. அவர்கள் அதிகார வர்க்கத்திலே இருப்பதாலே, அவர்களை யாரும் கேட்பதில்லை. அதனால் தான் தனிப்பட்ட முறையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் வருகிறபோது, அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் வருவார்கள் என்று சொன்னால், அந்த ஊர் மக்கள் அவர்களை அணுகிக் கேட்பதற்கு சௌகரியமாக இருக்கும்.

ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். இதுபோன்று பல இனங்களிலே இம்மாதிரியான அறிவிப்புக்கள் வந்து நின்றிருக்கின்றன. மற்ற இடங்களில் கூட்டுறவுத் துறையிலே அவர்கள் முயற்சி எடுத்து இதை ஏன் செய்யவில்லை என்பதற்குத் தகுந்த காரணங்கள் முகாந்திரங்கள் சொல்ல வேண்டும். இடம் இல்லையா? இதிலே பட்டுப்பூச்சி வளர்த்தல், ஆடு, மாடு வளர்த்தல், இதுபோன்று கைத்தறி நெசவு என்று இதுமாதிரி பல காரியங்களிலே விவசாய மக்களுக்கு உதவி செய்வதற்காக ஒருங்கிணைந்தக் கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்று போட்டிருக்கிறார்கள். இதிலே வெளிநாட்டிலேயிருந்து நிபுணர்கள் வந்து இருந்து சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நம் ஊரில் இருப்பவர்களே போதும். அங்கே போதுமான இட

வசதி எல்லாம் இருக்கிறது. எந்தக் காரணத்தாலே, அந்தப் பணம் தென்னாற்காடு மாவட்டத்திலே செலவு செய்யப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று ஒவ்வொன்றாக நான் சொல்ல முடியும். எனக்கு நேரம் இல்லாத காரணத்தால், ஒவ்வொன்றாக நான் எடுத்து விளக்க விரும்பவில்லை. பல இனங்களிலே சென்ற ஆண்டு ஒதுக்கிய பணம் சரியான முறையிலே செலவு செய்யப்படவில்லை. அதற்கு முக்கியப் பொறுப்பு அந்தந்த வட்டாரத்தில் இருக்கிற அதிகாரிகள்தான். அவர்களுக்கு எதிலும் சிரத்தை இல்லை. எதிலும் கவனம் காட்டவில்லை என்பதுதான் என்னைப் பொறுத்த வரையில், நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

16-35 மணி

உணவுத் துறையையும் கூட்டுறவுத் துறையையும் நீங்கள் வைத்திருப்பதிலே மிக்க மகிழ்ச்சி. ஏனென்றால் இந்த இரண்டும் இணைந்திருப்பதனாலே பொது மக்களுக்கு விவசாயிகளுக்கு கிராம மக்களுக்கு பொதுவாக நல்ல சேவை செய்யக் கூடிய நிலையிலே இருக்கிற ஒன்று. இதிலே நீங்கள் சால்ஜாப்பு ஒன்றும் சொல்ல முடியாது. அது அந்த துறையிலே போய் விட்டது, இது இந்தத் துறையிலே வந்து விட்டது என்று சொல்ல முடியாது. உணவை உற்பத்தி செய்யும் உணவுத் துறையிலே செயல்படுகிறவர்களுக்கு வேண்டும் என்ற அளவுக்கு உதவி, பண உதவி எல்லாம் செய்துக்கொடுக்க வேண்டியப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் வட்டி கட்டவில்லை முதலை கூட கட்டவில்லை, கூட்டுறவுச் சங்கங்களிலே மெம்பர் இல்லை போன்ற இவைகளெல்லாம் வழக்கமாக 15 ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிற நிலை.

இதேபோன்ற நிலை தொழில் துறையிலும் கூட இருக்கிறது. என்ன நிலை தொழில் துறையிலே, முதலீடு செய்வதற்கு பணம் கொடுப்பதில்லையா, டிட்கோ இருக்கிறது சிட்கோ இருக்கிறது பல நிறுவனங்கள் இருக்கின்றன. என்ன செய்கிறீர்கள்? கூட்டுறவுச் சங்கங்களிலே விவசாயிகளை மட்டும் குறை சொல்லி என்ன பயன்? விவசாயிகள் நமக்கு அவ்வப்போது உணவு தானியம் தயாரித்துக் கொடுக்கிறார்கள். அவர்கள் இல்லை என்றால் நாம் துணி கட்ட முடியாது. சர்க்கரைச் சாப்பிட முடியாது. பல நேரங்களிலே ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் முயற்சி குறைந்துவிட்டால், அல்லது அவர்கள் முயற்சியை குறைப்பதற்கு நீங்கள் முயலுவீர்கள் என்று சொன்னால் பல கஷ்டங்கள் உருவாகின்ற நிலைமை ஏற்பட்டு விடும். விவசாயிகளுக்கு நம்முடைய அரசாங்கம் அவ்வப்போது வட்டியை

தள்ளுபடி செய்கிறது கடனைத் தள்ளுபடி செய்கிறது இவ்வளவு கோடி ரூபாய் தள்ளுபடி செய்கிறது என்று சொல்லுகிறாமே தவிர, அவர்களுக்கு உடனடியாகப் போய்ச் சேருவதற்கானக் காரியங்களிலே ஈடுபட்டு பல விதங்களில் முயற்சி எடுத்து நல்ல விதமாக எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கடைசியாக தென்னாற்காடு மாவட்டத்திலே வறண்ட நிலை ஏற்பட்டு நெய்வேலியை ஒட்டி இருக்கிற கிராமங்களிலே தண்ணீர் ரொம்பவும் கீழ் மட்டத்திற்குப் போய் விட்டது. அங்கே கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஆழ் குழாய் கிணறுகள் போடுவதற்கு தகுந்த முறையிலே மானியத்தோடு உதவி அளித்தால்தான் தொடர்ந்து விவசாயம் செய்வதற்கு இயலும். 200 அடிக்குக் கீழே தண்ணீர் போயிருக்கிறது. அந்த அளவுக்கு அந்த கூட்டுறவு அமைப்புக்கள் விவசாயிகளுக்கு உதவி அளித்து விவசாயிகள் தொடர்ந்து அந்தப் பணிகளைச் செய்து நமக்குத் தொடர்ந்து உணவு தானியங்களை வழங்கக் கூடிய அளவுக்கு என்ன முயற்சிகளை இந்த இலாகா எடுத்துக்கொண்டிருக்கிறது, ஏன் தொடர்ந்து எடுக்கக்கூடாது என்பதற்கு தகுந்த முகாந்தரத்தோடு நல்ல ஏற்பாடுகள் செய்து வருங்காலத்திலே கூட்டுறவு அமைப்புக்கள் எல்லாம் அந்த விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை அளித்து எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

அதேபோல எல்லாத் துறைகளிலேயும், உணவு வழங்கு துறை கூட்டுறவுத்துறை ஆகிய எல்லாத் துறைகளிலேயும் முழுவதுமாக எங்கள் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தகுந்த முறையிலே நல்ல விதமாக அதில் கவனம் செலுத்தி சிறந்த முறையிலே நல்ல முறையிலே அதிக நிதி உதவி அளித்துத் திட்டங்கள் வருகிறபோது முன்னுரிமை கொடுத்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உதவி அளித்து நல்ல காரியங்களை ஆற்ற வேண்டும் என்று கேட்டு இந்த விவாதத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் உணவுத் துறையில் என்னுடைய கருத்துக்களை சொல்ல நான் முன் வருகிறேன். இன்றையதினம் கூட்டுறவு என்று சொன்னால் நாட்டுறவு ஆசப் பயன்படக் கூடிய நமது கூட்டுறவுத்துறையினால் தமிழகத்தில் இனிமேல் உணவு விநியோகத்திலே கூட்டுறவுத் துறை இல்லாமல் நல்ல முறையிலே செயல்பட முடியாது என்ற அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கக் கூடிய ஒரு துறையாக இருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இன்றையதினம் கூட்டுறவுத் துறையிலே பார்த்தோம் என்று சொன்னால் 71.15 சதவீதம் விவ

சாயிகளுடைய குடும்பத்தைக் கொண்ட அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே, அந்த விவசாய குடும்பத்தினருக்கு அந்த கூட்டுறவினுடைய நிர்வாகமே தெரியவில்லை. தனி அதிகாரிகள் மூலமாகவே செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதுதான் குறிப்பிட முடியும். அரசு பல தடவை நேரம் கொடுத்து அந்த கூட்டுறவுத் துறையை ஒத்தி வைத்திருந்தாலும் கூட உடனடியாகத் தேர்தலை இப்போதாவது குறிப்பிட்டிருக்கிற தேதிக்குள்ளாக நடத்த வேண்டும். அந்த விவசாய குடும்பங்கள் அந்தச் சங்கத்திலே பங்கு பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே 1990—91 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சித் திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. நீண்ட கால கடன்களை இந்த அரசு வழங்கியிருக்கிறது. ஆனால், இன்றையதினம் பார்த்தோம் என்று சொன்னால் விவசாயிகளுக்கு 1989—90 ஆம் ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் கடன் வழங்குவதற்கான திட்டம் இட்டிருந்தபோதிலும் கூட 201 கோடி ரூபாய் தான் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் கூட உணவு தானிய உற்பத்திக்காக 64 கோடி ரூபாயும் எண்ணெய வித்துக்களை உற்பத்தி செய்வதற்காக 28 கோடி ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அது கடன் வழங்குவதாக தெரியவில்லை. அது ஒரு வியாபார ஸ்தாபனமாக, இன்றைய தினம் விளங்குகிறது என்பதை புள்ளி விவரம் காட்டுகிறது.

16–40 மணி

அந்த வகையிலே விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய கடனை முழுமையாக வழங்குவதற்கான முயற்சிகளிலே அரசு இறங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று புதிய கடன்களை வழங்கி பழைய கடனிலே வருவாய் வைக்கிருக்கிறது. அதனுடைய பட்டியலை வரிசைப்படுத்தி பார்ப்போமானால் தெளிவாகப் புரிகிறது. 1978ஆம் ஆண்டு, 1989ஆம் ஆண்டு 1990–91அம் அண்டு பட்டியலைப் நாம் பார்த்தோம் என்று சொன்னால் அநேகமாக இந்தத் தினத்திலே விவசாயிகளுடைய கடன் என்பது தொடர்ந்து வளர்ந்து வருகிறது. 321 கோடி ரூபாய் அந்தக் கடன் இந்த தினத்திலே பாக்கி இருக்கிறது. அந்த வருஷப்படி பார்த்தோம் என்று சொன்னால் 121 கோடி ரூபாய் தான் வசூலாக முடியும். இந்த மார்ச் 31ஆம் தேதிக்குள்ளாக வசூல் பண்ணால் கூட கூட்டுறவில் 121 கோடி ரூபாய் தான் வசூல் செய்ய முடியும். இந்த 200 கோடி ரூபாய் என்பது தொடர்ந்து நிலுவையிலே இருந்து கொண்டு வருகிறது. அந்தக் கடனைப் பார்த்தோம் என்று சொன்னால் மாநில மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வட்டி, அபராத வட்டி என்று சொல்லி இந்தத் தினத்திலே அது உயர்ந்து வளர்ந்து

வந்து இருக்கிறது. அந்தக் கடன்களைப் பற்றி ஒரு தீர்க்கமான பரிசீலனை பண்ணி அந்தக் கடனைத் தள்ளுபடி செய்து விவசாயிகளை அதிலிருந்து மீட்க வேண்டும். சென்ற ஆண்டு இதே. சபையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் ஏற்கெனவே, ஆட்சியில் இருந்த போது 65 கோடி ரூபாய் நிலுவையிலே இருந்தது. இன்றைக்குப் புதியதாக ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் கிட்டத்தட்ட 36 கோடி ரூபாய் இன்றைக்குத் தள்ளுபடி செய்திருக்கிறோம். 106 கோடி தள்ளுபடி செய்யப்பட இருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களிலே என்ன நிலைமை என்றுச் சொன்னால் இன்றைக்கு இருக்கக்கூடிய அந்தக் கடன், முடக்கக் கடன் என்ற பெயரில் 5 ஆண்டிலிருந்து 6 ஆண்டு வரையிலும் அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வட்டிக்கு வட்டி போட்டு அது குட்டியும் போட்டு முடக்கக் கடன் என்று அந்தக் கடன் ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறதே தவிர, தள்ளுபடி செய்யவில்லை. விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலே கேட்கின்றபோது மிகப் பெரிய ஏமாற்றம் அடைகிறார்கள். அந்த நிலைமைகள் இல்லாமல் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல 1989க90ஆம் ஆண்டுக்கு இன்றைய தினத்திலே அந்தக் கடனை உடனடியாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, இன்றைக்கு தேசிய முன்னணி அரசு தன்னுடைய தேர்தல் வாக்குறுதிகளை அளித்திருக்கிறது. 10,000 ரூபாய்க்கு உட்பட்டிருக்கின்ற கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய விவசாயிகள் இதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அமைச்சர் அவர்கள் இன்றைய கூட்டுறவு மானிய கோரிக்கையிலாவது கண்டிப்பாக அறிவிப்பார்கள் என்று மிக்க ஆவலோடு வானொலியிலே தமிழகத்து விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். இன்றாவது 10,000 ரூபாய்க்கு கூட்டுறவுக் கடன் தள்ளுபடியை அறிவிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்று சொன்னாலும் தமிழக அரசினுடைய கொள்கை என்ன அந்த தள்ளுபடியில் என்பதனை இந்த தினத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது தவணை முறையிலே கடன் வழங்கப்படுகிறது. 500 ரூபாயை இன்றைக்கு நகை ஈட்டுக் கடன் மூலமாக வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதிலே இருக்கின்ற யதார்த்த உண்மையை பார்த்தோம் என்று சொன்னால் இன்றைக்கு லேவாதேவிக்காரர்கள் மொத்தமாக நகையை வைத்துக்கொண்டு செல்வாக்கு படைத்தவர்கள் அந்த நகையை வைத்துக் கொண்டு பணம் வாங்குகிறார்கள். இதற்கு மாறாக விவசாயிகளுக்கு போய்ச் சேர்வதில்லை. நகையை வைத்துக் கொண்டு அவர்கள் அலைந்தாலும் கடன் கிடைப்பதில்லை.

ஆகையால் கடனை முழுவதுமாக அந்த விவசாயிகளுக்கு கிடைப் பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். அதிலே, வி.ஓ. சர்ட்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து நான் விவசாயி இத்தனை ஏக்கர் நிலம் வைத்திருக்கிறேன், எனக்கு கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட, போலித்தன மானச் சான்றிதழ்களை வாங்கிக் கொண்டு வந்து மிகப் பெரிய லேவாதேவிக் காரர்கள் அந்தக் கடனை வாங்கி விவசாயிகளிடத் திலே உயர்ந்த வட்டிக்குக் கொடுத்து வசூல் பண்ணக்கூடிய நிலைமையும் கிராமப் புறத்திலே, தஞ்சை மாவட்டத்திலே நான் கண்கூடாகப் பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப் பட்ட பலகீனங்கள் நடைபெறாமல் பாதுகாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குக் இருக்ககூடிய கூட்டுறவு மானி யத்தில் உணவு தானியத்தை எடுத்துக்கொண்டாலும் அரசு நிர்ண யித்து இருக்கக்கூடியது 17.42இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று அரசு முயற்சி எடுத்திருக்கிறது. 90 சதவீதம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் இந்த தினத்திலே நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங் களில் அரசு எதிர்பார்த்ததை விட இன்றைக்கு நெல் கொள் முதல் செய்ய முடியவில்லை. அதற்கான அடிப்படையானக் காரணம் என்ன ?

16–45 மணி

இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய மற்ற மாவட்டங்களில் திருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் கூட அதிக மாக அரசு கவனம் செலுத்தியும் கூட, தஞ்சை மாவட்டத்தில் ஆகக்கூடிய நேரடியான கொள்முதல் இன்றைக்கு நடக்கவில்லை. அதற்குப் பிரதானமான காரணம் என்னவென்றால் அநேகமாக 50 சதவிகிதம் நெல், தனி வியாபாரிகள் கொள்முதல் செய்யலாம் என்று சொல்கிற போது, அரசினுடைய, அரசாங் கத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளுடைய பலவீனத்தைப் பயன் படுத்திக் கொண்டு அவர்களையும் அதனுடைய தவறான பாதை யில் செலுத்துவதற்காக முயற்சியில் இன்றைக்கு தனி வியாபாரி கள் பயன்படுத்தி, வெளி மாநிலங்களுக்குக் கடத்தக்கூடிய நிலைமையை நாம் பார்க்க முடிகிறது.

அநேகமாக, இந்த ஓராண்டில் ஓரளவுக்கு அது கட்டுப்படுத் தப்பட்டிருக்கிறது என்பது வரவேற்க வேண்டியதுதான், ஆனாலும் முழுமையாக நடைபெறுகிறது என்று சொல்லமுடியாது. அதிகாரிகளே நெல்லை முழுமையான அளவில் கொள்முதல் செய்து, சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படாமல் இருப்ப தற்கு அரசே அவர்களுக்கு ஒரு சதவிகிதத்தை **நீங்கள்**

வியாபாரம் செய்யுங்கள் என்ற வழங்குவது நல்லதாக இருக்கும். அதேபோன்று, அரிசி விலை, அதைப்பற்றி முன்னதாக உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அநேகமாக, 2 ரூபாய் அரிசி கிடைப்பதில்லை. மூன்று ரூபாய் அரிசியும் கிடைப்பதில்லை 3.50 அரிசிதான் கிடைக்கிறது. அமைச்சர் அவர்கள் கூட பல்வேறு கேள்விகளுக்கு அறிவித்த போது, பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே விடுமுறை நாட்களிலே சென்றபோது, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே கேட்கிறபோது, எங்களுக்கு அப்படிப்பட்ட அரிசி வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தக் குறைவான விலை அரிசியை கிராமப்புறத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு வழங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதேபோன்று, இன்றைக்கு இருக்கக்கூடிய அத்தியாவசியமான பொருட்கள், புஞ்சை தானியங்களைக் கூட அரசு கட்டாயமாகக் கொள்முதல் செய்ய வேண்டும். புஞ்சை தானியங்களை முழுமையாகக் கொள்முதல் செய்தால்தான், ஒரு சீரான விலையை, வர்த்தக சூதாடிகளிடமிருந்து மீட்பதற்கு அரசு ஒரு நிர்ணயிப்பான விலையிலே விற்றுக்கொண்டிருந்தால் ஒரு வியாபாரம் நடந்தது என்றால், வர்த்தக சூதாடிகள் அவர்களுடைய விலையை ஏற்றம், இறக்கம் என்று பாராமல், ஒரு சீரான அமைப்புக்களில் ஓரளவிற்கு கட்டுப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு வரும். இல்லையென்று சொன்னால், வியாபாரிகள் தங்களுடைய இஷ்டம்போல், ஏற்றியும் விற்பார்கள். ஒரு நேரத்தில் இறக்கியும் விற்பார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்க ஒரு வழிவகை காணவேண்டுமானால் அரசு இன்றைக்குப் புஞ்சை தானியங்களையும் கொள்முதல் செய்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இன்னும் இந்த நேரடியான கொள்முதல் நிலையங்களில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் பல பேர் தொடர்ந்து பல ஆண்டுக் காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பள உயர்வுக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பி.ஏ., படித்திருக்கிறார்கள்; பி.எஸ்ஸி. படித்திருக்கிறார்கள். பல்வேறு பட்டப் படிப்பை முடித்து விட்ட பிறகு நேரடியாகக் கொள்முதல் நிலையங்களிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக்கெல்லாம் 325, 300, 200 ரூபாய் என்றெல்லாம் சம்பளம் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மேலாக இன்னொன்று கூட இன்றைய தினத்திலே அரசு அவிறித்திருக்கிறது. மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றப்பட்டிருக்கிறது. குறைவான சம்பளங்களை வாங்கக் கூடியவர்கள் மற்ற மாவட்டங்களிலிருந்து அந்தக் குறைந்த சம்பளத்தில் எப்படி சம்பளம் பெற்றுப் பணி

யாற்ற முடியும்? அவர்களையும் அரசு ஊழியர்களாக அறிவித்து அவர்களுக்கு இந்த அரசு சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க திரும்பவும் அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல்தான், இன்றைக்கு 1,168 தொழிலாளர்களுக்கு மேலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமாக அரசு ஒரு சீரான முடிவு எடுத்து, அவர்களுக்கு வாழ்வு அளிக்க நான் கேட்டுக்கொள்கிறேன்.

பயறு, தேங்காய், கடலை மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் இன்றைக்கு உற்பத்தி செய்ய வேண்டும். எண்ணெய் வித்துக்களை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். இன்றைய தினம் சமூகநலம் மூலமாக தனியாக பல்வேறுத் தொழில்களை பெறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் அந்தக் கைத்தொழில் செய்யக்கூடியவர்களுக்கு அரசே இந்தமாதிரி அத்தியாவசிப் பொருட்களை, எண்ணெய் வித்துக்களை வினியோகம் செய்தால் ஒரு சீரான முறையில் உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கு அது வாய்ப்பாக அமையும். இந்த அரசு அதைச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சுமை தூக்கும் தொழிலாளர்கள், தஞ்சை மாவட்டத்தில் இது வரையிலும் 5 பேர் தங்களுடைய மூட்டை விழுந்து இறந்திருக்கிறார்கள். திருத்துறைப்பூண்டி, சீர்காழி, மயிலாடுதுறை, ஒரத்தநாடு போன்ற பகுதிகளில் 5 சுமை தூக்கும் தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மூட்டை தூக்கக் கூடியவர்கள், மிகக் குறைவான சம்பளத்திற்கு, குறைவான நாட்களில் வேலை செய்யக்கூடியவர்கள். அவர்களுக்குச் சென்ற ஆண்டு அறிவித்திருக்கிறது. குறிப்பிட்டவர்களை அரசு ஊழியர்களாக எடுத்துக்கொள்ளப்போகிறோம், நிரந்தரமாக வேலை வழங்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் தடவை 5 பேர் உயிரிழந்துஅவர்கள்குடும்பங்கள் தெருவிலே நிற்கின்றன. அப்படிப்பட்டவர்களைக் கணக்கெடுப்பு செய்து அரசின் மூலமாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு வழங்க இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கூட்டுறவு அங்காடியிலே பணியாற்றக்கூடியவர்களை மட்டும் குற்றம் சொல்லி, அவர்களை மட்டும் தவறு செய்கிறார்கள் என்று சொல்லவேண்டாம். அதற்கு மேல் மட்டத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள் கூட இன்றையதினம் என்ன செய்கிறார்கள் என்றால் ஒவ்வொரு கூட்டுறவு சொசைட்டிக்கும் போனால், அவர் செக்-அப் பண்ணப் போனால் என்ன நடக்

1990 ஏப்ரல் 16] [திரு. ஜி. பழனிச்சாமி]

கிறது, எவ்வளவு பொருள் என்று சரிபார்க்கப்போனால்கூட அவர்கள் கமிஷனை வாங்கிக்கொண்டுதான் வருகிறார்கள். அதற்கு மேலாக அங்கே இருக்கக்கூடிய பொருட்களைத் தனியாரிடத்திலே விற்பனை செய்ய வேண்டுமென்று சொல்லி, அங்கே இருந்து விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

16–50 மணி

குறிப்பாக நாங்களே பல்வேறு கடைகளிலிருந்து பிடித்துக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டும். இதற்கு மேலாக நான் இறுதியாக ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். கலப்படப் பொருட்கள் நிறைய வருகின்றன. அந்தக் கலப்படப் பொருள்களைத் தடுப்பதற்கு அரசு துரிதமான நடவடிக்கையை விஜிலன்ஸ் அமைத்து அப்படிப்பட்ட கலப்படப் பொருட்கள் இல்லாத அளவுக்கு பாதுகாத்து நல்லப் பொருட்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசே திரும்பவும் அரிசி விலையைப் பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கும் துறையில் பேசக்கூடிய வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நியாய விலைக் கடைகளில் தற்போது உணவுப் பொருட்களை வழங்குவதற்கான குடும்பக் கார்டுகள் வழங்கவில்லை. அதை துரிதமாக வழங்கி ஏழை எளியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் கிட்டத்தட்ட ஒரு பகுதியில் இருப்பவர்கள் 3, 4 கிலோ மீட்டர் தூரம் வரைக்கும் சென்று தாய்மார்கள் எல்லாம் க்யூவில் நின்று அங்கே நியாயவிலைக் கடைகளில் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வெறும் தூரத்தைப்பார்த்து இத்தனைக் கார்டுகளுக்கு என்ற முறையை எடுக்காமல் ஒவ்வொரு 200, 300 கார்டுகள் இருந்தாலும் கூட அங்கே ஒரு நியாயவிலைக் கடைகள் திறந்திடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் லட்சிமாயூர், கணக்கப்பட்டி என்ற இரண்டு நியாய விலைக் கடைகளைப் பிரித்து தனித் தனியாக 4 கடைகளாக அமைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே, நியாயவிலைப் பொருட்களை முன்கூட்டியே தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு இருப்பவர்கள் முந்திக்கொண்டு வாங்கிக்கொள்கிறார்கள். மாதா மாதம் பலர் ஏமாந்துபோகிற நிலைமை உருவாகிக்கொண்டு இருக்கிறது.

கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனைப்பற்றி மத்திய, மாநில அரசு அறிவிக்கிற கடன் தள்ளுபடித் திட்டத்தில் மாநில அரசினுடைய திட்டம் தெளிவாகத் தெரியவில்லை. எனவே, இதிலே சிறிய விவசாயிகள், பெரிய

விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் அது கிடைக்கிற வகையில் அந்தக் கடன் தள்ளுபடித் திட்டத்தை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்திலே எல்லாப் பகுதியில் இருப்பவர்களுக்கும் வீடு கட்ட கடன் வழங்கக்கூடிய வகையில் பரவலாக கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நகர்ப்புறத்தில் தற்போது 75 ஆயிரம் ரூபாய், 80 ஆயிரம் ரூபாய் அளவுக்குதான் வீடு கட்டுவதற்கு கடன் வழங்கப்படுகிறது. அதை 2 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கடன் பெறுகிற வகையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடன் உரத்திற்கு வழங்குவது உபயோகமற்ற காரியம். எந்தப் பயிருக்கு எந்த உரம் வழங்குவது என்ற முறை இல்லாமல் அந்த உரத்தை வழங்குவதால் அதை வாங்கிக்கொண்டு போய் பாதி விலைக்கு விற்கக்கூடிய நிலையில் விவசாயிகள் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கூட்டுறவுத் தேர்தல் உடனடியாக நடத்துவதன் மூலமாகத்தான் அதை ஒழுங்குபடுத்த முடியும் என்பதை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். தேர்தல் நடக்காததன் விளைவாக தனி அதிகாரியைப் போட்டுக்கொண்டு இப்போது வேண்டியவர்களுக்கு அதைச் சலுகை என்ற முறையில் காரியங்கள் நடைபெறுவதை நான் உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் கூட்டுறவுத் திருமண மண்டபம் ஒன்று இருக்கிறது. அந்தத் திருமண மண்டபத்திற்கு ஒரு தனி நபர் வேடியப்பன் என்பவர் 7,500 ரூபாய் கட்டுகிறார். 27-8-1989 மற்றும் 28-8-1989 ஆகிய 2 தினங்களுக்குப் பணத்தைக் கட்டுகிறார். ஆனால், அவர் ஒரு ஆத்திகவாதி என்கிற காரணத்தால் முகூர்த்த நாள் பார்த்து அதற்குப் பணத்தைக் கட்டுகிறார். அதை ஒரு 20 நாட்கள் கழித்து அவர் பத்திரிக்கை எல்லாம் அடித்து விநியோகித்து உற்றார், உறவினர் அத்தனை பேருக்கும் அந்தத் திருமண மண்டபத்தில்தான் திருமணம் என்று அறிவித்த பின்பு 20 நாட்கள் கழித்து எதிர்பாராத தேவையின் காரணமாக என்று சொல்லி அந்தத் திருமண மண்டபத்திற்கு அவருக்கு அளித்த உரிமை மறுக்கப்படுகிறது. ட்ராவலர்ஸ் பங்களாவிலேதான் அமைச்சர் போனால் எம்.எல்.ஏ.க்கள் காலி பண்ண வேண்டும் என்று சொல்லுகிற வழக்கம் இருக்கிறது. அதேபோல் திருமண மண்டபத்தில் அப்படிப்பட்ட முறையை நீங்கள் வகுத்து இருக்கிறீர்களா என்று தெரியவில்லை. இரண்டு கையும் சேர்ந்து இருந்தால்தான் கூட்டுறவு என்று படம் போட்டிருக்கிறது. இப்போது ஒரு கையை வெட்டிவிட்டு அதிலே முக்கியஸ்தர்களுக்கு மட்டும்தான் அந்த முன்னுரிமை

என்ற முறையை நீங்கள் வகுத்து இருக்கிறீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், எதிர்பாராத தேவை என்று சொல்லுகிற போது, எதிர்பாராத தேவை என்ன என்று சொன்னால் அந்தத் திருமண மண்டபத்தில் அன்றையதினம் அமைச்சருடைய மக்ளுக்கு அதே தேதியில் திருமணம் நடைபெற்றது. இப்போது சுயமரியாதை இயக்கத்தில் வந்து இருக்கிற நாம்.......

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய திருமண மண்டபம் அலகாபுரி என்ற கிராமத்தில் இருக்கிறது, எனக்குத் தெரியும். அந்த மத்திய வங்கியினுடைய விதி, பணம் கட்டினால் ஒரு மாதத்திற்குள் வங்கி பார்த்து பணம் கட்டியவர்களுக்கு வழங்க இயலாது என்று கூட தெரிவிக்க விதி உண்டு. இருப்பினும் அந்த தேதியில் என்னுடைய மகளுக்கு திருமணத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேதி தந்தார். நான் அந்த சம்பந்தப்பட்டவரோடு தொடர்புகொண்டு பேசி அவரும் ஒத்துக்கொண்டு அவர் கட்டிய பணத்தைத் திரும்பப்பெற்றுக்கொண்டார். நான் ஒன்றும் அந்தத் திருமண மண்டபத்தை இலவசமாகப் பயன்படுத்தவில்லை, எல்லோரும் என்ன கட்டணம் கட்டுகிறார்களோ அந்தக் கட்டணத்தைக் கட்டித்தான் எனது மகளுக்கு அங்கே திருமணம் நடைபெற்றதே தவிர, ஒன்றும் அதிலே மோசடி நடைபெறவில்லை.

16–55 மணி

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மோசடி என்றோ அல்லது குற்றச்சாட்டு என்றோ சொல்லவில்லை. உங்களுடைய மகள் திருமணத்தை நடத்தினால் நாங்களே மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோம். ஆனால், ஒருவருக்கு வழங்கப்பட்டதற்குப் பின்னாலே அது எப்படி ரத்து செய்யப்படுகிறது? எந்த அதிகாரத்திலே ரத்துசெய்யப்படுகிறது? கூட்டுறவுத்துறையிலே அப்படி ரத்துசெய்ய அதிகாரம் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. நீங்கள் உங்கள் மகளுக்கு திருமணம் செய்வதிலே நிச்சயமாக நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். அது வேறு விஷயம். ஆனால், கூட்டுறவுத் துறையிலே இப்படி ஒரு விதி இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறாரே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சாதாரணமான பிரச்சினை. திருமண மண்டபத்திற்கு ஒருவர் ஏற்கெனவே பதிவு

செய்து வைத்திருக்கிறார் என்றால், பின்னாலே வரக்கூடியவர் அந்தத் திருமண மண்டபம் தன்னிச்சையாக, தனக்கு வேண்டுமென்று சொல்லி, அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் அதை எடுத்திருப்பாரேயானால் அது தவறு. மாறாக, ஏற்கெனவே பதிவு செய்து வைத்தவரோடு பேச்சுவார்த்தை செய்து அவருடைய சம்மதத்தின்பேரில் with mutual consent பெற்ற பின்னாலே இதில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. எனவே, இந்தப் பிரச்சினையை விட்டுவிடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நண்பர் அர்ஜுனன் அவர்கள் விட்டுவிட்டார் என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, அர்ஜுனன் விட்டுவிட்டார். ஆனால், புதுக் கருத்து ஒன்றைச் சொல்கிறார்கள். அவர் ஒப்புக்கொண்டார் என்று சொன்னால் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஒப்புக்கொண்டால் அது விவகாரத்திற்கு வரவேண்டியதில்லை. ஆனால், அழைப்பிதழ் அனுப்பி, எல்லாம் நடைபெற்ற பின்னால், ஒத்திவைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதாலேதான் அவர் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவரோடு நேரிலே பேசி அவரும் ஒப்புக்கொண்டார். திருமண அழைப்பிதழ் அவர் எல்லோருக்கும் வழங்கிவிட்டு, ஆனால், நான் அந்தத் திருமண மண்டபத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்ட காரணத்தினாலே எனது திருமணம் நின்றுவிட்டது என்று முதலில் பணம் கட்டிய அவர் யாரிடமாவது புகார் செய்து இருக்கிறாரா? அப்படி புகார் செய்து இருந்தால் அதற்கான ஆதாரத்தை இந்த அவையில் காட்ட வேண்டும்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஒப்புதலோடு அந்த வேடியப்பன் எழுதிய கடிதத்தை இங்கே நான் படிக்கிறேன். ‘‘ என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. ஒரு பொது நிர்வாகமே இப்படி பொறுப்பற்றத் தன்மையில் நடந்துகொண்டால் பொதுமக்களில் ஒருவனான நான் என்ன செய்ய முடியும்? இருந்தும், தங்கள் கடிதத்தில் உள்ளபடி நான் ஏற்கெனவே முன் பதிவு செய்த 27, 28 தேதிகளை ரத்துசெய்து நான் செலுத்திய தொகையையாவது, 7,500 ரூபாயைத் திருப்பிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கி

1990 ஏப்ரல் 16] [திரு, கே. அர்ஜுனன்]

றேன் என்று சொல்லி, 14-7-1989ஆம் தேதி, 20 நாட்கள் கழித்து பத்திரிகையெல்லாம் விநியோகம் செய்த பிறகு, இங்கே நான் கேள்வியுறுகிறேன், முதலமைச்சர் அளவிற்குக்கூட அவர் சிபாரிசுக்கு வந்துவிட்டு, முடியாத சூழ்நிலையிலேதான் வேறு வழியில்லாமல், வேடியப்பன் பேடியப்பன் ஆகியிருக்கிறார் என்பதை நான் தயவு செய்து தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனது மகளுடைய திரு மணத்திற்காக தேதி கேட்டு, நம்முடைய முதலமைச்சரிடத்திலே ஒப்புதல் பெற்ற பிறகு, வேறு திருமண அரங்கிலே வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம்கூட முயற்சி செய்தேன். முடியாத நேரத்தில் நானே வங்கியோடு தொடர்பு கொண்டு கேட்டதன் பேரில், வங்கி, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் சேலம் வருகிறார்கள். அன்றையதினம் சேலம் மத்திய கூட்டுறவு வங்கிக்காகக் கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடத் திறப்பு விழாவும் அன்றைக்கு நடைபெற இருக்கிறது, ஆகவே, நீங்கள் கட்டிய தொகையைத் திரும்பப்பெற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டது. அவரும் அதற்கான பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். பலாத்காரமாக, நான் கட்டிய தொகையைத் திருப்பித் தந்து, எனது திருமணத்தைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள் என்று புகார் சொல்லி இருக்கிறாரா என்பதைத் தான் நான் அறிய விரும்புகிறேன்.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது படித்திருக்கிற கடிதத்தை, நீங்கள் தமிழ் அறிந்தவர், எப்படி அதை நீங்கள் பிரிசியூம் பண்ணிக்கொள் கிறீர்களோ அப்படி பிரிசியூம் பண்ணிக்கொள்ளுங்கள். அவரு டைய மன வேதனையை இதில் தெளிவுபடுத்தியிருக்கிறார். அடுத்து, அன்றையதினம் 28-8-1989ஆம் தேதி மத்திய கூட் டுறவு வங்கியினுடைய மெயின் பில்டிங்கைத் திறக்கிறார்கள். திறக்கிறபோது அதிலே மாவட்டத்தினுடைய சட்ட மன்ற உறுப் பினர்கள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று அழைப்பித ழிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நகரத்தி னுடைய செயலாளருடைய பெயரை குறிப்பிட்டு இருப்பது எந்த வகையிலே நியாயம் என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் 1973-74ஆம் ஆண்டுகளில் அதே கூட்டுறவு வங்கி யினுடைய சேர்மேனாக இருந்தபோது அவருடைய அந்தரங்கச்

செயலாளராக இருந்தவர், இவர் பதவி போனவுடன் அவர் ஆப்செண்ட் ஆகிவிட்டார். 15 ஆண்டுக்காலமாக ஆப்செண்ட். தற்போது, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே அவர் ஒரு விண்ணப்பத்தை அளிக்கிறார். பதிவாளர் வேகவேகமாக அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கிறார்.

17-00 மணி

நடவடிக்கை எடுப்பது மட்டுமின்றி, அதிலே 25—9—1989-ஆம் தேதி ஒரு உத்தரவைப் போடுகிறார். வங்கியின் நிர்வாகக் குழுவிற்கு அறிவுரைகள் வழங்குமாறு, அவரை மீண்டும் எடுத்துக் கொள்ளுமாறு சொல்லவில்லை. தனி அதிகாரி மற்றும் நிர்வாவாகக் குழுவிற்கு ஒரு உத்தரவை இடுகிறார்கள். அந்த உத்தரவு சேலம் போய்ச் சேருவதற்கு முன்பாகவே, 25-ந் தேதி காலையிலேயே அவர் அங்கே போய் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். அங்கிருந்த தனி அதிகாரி தொடர்ந்து 3 நாட்கள் லீவில் இருந்தபோதிலும், அந்த அறிவுரையையும் மீறி விட்டு உத்தியோகத்தில் சேருவது எந்த வகையில் நியாயம் என்பதைக் கேட்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல, அவர் இந்த 15 ஆண்டுக்காலம் உத்தியோகமே இல்லாமல் இருந்தவர் 5 லட்சம் ரூபாய் அளவுக்கு கூட்டுறவு வங்கியின் பணத்தைச் சம்பளமாக வாங்கியிருக்கிறார். அவர் பதவி உயர்வும் பெறுகிறார்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ம் நாள் நான் வங்கியின் தலைவர். எனக்கு உதவியாளராக அப்போது இருந்தவர் எஸ். பி. பெரியசாமி என்பவர். பிப்ரவரி 6-ந் தேதி என்னுடைய மகளுக்குத் திருமணம் முடிந்த உடன் நான் கைது செய்யப்படுகிறேன். அதே நேரத்தில் எனது உதவியாளர் பெரியசாமியும் கைது செய்யப்படுகிறார். கைது செய்யப்பட்டு ஒரு துணை காவல் கண்காணிப்பாளர் (Dy. SP.) பங்களாவுக்குக் கொண்டுபோகப்பட்டு, சட்டவிரோதமாக 3 மாதக் காலம் போலீஸ் கொடுமைகளையெல்லாம் சந்தித்தவர். எத்தனையோ வகையான போலீஸ் கொடுமைகளை அவருக்குச் செய்தார்கள். அவ்வளவையும் தாங்கிக்கொண்டு அவர் கடிதம் எழுதுகிறார். வங்கிப் பணியாளரான நான் விடுப்பு விண்ணப்பம் இப்போது அனுப்புகிறேன் என்று எவ்வளவோ கெஞ்சியும் கூட அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. உறவினர்கள் யாரும் அவரை வந்து பார்க்க, சந்திக்க அனுமதியும் மறுக்கப்படுகிறது. அதற்குப் பின்னால், அவரை சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் வைத்தார்கள். மீண்டும் சிறைச்சாலையிலிருந்துகொண்டு, தான் முன்பு பணிபுரிந்த மத்திய கூட்டுறவு வங்கிச் செயலாளருக்கு

1990 ஏப்ரல் 16] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

விடுப்பு விண்ணப்பம் அனுப்பினார். 3 மாத காலமாக டி.எஸ்.பி பங்களாவில் கொடுமை செய்யப்பட்டவர், விடுப்பு விண்ணப்பம் அனுப்பக்கூட அவரை அனுமதிக்கவில்லை. இப்போது சிறைச் சாலையில் வைத்திருக்கிறார்கள். நான் உங்களுக்கு விடுப்பு விண்ணப்பம் அனுப்புகிறேன். பிப்ரவரி 6-ந் தேதி முதல் விடுப்பில் இருப்பதாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அந்த விடுப்பு விண்ணப்பத்தை அவர் சிறையிலிருந்து அனுப்பு கிறார். அதற்கு வங்கியிலிருந்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது ஏற்கப்படவில்லையா என்று கூட பதில் சொல்லப்பட வில்லை. அதற்குப் பின்னால் ஜாமீனில் வெளிவர நீதிமன்றத் தின் உதவியை நாடுகிறார். உடனே ' இந்திரா காந்தி ஒழிக '' கலைஞர் வாழ்க என்று அவர் கோஷம் போட்டார்' என்று டி.ஐ.ஆரில் மேலும் ஒரு வழக்கை அவர் மீது ஜோடித்து ஜாமீனில் வெளிவராத அளவுக்கு உள்ளேயே அவரை ஓராண்டுக் காலம் வைத்தார்கள். அந்த ஓராண்டுக் காலமும் அவர் சிறையி லிருந்தபடியே வாரந்தோறும் வங்கிக்குக் கடிதம் அனுப்புகிறார். ஆனால் அதற்கும் வங்கியிலிருந்து பதிலே வரவில்லை. அதற்குப் பின்னால் ஓராண்டுக் காலம் சிறையிலிருந்து அவர் வெளியில் வருகிறார். வெளியிலே வந்தபிறகு, ஒரு வழக்கறிஞர் உதவி யோடு அந்த வங்கிக்கு விண்ணப்பம் செய்கிறார். நான் சட்டப் படி எந்தவிதமான தவறும் செய்யவில்லை. நான் வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்தவன். என்னுடைய வேலையில் இருந்து என்னை நீக்கிவிட்டதாகத் தகவல் எதுவும் வங்கி எனக்குத் தரவில்லை. ஆகவே, மீண்டும் எனக்கு பணி தர வேண்டுமென்று ஒரு வழக்கறிஞர் உதவியோடு அந்த வங்கியிடம் தொடர்புகொள்கிறார். அதற்கும் எந்தவிதமான பதிலும் வரவில்லை.

17-05 மணி

அதற்குப் பின்னால் தி.மு.க. ஆட்சியில் நெருக்கடிநிலை இருந்த காலத்தில் எதிர்க்கட்சிகளைக் கொடுமைப்படுத்தினார் கள் என்பதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் அ.தி.மு.க. ஆட்சி யில் மறைந்த திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் திரு. கிருஷ்ணசாமி என்பவரைத் தலைவராகக் கொண்டு நியமித்தார். அந்தக் கமிஷனிடத்திலே இவர் போய் விண்ணப்பம் செய்கிறார். போலீஸ் அதிகாரிகள் செய்த கொடுமை, சிறைச்சாலையிலே வைத்து இருந்தது, வங்கி தனக்கு வேலை தராதது, என்று இப்படி எல்லாம் நெருக்கடி காலத்தைப் பயன்படுத்திச் செய்தார்கள். பிறகு அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு கொடுமைகளை இழைக் கிறது, எனக்கு நீதி வேண்டும் என்று தானாகக்கூட அல்ல ; சிறந்த வழக்கறிஞருடைய உதவியோடு அந்த கிருஷ்ணசாமி கமிஷன் முன்னாலே வழக்கு தொடுக்கிறார். அதற்கும் விசாரித்து அவர் எந்தவிதமான தீர்ப்பும் சொல்லாமல் விட்டுவிடு

கிறார். பிறகு அந்தத் தீர்ப்பு வரவில்லை. வங்கி மீண்டும் பரிசீலித்து எனக்கு வேலை தரவேண்டும் என்று வங்கிக்கு விண்ணப்பம் செய்கிறார். அப்போதும் பதில் இல்லை. அதற்குப் பின்னால் இப்போது, நம்முடைய கழக அரசு ஏற்பட்டவுடன் அவர் விண்ணப்பம் செய்கிறார். வங்கியினுடைய செயலாளர் தனி அலுவலர் திரு. பெரியசாமியை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக வங்கியில் இருக்கிற குறிப்பு எந்தவிதமான நியாயத்தின் அடிப்படையிலும் தெரியவில்லை ; அவருடைய கோரிக்கைக்கு சரியான பதில் கூடச் சொல்லாமல் இருந்தது வியப்புக்குரிய ஒன்றாகும்; ஆகவே, அவருடைய கோரிக்கையை ஏற்று சம்பளத்துடன் அவரை மீண்டும் பணியில் அமர்த்துவதுதான் நீதி, நேர்மை என்று வங்கியினுடைய தனி அலுவலர் செயளாலர் பரிந்துரை செய்தார்கள். அதன்பேரில் தான் பதிவாளர் நடவடிக்கை எடுத்தார்கள். அதன்பேரில்தான் அரசும் உத்தரவிட்டது. எனவே இதில் எந்தவிதமான முறை கேட்டுக்கும் இடம் இல்லை என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட விளக்கத்திற்கு நன்றி. கலைஞர் வாழ்க என்று சொல்பவர்கள் எல்லாம் கலைஞரை வாழவைப்பதற்கும், நாட்டை வாழவைப்பதற்கும் சொல்வதில்லை. தன்னை வாழ வைத்துக் கொள்வதற்காகத்தான் சொல்வது அது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இவரைப் போல் துரோகி யாரும் இருக்க முடியாது. யார், யாருக்கு புத்தி சொல்வது என்ற விவஸ்தை கெட்டத்தனமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து சூடான விவாதத்தைத் தவிர்க்க வேண்டும். திரு. அர்ஜுனன் அவர்கள் நேரடியாகச் செய்திக்கு வரவேண்டும். உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட வார்த்தையை உபயோகப்படுத்துவது இந்தப் பிரச்சினையில் வேண்டியதில்லை. நீங்கள் இதை அனுமதிக்கிறீர்களா ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ஜுனன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்கு அமைச்சர் விளக்கம் சொல்கிறார். எமர்ஜென்சி காலத்தில் எப்படி எல்லாம்

1990 ஏப்ரல் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

கொடுமைகள் நடைபெற்றன என்பதற்கான விளக்கம் சொல்கிறார். அவருடைய மகள் திருமணமாகிய 5-வது நிமிஷம் அவர் கைது செய்யப்பட்டதும், அதைப்போல் அவர் காரியதரிசி கைது செய்யப்பட்டதும் பற்றிய செய்திகளைச் சொல்கிறார். எமர்ஜென்சி கொடுமையில் அதுவும் ஒன்று. எமர்ஜென்சி காலத்தில் கொடுமைகள் நடந்தன என்று திருமதி இந்திராகாந்தி அம்மையாரே ஒத்துக்கொண்டிருக்கும்போது நீங்கள் ஏன் ஒத்துக்கொள்ள மறுக்கிறீர்கள் (குறுக்கீடு) அதல்ல. அவர் விளக்கம் சொன்னபிறகு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மறுப்பு இருந்தால் அதைத் தெரிவிக்க வேண்டும். அதை விட்டுவிட்டு கலைஞர் வாழ்க என்று சொன்னதில் உள்நோக்கம் இருந்தது என்றெல்லாம் பேசினால் அதற்குத் தகுந்தபடி தான் பதிலளிக்க வேண்டி வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அர்ஜுனன் அவர்கள் அருள்கூர்ந்து அதைவிட்டுவிட்டு அடுத்த செய்திக்கு வரவேண்டும். ஏற்கெனவே இப்போது உங்களுடைய கணக்குப்படி 18 மணித்துளிகள் ஆகிவிட்டன.

திரு. கே. அர்ஜுனன்: பேரவைத் தலைவர் அவர்களே, யார், யாருக்குத் துரோகம் செய்தது என்பது அனைவரும் அறிந்த விஷயம்தான்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் மத்திய வங்கியினுடைய தலைவராக சேலத்தில் இருந்தபோது தமிழ்நாட்டில் தமிழ்ச் சமுதாயப் பெருமக்கள் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா இவர்களுக்குப் பின்னால் எங்களுடைய தலைவர் கலைஞரைத் தவிர தமிழர்களுக்காக குரல் கொடுக்கக்கூடியவர்கள் இருப்பதாகக் கருதவில்லை. இப்படிப்பட்ட தலைவர்களுடைய படங்களை அந்த வங்கியிலே நாங்கள் வைத்திருந்தோம். நான் தலைவராக இருந்த காரணத்தால் தீர்மானம் போட்டு. அந்த நெருக்கடி காலத்தில் எல்லோரையும் கைது செய்துவிட்டு தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோருடைய படங்களை எல்லாம் கீழே போட்டு காலால், பூட்ஸ் காலால் உதைத்து உடைத்த சண்டாளர்கள் இன்னும் உலவிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த அரசு வந்தபிறகு மிகப் பெருந்தன்மையோடு நடந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அர்ஜுனன் அவர்கள் விவாதத்தை வளர்க்க வேண்டாம்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொலைக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டதை எல்லாம் எமர்ஜென்சி என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. அடுத்து..

17-10 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள் அமைதியாகப் பார்த்து கொண்டிருப்பதற்காக, எதை வேண்டுமானாலும் பேசி விடக்கூடாது. கொலைக் குற்றத்திற்காக அப்போது யார் கைது செய்யப்பட்டார்கள்? அதை அர்ச்சுனன் விளக்க வேண்டும். நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால், பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. கே. அர்ஜுனன் : இதை முதலமைச்சருக்கு நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்குத் தெரிந்த விஷயம் தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தவறு, தவறு பேச்சை மாற்றக் கூடாது. அப்போது கொலைக் குற்றத்திற்காக, யார் கைது செய்யப்பட்டார்? எமர்ஜென்சி காலத்திலே, வீரபாண்டி ஆறுமுகம் கைது செய்யப்பட்டது கொலை குற்றத்திற்காக என்று அர்ச்சுனன் கூறுகிறாரா?

திரு. கே. அர்ஜுனன் : அவர் கைது செய்யப்பட்டிருக்கிற சம்பவம், கிருஷ்ணகிரி செஷன்ஸ் கோர்ட்டிலே, கொலைக் குற்றத்துக்கான வழக்கு நடந்தது என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடக்கூடாது. நான் கேட்பது எமர்ஜென்சி காலத்திலே, கழக ஆட்சி கலைக்கப்பட்ட மறு நாள், 500-க்கும் மேற்பட்டவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அன்றைய தினம் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லக்கூடிய பழைய காங்கிரஸ்காரர்கள், அஃதன்னியில், சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவர்கள்; இப்படி பலபேர் கைது செய்யப்பட்டார்கள். அந்த நேரத்திலேதான், வீரபாண்டி ஆறுமுகம் கைது செய்யப்பட்டார். ஆனால், அர்ச்சுனன் ஏதோ கொலை குற்றத்திற்காகத்தான் வீரபாண்டி ஆறுமுகம் கைது செய்யப்பட்டதைபோல் சொல்கிறார். அதை அவர் தெளிவாக்க வேண்டும். இல்லாவிட்டால், தான் சொன்னதை வாபஸ் பெற வேண்டும்.

1990 ஏப்ரல் 16]

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்திலே, கொலைக் குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டார் என்பது எங்களுக்குக் கிடைத்த தகவல். எதற்காக அன்றைய தினம் கைது செய்யப்பட்டார் என்பது எங்களுக்குத் தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல் என்று நானும், அர்ச்சுனன் பற்றி ஒரு பழி போட முடியும். ஆனால், அப்படி போட விரும்பவில்லை. அது தவறு. எனக்குக் கிடைத்த தகவல் என்று பேசக் கூடாது. கொலைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டதைப் போல, அவர் சொன்ன வார்த்தைகளை அவர் திரும்பப் பெற வேண்டும்.

திரு. கே. அர்ஜுனன் : அடுத்து (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை ; இதைத் தெளிவுபடுத்த வேண்டும். இது ஒரு பெரிய குற்றச்சாட்டு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடுத்து என்று இங்கிருந்து மாறக்கூடாது. பெரிய குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார், சாதாரணமானது அல்ல. ''கொலைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டதையெல்லாம், எமர்ஜென்சியின் பெயரால் சொல்வதா?'' என்று சொன்ன அந்த வார்த்தைகளை அவர் திரும்பப் பெற வேண்டும். இல்லாவிட்டால், அதை நிரூபிக்க வேண்டும்.

திரு. கே. அர்ஜுனன்: அவர், ''துரோகி'' என்று சொன்னதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு (குறுக்கீடு).....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அர்ஜுனன், விவாதத்தைத் திசை திருப்பக் கூடாது. அதை ஒன்று திரும்பப் பெற வேண்டும்; அல்லது, பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. கே. அர்ஜுனன் : எனக்குக் கிடைத்த தகவல்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை ; ஒவ்வொருவரும் எனக்குக் கிடைத்த தகவல் என்று ஆயிரம் தகவல்களைச் சொல்லலாம்; இரண்டில் ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள். ஒன்று திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்; அல்லது, பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : அவர் மீது கொலைக் குற்றம் நடந்த சம்பவம் உண்மை. கிருஷ்ணகிரி கோர்ட்டிலே, அவர் கைது செய்யப்பட்டதற்கு (குறுக்கீடு)....

திரு. எஸ். ஆர். இராதா : விவாதத்திற்காக இந்தப் பிரச்சினை பேசப்படுகிற நிலை வந்து விட்டது. ஆனால், பூலாவரி சுகுமாரன் கொலை வழக்கிலே, அவர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற நிலை இருக்கிறது. ஆனால், முதலமைச்சர் என்ன சொல்கிறார் என்றால், நெருக்கடி நேரத்தை வைத்து மட்டும், அதை கொலை குற்றம் என்று சொல்லலாமா என்கிறார். கொலைக் குற்றம் இருந்திருந்தால், அதை பொறுப்பேற்றுக் கொண்டு நாங்கள் நிச்சயமாக நிரூபிக்கத் தயார். ஆனால் அவர் கொலைக் குற்றத்திலே சம்பந்தப்படவில்லை என்று சொல்ல முடியாது. அவர் மீது, ஒரு கொலைக் குற்றம் இருக்கிறது. அந்தக் கொலை குற்றத்திலே, அவர் நீதி மன்றத்திற்குப் போய் வந்தவர் ; அதை இல்லையென்று, மறுக்க முடியாது யாராலும்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படியே கொலைக் குற்றம் இருந்தாலும் கூட, எமர்ஜென்சிக்காக கைது செய்யப்பட்டதை, அதனோடு இணைப்பது, எந்த வகையிலே பொருந்தும்? ஏதோ, கொலைக் குற்றம் இருக்கிறது என்று இப்போதும் கூட, எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். அவர் மீது, கொலைக் குற்றம் வேண்டுமென்று சுமத்துவதற்காக முயற்சிக்கப்பட்டு, இரண்டு, மூன்று முறை அரசுத் தரப்பில் அப்பீல் செய்யப்பட்டும் கூட, அது நிரூபிக்கப்படவில்லை என்பதும், அதிலே அவரும் மற்றவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதும், கிருஷ்ணகிரியிலே அதற்காகவே கோர்ட் நடைபெற்றது என்பதெல்லாம் நாடறிந்த உண்மை. இப்போது, நான் கேட்பது எல்லாம், பேச்சை திசை திருப்ப வேண்டிய அவசியம் இல்லை, கொலைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார் என்பதை அவர் வலியுறுத்திப் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா அல்லது சொன்ன வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறாரா என்பது தான்.

திரு. கே. அர்ஜுனன் : அன்றைய தினம் அவர் எதற்காக கைது செய்யப்பட்டார் என்று நான் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. ஆனால், நான் அவர்மீது கொலைக் குற்றம் இருந்தது என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து, தொழிற்சங்க (குறுக்கீடு).....

1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தகுந்த விளக்கத்தை இந்த அவைக்கும் நாட்டுக்கும் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால், என்னை அன்று கைது செய்தது, 151, 71 ஏ ''கிரிமினல் அமென்ட்மென்ட் ஆக்ட்'' டிலே கைது செய்து, சிறைச்சாலைக்குள்ளே வைத்து, ''நேஷனல் செக்யூரிடி ஆக்ட்'' ன் கீழ் வைத்தார்கள். 'மிசா' விலே வைத்தார்கள். 'மிசா' விலே வைத்து, 6 மாதத்திற்குப் பின்னாலே, சேலம் சிறைச்சாலையிலிருந்து, மதுரை சிறைச்சாலைக்கு மாற்றினார்கள். நான் மதுரை, சிறைச்சாலையில் இருந்த காலகட்டத்திலேதான் பல்வேறு போலீஸ் அதிகாரிகள் எல்லாம் என்னைப் பார்த்து இப்படிப்பட்ட வழக்கெல்லாம் போடுவோம்: உங்களுடைய தலைவர் இந்த இயக்கத்திற்காக தலைமை ஏற்கக் கூடாது; அவரால் இந்த இயக்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்பட்டு விட்டது என்று நீங்கள் சொன்னால் உங்கள் மீது வழக்கு இல்லை; உடனே விடுதலை செய்து விடுவோம்; இல்லாவிட்டால் இப்படிப்பட்ட வழக்கை நீங்கள் சந்திக்க வேண்டிவரும் என்று என்னை அச்சுறுத்தினர். நான், அந்த மிரட்டலுக்கு; கோழையாகப் பிறக்கவில்லை. வீரனாகவே இருப்பேன், தலைவர் வாழ்க என்ற சொல்லிவிட்டுதான் சாவேன், இந்த மிரட்டலுக்கு நான் பயப்படமாட்டேன் என்று சொன்ன பிறகு அந்தக் கொலைக் குற்றச்சாட்டிலே 120 சதி என்று போட்டு பிணைக்கப்பட்டு தனி நீதிமன்றம் அதற்காக அமைத்து எப்படியாவது தண்டனை வழங்கலாம்; வழங்க வேண்டும் என்பதற்காக அ.தி.மு.க. ஆட்சி எவ்வளவோ முயற்சி செய்து தோற்றுப் போனவர்கள் இங்கு வந்து உண்மைக்கு மாறாகப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. நானாக இருந்தால் இப்படிப் பொய் வழக்குப் போட்டு தோற்றுப் போனதற்காகத் தூக்குப் போட்டு செத்து இருப்பேன்.

17-15 மணி

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர்அவர்களே இந்த விளக்கத்தை அவர் சொல்கிற நேரத்தில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே பொய் வழக்கு போடப்பட்டது என்று சொல்வாரானால் நான் அவருக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அப்போது பூலாவாரி சுகுமாரன் சாகவில்லை என்று சொல்லுங்கள்; அப்படிக் கொலை செய்யவில்லை என்று சொல்லுங்கள். நீங்கள் அவரையும் அவருடைய........ ..

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ...

திரு. எஸ். ஆர். இராதா : நான் இன்றைக்குச் சொல்கிறேன். நீங்கள் கொலை நடைபெறவில்லை என்று சொல்லுங்கள்; நடைபெற்று இருக்கிற கொலைக்கு இன்றைக்குக் கூட நீங்கள் யார் குற்றவாளி என்று கண்டுபிடித்துச் சொல்லுங்கள். உங்களால் முடியும் என்றால் சொல்லிப் பாருங்கள்.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதைப்பற்றி என்ன விமர்சனம் செய்வது என்று எனக்குப் புரியவில்லை. நடந்த கொலைக்கு எல்லாம் யாரையாவது காரணம் காட்டி 'இவர்தான் கொலையாளி' என்று கூறினால், நண்பர் இராதா கூட அந்தக் கொலைக்குக் காரணம் என்று சொல்லிவிடலாம்; நான் சொல்ல மாட்டேன்; அப்படிச் சொல்லமாட்டேன்; அப்படிச் சொல்கிற கோமாளி அல்ல நான். ஆனால் ஒரு கொலை நடைபெற்றது. வேண்டுமென்றே ஒரு பழியை வீரபாண்டி ஆறுமுகத்தின் மீது போடுவதற்கு முயற்சி நடைபெற்றது. மேலும் மேலும் வழக்கு—விடுதலை ஆனாலும் விடமாட்டேன் என்று அரசாங்கமே அப்பீல் செய்து வழக்கு நடைபெற்றும் கூட—பெரிய பெரிய வழக்கறிஞர்களை எல்லாம் வைத்தும் கூட—நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்து இருக்கிறது. ஆனால் இந்த இராதா அது நீதிமன்றத்தில் நடைபெற்ற தவறு என்று சொல்கிறாரா? அந்தத் தவறு என்ன என்பதை அவர் விளக்க வேண்டும். நீதிமன்றம் தவறாக நடந்து கொண்டது என்கிறார். நீதிபதி எப்படித் தவறாக நடந்து கொண்டார். கையூட்டுப் பெற்றாரா? எந்த நீதிபதி? அதை அவர் விளக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நீதிமன்றம் தவறாக நடந்தது என்று சொல்லவில்லை. ஆனால் பதிவேட்டை நீங்கள் பார்க்கலாம். நீதிமன்றத்திலே தப்பிவிட்டார்கள் என்று சொன்னேன். நீங்கள், எப்படித் தப்பித்தார் என்ற விவரம் கேட்டால் நான் வேண்டுமானால் சேலம் கண்ணனை வைத்து அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சேலம் கண்ணன் எல்லாம் இங்கே வரமுடியாது. இப்போதே சொல்ல வேண்டும். சொல்லிவிட்டு உட்கார்ந்து சிரித்தால் புண்ணியம் இல்லை; வேடிக்கை அல்ல; இப்போதே சொல்ல வேண்டும்; எப்படித் தப்பித்தார் என்று சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா ; மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கில் அவர் எப்படித் தப்பித்தார் என்பது இன்றைக்கு இருக்கிற கேள்வி. நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், அன்றைக்கு நீதிமன்றத்திலே சாட்சி சொல்ல வேண்டிய பல பேரைப் பயமுறுத்தி சாட்சிகளை மாற்றி இருக்கின்ற நிலைகளை மாற்றியதின் காரண

மாக இன்றைக்கு நீதிமன்றத்திலே நீங்கள் தப்பித்து விட்டீர்கள். ஆனால் அதனாலே, நீதிமன்றத்திலே தப்பித்த காரணத்தாலே அது குற்றவாளி அல்ல என்று நிச்சயமாக ஆகிவிடுவதல்ல; மக்கள் மன்றத்திலே இன்றைக்கும் குற்றவாளி தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தஞ்சை மாவட்டத்திலே குடந்தை வட்டாரத்தில் நடைபெற்ற கொலைகளுக்கு எல்லாம் இராதா காரணம் என்பது உண்மையானால் இந்தக் கொலைக்கும் வீரபாண்டி ஆறுமுகம் காரணம் என்பதை ஒத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் பெருமையோடு ஏற்றுக் கொள்கிறேன், அங்கு நடைபெற்ற கொலைகளுக்கு எல்லாம் நான் தான் காரணம் என்று முதலமைச்சர் சொல்வதாக இருந்தால் நிச்சயமாக நான் சொல்கிறேன் நான் ஏற்றுக்கொள்கிறேன் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு விளக்கத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த வழக்கிலே செக்ஷன் 302 கொலைச் சதி என்று சாட்டப்பட்ட அவர் அக்யூஸ்டு 2. அக்யூஸ்டு 3 வெங்கடாசலம் என்பவர் இன்றைக்கு அ.இ.அ.தி.மு.கவிலே இருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் கொலை இவர் தான் செய்தார் என்று 302 செக்ஷன் வழக்கிலே அக்யூஸ்டு 2 என்று சொல்லக் கூடிய அவர்களுடைய மகனையே அ. இ. அ. தி. மு. க.விலே வேட்பாளராக அறிவித்தார்கள். ***

திரு. எஸ். ஆர். இராதா : ***

மாண்புமிகு திரு சோ. வீரபாண்டி ஆறுமுகம் ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இந்த வாதங்களை நிறுத்திக்கொள்வது நல்லது. ஏனென்றால் இப்படியே போய்க் கொண்டு இருந்தால் வரம்பு இருக்காது. திரு. அர்ஜுனன் ஒன்று சொல்ல வேண்டும். அதாவது இந்த அவையில் ஒரு குற்றச்சாட்டுச் சொல்லி விட்டார்கள். குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கும்போது சொல்வதற்கு உங்களுக்கு நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். அதற்கு அவர் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் வந்து கொலைக் குற்றம் என்று சாட்டத் தொடங்கி விட்டால்.....

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[1990 ஏப்ரல் 16

17–20 மணி

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். குறுக்கிடுவதற்கு. அர்ஜுனன் அவர்கள் பொறுப்பு ஏற்க முடியாது என்று சொல்லிவிட்டார். ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். பிறகு அதற்குப் பொறுப் பேற்க முடியாது என்று சொல்லிவிட்டார். அந்த வாதத்தில் இருந்தே அந்தக் குற்றச்சாட்டை, அவர் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பது ஊர்ஜிதம் ஆகிறது. அதைச் செய்தால் போதும். புது

திரு. கே, அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது, கைது செய்யப்பட்டபோது கொலை குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டாரா அல்லது எமர் ஜென்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அர்ஜுனன் கவனிக்க வேண்டும். இப்படி நீங்கள் பேசினீர்கள் என்றால் அனுமதிக்க மாட்டேன். அதனால் நேரடியாகச் சொல் லுங்கள். நீங்கள் பொறுப்பேற்க முடியாது என்று சொன் னால் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இப்படி ஒவ்வொரு வரும் அவையிலே வந்து ஒவ்வொருவரையும் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் அதற்கு வரம்பும் இருக்காது. அதற்கு இந்த அவையே தேவை இல்லை. அது வேறு வெளியிலே பேசுவது மாதிரி ஆகிவிடும். ஏன் என்றால், சட்டமன்றத்திலே ஆதாரப்பூர்வமாகச் சொல்ல வேண்டும்; இல்லை, பொறுப் பேற்க முடியாது என்றால் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதிலே கௌரவப் பிரச்சினையெல்லாம் ஒன்றும் கிடையாது, நேரடியாகப் பிரச்சினைக்கு வாருங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : எஸ், ஆர். இராதா அவர்கள் வந்து அங்கே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் பிரச்சினைக்கு வாருங்கள். மற்றப் பிரச்சினையெல்லாம் இருக்கட்டும். திரும்பப் பெற்றுக் கொள்கிறீர்களா என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : இல்லை, கைது செய்யப்பட்டு கொலைக் குற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விளக்கமெல்லாம் வேண்டாம் என்கிறேனே. மழுப்பல், நழுவல் எல்லாம் வேண்டாம். ஒன்று திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்,

1990 ஏப்ரல் 16] [பேரவைத் தலைவர்]

இல்லை, பொறுப்பு ஏற்றுக்கொள்ளுங்கள். பொறுப்பேற்க முடியாது என்றால் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் இப்படியே பதிவு செய்ய வேண்டுமென்றால் முடியாது. நீங்கள் திட்டவட்டமாகத் தெளிவாகச் சொல்லுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : இல்லை, கைது செய்யப் பட்டார், பிறகு செஷன்ஸ் கோர்ட்டிலே வழக்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கதை வேண்டாம் என்கிறேனே, இந்தக் கதை விடுவதெல்லாம் வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் தங்களைக் கேட்டுக்கொள்வது, அவரே திட்டவட்டமாக முதலில் பொறுப்பு ஏற்க முடியாது என்று சொல்லிவிட்டார். மறுபடியும், பொறுப்பு ஏற்பேன் என்று சொல்வதெல்லாம் தவறு. பொறுப்பேற்க முடியாது என்று சொல்லிவிட்டார். எனவே, அவர் சொன்ன வார்த்தையைத் திரும்பப் பெறவேண்டும்.

திரு. கே. அர்ஜுனன் : நான் உங்களுக்கு இதைவிட விளக்க மாகச் சொல்ல முடியாது. அவர் மீது கொலைக் குற்றத் திற்காக கைது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைவிட விளக்க மெல்லாம் வேண்டாம் விளங்குகிறது எங்களுக்கு என்ன வென்று, நேரடியாக வாக்கியத்திற்கு வாருங்கள். இழுக்க வேண்டாம். ஏற்கெனவே 31 மணித் துளி ஆகிவிட்டது. முதலிலே இதை முடியுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : ஒரு குறிப்பிட்ட பாயிண்டைப் பிடித்துக்கொண்டு நீங்கள் அதற்காக.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேளுங்கள். நீங்களே என்னிடத்திலே கேட்டு, நான் உங்களுக்கு வாய்ப்பளித்திருக் கிறேன். இதையெல்லாம் சொல்வதற்கு. அதைத் தரத் தோடும், பொறுப்போடும் சொல்ல வேண்டும். அதற்காகத் தான் உங்களுக்கு வாய்ப்பு. நீங்கள் நினைத்ததையெல்லாம் சொல்லிவிட்டுப் போவதற்குச் சட்டமன்றத்தைப் பயன்படுத்த முடியாது. இதைத் திரும்பப் பெற வேண்டும் உடனடியாக; அதைப் பார்த்து கொள்ளுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவரவர்களே, நான் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். அடுத்து..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏன் இந்த முரண்பாடு ?

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவரவர்களே, என்னிடத்திலே தங்களிடத்தில் காண்பித்த ஆதாரங்கள் இது சம்பந்தப்பட்டது அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் பார்த்தாயிற்றே. இப்பொழுது இரண்டிலே ஒன்றுதான். ஆதாரம் உறுதியானது என்று நீங்கள் நம்புவீர்கள் என்று சொன்னால், அந்த ஆதாரம் அழுத்தமானதுதான், எந்த இடத்திலும் அது நிற்கும் என்பது உறுதியானால், ஒன்று பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் முதலிலே பொறுப்பு ஏற்க முடியாது என்று சொல்லிவிட்டீர்கள். அப்பொழுது, திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

திரு. கே. அர்ஜுனன் : நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்றுதானே மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நான்தான் விளக்கம் சொல்கிறேன். அவர் மீது கொலைக்குற்றம் செஷன்ஸ் கோர்ட்டிலே நடைபெற்றிருக்கிற.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே நீங்கள் பொறுப்பு ஏற்க முடியாது என்று ஏன் சொல்ல வேண்டும் ?

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விவாதங்களை அடிப்படை நியாயத்தை விட்டு விட்டு, வேறு பக்கத்திலே திரும்பத் திரும்பப் பேசுவதற்கு இந்த அவையில அனுமதிப்பது முறையல்ல. ஏனென்றால், ஒருவர் மீது கொலைக் குற்றம் இருப்பதாகப் பேசுவதே கூட, தங்களுடைய அனுமதி பெற்றால் கூட, ஆதாரம் இருந்து சொல்லக்கூடிய வாய்ப்பு இருந்தால்தான் யாரும் சொல்லலாம். ஆதாரம் இல்லை என்று, அதுவும் அவர் எந்த நேரத்திலே கைது செய்யப்பட்டாரோ அப்பொழுது அப்படிப்பட்ட அடிப்படையிலே கைது செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு, நான் நிரூபிக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்குப் பின்னர், மறுபடியும் இந்த அவையினுடைய நேரத்தைத் தவறான முறையில் கொண்டு செல்வது முறையல்ல என்பதை நான் தங்களிடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த விஷயத்தை நான் உங்களுக்கு விளக்கமாகச் சொல்லி விட்டேன்.

1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமது கூற்றை வாபஸ் பெற வேண்டும்; அல்லது தாங்கள் அவரைஅவையை விட்டு வெளியேற்ற வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா: * * *

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : முதலிலே அவரை அதைச் செய்யச் சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராதா : நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்வதாக இருந்தால் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். இல்லை என்றால், ஆதாரம் இல்லை என்றால், வாபஸ் வாங்கலாம். தைரியமாக நிச்சயமாக நீங்கள் சொல்லுங்கள். உங்களாலே முடியும் என்றால், நிரூபிக்க முடியும் என்றால், நிரூபிக்க முடியும் என்று சொல்லுங்கள். அதிலே, ஆதாரம் இல்லை என்று சொன்னால், வேண்டியதில்லை. அதனாலே, நிச்சயமாக உங்களுக்குக் கிடைத்த தகவலை நீங்கள் சொல்கிறீர்கள். அதனாலே, அது உங்களுடைய தீர்க்கமான முடிவாக இருக்க வேண்டும்.

17–25 மணி

திரு. கே அர்ஜுனன்: தலைவர் அவர்களே, திருமணம் முடிந்த பிறகு கைது செய்யப்பட்ட சம்பவம், கொலை குற்றத் திற்காக அல்ல என்று அமைச்சர் அவர்கள் விளக்கத்தை ஒட்டி நான் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்கு பிறகு கொலைக் குற்றம் நடந்தது என்பது உண்மை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குப் பிறகு தொடர்ந்து வேண்டாம். இப்போது ஒரு மணித்துளி தருகிறேன். பேச்சை முடித்து விடவேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா ***

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ***

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அர்ஜுனன் அவர்கள் ஒரு குற்றச் சாட்டைச் சொன்ன போது, நான், பொறுப்பேற்க வேண்டும். இல்லாவிட்டால் திரும்பப் பெற வேண்டுமென்று சொல்லி, அது வாதமாக வளர்ந்த நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர்

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

TRUTH ALONE TRIUMPHS

இராதா அவர்களுக்கும், அமைச்சர் வீரபாண்டி அவர்களுக்கும் நடைபெற்ற வாக்குவாதத்தில் சில வார்த்தைகள் வெளி வந்திருக்கின்றன. நான் சொல்ல விரும்புவது மாண்புமிகு உறுப்பினர் அர்ஜுனன் அவர்கள், தான் அதற்கு பொறுப் பேற்க இயலாது என்று கூறிவிட்ட பிறகு, இறுதியாக தங்கள் கட்டளைப்படி அவர் தான் சொன்ன வார்த்தைகளை திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார். எனவே, எந்த ஒரு குற்றச் சாட்டாக இருந்தாலும், அமைச்சர்கள் உறுப்பினர்கள் மீது சொல்கிற குற்றச்சாட்டாக இருந்தாலும், குற்றச்சாட்டை சொல்கிற நேரத்தில் கையில் ஆதாரங்கள் இருக்க வேண்டும். இதே அவையில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது பல குற்றச்சாட்டுகளை நான் அன்றைக்கு இருந்த அரசின்மீது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பல குற்றச்சாட்டு களைச் சொல்லி இருக்கிறேன். ஆனால், எதற்கும் ஆதாரம் இல்லாமல் சொன்னது கிடையாது. ஆதாரங்களை இந்த மேசையில் எடுத்து அடுக்கடுக்காக வைத்துவிட்டுத்தான் சொல்லி இருக்கிறேன். மேலும் ஆதாரங்களை சபாநாயகரிடத்தில் காட்டிவிட்டு, அந்த ஆதாரங்களை இங்கே வைத்துப் பேசி யிருக்கிறேன். அதைப்போலத் தான் அமைச்சர்கள் ஆனாலும் உறுப்பினர்களானாலும் ஆதாரங்களை வைத்துக்கொண்டுதான் பேசவேண்டும். வெறும் வார்த்தையாக அமைச்சர் அவர்கள் சொல்வதைக் கூட ஏற்க இயலாது. எனவே, நான் தங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அர்ஜுனன் அவர்கள் தான் சொன்ன குற்றச்சாட்டைத் திரும்பப் பெற்றுக்கொண்டார் என்ற வரையில் அவை நடவடிக்கையிலே, சபைக் குறிப்பிலே ஏறலாம் என்பதையும், இராதா அவர்களுக்கும் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கும் நடைபெற்ற வாதம் அவைக் குறிப்பிலே இருந்து எடுக்கப்பட வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிற காரணத்தால் தான் நான் அவைக்குறிப்பிலே இருக்கவேண்டாம் என்று சொல்கிறேன். ஆதாரம் இருந்தால் கையிலே வைத்துக் கொண்டு பேச வேண்டும், அமைச்சராக இருந்தாலும் கூட எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றியோ, எதிர்க்கட்சி உறுப்பினர் களைப் பற்றியோ நானே கூட பேசுவதாக இருந்தாலும்,

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1990 ஏப்ரல் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

கையிலே ஆதாரத்தோடு பேச வேண்டும். அது தான் இந்த அவையினுடைய விதிமுறை. அப்படிப்பட்ட ஆதாரம் இல்லாமல் அமைச்சர் ஆறுமுகம் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார். அதனால்தான் சொல்கிறேன், அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டும் என்று. ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் கேட்டதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அர்ஜுனன் அவர்களைப் போல பொறுப்பேற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்லவில்லை. பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். அப்படி பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னாலும் கூட இப்போது கையிலே ஆதாரம் இல்லாத காரணத்தால், அவை, அவைக் குறிப்பிலே ஏறக்கூடாது. பிறகு ஒருசமயம் அவர் ஆதாரங்களைக் கொண்டு வந்து இதே குற்றச்சாட்டை சொல்லி, அப்போது பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொன்னால் சரியாக இருக்கும், ஆகவேதான் அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கச் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இப்போது அவர்கள் ஆதாரத்தை நிரூபிக்க வேண்டும். இல்லை என்றால், இப்போது அர்ஜுனன் மாதிரி அவர்களும் வாபஸ் வாங்க வேண்டும்.

17-30 மணி

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பொறுப் பேற்றுக் கொள்கிறேன் என்று கூறிய பிறகு, இரண்டொரு நாளில் அவர்கள் ஆதாரத்தைக் கொண்டு வந்து காட்டலாம், நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்குத்தான் சொல்கிறேன். அந்த ஆதாரத்தைக் காட்டுகிற வரையில், இவைகள் அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது என்று. இங்கேயே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஞாபகம் இருக்கும். நான் இதே அவையில் அந்த இடத்தில் அமர்ந்திருந்த போது, அப்போது அமைச்சராக இருந்த குழந்தைவேலு ஒரு குற்றம் சாட்டினார். கருணாநிதியினுடைய மகன் மு. க. அழகிரிக்கு தேனிக்குப் பக்கத்திலே முத்துதேவன் பட்டியிலே 100 ஏக்கர் தோட்டம் வாங்கப்பட்டு இருக்கிறது என்று தேர்தல் நேரத்திலே பிரச்சாரம் செய்து அதை முதலாக வைத்து, அன்றைக்கு வெற்றி பெற்றார்கள். அதை இங்கே துரைமுருகன் உறுப்பினராக இருந்தபோது, ஞாபகப்படுத்திப் பேசினார். நான் இங்கே பேசாமல் மௌனமாக உட்கார்ந்து இருந்தேன். இரண்டு பேர்களுக்கும் வாக்குவாதம் ரொம்ப நேரம் நடைபெற்றது. இவர் பேச, அவர் ஆமாம் என்று பேச, பேசிக் கொண்டேயிருந்தபோது, திடீரென்று அமைச்சர் குழந்தைவேலு என்னைப் பார்த்து, இவ்வளவு நேரம் நாம் வாதம் செய்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் மௌனமாக இருப்பதிலேயிருந்து அந்தக் குற்றம் உண்மை என்று தெரியவில்லையா என்று அவர் சொன்

னார். அதற்குப் பிறகுதான் நான் எழுந்து ''அண்ணா மீது ஆணையாகச் சொல்கிறேன், அப்படி ஒரு தோட்டம் என் மகன் பெயரால் அங்கேயில்லை, அதை அமைச்சர் அவர்கள் நிரூபித்தால், நான் என்னுடைய பதவியை ராஜினாமாச் செய்கிறேன்'' என்று சொன்னேன். உடனே அவர் மறு சவால் விட்டார். ''நான் நிரூபிக்கிறேன், அவர்கள் பதவியை ராஜினாமா செய்யட்டும், நிரூபிக்க முடியாவிட்டால் நான ராஜினாமா செய்கிறேன்'' என்று சொன்னார். இது முடிந்தது. நான் அப்போது முதலமைச்சரிடத்திலே சொன்னேன், நீங்கள் நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். உங்களுக்கு நேராக இந்த அறைகூவல் விடப்பட்டு இருக்கிறது என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இடத்திலே அப்போதே சொன்னேன். பிறகு ஒவ்வொரு நாளும் நான் எழுந்து கேட்பேன். ஆதாரம் எங்கே, ஆதாரம் எங்கே என்று. வருகிறது வருகிறது என்றார்கள். கடைசியாக 15 நாள் கழித்து அந்த ஆதாரம் வந்தது, எப்படி என்றால், மு. க. அழகிரியைப் போல ஒரு போர்ஜரி கையெழுத்துப் போட்டு, அந்த ஆதாரம் வந்தது. அதை அன்றைக்கு இருந்த சபாநாயகர் ராஜாராம் ஏற்றுக் கொள்ளவில்லை, துணைச் சபாநாயகர் பி. எச். பாண்டியனும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதுமாத்திரமல்ல. பிசினஸ் அட்வைசரி கமிட்டியே நடுவர்களாக இருந்து அந்த ஆதாரங்களை எல்லாம் படித்துப் பார்த்து, அத்தனையும் போலி ஆதாரம் என்று சொல்லப்பட்டது. போர்ஜரி கையெழுத்துப் போட்ட அவர் மீதே அப்போது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதற்காகத்தான் சொல்கிறேன், குற்றங்களைச் சொல்கிற நேரத்தில் கையிலே ஆதாரம் இருக்க வேண்டும் என்று சொல்கிறேன். இப்போது ஆதாரம் இல்லாமல் அவர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அப்படிச் சாட்டியிருக்கிற காரணத்தால், அவர்கள் ஆதாரங்களைக் கொண்டு வருகிற வரையில், அந்தக் குற்றச்சாட்டுகள் பத்திரிகையில் வருவது கூடாது, அவைக் குறிப்பிலே ஏறக்கூடாது என்றுதான் நான் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, இதை நான் ஏற்றுக் கொள்கிறேன், முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிற காரணத்தால். ஆனால் ஒன்று. இதை ஆறுமுகம் அவர்கள் இன்றைக்கு விட்டு விட்டுப் போய்விடக் கூடாது. நிச்சயமாக இந்த மன்றக் கூட்டம் முடிவதற்குள்ளாக அந்த ஆதாரத்தைக் கொண்டு வந்து காட்டி, அதே நேரத்தில் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, எந்தத் தண்டனை தருகிறார்களோ அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். இதிலே நீங்கள் கண்டிப்பாக, கறாராக இருக்க வேண்டும், நீங்கள் ஒரு சரியான ஆசிரியர் என்பதை நிரூபிப்பதற்கு உங்களுக்கு நல்ல சந்தர்ப்பம்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைகிணங்க அகற்றப் பெற்றது.

1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தின்படி, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், இரண்டு பேருக்கும் இடையில் நடைபெற்ற அந்த விவாதங்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இப்போது திரு. அர்ஜுனன் அவர்கள் ஒரு மணித் துளியில் தன்னுடைய உரையை முடிக்க வேண்டும்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப் போல பதிவாளர் 25-9-1989 ஆம் தேதி அந்தக் கூட்டுறவு வங்கியினுடைய தனி அலுவலருக்கு இட்டிருக்கிற கட்டளையில், உத்தியோகத்தைப் போடச்சொல்லி அல்ல. ஆனால் அவர்கள் லீவில் இருக்கிற நேரத்திலே அவர்கள் எப்படிப் பணியிலே சேர்ந்து கொண்டார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. அதிலே 15 ஆண்டுக்கால நிலுவையில் இருக்கிற சம்பளத்தை அவர்கள் எப்படிப் பெற்றார்கள், அவர்கள் உத்தியோகமே செய்யாமல், சம்பளத்தைப் பெற்றிருக்கிறார்கள், உத்தியோகமே செய்யாமல், 15 ஆண்டுக் காலத்தினுடைய பதவி உயர்வையும் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலின் போது, அங்கே பணியாற்றிக் கொண்டே, பாராளுமன்றத் தேர்தல் அலுவலகப் பொறுப்பாளராக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு செய்திகளே இல்லையா? இவ்வளவுதானா? கூட்டுறவு என்றால் இவ்வளவுதானா?

திரு. கே. அர்ஜுனன் : அலுவலகப் பொறுப்பாளராக அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதையும், மேலும் இங்கே இருக்கிற கூட்டுறவுச் சங்க. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒருவர் அநியாயமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டு, அவர்கள் வழக்காடி, மீண்டும் வேலைக்கு வந்தால், இடைக் காலத்திலே அவர்கள் வேலையில் இல்லாத நேரத்திற்கு எல்லாம் கூட சம்பளம் வாங்குவதுதான் நியாயம். அதுதான் இப்போது இருக்கிற விதிமுறை.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வழக்காடி நீதிமன்றத்திலே அளித்த தீர்ப்பின் அடிப்படையில் அவர்களுக்கு வேலை போடவில்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

17-35 மணி

அடுத்து அவர் அங்கே தொழிற்சங்கத்தை புதியதாக உருவாக்கி ஏற்கெனவே இருக்கின்ற தொழிற்சங்கத்திலே இருக்கின்றவர்கள் ராஜினாமா பத்திரத்திலே ஒரு கையெழுத்தும்,

இந்த புதிய தொழிற்சங்கத்திலே உறுப்பினராக சேர்வதற்கு ஒரு கையெழுத்தும் வலுக்கட்டாயமாக கட்டாயப்படுத்தி வாங்கப்பட்டிருக்கிறது. அந்த அலுவலகத்தினுடைய தலைமையகம் டோர் நம்பர் 7/89, சங்கர் நகர் என்று அந்த விண்ணப்பத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே அவர் இன்னும் தொடர்ந்து அமைச்சருடைய பாதுகாப்பிலேதான் இயங்கிக் கொண்டு அங்கே இருக்கின்ற மத்திய கூட்டுறவு வங்கியின் ஸ்பெஷல் ஆபீசருக்குப் பதிலாக இவரே தான் ஸ்பெஷல் ஆபீசர் என்ற அளவில் அந்த மாவட்டத்தையே நிர்வகித்துக் கொண்டிருக்கிற கொடுமை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வாணிபத் துறையின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக் கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

குறிப்பாக நம்முடைய கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு கிராமப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு இன்றைக்கு தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக குறுகிய காலக் கடன், அதேபோன்று காலத்தினுடைய தேவையைக் கருதி, ஐ.ஆர்.டி.பி. கடன், அதுபோன்று விவசாயத்தைச் சார்ந்திருக்கிற மீன்வளம், பன்றி வளர்ப்பு போன்ற விவசாயத்தைச் சார்ந்திருக்கின்ற தொழில்களுக்கு கடன். அதுமட்டுமல்லாமல் விவசாயத்தைச் சார்ந்திராத சிறுதொழில் கடன், இவற்றையெல்லாம் இந்த அரசு கூட்டுறவுத்துறை தொடக்க வங்கிகள் மூலமாகக் கொடுத்திருப்பது உள்ளபடியே கிராமப் பகுதி மக்களுக்கு உதவியாக இருக்கும். அதை நான் வரவேற்கிறேன்.

குறிப்பாக நிலவள வங்கி நீண்டகாலக் கடனை தந்துகொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக கிணறு வெட்டுவதற்காக கிராமப்பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் நில வள வங்கிகள் மூலமாக நீண்டகாலக் கடனைப் பெறுகிறார்கள். அந்தக் கிணறுகளை வெட்டுகின்றபோது ஒரு கிணறு பொய்த்துவிட்டால், அதன் மூலமாகப் பெறும் கடன் சுமைக்கு ஆளாகித் தொடர்ந்து 2, 3 கிணறுகளைத் தோண்டி, அதன் விளைவாக அந்த நிலத்தையே விற்று, கடனை அடைக்க முடியாத நிலை கிராமப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்கிறபோது அந்தக் கடன் சுமையைக் குறைக்கின்ற வகையிலே கிணறு வெட்டுகின்ற விவசாயிகளுக்கு உதவியாக இருக்கின்ற வகையிலே இந்த அரசு கூட்டுறவுத் துறையின் மூலமாக பல சலுகைகளைச் செய்யவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன். கிணறு வெட்டுவதற்கு அதிகமாக வறண்ட பகுதிகளில் ஜல்லட்

1990 ஏப்ரல் 16] [திரு. ப. முத்துசாமி]

டின் தோட்டாக்களைப் பயன்படுத்தி பாறைகளைப் பிளந்து, 100 அடி, 120 அடி என்கின்ற ஆழத்திற்கு கிணறுகளைத் தோண்ட வேண்டிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் தோட்டாக்கள் ஜெல்லட்டின் குறைந்த விலையில் கிடைக்காமல், அவர்கள் ஒன்றுக்கு இரண்டு மடங்கு விலை கொடுத்து வாங்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கிணறுகள் வெட்டுகின்றவர்களுக்கு எளிதில் அரசு விலையில், தோட்டாக்கள் கிடைப்பதற்கு வங்கிகள் மூலமாக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. கிணற்றினுடைய ஊற்றுக்களைக் கண்டுபிடிக்க முடியாமல் கிராமப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நினைத்த இடத்தில் கிணறுகளைத் தோண்டி, அந்தக் கிணறு பல இடங்களில் பொய்த்துப்போகின்ற நிலைமை, வறண்ட பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஊற்றுக்காலை கண்டுபிடிக்கின்ற புதிய கருவிகளைக் கொண்டு நிலத்தடி நீரைக் கண்டுபிடிக்க நில வள வங்கி அதற்கான ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கம்பிரசர் போடுகின்ற, ஆழப் பாறைகளைப் பிளந்து எடுக்கின்ற கம்பிரசர் கருவிகளைப் பெறுகின்றபோது, வெளி இடங்களிலிருந்து அதிகமான வாடகைக்குப் பெறக்கூடிய நிலை ஏற்பட்டு, இன்றைக்கு இரண்டு மடங்காக அதனுடைய செலவு ஆகிறது. ஆகவே, பெறுகின்ற கடனில் அதிக இழப்பு ஏற்பட்டு, விவசாயிகள், பல கடன் தொல்லைக்கு ஆளாகின்றார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கிணறுகளுக்கு லோன் கொடுக்கும்போது அந்த கம்பிரசர், அந்தக் கருவியை அந்த வங்கிகள் மூலமாக எளிதில் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நில வள வங்கி மூலம் கிணறுகளுக்குக் கடன் கொடுக்கின்றபோது கிணறு வெட்ட spacing condition ரிசர்வ்வங்கி மூலமாக, நெபார்டு மூலமாகப் போடப்பட்டிருக்கிறது அந்த நிபந்தனை. 400 அடிகளுக்கு இடையில் கிணறுகள் இருந்தால், அவற்றுக்கு லோன் கொடுக்கமுடியாது என்ற ஒரு நிபந்தனை இருக்கிறது. ஆனால், இது கடன் பெறுகிறவர்களுக்குத்தான் பொருந்துமே தவிர, வசதியானவர்கள், கையிலே பணம் வைத்திருப்பவர்கள் 50 அடிக்கு இடைவெளியில் கிணறு வெட்டினாலும் கூட, அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. ஆகக் கடனை எதிர்பார்த்து, அரசிடமிருந்து எதிர்பார்த்து, வங்கியிடமிருந்து எதிர்பார்த்து, கிணறு வெட்டக் கூடியவர்கள் தான் பெரிதும் பாதிக்கப்படுகிறார்களே தவிர, தனியாக, வசதியாக இருக்கிறவர்களுக்கு இந்த ''spacing condition'' அவர்களுக்கு உதவியாக இருக்கிறது. தனி நபர்களுக்கு, வசதியானவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறது. ஆக, இந்த ''spacing condition''

-ஐப் பொறுத்து, மத்திய அளவில், ரிசர்வ் வங்கி அளவில் பேசியாவது நிவர்த்தி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் வசதியானவர்கள் 50 அடி இடைவெளியில் ஊற்றுக்காலைக் கண்டுபிடித்து கிணறுகளை வெட்ட முடியும். வசதி இல்லாதவர்கள் வங்கிகள் மூலமாக கடன் பெற்று, கிணறுகளை வெட்டுகின்றவர்கள் அந்த 400 அடி இடைவெளி என்பதால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, முக்கியமாக இந்த நில வள வங்கியில் இருக்கின்ற அமைப்பின் மூலமாக பல்வேறு கடன்கள் வீடு கட்டுகின்ற திட்டத்திற்குக்கூட கடன் கொடுக்கின்ற திட்டம் இதிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

17–40 மணி.

அதை எல்லா மாவட்டங்களுக்கும் எல்லா வங்கிகளுக்கும் கொண்டுவரவேண்டும், நிபந்தனைகளைத் தளர்த்தி என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு இன்னும் மத்திய வங்கி அங்கு வரவில்லை. ஆகவே, இந்த அரசு அங்கே மத்திய வங்கி அமைப்பதற்கு பெரிய முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறது. அதை விரைவிலே திண்டுக்கல்லிலே அமைப்பதற்கு ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி பெற்றுக்கொண்டு வர வேண்டும். அதற்கான முயற்சி எடுத்துக்கொண்டு இருப்பதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இங்கே நுகர் பொருள் பிரச்சினையில் ஏராளமான கிராமப்பகுதியினுடைய மக்கள், உணவுப் பொருள் வாங்குகிற மக்கள் தொடக்க வங்கியின் கிளைகள் மூலமாக அல்லது கூட்டுறவு அங்காடியின் மூலமாக பொருள்களை பெறுகிறபோது பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகிறார்கள் என்று கடந்த ஆண்டு பல பிரச்சினைகள் எடுத்துச் சொல்லப்பட்டதன் விளைவாக, அந்த பிரச்சினைகளை நியாயத்தின் அடிப்படையிலே தெரிந்து இந்த அரசு அதைக் களைந்திருக்கிறது என்பதற்காக நான் நன்றியைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக 800 கார்டுகளுக்கு மேல் குடும்ப அட்டைகள் உள்ள அங்காடிகளை பிரித்தாக வேண்டும். இல்லையென்றால் பொழுதன்னைக்கும் அவர்கள் காலையிலிருந்து மாலை வரை காத்திருந்து, வேலை வெட்டிக்கு போக முடியாமல் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி அவதிப்பட நேரிடும் என்ற கருத்துக்களை இங்கே பலதரப்பட்ட உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதைப் பரிசீலித்து இந்த அரசு 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் அதிகமாக இருக்கிற அங்காடிகளைப் பிரித்து அமைத்து இருக்கிறது. அதற்காக நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1990 ஏப்ரல் 16] [திரு. ப. முத்துசாமி]

அதேபோல இன்றைக்கு இலவச அரிசி கொடுப்பதிலே கூட 300 ரூபாய் வருமானம் உள்ள குடும்ப அட்டைகளுக்கு மட்டும் தான் இலவச அரிசி என்கிற முடிவு எடுக்கப்பட்டு, அதிலே முந்தைய அரசு எடுத்த அந்தக் கணக்கில் தவறுகள் ஏற்பட்டு பல பேர்கள் ஏழைகளாக இருக்கின்றவர்கள் கூலி வேலை செய்கின்றவர்களுக்கு வசதி இல்லாதவர்களுக்கு வருமானம் 400 ரூபாய் என்றும் வசதியானவர்களுக்கு 300 ரூபாய், 250 ரூபாய் என்றும் கார்டுகளிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உண்மையாகவே ஏழைகளாக இருக்கிறவர்கள் அந்த இலவச அரிசியை பெற முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. இதனால் தமிழ்நாடு பூராவிலும் கிராமப் புறங்களில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு மக்கள் அவதிக்குள்ளானார்கள். ஆகவே, அந்தக் குறையையும் நீக்குகிற அளவிலே நம்முடைய அரசு ஆயிரம் ரூபாய் வரை வருமான வரம்பு உள்ளவர்களுக்கு இலவச அரிசி என்று அறிவித்திருப்பது உண்மையிலேயே பாராட்டத் தகுந்தது. எடுத்து வைத்த கோரிக்கைகளை பரிசீலித்து இந்த அரசு நல்ல முடிவை அறிவித்திருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

அதேபோலத்தான் பல இடங்களில் குடும்ப அட்டைகள் இன்னும் வழங்கப்படவில்லை. அப்படி பல பேருக்கு இன்னும் குடும்ப அட்டைகள் கொடுக்கப்படவில்லை என்றாலும் கூட, நியாயமாக முறையாக விசாரித்து அந்தக் குடும்ப அட்டைகள் விரைவில் விநியோகிக்கப்படும் என்று—தீவிரமாக ஆராய்ந்துத் தீவிரமாக பரிசீலித்து அந்தக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்று—இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்த மானியக் கோரிக்கையில் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடிமட்டத்தில் இருக்கிற அந்த அங்காடிகளில் விற்பனையாளர்களாக இருக்கின்றவர்கள் பல தவறுகளைக் கடந்த 10 ஆண்டுக்காலமாக செய்து வருகிறார்கள். ஒரே அங்காடியிலே தொடர்ந்து விற்பனையாளர்களாகத் தொடர்ந்து ஒரே கடையில் இருக்கின்ற காரணத்தால், ஒரே இடத்தில் பணியாற்றுகிற காரணத்தால், எங்கெங்கே யார் யாரிடத்தில் பினாமி கார்டுகள் இருக்கின்றன என்று தெரிந்து வைத்துக்கொண்டு அவைகளையெல்லாம் வாங்கி கடைசி நேரத்தில் அவர்கள் உணவுப் பொருள்களை வாங்கியதாக, கணக்கில் ஏறச் செய்து அந்த உணவுப் பொருள்களை கடத்தி விற்று இலாபம் சம்பாதித்து பணம் சேர்த்து பழக்கப் பட்டிருக்கிறார்கள். அதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோலத்தான் யாரிடத்தில் பினாமி கார்டுகள் அதிகமாக இருக்கின்றன? யார் யார் அந்த குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி அரிசி வாங்க மாட்டார்கள் ஜீனி வாங்கமாட்டார்கள்

என்பதைத் தெரிந்துவைத்துக்கொண்டு அப்படிப்பட்டவர்களுடைய அட்டைகளைப் பயன்படுத்தி அவர்களெல்லாம் அந்த உணவுப் பொருள்களை வாங்கியது போல் கணக்கு எழுதிவிட்டு அவைகளை கடையில் விற்று இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரம் அல்லாமல் குடும்ப அட்டைகளை அடகு பிடித்திருக்கிற சில பேர்களை நண்பர்களாக ஆக்கிக்கொண்டு கூட்டாளிகளாக ஆக்கிக்கொண்டு அங்கிருக்கிற விற்பனையாளர்கள் தான் முழுக்க முழுக்க எல்லோரும் அல்ல—பல பேர்கள் அந்த ஏமாற்று வேலையில் கைதேர்ந்தவர்களாக இருந்துஅந்த அடகுபிடிக்கும் அட்டைகளை பயன்படுத்தியும் அரிசிகளை வெளியிலே விற்று இலாபம் சம்பாதிக்கிறார்கள். 800 கார்டுகள் இருக்கிற ஒரு அங்காடியில் குறைந்தது 50லிருந்து 60 கார்டுகள் இதுபோன்று பினாமியாக அடகு பிடிக்கப்படுவதாக அல்லது வருமானம் அதிகம் உள்ளவையாக அதாவது வசதி அதிகமான நபர்கள் அந்த நுகர் பொருள்களை வாங்காதவர்கள் அட்டைகளாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் அவர்கள் தவறான முறையிலே பயன்படுத்துகிறார்கள்.

17–45 மணி

அதுமட்டுமல்லாமல் அங்கே அங்காடிகளில் இருக்கிற விற்பனையாளர்கள் பல இடங்களில் வருகிற கிராமப்புற மக்களை ஏமாற்றி ஏமாந்தவர்களிடத்திலே ஒரு கிலோவிற்கு 25 பைசா, 50 பைசா என்று தவறான கணக்குச் சொல்லி-கிராமப்புறத்திலே இருக்கிற மக்களுக்கு இன்ன ரக அரிசி இந்த விலை என்று தெரியாது.. அங்கே பெயர்ப்பலகைப் போட்டிருந்தாலும்கூட அதையெல்லாம் படித்துப்பார்க்கிற அளவுக்கு அவர்களுக்கு நேரமும் கிடையாது அவசரத்தில் வருகின்ற, அறியாமல் இருக்கின்ற மக்களிடத்தில் இன்றைக்கு விலையைக் கூட்டிச் சொல்லி வாங்கி அவர்கள் மோசடி செய்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணம் தொடர்ந்து ஒரே இடத்தில் பல ஆண்டுக்காலமாக அவர்கள் இருப்பதுதான். அவர்களுக்கு பல குறைகள் இருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. கொடுக்கின்ற சம்பளம் கட்டுப்படி ஆகாமல் இருக்கலாம். அதைக்கூட்டி, அவர்களைஒரே இடத்தில் பணியாற்ற விடக்கூடாது. மாறுதல் செய்கின்ற அதிகாரத்தை நாம் கட்டாயம் வழங்க வேண்டும். அதுமாத்திரம் அல்லாமல் அங்கே இருக்கின்ற இந்த பினாமி அட்டைகளை கண்டுபிடிப்பது கஷ்டமான காரியம் அல்ல. என்னைப் பொறுத்த வரையில் ஒரு அங்காடிக்கு உட்பட்ட பகுதியை அந்தப் பகுதியிலே இருக்கின்ற சர்வக் கட்சியைச் சார்ந்தவர்கள் விழிப்பு குழுவிலே இருப்

1990 ஏப்ரல் 16] [திரு. ப. முத்துசாமி]

பதைப் போல ஒரு குழுவை அமைத்து, ஒரு கெஸட்டட் ஆபீசர் அந்தஸ்த்தில் உள்ள அதிகாரியின் தலைமையில் அமர்த்தி பினாமி கார்டுகளை கண்டுப்பிடிப்பதென்றால் அங்காடியில் இருக்கின்ற அந்த லிஸ்ட்டையும் அல்லது தாலுக்கா ஆபீசில் இருக்கின்ற அந்த லிஸ்ட்டையும் எடுத்துக்கொண்டு ஒரு வாரத்தில் அதிக பட்சம் ஒரு மாதத்தில், அந்த அங்காடிக்கு உட்பட்ட பகுதியில் உறுதி யாக பினாமி அட்டைகளைக் கண்டுபிடிக்க முடியும். இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. அவசியம் பினாமிக் கார்டுகளைக் கண்டுபிடித்தாக வேண்டும். அந்த சேல்ஸ்மேன் செய்கின்றத் தவறுகளை கட்டாயம் களைந்தாக வேண்டும். அவர்களை தவறு செய்தால் உடனுக்குடன் நிரந்தர வேலை நீக்கம் செய்ய வேண்டுமேயல்லாமல் வேறு ஒன்றும் அல்ல.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்னொன்று, அவர்களை நியமனம் செய்வதிலே பல தவறு கள் இருக்கின்றன. அவர்களை நியமனம் செய்வது தனி அதி காரி. ஸ்பெஷல் ஆபீசர். அவர் சாதாரண சூப்பர்வைசர் டிரெயினிங் படித்தவர். அவர்கள் பண நோக்கத்தோடு ஆயிரம், 2 ஆயிரம் என்று பெற்றுக்கொண்டு பல இடங்களில் தவறு செய் கிறார்கள். அவர்களை வேலைக்கு அமர்த்தும்போது அவர்க ளுக்கு எந்த ரெஸ்பான்சிபிலிட்டியும் கிடையாது. அந்த சேல்ஸ் மேனாக வருகின்றவர்களுக்கு, அவர்களுக்குப் பின்னால் ஒரு பாண்டு பத்திரம் எழுதி பதிவு செய்து பின்னாடி வருகின்ற ரெக்க வரியை இவர்கள் கட்டவேண்டும் என்ற அளவிற்கு ஒரு அக்ரி மெண்ட் எதுவும் இல்லை, ஆகையால் அவர்கள் பயம் நீங்கி 50 ஆயிரம் ரூபாய் ரெக்கவரி வந்தால் கூட வேலை போகும், அவ்வளவுதான். ஆகையால், தொடர்ந்து அவர்கள் தவறு செய் கின்ற நிலைமை இருக்கிறது. ஆகையால், வேலைக்கு தேர்ந் தெடுப்பவர் ஒரு கெஸட்டட் ஆபீசர் அல்லது டி. ஆர். துணை பதிவாளர் அந்தஸ்த்திற்கு குறையாத நபர்கள்தான் அவர்களை நியமனம் செய்ய வேண்டும். அந்த நியமனம் செய்யும்போது அவர்கள் ஒரு ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்து போட்டு அவர்களுக்குச் சொத்து இல்லையென்றால் அவர்களுக்கு ஜாமீன் கொடுக்கின்றவர்கள் குறை வருகின்றபோது, ரெக்கவரி வருகின்ற போது அதைக் கொடுக்கின்ற அளவிற்கு பொறுப்பு ஏற்றவர்கள் ஜாமீன் பத்திரத்திலே கையெழுத்திடவேண்டும். அப்பொழுது தான் சரியாக இருக்கும். இல்லாவிட்டால் அதிக பட்சம் வேலை தான் போகும் என்ற அளவிற்கு பல பேர் இன்றைக்கு துணிந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக சேல்ஸ் மேனாக இருப்பவர்கள் கிராமப் பகுதியிலே அரசு திட்டங்களை செயல்படுத்துவதிலே முறைகேடு செய்வது மட்டுமல்லாமல் தவ றான பிரச்சாரத்தையும் பல இடங்களிலே செய்து அரசுக்குக் கெட்ட பெயரை உண்டாக்குகிறார்கள். இது சாதாரண காரி யம் அல்ல. அங்கே இருக்கின்ற சில பேர் அவர்களை மேற் பார்வை செய்ய வருகின்றபோது பல இடங்களில் நான் முன்பு

சொன்னதுபோல் எல்லோரும் அல்ல, வாரா வாரம் சென்று இவ்வளவு தொகை கொடுத்தால் போதும் என்ற அளவிற்கு வாங்கி பழக்கப்பட்டவர்கள் கடந்த கால ஆட்சியில் இருந்த தைப்போல் இன்றைக்கும் பல இடங்களில் அதே முறையைப் பின்பற்றி வருகிறார்கள். ஆக, கண்காணிக்க வருகின்ற மேல் அதிகாரிகள் அவர்கள் என்ன நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்பதை கவனிப்பதற்கு செம்மையாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிட்டங்குகளி லிருந்து வருகின்ற அரிசி பல இடங்களில் குத்தூசிகள் போடப் பட்டு 5 கிலோ என்று எடுத்து சேமித்து வைத்துக்கொண்டு அந்த மூட்டைகளைக் கொண்டுபோய் அவர்கள் குறைபடியாக சொசைட்டியிலே கொடுக்கிறார்கள். அதை வாங்க மறுத்தால் உடனே தகராறு செய்து மேல் அதிகாரிகளுக்கு தவறான தகவலைக் கொடுத்து அவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். எனவே கிட்டங்கிலே வேலை பார்ப்பவர்கள் எல்லாம் பல இடங்களில் கூட்டாக இருந்து தவறு செய்கிறார்கள். ஆக, அந்த அலுவலர் கள் 6 மாதத்திற்கு மேலாக கிட்டங்கிலே இருக்கக்கூடாது. அவர் களை மாற்ற வேண்டும் என்ற நிலைமை வரவேண்டும். கூட் டுறவுத் துறையில் தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக கிட்டங் கியில் வேலை பார்ப்பவர்கள் கீழே சேல்ஸ்மேனாக இருக்கின்ற வர்கள் அதற்கிடையே இருக்கின்ற தரகர்கள் அவர்களுக்குக் கிடைப்பது இலாபம் என்ற அளவிற்கு பொது மக்களைப் பற்றி கவலைப்படாமல் பல ஆண்டுக்காலமாக நடந்து வந்திருக்கிறது. அவற்றையெல்லாம் போக்கி ஒரு நிலையான முடிவை எடுக்க வேண்டும். இந்தக் கூட்டுறவு அங்காடிகளைப் பிரித்து பல இடங்களிலே சிறு கிராமங்களுக்குப்போக்குவரத்து வசதி இல்லாத இடத்தில் ஊர்திகள் மூலமாக அந்த அங்காடியில் கொண்டு சென்று விற்பனைப் பொருட்களை கொடுப்பதற்கான ஏற் பாட்டை செய்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். தொடர்ந்து இந்தக் குறைகளைக் களைந்து நம்மு முடைய கூட்டுறவுத் துறையின் மூலமாக செம்மையை உண் டாக்க வேண்டும். இதுதான் அடிமட்டத்தில் இருக்கின்ற மக்க ளுடைய பிரச்சினை. அரசுக்கு செம்மையை ஏற்படுத்தவும், அரசுக்கு நல்ல பெயரை ஏற்படுத்தவும் கூடியது கூட்டுறவுத் துறை. எனவே, அந்தத் துறைக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

17—50 மணி

*திரு. உ. ரா. வரதராசன் ; மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே தமிழ்நாடு பெற் றிருந்த முன்னிலையான நிலைமையில் இன்றைக்கு ஒரு சரிவு ஏற்பட்டு பின்னுக்குப் போயிருக்கிறது அகில இந்தியமட்டத்திலே. அதற்கு அடிப்படையான காரணம் கூட்டுறவுத் துறையிலே ஜன நாயகம் புதை குழிக்கு அனுப்பப்பட்டதுதான். அதைச் சீர் செய் வதற்கு உடனடியாக கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்

துவதும் இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கிற தேர்தல்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் தள்ளிப் போடாமல் இருப்பதற்கு உத்தரவாதம் செய்வதும் மிகவும் அவசியம் என்று நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். அறிவித்து, அறிவித்து, தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டதன் காரணமாக, ஏறத்தாழ ரூ. 3 கோடிக்கு மேலாக, கூட்டுறவுகளுக்குச் செலவு ஏற்பட்டிருக்கிறது என்று அறிய வருகிறோம். இப்பொழுது, பிரதம கூட்டுறவு அமைப்புகள் உட்பட, அங்கே இருக்கக்கூடிய நிர்வாகம் குழுக்களைக் கலைத்து, தனி அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதற்கான செலவை அந்தச் சங்கங்களே சுமக்க வேண்டியிருக்கிறது. தேர்தல் தள்ளிப் போடப்பட்டதும் குழுக்கள் கலைக்கப்பட்டதும் அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்கிற காரணத்தாலே, அந்த அதிகாரிகளுடைய செலவை அந்தக் கூட்டுறவு அமைப்புக்கள்மீது சுமத்தக் கூடாது. அரசாங்கமே ஏற்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். கூட்டுறவுத் தேர்தல்கள் முறையாக, காலம் கடத்தாமல் நடத்தப்படுவதற்கு, கூட்டுறவுத் தேர்தல் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டும்; டைரக்டரேட் ஆப் கோவாபரேடிவ் ஆடிட் இருப்பது போல், கூட்டுறவுக்கான கோவாபரேடிவ் எலெக்ஷன் கமிஷன் ஒன்று அமைக்கப்பட வேண்டும். மேற்கு வங்கச் சட்டத்திலே கூட இது போன்ற ஒரு ஏற்பாடு இருக்கிறது. கூட்டுறவுத் தேர்தல்கள் தள்ளிப் போடப்படாமல் நடைபெறுவதை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையோடு இணைந்தது, உணவுத்துறையோடு சேர்ந்தது பொது விநியோகத் திட்டம். அதிலே இருதலைக் கொள்கை இன்றைக்கு நிலவி வருகிறது. கூட்டுறவுத் துறையும் உணவு விநியோகத்தைக் கவனிக்கிறது; சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனும் உணவுத் துறையும் விநியோகத்தைக் கவனிக்கிறது. இந்த இரட்டைஏற்பாடு இல்லாமல், அனைத்து உணவுவிநியோகப் பொருட்களும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்மூலமாகவே மேற்கொள்ளப்படுவது நல்லது என்பது என்னுடைய கருத்து. கடந்த கால ஆட்சியிலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து கூட்டுறவுக்கு மாற்றி, பின்னாலே கூட்டுறவிலே இருந்து மாற்றி இப்பொழுது கூட்டுறவு சில பகுதிகளிலேயும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சில பகுதிகளிலேயும் என்றுள்ள இந்த இரட்டை ஏற்பாட்டு முறை மாற்றப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதோடு, கூட்டுறவு மொத்தப் பண்டக சாலைகளிலே உள்ள ஊழியர்களுக்குச் சம்பளம் மற்றும் பணிகளை நிர்ணயித்து, மாநிலக் கூட்டுறவுத் துறைப் பதிவாளரால் 31—10—1989 ஆம் தேதியன்று ஓர் ஆணை அல்லது சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அந்த ஆணை இன்று வரை அமுல்படுத்தப்படவில்லை. அமல்

படுத்தாமைக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அது அமலாவதை உத்தரவாதம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பற்றிப் பேசுகின்றபொழுது, கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய அரசாங்கத் துறை ஊழியர்களுடைய பிரச்சினைகளை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, இன்றையதினம் சென்னை நகரத்திலேயே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். துணைப் பதிவாளர் பதவிக்கு நேரடி நியமனம் கூடாது; கோவை சிந்தாமணியிலே ரூ. 72 இலட்சத்துக்கு ஊழல் நடைபெற்று, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சார் பதிவாளர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களது தற்காலிகப் பணி நீக்கம் ரத்து செய்யப்பட வேண்டும். அவர்கள் மீது குற்றங்கள் இருந்தால் அது நிரூபிக்கப்பட வேண்டும், தண்டிக்கப்பட வேண்டும், அது வேறு. தற்காலிகப் பணிநீக்கம் தொடர்வதனாலே யாருக்கும் லாபம் இல்லையென்ற காரணத்தாலே அது நீக்கப்பட வேண்டும். தனி அலுவலர்களுக்கு இன்றைக்கிருக்கிற வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. சரகத் துணைப் பதிவாளர் அலுவலகத்திலே சுருக்கெழுத்துத் தட்டச்சர், பதிவறை எழுத்தர் போன்ற பதவிகள் உருவாக்கப்பட வேண்டும். அதேபோல், இளநிலை, முதுநிலை ஆய்வாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டபோது, சிலபேர்கள் நேரடியாக கூட்டுறவுப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டார்கள். சில பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்துவது என்பது, பணியில் சேர்ந்த நாளிலிருந்து — ஒரே நாளில் செய்யப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதே போல், கிராம அங்காடித் திட்டத்தின் கீழ் 25 அங்காடிகளுக்கு அல்லது கடைகளுக்கு ஒரு சார் பதிவாளர் என்ற முறையிலே நியமிக்கப்பட வேண்டும். வருவாய்க் கோட்டந்தோறும் ஒரு துணைப் பதிவாளர் சரகம் அமைக்கப்பட வேண்டுமென்பதெல்லாம் இந்தக் கூட்டுறவுத் துறை அரசு ஊழியர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அதை ஏற்று, ஆவன செய்வதற்கு அரசு முன்வர வேண்டும். அமைச்சர் அவர்கள் அதிலே முன் நிற்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கூட்டுறவு அமைப்புகளிலே பணியாற்றுகிற ஊழியர்களுடைய பிரச்சினைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரிலே அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் சில அறிவிப்புகளை செய்தார்கள். கூட்டுறவு அமைப்புகளிலே போடப்படக் கூடிய ஊதிய ஒப்பந்தத்தினுடைய காலம் 3 ஆண்டுகளாக இருக்கும்;

1990 ஏப்ரல் 16] [திரு. உ. ரா. வரதராசன்]

பணிக் காலத்திலே இறக்கக்கூடிய ஊழியர்களுக்கு ரூ. 20,000 வழங்கப்படும்; கூட்டுறவுப் பகுதி நேரப் பயிற்சி உடனடியாக நடத்தப்படும்; அஞ்சல்வழி கூட்டுறவுப் பயிற்சி தொடங்கப்படும் என்று இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். ஆனால், இன்றளவும் அது அறிவிப்பாக இருக்கிறது. அவை செயல்படுத்தப் படுவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

17-55 மணி

அதைப்போல 1972 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு மருத்துவப்படியாக மாதம் ரூ. 12.50 வழங்கப்பட்டது. அதை மாதத்திற்கு 50 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்களிலே வேலை செய்கின்ற, பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் பணி நிலைமைகள் மாநிலப் பதிவாளரின் முன் அனுமதி இன்றி வழங்கக்கூடாது என்கின்ற ஒரு தடை இருக்கிறது. அந்தத் தடை நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பல்வேறு தடைகள் இருக்கின்ற காரணத்தினாலே அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு குடியாத்தம் நகர வங்கியில் இருக்கிற தனி அலுவலர் 30 சதவீதம் சம்பள உயர்வு அளித்து ஒப்பந்தம் போட முன் வந்தபோது கூட அங்கே இருக்கிற ஜாயின்ட் ரெஜிஸ்திரார் தலையிட்டு அதை அமல் படுத்தக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார். அதைப்போல கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வங்கியிலே 1988-89 ஆம் ஆண்டில் மாநிலத்தில் முதலிடத்தில் வந்த ஒரு காரணத்தால் ஒரு 'அடிஷனல் இன்கிரிமென்ட்' — சிறப்பு ஊதியம் வழங்கப்படும் என்று அமைச்சரவர்களே இங்கே அறிவித்தார்கள். அதுவும் கூட்டுறவுத் துறைப் பதிவாளருடைய தடையின் காரணமாக அமல்படுத்தப் படாமல் இருக்கிறது. என்னுடைய கோரிக்கை எல்லாம் ஒவ்வொரு கூட்டுறவு அமைப்பும் அதனுடைய நிதி ஆதாரத்திற்கு ஏற்ப ஊழியர் அமைப்போடு பேசி ஒப்பந்தம் போடுவதற்கு எந்த விதமான தடையும் இருக்கக்கூடாது என்பதுதான்.

கூட்டுறவுத் துறை அலுவலர்கள் தொழிலாளர் நலச் சட்டங்களை மதித்து நடப்பதே இல்லை. கூட்டுறவுத் துறையிலே ஒரு டெபுடி கமிஷனர் ஆஃப் லேபர் இருக்கிறார். அவர் லேபர் டிபார்ட்மெண்டிலிருந்து அனுப்பப்பட்டவர். அவர் லேபர் டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர் என்று சொல்வதைவிட கூட்டுறவுத் துறையினுடைய 'ப்ராசிக்கியூஷன் ஆபீசர்' ஆகச்

செயல்படுகிறார் என்ற குறை நீடித்துக்கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் அங்கே இருக்கக்கூடிய டெபுடிகமிஷனர் ஆஃப் லேபர் அனுப்புகின்ற ஆணைகள் அல்லது உத்தரவுகள் அல்லது சுற்றறிக்கைகள் தொழிலாளர் நலச் சட்டங்கள் அடிப்படையிலே இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்து அனுப்புவதற்கு உத்தரவாதம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஒரு வேதனையான சம்பவத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊழியர்களுக்கு இருக்கக்கூடிய குறைபாடுகளைத் தெரிவிப்பதற்காக உண்ணாவிரதம் இருப்பது, தர்ணா இருப்பது ஜனநாயக உரிமை. இங்கே சட்ட மன்றத்திலே உறுப்பினராக இருக்கக்கூடிய திருச்செங்கோடு சட்ட மன்ற உறுப்பினர் திரு. வி. இராமசாமி அவர்கள் இன்றைக்கு சேலத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால் கூட்டுறவு நிறுவனங்களின் ஊழியர்களுடைய கோரிக்கைகளுக்காக ஒரு தர்ணா போராட்டம் நடத்துவதற்குத் தலைமை தாங்குகிறார். ஏப்ரல் மாதம் 3-ம் தேதி அதற்கு அறிவிப்புத் தருகிறார். அந்த அறிவிப்புக்கு கூட்டுறவுத் துறையினுடைய (Reaction) பிரதிபலிப்பு என்ன என்று பார்த்தால், வி. இராமசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் 16—4—1990 அன்று தர்ணா போராட்டம் நடத்துவதாகத் தெரிவித்துள்ளார்கள். அவர்களுடைய கடிதத்தையே 'Quote' செய்துவிட்டு, அங்கே இருக்கக்கூடிய ஆத்தூர் சரகத்தினுடைய துணைப் பதிவாளர் சுற்றறிக்கைஅனுப்புகிறார். மேற்படி போராட்டத்திற்கு கூட்டுறவு வங்கி ஊழியர் யாருக்கும் 16–4–1990 அன்று சிறு விடுப்பு வழங்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகுஅமைச்சர் அவர்களுடைய பார்வைக்குத் தர கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போன்ற ஒரு சிறு ஆட்சேபத்தை, கண்டனத்தைக் கூட கூட்டுறவுத் துறை ஊழியர்கள் ஜனநாயக முறையில் தெரிவிக்க அனுமதிக்கக்கூடாது என்ற அந்த நிலபிரபுத்துவ ஆதிக்க முறை கூட்டுறவுத் துறையிலே இருப்பது களைந்தெரியப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல கூட்டுறவுச் சட்டம் மற்றும் விதிகள் இருக்கின்றன. சட்டம் கடந்த ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட ஒன்று. விதி ஆளுநர் ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட ஒன்று. இந்த விதிகள் ஜனநாயகத்திற்குப் புறம்பானவை; ஊழியர்களுக்கு விரோதமானவையாக இருக்கின்றன. அவற்றைப்பற்றி நான் ஏராளமாக விவரிக்க முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர்

1990 ஏப்ரல் 16] [திரு. உ. ரா. வரதராசன்]

அவர்கள் இந்த கூட்டுறவுச் சட்ட விதிகளை எல்லாம் முற்றாகப் பரிசீலனை செய்து, மாற்றியமைக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சட்டத்தில் பதிவாளர் கூட்டுறவு அமைப்புகளுக்கு எல்லாம் கிட்டத்தட்ட ஒரு சர்வாதிகாரியாக ஆக்கப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும். அதைப் போல தொழிலாளர் நலச் சட்டங்களிலே ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளுக்கு மாறாக, புறம்பாக விதி களிலே இருக்கக் கூடிய நிலைமைகள் எல்லாம் மாற்றியமைக்கப் பட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மத்திய கூட்டுறவு வங்கிகள். அங்கே இருக்கிற ஊழியர்களின் பணி நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து வரை யறை செய்வதற்கு ஒரு சீரமைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை அளிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் அந்த அறிக்கையினுடைய பரிசீலனை என்ன என்று வெளியிடப்படவில்லை; பரிந்துரையை அமல்படுத்துவதற்கான வழிமுறைகள் காணப்படவில்லை. அந்த சீரமைப்புக் குழுவினுடைய பரிந்துரையை முழுமையாக வெளியிட்டு, அதை அமல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தமிழ்நாட்டிலே மத்திய கூட்டுறவு வங்கியிலேதான்—வேறு எந்த வங்கியிலும் கிடையாது, எந்த மாநிலத்திலும் கிடையாது —அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி இரண்டும் சேர்ந்து 3,000 ரூபாய்க்குமேல் இருக்கக் கூடாது என்று உச்சவரம்பு விதிக்கப் பட்டிருக்கிறது. அது பின்னாலே 4,750 ரூபாய் என்று உயர்த்தி வரையறை செய்யப்பட்டிருக்கிறது. வேறு வங்கிகளில் இப்படிப் பட்ட நிலைமை இல்லை. வேறு எந்த மாநிலத்திலும் கூட கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு இப்படி உச்சவரம்பு விதிக்கப் பட்டிருப்பதாக எனக்கு நினைவு இல்லை. இது மாற்றப்பட வேண்டும். மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஒரு முறை யான, நியாயமான ஏற்பாடு கிடைப்பதற்கு உத்தரவாதம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

18-00 மணி

ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அதைப்போல, கூட் டுறவு ஊழியர் பணி நியமனங்கள்; மத்திய கூட்டுறவு வங்கி களாகட்டும்; பல்வேறு கூட்டுறவு அமைப்புகளாகட்டும், ஊழியர் கள் பணி நியமனம் செய்யப்படாமலே பல காலியிடங்கள் இருந் தும், வேலைப் பளுவை சுமந்துகொண்டு இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்த நியமனத்திலேயும் ஒரு கொள்கையை வகுக்கவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

பிரதம கூட்டுறவு வங்கி அமைப்புகளிலே அங்கே இருக்கிற, கடைக் கோடியிலே தொகுப்பூதியத்திற்கு எல்லாம் ஊழியர்களாக இருந்து, ஆண்டாண்டுக் காலம் அவர்கள் ஆயுட்காலம் முழுமையும் அங்கேயே கழிக்கிறார்கள். மாநில அளவிலே இருக்கிற 'அபெக்ஸ் இன்ஸ்டிடியூஷன்', மாவட்ட அளவிலே இருக்கக் கூடிய சென்டிரல் இன்ஸ்டிடியூஷன்ஸ், இவற்றில் எல்லாம் நேரடி நியமனம் என்று இருக்கிறபோது, கீழே அடிமூடைகளாக இருக்கிறவர்கள் அந்தப் பொறுப்புக்களுக்கு வர முடியாத நிலைமையிருக்கிறது. ஆகவே, அதை மாற்றியமைப்பதற்கு, பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு வேலைவாய்ப்பு ஏற்பட்டு, மேலே இருக்கக்கூடிய அமைப்புகளுக்கு அதிகமான சம்பளம் அல்லது கூடுதலான பணி நிலைமைகள் கிடைக்கக்கூடிய அமைப்புகளுக்கு, கீழே இருக்கக்கூடிய பிரதம சங்கங்களிலே இருக்கக் கூடிய ஊழியர்கள் அங்கே பணிப் பொறுப்புக்கு வரக்கூடிய முறையிலே ஒரு நியமனக் கொள்கையையும் இந்த அரசு பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இறுதியாக, உணவுத் துறையும் சேர்ந்து இருக்கின்ற காரணத்தினாலே, மீண்டும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரிசி விலை உயர்வைக் கைவிடுகிற அறிவிப்பை இந்த மானியக் கோரிக்கையின் மீது பதிலளிக்கும் நேரத்திலாவது அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மானியக் கோரிக்கையின் மீது ஓரிரு கருத்துக்களை வழங்குகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை எப்படி இருக்கிறது என்று சொன்னால், மாநிலத்தில் சுயாட்சி தேவை என்று இங்கே போராடுகிற நேரத்தில் கூட்டுறவுத் துறைக்கு சுயாட்சி இருக்கிறதா என்றால் கிடையாது. வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, மகாராஷ்டிரத்தில் கூட்டுறவுத் துறை இன்றைக்கு தன்னாட்சி பெற்று சிறப்பான முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஒரு நிலைமையை நாம் பார்க்கிறோம். குஜராத்தில் 'ஆனந்த் பேட்டர்ன்', கூட்டுறவுத் துறைக்கே ஒரு எடுத்துக்காட்டாக இருந்து சிறந்த முறையிலே பணியாற்றுகிற நிலைமைகளையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியின் நிலை, கூட்டுறவுத் துறை அதற்குத் தேவையான தன்னாட்சி பெற்று நடைபெற்றுக்

1990 ஏப்ரல் 16] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

கொண்டு இருக்கிறதா என்றால் இல்லை. அந்த அடிப்படையிலே பல்வேறு இடர்ப்பாடுகள், இங்கேயிருந்து, மேலேயிருந்து பல்வேறு தாக்கீதுகள். இப்படித்தான் இந்தக் கூட்டுறவு இயக்கம் இயங்க வேண்டும் என்ற நிலையின் காரணமாக, கூட்டுறவுத் துறை நலிந்து கொண்டிருக்கிற ஒரு நிலையை நாம் பார்க்கிறோம்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், 1985-86 ஆவது ஆண்டு மாண்புமிகு தமிழகத்தின் முதல்வராக இருந்த புரட்சித் தலைவருடைய ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் சுமார் 10 இலட்சம் டன். அரிசி சுமார் 12 இலட்சம் டன். அன்றைக்கு 22 இலட்சம் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய ஆட்சிக் காலத்தில் நெல் 15 இலட்சம் டன், அரிசி 17 இலட்சம் டன், ஏறத்தாழ 32 இலட்சம் டன் இன்றைக்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறதென்று சொன்னால், அரிசி ஆலை உரிமையாளர்களை மிரட்டி, லெவி போடப்பட்டிருக்கிறது. விவசாயிகளை நசுக்கி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, 10 இலட்சம் டன் நெல்லை கூடுதலாக நீங்கள் கொள்முதல் செய்தாலும், அரிசியும் நெல்லும் கொள்முதல் செய்தாலும் கூட, இந்த ஆட்சியில் அரிசிப் பற்றாக்குறை இருக்கிறது. மத்தியிலே இருக்கிற அரசாங்கத்தை நீங்கள் கை நீட்டுகிறபோது, 1988-வது ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியில் எங்களுக்குத் தேவையான அரிசி வழங்கப்படவில்லை, ஆகவேதான் இன்றைக்கு நாடாளுமன்றத் தேர்தலிலே தேர்தல் தீர்ப்பில் அரிசியின் விளைவாக மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ற நிலையை நீங்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். அந்த நிலை இல்லை என்பதை அமைச்சரவர்கள் புரிந்து கொண்டு இருப்பார்கள்.

கூட்டுறவு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்தவர்களால் 10 இலட்சம் டன் அரிசியும், நெல்லும் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

18-05 மணி

இங்கே நுகர்பொருள் வாணிபக் கழகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் அரவை முகவர்களை, அரசு நெல்லை அரிசியாக்கி, கொடுக்கும்போது நிர்ணயிக்கப்படும் தரத்தை போல, வாங்கிய இடத்தில் அந்த தரம் இருக்கிறதா என்றால் இல்லை. தஞ்சாவூரில் நீங்கள் ஏறத்தாழ தொள்ளாயிரத்திற்கு மேற்பட்ட மையங்களை

வைத்து நெல் கொள்முதல் செய்கிறபோது தரம், அங்கே சரியான முறையில் இல்லை என்பதை, வாங்கப்பட்ட நெல்கள் சேமிப்பு கிடங்கிலே இன்றைக்குப் பார்த்தாலும், வாங்கிய நெல் ஒரு நெல்லாகவும், தரம் குறைந்த நெல்லாகவும் இன்றைக்கு இருக்கிற ஒரு அவல நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, இந்தத் தரத்தை வாங்குகிற இடத்திலே நிர்ணயம் செய்து, நல்ல நெல்லாக அங்கே வாங்குகிறீர்களா என்றால் கிடையாது. அரிசி மட்டும் நல்ல அரிசி வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். வாங்கிய இடத்தில் நெல் சரியாக இல்லை, ஆனால், அரிசி மட்டும் நல்ல அரிசி வேண்டும் என்று சொன்னால், எப்படி அவர்களால் வழங்க முடியும் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல், வட்ட அளவில் உள்ள முதன்மை சங்கங்கள் பொது வினியோகம் செய்வதற்காக, கிராமங்களில் தங்கள் லாரிகளை வைத்து வினியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். வினியோகம் செய்கிறபோது, அந்த முதன்மைச் சங்கங்கள் அந்த லாரிகளுக்கு அவர்களே ஏதாவது ஒரு விலை நிர்ணயித்து வாடகை தருகிறார்கள். அது டெண்டர் மூலமாக விடப்படுகிறபோது, குறைந்த வாடகையில் கிராமங்களில் எல்லாம் அந்த வட்ட சங்கங்களிலிருந்து கொள்முதலை செய்து, கிராமச் சங்கங்களுக்கு நாம் தேவைப்படுகிற பொருட்களை வினியோகம் செய்ய முடியும். அந்த நிலையை அமைச்சர் அவர்கள் மிக விரைவில் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், சத்துணவுத் திட்டத்திற்கும், இலவச அரிசி வழங்கும் திட்டத்திற்கும், மானியமாக ஏறத்தாழ 400 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படுகிறது என்று புள்ளி விவரங்களை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இலவச அரிசி வழங்குகிற போது, 3 முறை இலவச அரிசி வழங்குகிற நேரத்தில் ஏறத்தாழ 38 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவு இன்றைக்கு நம்முடைய அரசுக்கு மானிய இழப்பு ஏற்படுகிறது என்று புள்ளி விவரத்தை நீங்கள் தந்து இருக்கிறீர்கள். அப்படி புள்ளி விவரம் தருகிற போது, 150 கோடி ரூபாய்தான் மத்தியில் இருந்து நாம் வாங்குகின்ற அரிசிக்கு, இன்றைக்கு அந்த மானியத்தை தருகின்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிற நேரத்தில், அரிசியினுடைய விலையை 3 ரூபாய், 3.50 ரூபாய் வரை ஏற்றியிருக்கிறீர்கள். இந்த இலவச அரிசியை மக்களுக்காக நீங்கள் தருவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இந்த 38 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லி, இலவச அரிசி வழங்கப்பட வேண்டுமா என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை விடுத்து 150,

கோடி ரூபாய்க்கு இந்த மானியத் தொகையை நீங்கள் தவிர்த்து அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சியில் ஒரு ரூபாய் 75 பைசாவிற்கு அரிசியும், அதை விட சன்ன அரிசி 2.25 ரூபாய்க்கும், அதை விட சன்ன ரக அரிசி 2.50 ரூபாய்க்கும் வழங்கப்பட்டது போல் வழங்க வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல கருத்துக்களைச் சொல்லுகிறபோது, அமைச்சர் அவர்களிடத்திலே சுட்டிக் காட்டினார்கள். திருச்சியில் இருக்கிற அமராவதி கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டில் இன்றைக்கு பல்வேறு ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன அதை குறிப்பாக எடுத்துக் கொண்டால் $4\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு ஓவர் டிராபட் எடுத்து அங்கே 500 லாரிகளில் 50 ஆயிரம் மூட்டை கோதுமை வாங்கப் பட்டிருக்கிறது. அந்த கோதுமைகள் நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்யப்படுகிறதா என்றால் இல்லை. இருந்தாலும் கூட அதிலே அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் சொல்லி 5 அதிகாரிகள் மீது இன்றைக்கு அவர்கள் விசாரணை செய்து கொண்டு இருக்கிறார்கள் 10 மாத காலமாக. $4\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்ட் எடுத்து 10 மாத காலமாக விசாரணை செய்தும் வெளி மார்க்கெட்டில் 6 ரூபாய்க்கு அரிசி கிடைத்தாலும் கோதுமை அதை விட குறைவான விலையில் கிடைத்தாலும் வெளி மார்க்கெட்டில் இன்றைக்கு அதிகவிலை விற்றுக் கொண்டு இருக்கிற ஒரு அவல நிலையை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான் கூட்டுறவுச் சங்கங்கத்திலே விவசாயிகளுக்கு இருக்கிற அபராத வட்டி 39 கோடி ரூபாய் என்று அறிவித்து இருக்கிறீர்கள். அன்றைக்கு நீங்கள் தேர்தல் வாக்குறுதி தந்தீர்கள். தேர்தல் வாக்குறுதி தருகிறபோது திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் வாக்குறுதியாக அன்றைக்கு நீங்கள் தந்து இருக்கிற வாக்குறுதி சிறு விவசாயிகள் பழைய கூட்டுறவுக் கடன் பாக்கி அனைத்தையும் அறவே ரத்து செய்வோம். சொன்னீர்கள். ஆனால் நீங்கள் செய்து இருக்கிறீர்களா என்றால் கிடையாது. 39 கோடி ரூபாய் அபராத வட்டியைக் கூட நீங்கள் அந்த விவசாயிகளுக்கு சலுகையாக அறிவிக்காமல் இன்றைக்கு அந்த விவசாயிகள் அவதிப்படுகின்ற ஒரு அவல நிலையை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் இந்த ஆட்சி வாக்குறுதிகளைத் தருகிறதே தவிர வாக்குறுதிகளை நிறைவேற்றாத ஆட்சியாக தமிழகத்தில் இருக்கின்ற காரணத்தால்தான் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தீர்ப்பு அளித்து இருக்கிறார்கள்

என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போல விவசாயிகளுக்கு மத்திய அரசினர் பல சலுகைகளைச் செய்வதாக இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு சலுகை செய்கிற போது தேசிய வங்கிகளிலே இருக்கிற கடன்களையெல்லாம், 10 ஆயிரம் ரூபாய்க்கு கீழே இருக்கிற கடன்களையெல்லாம் ரத்து செய்வோம் என்று சொன்ன காரணத்தினாலே கூட்டுறவு வங்கிகளிலே கட்டப்படுகின்ற அந்தக் கடன்களையெல்லாம் விவசாயிகள் கட்டலாமா, கட்டத் தேவையில்லையா என்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கிற நிலைமைகளையெல்லாம் நாம் பார்க்கிறோம். ஆகவே, இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு, அரசு ஒரு தெளிவான விளக்கத்தை, என்னென்ன கடன்களை நாம் ரத்து செய்திருக்கிறோம், எந்த அபராத வட்டியை நாம் ரத்து செய்து இருக்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொன்னால் கட்டுகின்றவர்கள், கடன்களை, கட்ட முன்வருவதற்கு, அபராத வட்டியாக இருந்தாலும் கடனாக இருந்தாலும் திருப்பிச் செலுத்துவதற்கு விவசாயிகள் முன் வருவார்கள். ஆனால் நீங்கள் அதைத் தெளிவாகச் சொல்ல வில்லை என்ற காரணத்தால் தான் மத்திய மாநில அரசு 10 ஆயிரம் ரூபாய் வரையிலும் இருக்கிற கடன்களை ரத்து செய்து விடுவார்கள், நாம் ஏன் கட்ட வேண்டும் என்ற நிலை யிலே விவசாயிகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். ஆகவே, இது போன்று பல்வேறு தவறுகள் இந்த ஆட்சியிலே நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில், பால் உற்பத்தியை இங்கே நாம் எண்ணிப் பார்க்கிறோம். கூட்டுறவுச் சங்கங்களிலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கிற நேரத்தில், அந்த நெசவாளர்களுடைய துயரைத் துடைப் பதற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில், யார் அந்தச் சங்கங்களை உருவாக்கி னார்களோ . . .

18–10 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர் செங்கோட்டையன் அவர்களே, இது என்ன மானியம் ?

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கூட்டுறவு மானியம். இதிலே நெசவாளர்களைப் பற்றிப் பேசலாம். விவசாயிகளைப் பற்றி பேசலாம். துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு என்கின்ற முறையில் எல்லாமே ஒன்று சேர்ந்து தான் கூட்டுற வாக இருக்கிறது. நீங்கள் கூட்டுறவு தாருங்கள். ஒரு கையைக் காட்டி விடாதீர்கள். மறு கையையும் பார்த்துக் கொள்ளுங் கள் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்

1990 ஏப்ரல் 16] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

குறிப்பிட்டுக் காட்டுகிறபோது, கூட்டுறவுத் துறையிலே இருக்கிற பல குறைபாடுகளை நான் இங்கே சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையில் நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன. நெசவாளர் சங்கங்களில் அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்கு 31–8–1989 ஆம் தேதி கடைசி நாள். ஆனால் நீங்கள் என்ன செய்து இருக்கிறீர்கள் ? 1–9–1989 ஆம் தேதி வரையிலும் நீங்கள் நெசவாளர் சங்கங்களிலே நெசவாளர் அல்லாதவர்களையும் அந்தப் பகுதியிலே இல்லாதவர்களையும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலேயெல்லாம் நீங்கள் சேர்த்து இருக்கிறீர்கள். பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதைச் சுட்டிக் காட்டுகிறபோது, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதை நாங்கள் எடுத்துச் சொன்னோம். எடுத்துச் சொல்கிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவரிடம், இது போன்ற தவறுகள் நடைபெறுகின்றன ; நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே, புதிதாக ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை, நெசவாளர் அல்லாதவர்களை, அந்தப் பகுதியில் இல்லாதவர்கள் சேர்க்கப்படுகிறார்கள், சட்டத்திற்கு, விதிமுறைக்கு மாறாக சேர்க்கப்படுகிறார்கள் என்ற விளக்கங்களைத் தந்ததற்குப் பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேர் மீது திருட்டுக் குற்றச்சாட்டுகள் அங்கே போடப்பட்டிருக்கின்றன. திருட்டுக் குற்றச்சாட்டுகள் போட்டு எங்கள் மீது வழக்கு தொடர்ந்து இன்றைக்கும் வழக்கு நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். அதைப் போலத் தான் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள். தேர்தலைச் சந்திப்பதற்கு உங்களுக்குத் துணிவு இல்லை. தேர்தலைச் சந்திப்பதற்கு உங்களுக்குத் துணிவு இருக்கிறதா என்று கேட்டால் துணிவு இல்லாத சர்க்கார்(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்திலே பேசுகின்ற நம்முடைய செங்கோட்டையன் அவர்கள் கைத்தறிச் சங்கங்களைப் பற்றியும், பால் வழங்கு சங்கங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு பால் வழங்கும் சங்கம், கூட்டுறவு நெசவாளர் சங்கம் என்கின்ற காரணத்தினாலே இந்த மானியத்திலே வருகின்றது என்கின்ற கணக்கிலே அவர்கள் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கெல்லாம் பங்ஷனல் ரிஜிஸ்டிரார் என்று சொல்லி, இயங்கு பதிவாளர்கள் அந்தத் துறையினுடைய தலைமை அதிகாரி அவர்கள் இருப்பார்கள். அந்த மானியத்திலே இதைப் பற்றிப் பேசினால் தான் விளக்கங்களை உங்களாலே பெற முடியும். எனவே, அந்த மானியத்திலே அதைப் பேசி நீங்கள் விளக்கங்களைப் பெறலாம் என்று **தெரிவித்துக் கொள்கிறேன்.**

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறுகள் எப்படி நடைபெறுகின்றன என்பதை உங்களுக்குச் சுட்டிக் காட்டிக் கொண்டு இருக்கிறோம். கூட்டுறவுத் தேர்தலை நீங்கள் சந்திப்பதற்குத் தயாராக இல்லை என்பதற்காகத்தான் இந்த உதாரணங்களை நாங்கள் சொல்கிறோம். கூட்டுறவுத் தேர்தலை நீங்கள் சந்திக்க வேண்டுமென்று சொன்னால் உங்களிடத்திலே துணிவு இல்லை. ஆகவே, இந்தக் கருத்துக்களையெல்லாம் நாங்கள் சொல்வதற்குக் காரணம்..

*திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் 13 ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தார்கள். அப்போது எந்தக் கூட்டுறவுக்காவது தேர்தல் நடந்து இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடை பெற்று இருக்கிறது. எங்கேயாவது கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல் நடைபெற்று இருக்கிறதா என்றால், எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் நடைபெற்று இருக்கிறது. விவசாய சேவா கூட்டுறவுச் சங்கங்களில் அன்றைக்கு தேர்தல் நடை பெற்றது. அவர் காலத்திலே தேர்தல் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டை நீங்கள் சொல்கிற போது உங்கள் காலத்திலே நடைபெறுகிறதா என்பதை நான் கேட்கிறேன். இதற்காக 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்து தேர்தலைச் சந்திப்பதற்கு உங்களுக்குத் துணிவு இல்லை. தேர்தலுக்கு தேதி அறிவித்தீர்கள். தேர்தல் தேதி அறிவித்ததற்குப் பிறகு 4 கோடி ரூபாய்க்கு மேலே நீங்கள் விளம்பரத்தைச் செய்தீர்கள்.

18-15 மணி

அதற்கு வேண்டிய விளம்பரத்தையும் செய்ததற்குப் பிறகு, தேர்தலை நீங்கள் சந்திக்க முடிந்ததா என்றால் முடியவில்லை. இப்படி பல தேர்தலை சந்திக்க முடியாத போது, கூட்டுறவுச் சங்கங்களில் வேறு பலர் வந்து விடுவார்கள் என்று அஞ்சித்தான் தேர்தலை நடத்த மறுக்கிறீர்கள். அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு இருக்கிறீர்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள், இந்த தேர்தலை ஒத்தி வைத்தது இந்த அரசுதான் என்று சொல்லி

1990 ஏப்ரல் 16] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

கொஞ்சம் முந்தைய விபரங்களைசரியாகப் புரிந்து கொள்ளாமல் காரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தை நிறைவேற்றி, அதற்குப் பின்னாலே ஐந் தாண்டுக் காலம் அது கிடப்பில் போடப்பட்டு, அதற்கும் பின் னாலே அதற்கான விதிகளை நிறைவேற்றி அது ஆளுநர் ஆட்சிக் காலத்திலே தான் அறிவிக்கப்பட்டது. ஏறத்தாழ 10, 12 ஆண்டுக்காலமாக தேர்தலை நடத்தத் துணியாத, எண்ணிப் பார்க்காத, அதைப்பற்றி சிந்திக்காத ஒரு கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு இந்த அளவுக்குப் பேசுகிறார்கள். ஆட்சிக்கு வந்து சில மாதங்களில் அறிவிப்பு தெளிவாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் தொடங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் விதிகளிலும் சட்டத்திலும் உரிய மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னாலே, அதுவும் இந்த கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்பட்ட பின்னாலே, தேர்தல்கள் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்த நியாயங்களைப் பேசுவது எந்தவிதத்தில் பொருத்தம் என்பதை தெரிந்துதகொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் வாக்குறுதி எப்படி இருக்கிறது என்பதை பல கட்டங்களில் பார்த்திருக்கிறோம். மாநகராட்சித் தேர்தல்களை மே மாதத்தில் நடத்துவோம் என்று சொன்னீர்கள். நடத்தினீர்களா? நடத்தவில்லை. ஆனால் அது போன்ற வாக்குறுதிகளைத் தருகிறீர்களே தவிர, வாக்குறுதிகளை நிறை வேற்றவில்லை. அப்படி நிறைவேற்றாத ஆட்சியாகத் தான் இருக்கிறது என்பதை பல நேரங்களில் நாங்கள் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறோம். பல ஆண்டுக் காலமாக தேர்தல் நடக்க வில்லை என்ற குற்றச்சாட்டை நீங்கள் சொன்னீர்கள். கூட்டு றவு விவசாய சேவா சங்கங்களுக்கு தேர்தலை எங்கள் ஆட்சியில் நடத்தினோம். அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. நீங்கள் தேர்தல் நடத்தி, சிறப்பான முறையில் ஆட்சி நடத்த விடுவோம் என்று சொல்லித் தான் ஆட்சிக்கு வந்து அந்தப் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிறீர்கள். தேர்தல் நடத்தவில்லை என்று நீங் கள் சொல்கிறீர்களா?

*திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் ஒன்றை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள். எத்தனை ஆண்டுக் காலமாக அவர்கள் பஞ்சாயத்து தேர்தலை நடத்தாமல் அவர்கள் ஆட்சி செய்தார்கள் என்பதை அவர்கள் தயவுசெய்து நினைத்துப் பார்க்க வேண்டும். கூட்டுறவுத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்குக் காரணமே கட்சிக்காரர்களை பிழைக்க வைப்பதற்கு என்பதால் நடத்தவில்லை என்று ஆட்சி மீது குற்றம் சுமத்துகிறார். ஆனால் பல ஆண்டுக் காலம்

[திரு. வ. அன்பழகன்] [1990 ஏப்ரல் 16

பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தாமல் இருந்தார்களே, அப்படியானால் அவர்கள் கட்சிக்காரர்கள் தவறு செய்தார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறாரா என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலைக் கொண்டு வருகிற போது, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கியது யார்? பெண்களுக்கு இத்தனை சதவீதம், ஆதி திராவிடர்களுக்கு இத்தனை சதவீதம் என்று உங்களுடைய பகுதியில் உள்ளவர்கள் தான் தடை வாங்கினார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. அன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சியில் தான் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல்களை நடத்தினோம். மூன்றாண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கால வரையறையோடு தான் நாங்கள் தேர்தலை நடத்தினோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் உங்கள் பக்கத்திலே இருந்து தான் தடை வாங்கினார்கள் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இந்த மன்றத்தில் அது பற்றி விவாதம் வந்த போது, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நெமிலி வெங்கடாசலம் தான் வாங்கினார் என்று பேசப்பட்டு, அது இந்த அவைக் குறிப்பிலும் இடம் பெற்றிருக்கிறது. ஆயிரம் இடத்தில் வந்திருக்கிறது. ஆனால் தி. மு. க. சார்பில் அப்படி யாரும் தடை வாங்கவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகச் சொல்ல வேண்டாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: தேர்தல் நடத்தக் கூடாது என்று தடை இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறார் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். ஆனால் 3 ஆண்டுக் காலத்திற்கு தேர்தல் என்று நடத்திய போது, இப்போது நீங்கள் 5 ஆண்டுக் காலமாக அதை உயர்த்தி இருக்கிறீர்கள். என்ன காரணம்? உங்களால் தேர்தலை சந்திக்க முடியாது, துணிவில்லை. அதனால் காலவரையறையை உயர்த்தி விட்டீர்கள். மக்கள் போட்டது 3 ஆண்டுக் காலத்திற்காக. ஆனால் ஐந்தாண்டுக் காலத்திற்கு ஏன் உயர்த்தினீர்கள்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தேர்தல் நடப்பதற்கு முன்னாலே, எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே நாங்கள் பொறுப்புக்கு வந்தால், இரண்டாண்டுக் காலம் அதை நீட்டித்துத் தருவோம் என்று எங்கள் தலைவர் அவர்கள் அறிவித்ததை நான் உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 16]

திரு. எஸ். ஆர். ராதா : இந்த விவாதம் ஒரு சுவையான விவாதமாக இருப்பதால், நான் குறுக்கிட விரும்புகிறேன். இன்னும் சில மாதங்களில் அவ்வாறு நீட்டிக்கப்பட்டவர்களின் பதவிக் காலம் முடிவடையப் போகிறது. அப்படி முடிந்த பிறகு தேர்தல் நடத்தப் போகிறீர்களா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

18-20 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான தனிச் சட்டத்தை இந்த மாமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி—பதவிக் காலம் முடிந்தவுடன் 6 மாத காலத்திற்குள் நிச்சயமாகத் தேர்தல் நடத்திவிட வேண்டும் என்று நாம் அனைவரும் கூடி சட்டம் நிறைவேற்றுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அளவோடு திரு. செங்கோட்டையன் அவர்கள் முடிக்கலாமா ? ரொம்பக் குளிர்ந்த நேரம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : இது போன்ற நிலைமைகள் வராமல் கூட்டுறவுத் துறையில் உடனடியாகத் தேர்தலைச் சந்தித்து ஜனநாயகத்தைக் காக்கின்ற வகையில் கூட்டுறவே நாட்டுயர்வு என்ற அடிப்படையில் பல்வேறு நலிந்து கிடக்கிற மக்களுடைய குறைகளைத் தீர்க்கின்ற வகையில் நீங்கள் உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு மன்றத்தினுடைய உறுப்பினர்கள் மற்றும் இறுதியாகப் பேசிய நம்முடைய திரு. செங்கோட்டையன் அவர்கள் உள்ளிட்டு 14 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை பற்றியும், உணவு வழங்கு துறை பற்றியும் பல்வேறு கருத்துக்களை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு சமூக நீதி ஆண்டாகும். இந்தச் சமூக நீதி ஆண்டில், பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, நலிந்த பிரிவு மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வாழ்க்கை மேம்பாடு இந்த ஆட்சியின் மூலமாக உறுதி செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை போர்க் கால அடிப்படையில் கடந்த ஓராண்டுக்

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 ஏப்ரல் 16

காலமாக செயல்படுத்தி அந்தந்தத் துறைகளில் பல்வேறு வெற்றிகளையும் கையாண்டு கொண்டு இருக்கிறார்கள். ஒரு துறை அல்லது சில துறைகளில் முன்னேற்றம் என்று இல்லாமல் அனைத்துத் துறைகளிலும் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் என்று சொல்லத்தக்க வகையில் பலதரப்பட்ட திட்டங்களை மனதில் கொண்டு இந்த ஆட்சியினுடைய பல்வேறு துறைகளும் முடுக்கி விடப்பட்டு இந்த ஆட்சி இன்றைக்குப் பல்வேறு காரியங்களை வேக, வேகமாக செய்து கொண்டிருக்கிறது என்பதை நாட்டிலே உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் நன்றாக அறிவார்கள். அந்த வகையில் உணவுத் துறையும், கூட்டுறவுத் துறையும் மக்களோடு நெருக்கமான தொடர்புடைய துறைகள் என்கிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் தன்னுடைய கவனத்தையும், அக்கறையையும் எடுத்துக்கொண்டு செயலாற்றுகிறார்கள். இந்த இரு துறைகளும் சிறப்பாகச் செயல்படுவதன் மூலமாகத்தான் மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் சென்றடையவும், விலைவாசி ஏற்றத் தாழ்வுகளைக் கட்டுப்படுத்தி நிலையான விலைவாசியை நாட்டிலே நிலவிடவும் செய்ய முடியும். எனவே இந்த இரு வேறு துறைகளும் மிகவும் முக்கியமானவை என்பதை அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு அவ்வப்போது பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள்.

உணவுத் துறையில் மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது ''ப்ரொடக்ஷன்'' என்கிற உற்பத்தியும், ''ப்ரக்யூர்மென்ட்'' என்கிற கொள்முதலும், அது போல், ''டிஸ்ட்ரிபுஷன்'' என்கிற வினியோகமும், அது போன்று விலைவாசியில் ஏற்றத் தாழ்வு இல்லாத நிலைமை இருக்க வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கருத்துக்களாகும். அந்த வகையில் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே, தென்னாற்காடு, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் ஏகபோகக் கொள்முதல் செய்த வகையில் ஒரு மிக முக்கியமான கட்டத்தை இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

18-25 மணி

கடந்த 10 ஆண்டுகளில், 1987 ஆம் ஆண்டு தான் கொள்முதல் அளவு அதிகபட்சமாக செய்யப்பட்டிருக்கிறது. 10 லட்சத்து, 87 ஆயிரத்து, 69 மெட்ரிக் டன், 1987 ஆம் ஆண்டு, உச்சபட்சமாக கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு, 12-4-1990 வரை, 10 லட்சத்து, 88 ஆயிரத்து, 100 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டு விட்டது ; இனியும் கொள்முதல் பணி நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 16] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

அதேபோன்று, 1987 ஆம் ஆண்டு, தஞ்சையிலே மட்டும், 8 லட்சத்து, 49 ஆயிரத்து 512 மெட்ரிக் டன் உச்சபட்சமாக கடந்த 10 ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு 12-4-1990 முடிய, 8 லட்சத்து 89 ஆயிரத்து 521 மெட்ரிக் டன், இப்போது கொள்முதல் செய்து, ஒரு சாதனையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், இந்த ஆண்டு கொள்முதல் இலக்கு என்பது 17 லட்சத்து 42 ஆயிரம் மெட்ரிக் டன்கள் ஆகும். அதிலே, 12-4-1990 முடிய கொள்முதல் 10 லட்சத்து 86 ஆயிரம், மெட்ரிக் டன்கள் அதாவது 62.46 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு பொது விநியோக முறை 'பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டம்' பற்றி இங்கே பேசினார்கள். நியாய விலைக் கடைகளைப் பொறுத்த மட்டில், அதனுடைய செயல்பாடுகள் குறித்து, உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் 128 லட்சம் குடும்ப அட்டைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. மொத்த நியாய விலைக் கடைகள், இந்த 128 லட்சம் குடும்ப அட்டைகளுக்கு, அத்தியாவசிய பண்டங்களை வழங்கக்கூடிய நியாய விலைக் கடைகள் 21 ஆயிரத்து 134 ஆகும். இதிலே, நகரத்திலே உள்ள கடைகள் 3,752 ஆகும். ஊரகப் பகுதி, கிராமப் பகுதிகளிலே உள்ள கடைகள் 17,382 ஆகும். இதிலே, ஒரு கடைக்கு ஆயிரம் கார்டுகளுக்கு, 1,200 கார்டுகளுக்கு இருப்பதனாலே, விநியோகத்தை முறைப்படுத்த முடியவில்லை என்று குறைபாடு தொடர்ந்து சொல்லப்பட்டு வந்தது. அந்தக் குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்கிற அடிப்படையில், இந்த அரசு 800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்கிற வகையில் ஒரு புதிய உத்தரவினைப் பிறப்பித்து, அதன் முதல் கட்டமாக 1,200 குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு, தனியாகக் கடைகள் தொடங்கப்பட உள்ளன. அதே போன்று, குடும்ப அட்டைகள், புதிதாக வழங்கப் படவில்லை என்ற குறைபாட்டை, இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பல கட்டங்களில் தெரிவித்தார்கள். அதற்கெல்லாம் முடிவு கொடுக்கின்ற வகையில், புதிய குடும்ப அட்டைகள் வழங்குகின்ற உத்தரவினை இந்த அரசு வழங்கி இருக்கிறது. ஏன் இதுகாறும் குடும்ப அட்டைகள் வழங்கப்படவில்லை என்றால்; போலி அட்டைகள் ஆங்காங்கு கிராமமானாலும், நகரமானாலும் சமூக விரோதிகளின் கையில் இருந்த காரணத்தினாலே, அவையெல்லாம் ஓரளவுக்கு திரும்பப் பெறப்படுகின்ற முயற்சியில், இந்த அரசு இடைக்காலத்திலே, கடினமான முயற்சி மேற்கொண்டது. அதிலே ஓரளவுக்கு வெற்றியும் கண்டிருக்கிறது. இந்த போலி கார்டுகள், தவறான குடும்ப அட்டைகள், சமூக விரோதிகளிடம் இருப்பதை அடையாளம் கண்டு, அவற்றை

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 ஏப்ரல் 16

யெல்லாம் ஓரளவுக்குப் பெற்ற பின்னாலேதான், புதிதாக குடும்ப அட்டைகள் வழங்குகின்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக குடும்ப அட்டைகள் வழங்குகின்ற நேரத்தில், மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையோடும் அரசு இருக்க வேண்டியிருக்கிறது. காரணம், சமூக விரோதிகள், இந்த காலகட்டத்தை எதிர்பார்த்து, எப்படியாவது குடும்ப அட்டைகளைத் தாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்; அதிகமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் ; அதன் மூலமாக குறுக்கு வழியில் அத்தியாவசியப் பண்டங்களை, கைக்குக் கை மாற்றுவதன் மூலமாக கொள்ளை லாபம் அடிக்க வேண்டுமென்று முயற்சிக்கின்ற காரணத்தினாலே தான், அரசு மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையோடும், 100 சதவிகித பரிசோதனைகளுக்குப் பின்னர்தான் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டுமென்ற உத்தரவைப் போட்டிருக்கிறது. எனவே, இங்கே குறைபாடுகளை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

18-30 மணி

அடுத்து, மலைவாழ் மக்கள் ஆங்காங்கு நியாயவிலைக் கடைகளுக்கு 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் சென்றுதான் அத்தியாவசியப் பண்டங்களை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையில் எப்படியாவது ஆங்காங்கு 800 குடும்ப அட்டைகள் அல்லது 1,200 குடும்ப அட்டைகள் என்கின்ற கணக்கு இல்லாமல் கடைகளைத் திறக்க வேண்டும் என்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதற்கெல்லாம் இன்றைக்கு முடிவு கட்டுகின்ற வகையிலே முதல் கட்டமாக 4 நடமாடும் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே கூட இப்படி மலைப் பகுதிகள்—வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு இருக்கக் கூடிய சில மலைப் பகுதிகளில் நியாயவிலைக் கடைகள், நடமாடும் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று குறிப்பிடப் படடு, இன்றைக்கு இந்த 4 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் குடும்ப அட்டைகள் குறைவாக இருந்தால்கூட மலைப் பகுதியாக இருக்குமேயானால், 3 கிலோ மீட்டருக்குத் தள்ளி இருக்குமேயானால் அங்கே பகுதி நேரக் கடைகள் கூடத் திறப்பதற்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்கி இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

விழிப்புக் குழு, விஜிலன்ஸ் கமிட்டி பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். விழிப்புக் குழு என்பது முறையாகப் போடப்பட்டு இருக்கிறதா ? அதிலே அரசியல்வாதிகள் இல்லை என்று எல்லாம்

1990 ஏப்ரல் 16] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

குறிப்பிட்டார்கள். விழிப்புக் குழு மாநிலம் முழுவதும் ஆங்காங்கு போடப்பட்டு இருக்கிறது. குறைபாடுகளைச் சில இடங்களில் எடுத்துத் தெரிவிக்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் எங்கெங்கு தெரிவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் அந்தக் குறைபாடுகள் போக்கப்பட முடிந்த அளவிற்கு அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களை, சமூகப் பெரியவர்களை, வாலன்டரி ஆர்கனைசேஷன் என்கின்ற அளவில் பணியாற்றுகின்ற சமூக சேவை நிறுவனங்களிலே இருக்கக்கூடியவர்களையும் இந்த விழிப்புக் குழுவிலே போடப்பட்டு இருக்கிறது. அவர்கள் பல இடங்களில் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தக் குறைபாடு இன்னொரு மட்டத்திலேயும் போக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாவட்ட அளவிலே மாவட்டக் கண்காணிப்புக் குழு என்கின்ற அடிப்படையில் எல்லாச் சட்டப் பேரவை உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், நகர்மன்றத் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களையும் உள்ளடக்கி மாவட்ட அளவிலே ஒரு கண்காணிப்புக் குழு போடப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவைப் பயன்படுத்தி நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், அதுபோன்றே ஒன்றியப் பெருந்தலைவர்கள், நகர் மன்றத் தலைவர்களாக இருந்தாலும் அவர்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்கு வழிவகை ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரிசி நிலைமையைப் பொறுத்தவரையில் சில விவரங்களை உங்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழகத்துக்கு மதிய உணவையும் உள்ளடக்கி 1 இலட்சத்து 65 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி மாதந்தோறும் நமக்குத் தேவைப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு 19 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் நமக்குத் தேவைப்படுகிறது. இந்த அரிசியை எப்படி நாம் கொள்முதல் செய்கிறோம்? நேரடியாகக் கொள்முதல் செய்வதன் மூலமாக, மோனாப்பலி ப்ரகியூர்மென்ட், ஏகபோகக் கொள் முதல் மூலமாக, டிரேடர்ஸ் லெவி என்ற முறையில் வியாபாரிகளிடம் 50 சதவீதம் லெவி கொடுக்க வேண்டும் என்று வாங்குவதன் மூலமாக, மத்தியத் தொகுப்பிலிருந்து, மத்திய அரசிடமிருந்து நாம் பெறுவதன் மூலமாக நம்முடைய அரிசியின் தேவையை நாம் இங்கே பூர்த்தி செய்துகொள்கிறோம். மத்திய அரசு இன்றைக்கு 75 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியை நமக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள்தான் இதற்கான சிறப்பான முயற்சிகளை அடிக்கடி மேற்கொண்டார்கள்; டில்லி சென்றார்கள்; அதிகமாகப் பெற்று வந்தார்கள். நம்முடைய மத்திய உணவு அமைச்சர் அவர்கள் இங்கே வருகை தந்தபோது அவர்களிடம் தமிழகத்து மக்களுடைய உணர்வுகளை எடுத்துச் சொல்லி மாதந்தோறும் 75 ஆயிரம் மெட்ரிக் டன்

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 ஏப்ரல் 16

அரிசியினை இங்கே அவர்கள் பெற்றுத் தந்து இருக்கிறார்கள். ஆந்திராவிலே இருந்து நாம் வாங்கக்கூடிய அரிசி 2 இலட்சத்து 32 ஆயிரம் மெட்ரிக் டன் ஆகும். இப்படி ஒவ்வொரு பகுதியிலே இருந்தும் நாம் காலத்தே வாங்க வேண்டும் என்பதற்காக, எந்தக் காலத்தில் அரிசி அங்கே குறைந்த விலையில் கிடைக்கிறதோ அந்தக் காலத்தைத் தேர்ந்தெடுத்து ஆந்திராவிலே இருந்து அரிசி வாங்குகிறோம். அதுபோன்று மோனாப்பலி புரக்யூர் மென்ட்டிலே இருந்து நெல்லைப் பெற்று அரிசியாக ஆக்குகிறோம். டிரேடர்ஸ் லெவி மூலமாக அரிசியைப் பெற்று நாம் இந்தப் பொது விநியோகத் திட்டத்துக்குப் பயன்படுத்துகிறோம்.

18-35 மணி

பொது விநியோகத் திட்டத்தில், என்ன அளவின் அடிப்படையிலே அரிசி கொடுக்கிறோம் என்றால், பெரியவர்களாக இருந்தால் நான்கு கிலோ அரிசி; சிறியவர்களாக இருந்தால் இரண்டு கிலோ அரிசி; அதிகபட்சமாக 12 கிலோ அரிசியை நாம் இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலேகூட, 12 கிலோ அரிசி ஒரே நேரத்திலே கொடுக்கப்படவில்லை, அதிலே ஆறு கிலோ கொடுக்கிறார்கள். பின்னாலே ஆறு கிலோ இல்லை என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் புகார்கள் வரப்பட்டதை மையமாக வைத்து, இந்த அரசு கவனமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, 1-4-1990 முதல் ஒரு அறிவிப்பையே இந்த அரசாங்கத்தின் சார்பாகப் பொது மக்களுக்குக் கொடுத்தோம்.

என்னவென்றால், 12 கிலோ அரிசி பெறக்கூடிய பொது மக்கள்-கன்ஸ்யூமர்ஸ், எப்பொழுது வேண்டுமானாலும் இரண்டு தடவையிலோ, மூன்று தடவையிலோ அல்லது ஒரே தடவையிலோ 12 கிலோ அரிசியைத் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி, இன்றைக்கு அறிவிப்பு கொடுத்து நியாய விலைக் கடை முழுவதும் அரிசி அதற்கேற்றபடி அங்கே தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது கையிருப்பில் இருக்கக்கூடிய அரிசி என்பது, இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே.... அரிசி சில நேரங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுகிறது, அதனாலே பொது விநியோகத் திட்டம் பாதிக்கப்படுகிறது; ஏழை எளிய மக்களுக்குச் சில நேரங்களிலே அரிசி வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது என்பதை அறிந்து....இந்த அரசு பஃப்பர் ஸ்டாக் என்று இரண்டு மாத காலத்திற்குத் தேவைப்படுகின்ற அரிசியை சேமித்து வைப்பதற்கான திட்டத்தைத் தீட்டியது. அந்த வகையிலேதான், இப்பொழுது இரண்டு மாத காலத்திற்கும் தேவையான அரிசியை இந்த அரசாங்கம் தேக்கி வைத்திருக்கிறது. அரிசி கையிருப்பிலே உள்ளது 1,91,000 மெட்ரிக் டன். அதுபோன்று நெல்லாகக்

1990 ஏப்ரல் 16] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

கொள்முதல் செய்து, அதன் மூலமாக அரிசியாக இப்பொழுது ஆக்கி வைத்திருப்பது, நான்கு இலட்சம் மெட்ரிக் டன். ஆக, 5,91,000 மெட்ரிக் டன் இந்த அரசினுடைய கையிருப்பில், பஃபர் ஸ்டாக்காக வைத்துக்கொண்டிருக்கிறது.

இதன் மூலம் என்ன இலாபம் என்று சொன்னால், ஒன்று, வியாபாரிகள் நினைத்த நேரத்திலே அரிசியினுடைய விலையை ஏற்றிவிட முடியாது. இரண்டு, பொது மக்களுக்கு எவ்வப் பொழுதெல்லாம் அரிசித் தட்டுப்பாடு வருகிறதோ அப்பொழுதெல்லாம், இந்தத் தொகுப்பிலேயிருந்து அரிசியைத் தாராளமாக வழங்கி, பொது மக்களுக்குத் தேவைப்படுகின்ற அரிசியை, தேவைப்படுகின்றபொழுது, தட்டுப்பாடு இல்லாமல் வழங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்கின்ற அடிப்படையிலேதான், பஃபர் ஸ்டாக் உருவாக்க வேண்டுமென்கின்ற இந்த அரசின் திட்டம் சிறப்பாக இன்றைக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, அரிசியினுடைய விலை பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அரிசி ஏற்கனவே விற்ற விலை உங்களுக்கு நன்றாகத் தெரியும். சாதா ரகம் 1.75; சன்ன ரகம் 2.25; மிகச் சன்ன ரகம் 2.50. இப்பொழுது விலை 2 ரூபாய் சாதா அரிசி; மூன்று ரூபாய் சன்ன அரிசி; மிகச் சன்ன அரிசி 3.50 ஆகும்.

ஆனால், இந்த அரிசியினுடைய கொள்முதல் விலை, அதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாதா அரிசியினுடைய கொள்முதல் விலை 3 ரூபாய் 24 காசு; கொள்முதல் விலை 3.24 என்றாலும், அதைக் கொண்டு வந்து சேர்த்து, ஓரிடத்தில் சேர்ப்பதற்கான அடக்க விலை 3.73. சன்ன அரிசி கொள்முதல் விலை 3.38; அடக்க விலை 3.88. மிகச் சன்ன அரிசி கொள்முதல் விலை 3.53; அடக்க விலை 4.11. ஆக, இந்த அடக்க விலையிலே வாங்கி நாம் விற்கக்கூடிய விலை, சாதாரண அரிசி 2 ரூபாய்; சன்ன அரிசி 3 ரூபாய்; மிகச் சன்ன அரிசி 3.50 ரூபாய்.

இந்த அளவிலேதான் இன்றைக்கு நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு பொதுத் தொகுப்பிலேயிருந்து, என்ன விலைக்கு நமக்கு அரிசியை வழங்குகிறது என்றால், சாதா அரிசி 2.44; சன்ன அரிசி 3 ரூபாய் 4 காசு; மிகச் சன்ன அரிசி 3 ரூபாய் 25 காசு. இந்த விலையிலே வாங்கக்கூடிய அரிசியை அதைவிடக் குறைத்துத்தான் நாம் கொடுக்கிறோம். சாதாரண அரிசியில் 2.44க்கு மத்திய அரசு கொடுக்கிறது நாம் 2 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். சன்ன அரிசி 3 ரூபாய் 4 காசு; நாம் 3 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். மிகச் சன்ன அரிசிதான் 3.25; நாம் 3.50க்குக் கொடுக்கிறோம்.

அடுத்து, மற்ற மாநிலங்களில் என்ன விலை விற்கிறது என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசுகின்றபொழுது, மற்ற மாநிலங்களை நீங்கள் ஒப்பிடக்கூடாது என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் அரிசியினுடைய விலை, வேறு வழியே இல்லாமல் உயர்த்தினால்தான் இந்தப் பொது விநியோகத் திட்டத்தையே சிறப்பாக நடத்த முடியும் என்கின்ற நிலை இருக்கின்றபொழுது, அரிசி விலையை ஏற்றாவிட்டால், இந்தப் பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாக நடத்த முடியாது என்கின்ற ஒரு அபாயகரமான கட்டம் வருகின்றபொழுது நாம் இவைகளையெல்லாம் கருத்திலே எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

18-40 மணி

அந்த வகையில்தான் கர்நாடகம் ஆனாலும், கேரளா ஆனாலும், மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம், வெஸ்ட்பெங்கால், ஒரிஸ்ஸா ஆகிய எல்லா மாநிலங்களையும் எடுத்து வைத்துப்பார்ப்பீர்களேயானால், அங்கேயுள்ள விலைவாசிகளைவிட தமிழ்நாட்டில் குறைவாகத்தான் விலைவாசி இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தவிர்க்கமுடியாத ஒரு பொருளாதார இக்கட்டான சூழ்நிலையில் தான் இந்த அரசு இன்றைக்கு இந்த விலையை ஏற்றியிருக்கிறது. அதிலேகூட ஒன்றைக் கவனிக்கவேண்டும். மத்திய அரசு முன்னாலே விலையேற்றிய நேரத்தில் மத்திய அரசு விலையை ஏற்றினாலும் நாங்கள் இப்போது விலையை ஏற்றவில்லை என்று சொன்னார்கள். இப்போது வேறு வழியில்லாமல் ஏற்றிய இந்த கட்டத்தில் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்கள். இப்போது இந்த விலையை ஏற்றியிருக்கிறோம். எதிர்காலத்தில் மத்திய அரசு விலையேற்றினாலும் கூட நான் இந்த மன்றத்தில் உறுதி தருகிறேன். இந்த விலையிலிருந்து நான் ஏற்றமாட்டேன் என்று உறுதியைத்தெரிவித்து இருக்கிறார்கள்.

எனவே, இந்த விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாத நிலையில் பொது விநியோகத் திட்டத்தை சிறப்பாக நடந்துவதற்கு அத்தியாவசியமாக ஏற்றப்பட்ட நடவடிக்கையே அல்லாமல் வேறு ஒன்றுமல்ல என்பதை நாட்டிலே உள்ள அனைத்து தரப்பு மக்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாகக்கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் விலையேற்றத்திற்கான நியாயங்களை சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நான் இந்த 3 தினங்கள் லீவில் கிராமங்களுக்குச் சென்றிருந்தபோது ஒவ்வொரு இடத்திலும் விசாரித்தேன். இப்போது விலை உயர்த்திய பிறகு

1990 ஏப்ரல் 16] [திரு. சோ. அழகர்சாமி]

எந்த நியாய விலைக் கடைகளிலும் யாரும் அரிசி வாங்குவதில்லை. ஏனென்றால் இதை விட 4 அணா, 50 பைசா உயர்வாக இருந்தாலும் வெளி அரிசியைத்தான் வாங்குகிறார்கள். அது வல்லாமல் 25 பைசா கூட்டி 2 ரூபாய் அரிசி எந்த நியாய விலைக் கடையிலும் விநியோகம் செய்யப்படுவதில்லை. ஆகவே, $3\frac{1}{2}$ ரூபாய்க்கு உண்டான பச்சை அரிசியை வாங்கினால்தான் 3 ரூபாய் அரிசி தரப்படும் என்றும் சொல்லப்படுகிறது. பெரும்பகுதி மக்கள், ஏழை எளிய மக்கள் இப்போது சமீபத்தில் நியாய விலைக் கடைகளில் வாங்குவது இல்லையென்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து, விலையைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்வது நியாயம் என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஒப்புக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, பொது மக்கள் நியாய விலைக் கடைகளில் அரிசியே வாங்கவில்லை என்பது சரியான கூற்றல்ல. பொதுமக்கள் அரிசியை வாங்கி இருக்கிறார்கள் என்பதற்கு என்னிடம் விவரம் இருக்கிறது. அதிலே, அதிகமாக வேறுவிதமான தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல், இப்போது முழுமையாக அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால்தான் அரிசி இன்றைக்கு நியாய விலைக் கடைகளில் இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், சாதாரண அரிசி என்பது மதிய உணவிற்கு வழங்கப்படுகிறது. சாதாரண அரிசி என்பது 2 ரூபாய் கிலோ என்ற மதிப்புள்ள அரிசி. இந்த அரிசியைஓரளவிற்கு தஞ்சைமாவட்டத்தில் நாம் கொள்முதல் செய்கிறோம். இப்போது ஹைபிரீட் வெரைட்டி வந்த பிறகு அதிகமாக சன்ன ரகம், மிகச்சன்ன ரகம் மத்தியத்தொகுப்பிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் வருகிறது. தஞ்சையில் கிடைக்கக்கூடிய கோ. 1009 என்கிற அரிசிதான் சாதாரண ரக அரிசியாக பகுக்கப்படுகிறது. இந்த அரிசியை தமிழகம் முழுவதும் பரவலாக கொடுத்து, நியாய விலைக் கடைகளில் விநியோகிக்கப்படுகிறது என்பதை குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அரிசி விலையேற்றம் என்பது இப்போது மட்டும் புதியதாக இந்த ஆட்சி செய்கிற ஒரு நடவடிக்கை அல்ல. ஏற்கனவே இருந்த அரசு கூட இரண்டு கட்டங்களில் 1981, 1985-ம் ஆண்டுகளில் அரிசியினுடைய விலையை ஏற்றியிருக்கிறது என்பதையும், அதுவும் மத்திய அரசுக்கு இணையாக அரிசி விலையை ஏற்றி இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இலவச அரிசித் திட்டத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். 300 ரூபாய் அல்லது அதற்குக்குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு இலவச அரிசி இந்த அரசு வழங்கும் என்கிற திட்டத்தை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். என்ன நோக்கம் கருதி என்றால், வாழ்க்கையின் அடித்தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களின் உணவுப் பிரச்சினையில் இந்த அரசு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு அடையாள மாகத்தான் இனாமாக அரிசி வழங்குகிற திட்டத்தை அமல்படுத்தி இருக்கிறது. இந்த அடிப்படையில் அந்தத் திட்டம் சாதாரண மக்களுக்காக, ஏழை எளியவர்களுக்காக, அவர்கள் பிரச்சினையில் இந்த அரசு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறவகையில்தான் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

18-45 மணி

அப்போது மாண்புமிகு உறுப்பினர்களாலும், மற்றவர் களாலும் எடுத்துச் சொல்லப்பட்ட குறைபாடுகள் வருமானம் என்பது சரியாகக் குடும்ப அட்டைகளிலே குறிப்பிடப்படவில்லை, அப்படிக் குடும்ப அட்டைகளிலே குறிப் பிடப்படாத காரணத்தாலே — உரியவர்கள் நியாயமாக அவர் களுக்குக் கிடைக்கப்பட வேண்டும் என்று எண்ணக்கூடிய—அவர் களுக்கு எல்லாம், இதிலே இனாமாக அரிசி வழங்க முடியவில்லை என்ற கருத்து அப்போது தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆண்டுக்கு 5 முறை, 300 ரூபாயும், அதற்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு 5 முறை, ஒவ்வொரு முறையும் 5 கிலோ அரிசி என்கிற திட் டத்தைக் கொஞ்சம் மாற்றம் செய்து, ஆண்டுக்கு 3 முறை, ஆயிரம் ரூபாயும், ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ அரிசி தரப்படும் என்று அறிவித் திருக்கிறார்கள். அறிவித்த அதை இப்போது நிறைவேற்றி இருக்கிறார்கள். 300 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி வழங்கியதில் 83 லட்சம் குடும்பங்கள் பயன்பெற்றன. ஆனால் இப்போது ஆயிரம் ரூபாயும், அதற்குக் குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி வழங்க வேண்டும் என்கிற திட்டத்தில் ஏறத்தாழ 1 கோடியே 21 லட்சம் குடும்பங்கள் பயன் அடைகிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து கோதுமை, கோதுமையைப் பொறுத்தவரையில், 30 ஆயிரம் மெட்ரிக் டன் நமக்குக் கொடுக்கப்படுகிறது மத்திய அரசாலே வழங்கப்படுகிறது. அதிலே 18 ஆயிரத்திலிருந்து 23 ஆயிரம் மெட்ரிக் டன் பொது வினியோகத்திற்குப் பயன்படுத் தப்படுகிறது. தரைப் பகுதியாக இருக்குமானால், 20 கிலோ கோதுமையும், மலைப்பகுதியாக இருக்குமானால், 30 கிலோ கோதுமையும் வழங்கப்படுகிறது. ரூ. 2.20-ல் வழங்கப்படுகிறது. அதிலும் கூட உறுப்பினர்களுடைய கருத்தின் அடிப்படையில் வெள்ளை கோதுமைதான் வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்

1990 ஏப்ரல் 16] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

பட்டது. வெள்ளை கோதுமைதான் வேண்டும் என்று மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லியதன் அடிப்படையில் வெள்ளை கோதுமையை நாங்கள் அனுப்பி வைக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கோதுமைப் பண்டங்களை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு நீங்கள் ஒரு விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியிலே ஏற்படுத்த வேண்டும் என்று நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லிய கருத்தின் அடிப்படையிலேதான், ஏற்கனவே கோ-ஆபரேடிவ் யூனியன் என்கிற அந்த அமைப்பின் மூலமாக பொது மக்களுக்கு கோதுமையின் மூலமாக எப்படி தின்பண்டங்களை அல்லது சாப்பிடக்கூடிய பொருட்களை உருவாக்குவது என்பது பற்றிய பல்வேறு விளம்பரங்களை இந்தத் துறையின் மூலமாக செய்துக் கொண்டு இருக்கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரையினுடைய அளவைப் பொறுத்தவரையில், 22,500 மெட்ரிக் டன் நமக்கு மத்திய அரசு வழங்கிக் கொண்டு இருக்கிறது. என்ன அடிப்படையிலே வழங்குகிறார்கள் என்றால், 1981 ஆம் ஆண்டு எடுத்த கணக்கின்படி ஒரு நபருக்கு 425 கிராம் என்ற அடிப்படையிலே 22,500 மெட்ரிக் டன்னை அவர்கள் வழங்குகிறார்கள். ஆனால் நாம் இங்கே ஒரு நபருக்கு 500 கிராம் என்ற அடிப்படையிலே, அதிகபட்சம் 2 கிலோ என்ற அடிப்படையிலே ஒரு கிலோ 5 ரூபாய் 25 காசு என்கிற அடிப்படையிலே வழங்கிக் கொண்டு இருக்கிறோம். இது நம்முடைய தேவைக்குப் போதாது என்பது.....

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமையைப் பற்றி நான் சொன்னபோது, கோதுமைப் பண்டங்களை அதிகப்படியாகப் பயன்படுத்துவது மக்கள் மத்தியிலே வளர்ந்து வருவதால், அதற்கு நல்லமுறையிலே நாம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் ரொட்டி என்கிற அந்தப் பண்டம் நகரத்திலே மட்டுமல்லாமல், இப்போது கிராமங்களிலும் விரிவாகப் போய்க் கொண்டிருக்கிறது, பேக்கரிப் பொருட்கள் உள்பட. அவற்றுக்கு இருக்கிற அந்த விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி இருந்தேன். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, விற்பனை வரி என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் பரிசீலிக்க வேண்டுமே அல்லாமல், அது இந்தத் துறையிலே வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மானியக் கோரிக்கைக்குப் பெயரே ''நுகர்பொருள் வழங்கல்'' அவ்வளவுதான். வரி விதிப்பு அல்ல. ''நுகர்பொருள் மீது வரி விதிப்பு'' அல்ல. 'நுகர்பொருள் வழங்கல்''.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : அடுத்து சர்க்கரையைப் பொறுத்தவரையில், நமக்கு வழங்கப்படுகிற 22,500 மெட்ரிக் டன் போதுமானதாக இல்லை என்பதைப் பல கட்டங்களிலே மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கடிதம் எழுதி இருக்கிறோம். அதிகமாக சர்க்கரை வேண்டும் என்று நாம் கேட்டு இருக்கிறோம். அதிலும் வெளிச் சந்தையினுடைய விலை ஏறுகிறபோது, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சர்க்கரை ஆலை அதிபர்களை எல்லாம் அழைத்து அவர்களிடம் சர்க்கரையைப் பெற்று, 7 ரூபாய் 50 காசுக்கு வெளிச் சந்தையிலே விற்கச் சொன்னார்கள். இப்படி வெளிச் சந்தையிலே எப்பொழுதெல்லாம் அத்தியாவசியப் பண்டங்களுடைய விலை ஏறுகிறதோ, அப்போது விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

18-50 மணி

அடுத்து மண்ணெண்ணெய். மண்ணெண்ணெயைப் பொறுத்தமட்டில் மூன்று காலமாகப் பிரித்து மத்திய அரசு நமக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. Summer Season கோடைக் காலம், Monsoon Season மழைக்காலம், Winter Season குளிர் காலம் என்று மூன்று காலமாக முறையே, 61,281 கிலோ லிட்டர், 66,057 கிலோ லிட்டர், 73,611 கிலோ லிட்டர் என்கின்ற அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகம் 11 இடங்களிலும், கூட்டுறவுத் துறையின் மூலமாக 4 இடங்களிலும், மற்ற இடங்களிலே 514 தனி நபர்களும் மொத்த வியாபாரத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மூலமாக ஆங்காங்கு வழங்கப்படுகிறது. இதிலே எப்படி வழங்கப்படுகிறது என்பதற்கு ஒரு முறையை வகுத்திருக்கிறோம். சென்னையிலே 10 லிட்டர், நகராட்சியிலே 6 லிட்டர், நகரியம், பேரூராட்சியிலே 5 லிட்டர், கிராமங்களிலே 3 லிட்டர் என்று வழங்கப்படுகிறது. மலைப்பகுதி நீலகிரி மாவட்டத்திலே 15 லிட்டர், நீலகிரிக்கு நகர், நகரியப் பகுதியில் 10 லிட்டர் கிராமங்களுக்கு 5 லிட்டர்' என்று சொல்லி, மலைப் பகுதி என்கின்ற காரணத்தாலே அங்கே அப்படி வழங்கப்படுகிறது. கொடைக்கானலும் மலைப்பகுதி என்கின்ற காரணத்தாலே இந்த விகிதாச்சாரத்தில் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லி நாம் கேட்டிருக்கிறோம். (குறுக்கீடு.)

திருமதி பாப்பா உமாநாத்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அரசுத் தரப்பில் இல்லாமல் தனியார் துறையிலும் இது விடப்பட்டு, அவர்கள் ஒழுங்காகவே மண்ணெண்ணெயைக் கொடுக்காமல் இருக்கக் கூடிய நிலைமை திருச்சி நகரிலே இருக்கிறது என்பதைக் கூறி, அதைக் கட்டுப் படுத்தவோ, அல்லது ரத்து செய்து அரசே நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இது தவிர, மாநிலம் முழுவதும் 2,841 பேருக்கு கை வண்டிகள் மூலமாக மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சென்னையிலே ஒவ்வொருவருக்கும் 100 லிட்டர், மற்ற இடங்களிலே 50 லிட்டர் என்று வழங்கப்படுகிறது. இது தவிர தனியார்கள் மண்ணெண்ணெய் வியாபாரத்தையே நம்பியிருக்கக் கூடிய வியாபாரிகள் என்று பிரிக்கப்பட்டு, அவர்கள் 2,094 பேர் மாநிலம் முழுவதும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று தெரிந்த மாத்திரத்தில் அப்படிப்பட்ட புகார்கள் வருமேயானால் அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்படுகிறது. அப்படி யாராவது தவறாகப் பயன்படுத்திய வியாபாரிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் தெரிவிப்பாரேயானால் அந்த முறைப்படி அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அத்தோடு மண்ணெண்ணெய் விநியோகம் இன்னும் பரவலாக்கப்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில் புதியதாகக் கூட பெரிய மாவட்டத்திற்கு 25 கை வண்டிகளையும், சிறிய மாவட்டத்திற்கு 10 வண்டிகளையும் வழங்கியிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மண்ணெண்ணெய் விலை ரூ. 2.30-லிருந்து ரூ. 2.56 வரை வழங்கப்படுகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சமையல் எண்ணெய் பாமாயில் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான அளவு 13,000 மெட்ரிக் டன்னாகும். ஆனால் இப்பொழுது ஏற்கெனவே வழங்கி வந்த அளவு மத்திய அரசாலே வழங்கி வந்த அளவு 1,250 மெட்ரிக் டன்னாகும். இதற்கு மத்திய அரசாலே சொல்லப்படுகின்ற காரணம். பாமாயில் என்பது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற ஒன்றாகும். அவெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற போது Foreign Exchange அன்னியச் செலாவணி தேவைப் படுகின்ற காரணத்தாலே நாம் இதிலே கண்டிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. எனவே அதிகமான சமையல் எண்ணெயை, பாமாயிலை இறக்குமதி செய்ய முடியாத நிலை யிலே இருக்கிறோம் என்று மத்திய அரசு சார்பாக கருத்து சொல்லப்பட்டது. இருந்தாலும் கூட தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நாங்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப்படையில் 1,250 மெட்ரிக் டன் என்ற நிலையிலிருந்து மாறி இப்பொழுது 2,000 டன் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தோடு 100 டன் சோயா பீன்ஸ் எண்ணெயை வழங்கினார்கள். ஆனால் சோயா பீன்ஸ் எண்ணெயைப் பொறுத்த மட்டில் தமிழகத்திலே யாரும் வாங்குவதற்குத் தயாராக இல்லை. இப்போது இன்றைக்கு காலையிலே பத்திரிகைச் செய்தியைப் பார்த்தேன். கல்கத்தா விலே நம்முடைய நிதியமைச்சர் மதுதண்டவதே அவர்கள் பத்திரிகைக்குப்பேட்டி கொடுக்கிறபோது 2 லட்சம்டன் எடிபிள் ஆயில் இறக்குமதி செய்ய இருக்கிறோம் என்ற கருத்தை மத்திய அமைச்சரவை ஏற்றுக் கொண்டு இருக்கிறது என்று கல்கத்தாவிலே தெரிவித்திருக்கிறார்கள். அது நிறைவேறுமானால் நிச்சயமாக நமக்கு கூடுதலாக பாமாயில் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. மத்திய அரசிடமிருந்து தான் பாமாயிலை பெற முடியுமே அல்லாமல் வேறு வழிகளிலே நாம் பாமாயிலை பெறுவதற்கான முயற்சியில் நாம் எந்த வகையிலேயும் ஈடுபட முடியாது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அத்தோடு பாமாயிலை, இங்கே உற்பத்தி செய்வதற்கு நீண்ட கால அடிப்படையில் அது சம்பந்தமான பயிர்கள் இங்கே விளைவிக்கப்படுகின்றன என்பதையும் நான் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன்.

(18-55 மணி)

அதுபோலத்தான் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம். பழங்குடியினருக்கு மத்திய அரசு இன்னும் குறைந்த சப்சிடி ரேட் என்ற வகையில் குறைந்த விலையில் கோதுமையை

1990 ஏப்ரல் 16] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

யும் அரிசியையும் தருகிறது. 1 ரூபாய் 79 காசுக்கு கோதுமையையும் 2 ரூபாய் 19 காசுக்கு அரிசியையும் தருகிறது. அதை வாங்கி இந்த அரசு மேலும் குறைத்து பழங்குடி மக்களின் மீதுள்ள அக்கறையின் காரணமாக கோதுமையை ரூபாய் 1.79 க்கும், அரிசியை ரூபாய் 1.40 க்கும் வழங்கிக் கொண்டு இருக்கிறது. இதன் மூலமாக 38,287 குடும்பங்கள் அதாவது 1 லட்சத்து 74 ஆயிரத்து 76 மக்கள் பயன் அடைகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

விலைக் கட்டுப்பாடு ; அனைத்துப் பொருள்களின் விலை சரியாக இருக்கிறதா "Violent Fluctuation" என்ற முறையில் மேலும் கீழுமான ஏற்ற இறக்கம் அதிகமாக இருக்கிறதா என்பதை தொடர்ந்து இந்த அரசு கவனித்துக் கொண்டு இருக்கிறது. எந்தப் பொருள்களுடைய விலைவாசி ஏற்றம் இருக்கிறதோ அதை எப்படிக் குறைக்க வேண்டும். வெளிச் சந்தையில் நம்முடைய கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாக அந்தப் பொருள்களை கொள்முதல் செய்து வெளிச் சந்தையில் விற்பதன் மூலமாக இந்த அரசு விற்பனை செய்வதன் மூலமாக ஒரு நிதானமான விலை தமிழகத்திலே நிலவுவதற்கு இந்த அரசு உரிய முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஓட்டல் பண்டங்களின் விலைபற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஓட்டல் பண்டங்களுடைய விலையைக் குறைக்க வேண்டும். அதிலே இருக்கக் கூடிய சிக்கல் என்னவென்றால் ஓட்டல் பண்டங்களுடைய விலையைக் குறைக்கிறபோது தரம் கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு அந்த ஓட்டல் அதிபர்கள் ஒத்துழைக்க வேண்டும். நம்முடைய பேச்சு வார்த்தைகளில் நாங்கள் விலையைக் குறைக்கிறோம் என்று சொல்லி அங்கே சென்று தரத்தைக் குறைத்து விடுவார்களேயானால் அதனாலேயும் பிரச்சினை வரும். எனவே தான் அவர்களே ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தையை இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. சமீபத்திலே கூட ஓட்டல் அதிபர்கள் இந்த பேச்சுவார்த்தையை நடத்தி அவர்கள் மீண்டும் ஆலோசனை செய்து வெகு விரைவிலே எப்படி குறைப்பது எவ்வளவு குறைப்பது என்பதற்கான அந்தத் திட்டத்தோடு வந்து அரசை நாங்கள் பார்க்கிறோம் உங்களை பார்க்கிறோம், முதலமைச்சரைப் பார்க்கிறோம் என்று சொல்லிச் சென்றிருக்கிறார்கள். விரைவிலே ஓட்டல் பண்டங்களுடைய விலையைக் குறைப்பதற்கும் முக்கியமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் கடுமையாக பயன்படுத்தப்படுகிறது. கலப்படம் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்பூவராகன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். கலப்படம் என்று வருகிறபோது கடுமையாக நடவடிக்கை எடுக்கிறோம். எந்தவித தயவு தாட்சண்யமும் இல்லாமல் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பல்வேறு சான்றுகளை என்னாலே இங்கே குறிப்பிட முடியும் என்றாலும் கூட காலத்தின் அருமை கருதி அவற்றையெல்லாம் நான் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை.

அடுத்து, புட் செல். காவல் துறையினர் இப்போது உள்ள நிலையில் அவர்கள் மாநிலத்தினுடைய எல்லையைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாநிலத்தினுடைய எல்லையில் இருந்து இங்கே உள்ள அரிசி நெல் கடத்தப்பட்டு வெளியிலே போகக்கூடாது என்பதில் அவர்கள் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களை இந்தப் பணியில், கலப்படத்தைக் கண்டுபிடிக்கிற முயற்சியில் அவர்களை ஈடுபடுத்தலாமா என்ற ஆலோசனையை, இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் உங்களுக்கு நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டவிரும்புகிறேன்.

அடுத்து 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற வினாவை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். அது தொடர்பாக ஏற்கெனவே 6 மாவட்டங்களில் District Consumers' Disputes Redressal Forum என்கிற வகையில் மாவட்ட அளவிலேயும் அதுபோல ஸ்டேட் கவுன்சில் என்ற வகையில் மாநில அளவிலேயும் ஏற்பாடு செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசு சில சட்டச் சிக்கல் காரணமாக அதை ஏற்றுக் கொள்ளாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.

19-00 மணி

இன்னொரு புறத்தில் இந்தியாவினுடைய உச்ச நீதி மன்றத்திலே வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது இது தொடர்பாக இடைக் காலத்தில் நாம் வேறு ஏற்பாடு செய்ய வேண்டும் என்கின்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து கொண்டு எஞ்சி இருக்கின்ற 15 மாவட்டங்களில் இடைக்கால ஏற்பாட்டிற்கு அங்கே யுள்ள மாவட்ட நீதிபதியைத்தலைவராகக் கொண்டு இரண்டு

அலுவலக சார்பு இல்லாத உறுப்பினர்களை நியமித்து, மூவரு மாக மாவட்டக் குழு என்ற அடிப்படையில் நுகர்வோர்களுக்கு ஏற்படக் கூடிய சங்கடங்களைப் போக்குகின்ற வகையில் அவர்கள் இந்தச் சட்டத்தை மையமாக வைத்து சட்டத்தின் அடிப்படையிலே செயல்படுவதற்கு இந்த அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதுபோன்று தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம். இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றக் கூடியவர்கள் 9,963 பேர் ஆகும். நமக்கு வேண்டிய நெல் மற்றைய அத்தியாவசியப் பொருள்களை கொள்முதல் செய்கிறது. இந்த நுகர் பொருள் வாணிபக் கழகம் 19 நவீன அரிசி ஆலைகளை—3,96,000 மெட்ரிக் டன் அறவைத் திறன் உள்ள 19 நவீன ஆலைகளை—நடத்திக் கொண்டிருக்கிறது. அத்தோடு இந்த ஆண்டு 112.50 இலட்சம் மதிப்புள்ள 25 நேரடி கொள்முதல் நிலையங்களையும் 5சேமிப்புக் கூடங்களையும் கட்டவிருக்கிறது என்கின்ற செய்தியை இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்தோடு கட்டுப்பாடற்ற பொருள் களை நியாய விலையிலே பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்காக 95 அமுதம் பல்பொருள் அங்காடிகளையும் நடத்திக் கொண்டிருக்கிறது. 333 மதுபானக் கடைகளையும் நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்திக் கொண்டிருக் கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சில அறிவிப்புகளை இந்தத் துறையின் சார்பாக உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். கிராமத்திலே உள்ள நியாய விலை அங்காடிகளில் பணிபுரிகின்றவர்கள் 250 ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள். 250 ரூபாய் சம்பளம் பெறுகின்ற காரணத்தினாலேதான் சில தவறுகளைக் கூட அவர்கள் செய்து விடுகிறார்கள். எனவே தவறுகளை நீங்கள் சுட்டிக்காட்டுங்கள். தவறுகளுக்காக நடவடிக்கை எடுங்கள். ஆனால் அதே கட் டத்தில் அவர்களுடைய வாழ்க்கையையும் இந்த அரசு கவனத் திலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப் பினர்கள் எல்லாம் பேசினார்கள். இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசிய நேரத்தில் அவர் களும் இந்த நியாயத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொண்டு முதல் கட்டமாக 250 ரூபாய் அளவில் தொகுப்பு ஊதியமாகப் பெற் றுக்கொண்டு ஏறத்தாழ 17,382 நியாயவிலைக் கடைகளிலே பணியாற்றக்கூடிய அந்த அலுவலர்களுக்கு 250 ரூபாய் தொகுப்பு ஊதியம் என்பது 350 ரூபாயாக உயர்த்தப்படு கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அத்தோடு இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் திறமையாகச் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் முதல் கட்டமாக இந்தச் சம்பள உயர்வை செய்திருக்கிறோம். அவர்கள் மிகச் சிறப்பாகச்செயல்பட்டு இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்களை, பொது விநியோகத் திட்டத்தை சிறப்புற நடத்துவதற்கு அவர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இது தொடர்பாக பேசிய உறுப்பினர்களும் அவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பயிற்சி பட்டியல் எழுத்தாளர்கள் அப்ரெண்டீஸ் டிரெய்னீஸ் உபரியாக உள்ளவர்கள் 1,164 பேர்கள் ஆகும். இவர்களில் இப்போது உள்ளவர்கள் 1,044 பேர்கள் ஆகும். இவர்களுக்கு தொகுப்பு ஊதியமாக 350 ரூபாய் கொடுக்கப்பட்டு ஆங்காங்கே அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை நீண்ட காலமாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளாலும், மற்றவர்களாலும் எழுப்பப்பட்டுவந்தது. நம்முடைய வரதராஜன் அவர்கள்கூட குறிப்பிடுகின்றபோது பல்வேறு தொழிலாளர்களுடைய நிலைமை குறித்து எடுத்துச் சொல்லி அவர்களுக்கெல்லாம் சம்பளம் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் இதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்துகொண்டு இப்போதுள்ள 1,044 பேரில் காலியாக உள்ள 650 இடங்களுக்கு இவர்களையே நிரந்தரப்பணியில் நியமித்து அவர்களுக்கெல்லாம் டைம்ஸ் ஸ்கேல்—காலச் சம்பளம் வழங்குவதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

19-05 மணி

அடுத்து, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்கள் 5,618 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சேமிப்புக் கிடங்குகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி தொடர்ந்து சொல்லப்பட்டு வந்த கருத்துக்கள், 10 ஆண்டுக் காலமாகப் பணியாற்றுகிறார்கள். ஆனால் நிரந்தரமாக்கப்படவில்லை என்ற கோரிக்கை எழுப்பப்பட்ட நேரத்தில் கடந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட மன்றத்திலே உறுதியளித்து இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணி நிலைமைகள் என்ன என்று ஆராய்ந்ததில், அந்தப் பணி நிலைமை என்பது. எந்த நேரத்தில் அவர்கள் அதிகமாகப் பணியாற்றுகிறார்கள். எந்தக் காலக்கட்டத்திலே அவர்கள் பணிக்கு வரவேண்டும் என்பதிலே எல்லாம் வேறுபாடு இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சில நேரங்களில் அவர்கள் பகல் முழுவதும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இரவு நேரங்களிலே பணியாற்றுகிறார்கள். சில நேரங்களில் வேலையே இல்லாமல் இருக்கிறார்கள். ஏற்றுவதற்கு, இறக்குவதற்கு என்று மாறி, மாறி ஊதியம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். 10 ஆண்டுக் கால பணியாற்றியவர்கள் யார் என்பதற்கு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் அதை அவர்களாலே சரியாகக் கொடுக்க இயலவில்லை. இப்படி பல்வேறு சங்கடங்கள் அவர்களை நிரந்தரமாக்குவதில் பிரச்சினைகளாக, தடைக்கல்லாக இருந்து கொண்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் அவர்களை நிரந்தரமாக ஆக்கவேண்டும் என்று விரும்பினாலும், இந்தச் சங்கடங்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே நடைமுறையில் இவைகளையெல்லாம் போக்கிவிட்டு அவர்களை நிரந்தரமாக்கினால்தான் அது ஒரு பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும். அந்த வகையிலே தான், இந்தச் சங்கடங்களைப் போக்குவதற்காகத்தான் இந்த அரசாங்கம் ஒரு குழுவினை நியமித்து, அந்தக் குழு மூன்று மாத கால அவகாசத்தில், அந்தப் பணி நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து, இந்த அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்யும். அந்த அறிக்கையை மையமாக வைத்து, அந்த அறிக்கையின் அடிப்படையில் 5,618 தொழிலாளர்களில் யார், யார் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணி செய்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அடுத்து, பச்சரிசி, புழுங்கலரிசி பற்றி.....

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காக. அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவது பற்றி கடந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வானொலியிலே உரை நிகழ்த்தியபோதே, குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது 10 ஆண்டுகள் பணி முடித்த விவரங்களை அவர்கள் அளிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அந்த சேமிப்புக் கிடங்குகளிலே அந்தப் பதிவுகள் இருக்கவேண்டுமே, அது ஏன் இல்லை இந்தக் குழு எப்போது அமைக்கப்பட்டது? அல்லது இப்போது தான், இனிமேல்தான் அமைக்கப்படுகிறதா? ஒரு காலவரையறைக்குள்ளே அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவதைப் பற்றி உத்தரவாதம் அளிக்கமுடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்குறுதி அளிக்கப்பட்டது உண்மைதான். மாற்றமே இல்லை. ஆனால் அவர்களை எப்படி நிரந்தரம் செய்யவேண்டும் என்பதில் பல்வேறு குழப்பங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருகிறது. அவர்களுடைய பணி

நிலைமைகள் என்பது பிரத்யேகமாக இருக்கிறது. அப்படிப் பட்ட நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கையில் அவர்கள் 10 ஆண்டுக் காலம் பணி செய்தோம் என்று சொல்கிறார்களேயல்லாமல், அதற்கான விவரங்கள் எல்லாம் முழுமையாகக் கிடைக்கவில்லை. அதானாலேதான் அதைப் பிரத்யேகமாக, தனிப்பட்ட முறையில் எடுத்து ஆராய்ந்து, விவரங்களைச் சேகரித்து, கால நீட்டிப்பு கூடாது என்பதற்காகத் தான் மூன்று மாத கால அவகாசத்திலேயே அந்தக் குழு அமைக்கப்பட்டு, தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளும் அந்தக் குழுவிலே இடம் பெற்று அவர்கள் அந்த விவரங்களைச் சேகரித்து பின்னால் உடனடியாக அந்த விவர அறிக்கையின் அடிப்படையில் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அடுத்து.......

19-10 மணி

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, ஊழியர்களுடைய சம்பள உயர்வு என்ற பிரச்சினை வந்ததனாலே, இந்த நேரத்திலே ஒன்றை தெரிவிக்கவேண்டும் என்பதனாலே சொல்கிறேன். நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஊழியர்கள் ஊதிய விகிதங்களை சீரமைத்தல் சம்பந்தமாக 31-10-1989-இல் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு ஊழியர் முன்னேற்றச் சங்கத்திற்கும், அரசினுடைய கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்களுக்கும் இரண்டு பேருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு, பல்வேறு சம்பள விகிதங்கள் இதிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அறிவிக்கப்பட்டு, அந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு இரண்டு தரப்பிலும் ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், எல்லாவிதமான சங்கங்களுக்கும் அந்தச் சம்பள விகிதங்கள் 31–10–1989-லேயிருந்து தரப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரையில் எந்தச் சங்கத்திலேயும் அந்தச் சம்பள விகிதம் தரப்படவில்லை. ஒரு அரசு கூட்டுறவு அதிகாரியே பேச்சுவார்த்தை நடத்தி, சங்கங்களின் பிரதிநிதிகளை வைத்து முடிவு எடுத்ததற்குப் பின்னால் அறிவிக்கப்பட்டு இவ்வளவு நாட்கள் ஆன பின்னாலும் இது அமல் செய்யப்படவில்லை. ஆனால் இங்கே அறிவிக்கப்பட்டு இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் 29 சங்கங்கள் இருக்கின்றன. அதிலே ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம் மட்டும் தான் இந்த சம்பள விகிதத்தை ஏற்று தருகிறது. பாக்கி எந்தச் சங்கமும் தரவில்லை. அந்தத் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு ஊழியர் முன்னேற்றச் சங்கம் திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கத்தினுடைய பேரவையோடு இணைந்த

கூட்டுறவுச் சங்கம். அந்த சங்கத்தின் சார்பில் இந்த ஒப்பந்தம் நடைபெற்று இருக்கிறது. ஆனால் இதுவரையிலே நீங்கள் அமல் செய்யவில்லை. ஏன் அமல் செய்யவில்லை? என்ன காரணத்தால் இது தடுக்கப்பட்டது? எந்த நிலையில் இது தடுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் சம்பளம் என்று வருகிற காரணத்தால் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன. முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் நுகர்பொருள் வாணிபக் கழகம் பற்றி சொல்லிக் கொண்டு இருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் உள்ள பணியாளர்கள் பற்றிய விவரங்களைக் கேட்கிறார்கள். அதுபற்றிய விவரத்தையும் நான் கூட்டுறவுத் துறை பற்றிப் பேசுகிறபோது குறிப்பிட விரும்புகிறேன். இதை முடித்த பின்னால் அந்த விவரங்களைப் பற்றி பேசுகிறபோது அது தொடர்பான செய்திகளை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே. ,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிச்சாமி உட்காருங்கள். அதாவது முன் வரிசையில் இருப்பவர்கள் பெரியவர்கள், அவர்கள் ஏதோ ஒரு விளக்கத்தைக் கேட்கிறார்கள். நீங்கள் எல்லோரும் எழுந்து கொண்டால் அப்புறம் அமைச்சர் முடித்த பிறகு யாருக்கும் வாய்ப்பு இல்லாமல் மானியக் கோரிக்கையை உடனே படிக்க வேண்டியிருக்கும். உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், பின்னால் நீங்கள் கேட்கலாம், அதற்கு அமைச்சர் கண்டிப்பாகப் பதில் சொல்வார்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, முன் வரிசையில் இருப்பவர்கள் பெரியவர்கள் என்று சொன்னால் எங்களை வயதானவர்கள் லிஸ்டில் சேர்க்கப் போகிறீர்களா என்ன என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் வீட்டில், நான் அதைப் பாதுகாப்பாக, விடையாகச் சொல்வேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சை அரிசி, புழுங்கல் அரிசி பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பூவராகன் அவர்கள் சொன்னார்கள். அவர் தெரிவிக்கின்றபோது ஏதோ ஒட்டு

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 ஏப்ரல் 16

மொத்தமாக புழுங்கல் அரிசி தரப்படவில்லை என்ற தொனியில் அவர்கள் இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம் ஒரு காலக் கட்டத்தில் நாம் வெளி சந்தையில் வாங்குகிற அரிசியும், ஆந்திராவில் வாங்கினாலும், பஞ்சாப்பில் வாங்கினாலும் அவைகள் பச்சை அரிசியாகத்தான் கொடுக்கப்படுகிறது. மத்திய தொகுப்பில் இருந்து வருகின்ற அரிசியும் பச்சை அரிசியாகத்தான் நமக்கு கிடைத்தது. அதனால்தான் நாம் ஒரு காலக் கட்டத்தில் பச்சை அரிசியை எல்லா மட்டத்திலும் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோம். இந்தக் குறைபாடுகள் எடுத்து தெரிவித்த பின்னாலே இந்த அரசு அது தொடர்பாக ஆழமாகச் சிந்தித்து மத்திய அரசோடு கலந்து ஆலோசித்து இப்போது என்ன நிலையை உருவாக்கி இருக்கிறது என்றால் நீலகிரி மற்றும் 8 தென் மாவட்டங்களில் புழுங்கல் அரிசி 75 சதவீதம் வழங்கப் படுகிறது. மற்ற மாவட்டங்களில் புழுங்கல் அரிசி 50 சதவீதமும், பச்சை அரிசி 50 சதவீதமும் வழங்கப்படுகிறது. சென்னையில் 75 சதவீதம் பச்சை அரிசியும் 25 சதவீதம் புழுங்கல் அரிசியும் வழங்கப்படுகிறது. காரணம் என்ன என்றால் சென்னை, தர்ம புரியில்தான் பச்சை அரிசி அதிகமாக விரும்பிச் சாப்பிடுகிறார் கள். எனவே, 75 சதவீதம் பச்சை அரிசியும், 25 சதவீதம் புழுங்கல் அரிசியும் சென்னையில் வழங்கப்படுகிறது. 100 சதவீத பச்சை அரிசி தர்மபுரி மாவட்டத்திற்கு வழங்கப்படுகிறது. அங்கே பெரும்பாலும் பச்சை அரிசியை தான் அவர்கள் விரும்பிச் சாப்பிடு கிறார்கள்.

அடுத்து தவிட்டிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுக்கும் ஆலை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக ஒரு கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ 100 பேருக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய 2 ஆலைகள், ஒன்று தஞ்சை மாவட்டத்திலும், இன்னும் ஒன்று மதுரை மாவட்டத்திலும் நிறுவப்பட இருக்கிறது என்கிற நல்ல செய்தியை உங்களுக்கு நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, 25 நேரடி கொள்முதல் நிலையங்கள், 5 சேமிப்பு கிடங்குகள் 112.50 லட்சம் ரூபாய் செலவில் நடப்பு ஆண்டில் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன். எனவே உணவுத் துறையைப் பொறுத்தவரையில் இந்த சிறப்பான நடவடிக்கைகளோடு நியாய விலைக் கடைகளில் எல்லாப் பொருட்களும் கிடைக்கிறது என்ற வகையிலும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த அரசு ஓரளவுக்கு வெற்றி கண்டு இருக்கிறது. பொது வினியோகத் திட்டத்தில் சிறப்பாக எல்லோருக்கும் எல்லா அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கின்ற வகையில், வரிசையிலே நின்றுதான் வாங்கவேண்டும்

1990 ஏப்ரல் 16] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

19–15 மணி.

என்கின்ற நிலைமையை மாற்றி, எப்போது வேண்டுமானாலும் வாங்கலாம் என்கின்ற நிலைமையை உருவாக்கி, எடைக் குறைவு இல்லாமல், தரக்குறைவு இல்லாமல் அந்தப் பண்டங்களை வழங்கு வதற்கான ஏற்பாடுகள் இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கின்றதுஎன் பதையும் உங்களுக்கெல்லாம் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில், கூட்டுறவுத் துறை நாட்டு மக்களுக்கு எந்த அளவுக்கு தேவைப்படுகிற மிக முக்கியமான, அத்தியாவசியமான துறையாக இருந்தாலும் உறுப்பினர் பலர் எடுத்துக் காட்டிய தைப் போல இந்தத் துறை இடைக் காலத்திலே பாழ்பட்டு இருக் கிறது. அதனாலேதான் இதை ரீ-கன்ஸ்ட்ரக்ஷன் அண்டு டெவ லப்மெண்ட் என்ற முறையிலே இதிலே ஒரு புதிய நிலைமையை உருவாக்கித்தான் வளர்ச்சியைச் செய்யக்கூடிய நிலைமை இந்தக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் இடைக்காலத்திலே ஏற் பட்டுவிட்ட நிலைமைகள் தான் இந்தக் கூட்டுறவுத் துறையையே ஒட்டுமொத்தமாக சிதறடிக்கத்தக்க வகையில் நிலைமைகள் படு மோசமாக கடந்த காலத்திலே இருந்ததுதான் இதற்குக் காரணம் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புக் றேன்.

குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன், இவைகளை யெல்லாம் கூட்டுறவுத் துறையிலேயுள்ள தமிழ்நாடு மாநில தலைமை வங்கி, அதன் மூலமாக மாவட்ட வங்கி, அதைத் தொடர்ந்து கிராமிய வங்கிகள், அதனைத் தொடர்ந்து நகர வங்கிகள் எல்லாம் இந்தக் குறுகிய காலக்கடன், மத்திய காலக் கடனை வழங்கிக் கொண்டிருக்கின்றன. நீண்டகாலக் கடனைப் பொறுத்தமட்டில் லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க், நில அட மான வங்கிதான் நீண்டகாலக் கடனை இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறது. நில அடமான வங்கிகளைப் பொறுத்த மட்டில் சிக்கலான ஒரு கட்டத்திலே இருந்து கொண்டிருக்கின் றன. 181 வங்கிகள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. 181 வங்கிகளிலே 14 வங்கிகள்தான் கடன் திரும்பக் கொடுக்கக்கூடிய நிலையிலே இருக்கின்றன. பாக்கி வங்கிகளெல்லாம் நலிந்து போன வங்கிகளாக, மறுநிதி பெறமுடியாத வங்கிகளாகத்தான் தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, இந்த நிலவள வங்கியைப் பொறுத்தமட்டில், இந்த அரசாங்கம் சிந்தித்து, நிலவள வங்கிகளை மேலும் வேறு வகையிலே இயக்கிட வேண்டுமென்று முயற்சி செய்து அந்த அடிப்படையிலேதான் நகைக் கடன் வழங்கலாம் என்று

அதிலே இன்றைக்கு நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நகைக்கடன் வழங்குகின்றபோது சுயநிதியை ஆதாரமாக வைத்துத்தான் நகைக்கடன் வழங்க முடியும். நகைக் கடனுக்கு மறுநிதி வசதி இல்லாத காரணத்தினாலே சுயநிதியை வைத்துத் தான் நகைக் கடன் எல்லாம் வழங்கவேண்டிய கட்டம் இருக்கிறது. அது போன்றுதான் நிலவள வங்கிகள், பேங்கிங் ஆக்டிவிடீஸ்-மற்றைய வங்கிகளைப் போல வைப்பு நிதி சேர்த்துக் கொள்வது, மற்றைய வங்கிகளைப்போல நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு மத்திய வங்கி, அதாவது இந்திய ரிசர்வ் வங்கி அதற்கு அனுமதி தரவேண்டும். அந்த அனுமதிக்காக நாம் தொடர்ந்து மத்திய வங்கியையும் நாபார்டையும் கேட்டுக்கொண் டிருக்கிறோம். அந்த நிலைமைகள், அந்த உத்தரவுகள் வந்து விடுமேயானால் மற்றைய வங்கிகளைப் போல இந்த வங்கிகளும் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் நான் உங்களுக்கெல்லாம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

19-20 மணி.

விவசாயக் குடும்பங்களைக் கூட்டுறவில் சேர்த்தல் ஒரு மிக முக்கியமான கட்டம். 1979-80-ல் மொத்த விவசாயக் குடும்பங்கள் 71.51 இலட்சமாகும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் 61.48 இலட்சமாகும். இதிலே 1990 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய மொத்த விவசாயக் குடும்பங்களில் 75.8 சதவீதத்தை கூட்டுறவிலே சேர்த்து இருக்கிறோம். சிறு, மிகச் சிறு விவசாயிகளில் 72.8 சதவீதத்தை இந்தக் கூட்டுறவிலே இன்றைக்குச் சேர்த்து இருக்கிறோம். அது போன்று ஆதிதிராவிடர்கள், இவர்களெல்லாம் நலிந்த பிரிவு மக்கள். இவர்களை கூட்டுறவு இயக்கத்திலே கொண்டு வருவதால்தான் கூட்டுறவு இயக்கத்தினுடைய புனிதமான நோக்கங்கள் நிறைவேறும் என்கின்ற அடிப்படையில் ஆதிதிராவிடர்களுக்கு 100 ரூபாய் அரசாங்கமே பங்கு மானியமாகக் கொடுத்து, ஏறத்தாழ 110 இலட்சம் ரூபாய் பங்கு மானியமாக ஆதிதிராவிடர்களுக்குக் கொடுத்து 1,10,000 ஆதிதிராவிடர்களை கூட்டுறவு இயக்கச் சங்கங்களில் சேர்க்க இருக்கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதுபோல கடன் வழங்குவதில் கூட, கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினருக்குத்தான் கடன்கள் வழங்க வேண்டுமென்று வைத்திருக்கிற விதிகளை, ''நபார்டு'' நமக்கு வழியாகக் காட்டுகிறது. அதன்படி, 20 சதவீதம் நலிந்த பிரிவினருக்கு வழங்கவேண்டும். ஆனால், இங்கே 1990–91 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்கள் 63 சதவீதம், நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நடுத்தரக் காலக் கடன் 95 சதவீதம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் குறிப் பிட்டுக்காட்ட விரும்புகிறேன். அதுபோல, ஆதிதிராவிட, பழங் குடியினருக்கு கடன் வழங்குவதில் கூட, குறுகியக் காலக் கடன்

1989–90இல் 10 சதவீதம், நடுத்தரக் காலக் கடன் 20 சதவீதம் வழங்கவேண்டுமென்று இருந்தாலும், நாம் 7 சதவீதம், 18 சதவீதம் என்ற நிலையை இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே அடைந்திருக்கிறோம். அதுபோன்று, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தில், காமராஜர் மாவட்டத்தில், கடந்த 8–10–1989 அன்று நமது முதல்வர் அவர்களால் அது ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு ஐந்தாண்டுக் காலத் திட்டம். இதற்கு ஒதுக்கப்பட்ட பணம் ரூ. 862.51 இலட்சம் ஆகும். இந்தப் பணத்தில்தான் தன்னுடைய மாவட்டத்திற்கும் பணம் ஒதுக்கவேண்டுமென்று திரு. பூவராகன் அவர்கள் கேட்டார்கள். தென்னாற்காடு மாவட்டமும் வடாற்காடு மாவட்டமும் கோவை மாவட்டமும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதற்கான பிராகிரஸ் ரிப்போர்ட்டை என்.சி.டி.சி. — அதாவது தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு நாம் அனுப்ப வேண்டும். அவர்கள் அதை ஏற்றுக்கொண்ட பிறகுதான் திட்டம் செயல்படுத்தப்படும். இது பரிசீலனை நிலையில் இருக்கிறபோது போன ஆண்டு இதைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது என்.சி.டி.சி.க்கு அந்த ரிப்போர்ட் அனுப்பப்பட்டுவிட்டது. அதை ஏற்றுக்கொண்ட பின்னாலே, இந்தத் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும், வடாற்காடு மாவட்டம் இப்போது பிரிக்கப்பட்டிருப்பதால் அதில் ஏதாவது ஒரு மாவட்டத்திலும் செயல்படுத்தப்படும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, பயிர் ஈட்டுறுதித் திட்டம். இங்கே பேசிய பல உறுப்பினர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தப் பயிர் ஈட்டுறுதித் திட்டம் என்பது, 1985லிருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் பகுதி பகுதியாக, வட்டம் வட்டமாகத்தான் செயல்படும். தனி நபருக்காக செயல்படுவதில்லை. அதில் சொல்லப்பட்டிருக்கிற சில நிபந்தனைகள் பொருத்தமாக இல்லை. உறுதி செய்யப்பட்ட விளைச்சல், சராசரி விளைச்சல் என்றெல்லாம் சில இலக்கணங்களை அதிலே சொல்லியிருக்கிறார்கள். அது நடைமுறைப்படுத்தப்பட முடியாத ஒன்று என்பதால், தமிழக அரசின் சார்பாக சில பொருத்தமான நடைமுறைகளை நாம் தொகுத்து, அவைகளைப் பின் மாற்றி, தனி நபர்கள் கூட அந்த ஈட்டுறுதித் திட்டத்திலே பயன்பெறத்தக்க வகையிலும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அந்தத் திட்டங்கள் மத்திய அரசால், ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னால், அது தனி நபர்களுக்கும் பயன்படும் வகையில் அமல்படுத்தப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நுகர்வோர் கூட்டுறவு இணையம். (Consumers Co-operative Federation) இதுபற்றி சில விபரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நுகர்வோர் கூட்டுறவு இணையம் என்பது தமிழ்நாடு முழுவதும் உள்ள 29 முதன்மைக் கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கும், தொடக்கக் கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கும் இடையேயான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதுதான் இந்த இணையத்தின் பணிகளாகும். இப்போதுள்ள நிலைமைப்படி, ஏறத்தாழ 4 கோடி ரூபாய் மொத்த திட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறது. இதை எடுத்து சீர்படுத்த வேண்டுமென்றுதான் இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டது. எங்கே தவறு இருக்கிறது என்று அலசிப்பார்த்த நேரத்தில், கொள்முதல் செய்யப்படுவதில் அவர்கள் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்பது தெரிந்தது.

19–25 மணி.

அதனால்தான் தவறு ஏற்பட்டு இருக்கிறது என்பதை உணர்ந்த இந்த அரசு கொள்முதல் கொள்கை ஒன்றை வகுத்து அதை இன்றைக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறது. இந்தக் கொள்முதல் கொள்கைப்படி வேளாண்மை விளைபொருட்கள் எல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கவேண்டுமென்றால் வெளி மாநிலத்தில் விளையக்கூடிய காலத்தில்சென்று டெண்டர் முறையில் வாங்கவேண்டுமென்ற கொள்கை இப்போது வகுக்கப்பட்டு இருக்கிறது. அதுபோன்று உற்பத்தி செய்கிற இடத்திலே அதாவது ''மேனுஃபேக்சரிங் சென்டர்'' என்ற அங்கேயே சென்று முதல் விலைக்கே வாங்கி அவற்றை கன்ஸ்யூமர்களுக்குக் கொடுப்பதன் மூலம் அந்த இலாபம் கன்ஸ்யூமர்களுக்குச் சென்றடைகிற வகையில் இந்தக் கொள்முதல் கொள்கை இன்றைக்கு அறிவிக்கப்பட்டு இருக்கிறது. வெளி மாநிலத்திற்குச் சென்று பொருட்களை வாங்குகிறபோது ஒன்று ஒப்பந்தப்புள்ளி மூலமாக வாங்கப்படுகிறது. இல்லை என்றால் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலமாக வாங்கப்படுகிறது. இந்த இரண்டு முறைகளில்தான் வெளி மாநிலத்திலிருந்து பொருட்கள் எல்லாம் வாங்கப்படுகின்றன.

உள்நாட்டில் விளையக்கூடிய அரிசியாக இருந்தாலும், உள்நாட்டில் விளையக்கூடிய பொருளாக இருந்தாலும் அவற்றுக்கு இன்னொரு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. அது என்ன முறை என்றால் மண்டல விநியோக மையம், அதாவது ''ரீஜினல் டிஸ்ட்ரிபூஷன் சென்டர்'' என்ற வகையில் சென்னையிலும், கோவையிலும் இரண்டு மையங்கள் இருக்கின்றன. அதுபோன்று ''ஜாயின்ட் பர்சேஸ் கமிட்டி''. மதுரையிலும், திருச்சியிலும் இருக்கிறது. இவைகள் மூலமாகத்தான் இந்த மாநிலத்தில் வாங்கக்கூடிய பொருட்கள் வாங்கப்படுகிறது என்பதையும் இப்போது வரையறுத்து அறிவித்திருக்கிறோம் என்பதை நான்

1990 ஏப்ரல் 16] *[திரு. பொன். முத்துராமலிங்கம்]*

இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் புதிய கொள்முதல் கொள்கை மூலமாக எந்தத் தவறுகளும் நேராவண்ணம் பாதுகாப்பதற்கும் தவறுகள் இந்தக் கொள்முதலிலே நடைபெறாமல் பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதால் இந்தக் கொள்முதல் முறை இன்றைக்குச் செயல்படுத்தப்படுகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நியாய விலைக் கடைகளை நவீனப்படுத்துகிற வகையில் நியாய விலைக் கடைகள் என்றால் அது பிரத்தியேகமாகத் தெரிய வேண்டும். ஆரம்பச் சுகாதார நிலையம், ஆவின் பால் நிலையம் போன்ற இவைகள் எல்லாம் தனித்து தெரிவதைப்போல் நியாய விலைக் கடைகள் என்றாலும் எல்லோரும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் ஒரு தனித்த அடையாளங்களோடு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவைகள் கட்டப்பட வேண்டுமென்று இந்த அரசு ஒரு முயற்சி மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுபோன்று நலிந்த பிரிவினருக்கும் வேலையில்லா பொறியியல் பட்டதாரிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொள்வதற்கு இந்த அரசு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பழங்குடியினர் மேம்பாட்டுக்காக 31ஆம் தேதி முடிய 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 54,259 பழங்குடி உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து கூட்டுறவுத் தேர்தல். கூட்டுறவுத் தேர்தல் பற்றி இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். கூட்டுறவுத் தேர்தலைப் பொறுத்த மட்டில் நான் பழைய நிலைகளை எல்லாம் எடுத்து விளக்கி நேரத்தை எடுத்துக் கொள்ளவிரும்பவில்லை. இந்த அரசு தெளிவாகச் சொல்லியது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்படும் என்று ஏற்கெனவே அறிவித்தோம். அப்படி அறிவித்தபோது இங்கேயுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சொன்னார்கள். எங்களுக்கு உறுப்பினர்களைச் சேர்க்க வாய்ப்பு இல்லை. எனவே ஒரு காலக்கெடு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை மீண்டும் தள்ளிவைத்தார்கள். தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பது பற்றிய பூர்வாங்கமான பரிசீலனை செய்கிறபோதுதான் சில சங்கடங்கள் எங்களுக்குத் தோன்றியது. 30 சதவீதம் பெண்களுக்கும் 18 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்கும் தந்து தேர்ந்தெடுப்பதில் பல சிக்கல்கள் உருவான காரணத்தால்தான் இந்தச் சிக்கலைத் தவிர்த்துக் கொள்வதற்கு 30 சதவீதம், 18 சதவீதம்

என்பதை ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய நிர்வாகிகளிலே இருந்து நிர்ணயித்தால் ''நான் அஃபிஷியல்'' - தன்னுடைய பதவி வழியாக நிர்வாகிகளாக வரக்கூடியவர்களையும்சேர்த்துப் பார்த்தால் அதிலே பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. அதனாலே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை மட்டும் வைத்து, எதிலே இந்த விழுக்காடுகளை நிர்ணயிப்பார் என்ற ஒரு கேள்விக்குறி எழுந்த நேரத்தில், அதிலே உரிய சட்டமாற்றத்தை நாம் சட்டத்திலே செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானோம்.

19–30 மணி.

எனவே, உரிய சட்ட மாற்றத்தைச் செய்து, இந்தச் தேர்தலை ஆகஸ்டு மாதத்திலே தொடங்கி, நவம்பர் மாத அளவிலே முடிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, ஏற்கெனவே, கடந்த சட்டமன்றத் தொடரிலே நான் இந்த அரசின் சார்பாக அறிவித்திருக்கிறேன். ஆகவேதான், நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கூட்டுறவுத் தேர்தல் வருகிற ஆகஸ்டு மாதத்திலே தொடங்க இருப்பதால், அதற்கு முன்னால், உரிய சட்டமாற்றத்தைச் சட்டத்திலே செய்திட வேண்டும். இந்தத் தொடரிலேயே, சட்டமாற்றம் கொண்டு வருவதற்குத் தயாராக இருக்கிறோம். அந்த வகையில், அந்த சட்ட மாற்றத்தைச் செய்து, ஆகஸ்டு மாதத்திலே தேர்தலைத் தொடங்கி, நவம்பர் மாதத்திலே முடிக்க இருக்கிறோம் என்பதையும், இந்த நேரத்திலே, இதுபற்றி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு என்னுடைய விளக்கமாக நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, கூட்டுறவுக் கடன் தள்ளுபடி. இதுபற்றி விளக்கங்கள் வேண்டுமென்றுச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே கேட்டார்கள். கடன் தள்ளுபடியைப் பொறுத்தமட்டில், சில விவரங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய அரசு, 10 ஆயிரம் ரூபாயும், அதற்கு உள்ளானவர்களுக்கும் கடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற அறிவிப்பு கொடுத்திருக்கிறது. ஆனால், இந்த 10 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி யாருக்கு, சிறு விவசாயிக்கா? பெரிய விவசாயிக்கா என்பதற்கான விளக்கம் அதிலே இல்லை. அதோடு மட்டுமல்லாமல், 2–10–1989க்கு முன்னாலே இருந்த ''ஓவர்ட்யூ அவுட்ஸ்டேன்டிங்'' இதிலே வேறுபாடு இருக்கிறது. ''ஓவர்ட்யூ'' என்கிற அந்த பாக்கியை ஏற்றுக்கொள்கிறார்களா, அல்லது ''அவுட்ஸ்டேன்டிங்'' என்று மொத்தமான பாக்கியை ஏற்றுக்கொள்கிறார்களா என்பதிலே வேறுபாடு இருக்கிறது. மத்திய அரசு தெரிவித்தபடி வணிக வங்கிகள், மண்டல கிராம வங்கிகள்இவைகள் மூலமாக விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடனைத்தான் ரத்து செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுக்கடன்களை

1990 ஏப்ரல் 16] [திரு பொன். முத்துராமலிங்கம்]

பொறுத்த மட்டில், மாநில அரசு, அதற்கானத் திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பினால், அவர்கள் அதை பரிசீலித்து, நிதியுதவி செய்வதாக இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு பத்திரிகையிலேகூட ஒரு செய்தியைப் பார்த்தேன். மாநில அரசுகளின் முதலமைச்சர்களையெல்லாம் அழைத்து, இது தொடர்பாக விரிவாகப் பேசி, ஒரு முடிவினை நாங்கள் தெரிவிக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். இதிலே ''வில்ஃபுல் டிஃபால்ட்'' என்றால், வேண்டுமென்றே கடனைக் கட்டாதவர்கள் என்பதற்கான விளக்கம். வேண்டுமென் மென்றே கடனைக் கட்டாதவர்கள் யார்? ''வில்ஃபுல் டிஃபால்டர்ஸ்'' என்று ''நாபார்டு'' வங்கிக்கு—தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிக்கு— கடிதம் எழுதியிருக்கிறோம். அந்தக் கடிதத்திற்கு பதில் கடிதம் ''நாபார்டு'' வங்கியிலிருந்து எங்களுக்கு வந்திருக்கிறது. என்ன பதில் வந்திருக்கிறது என்றால், கூடிய விரைவில், இந்த ''வில்ஃபுல் டிஃபால்ட்'' என்பதற்கான விளக்கத்தை நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்கிறோம் என்று அங்கேயிருந்து கடிதம் வந்திருக்கிறது. எனவே, இந்த நிலைமையிலேதான், மத்திய ''நாபார்டு''—தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியினுடைய வழிகாட்டுதலையும், மத்திய அரசினுடைய வழிகாட்டுதலையும் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கே நாங்கள் திட்டத்தைத் தயாரித்துக்கொண்டிருக்கிறபோது, ''வில்ஃபுல் டிபாஃல்டர்ஸ்'' என்றால் யார் என்று நாங்கள் நினைவு செய்துகொள்ள வேண்டும். ''ஓவர் ட்யூ அவுட்ஸ்டேன்டிங்'' இதிலேயுள்ள வேறுபாடுகளைத் தெரிந்துகொண்டு அது தயாரிக்கப்படும். அப்படித் தயாரித்தால் தான், நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க முடியும். இந்த நிலைமைகளை நாம் தெளிவு செய்து கொள்வதற்காகத்தான் இன்றைக்கு நாம் அந்த நிலைமைகளையெல்லாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

அடுத்து, நம்முடைய உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இங்கே, 39 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறீர்களே, யார் யாருக்கு அப்படித் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். இதிலே மிகத் தெளிவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்டப்பகுதிகளில் தவணை தவறிய மத்தியகால மாற்றுக்கடன், மற்றும் தவணை நீடடித்த மத்திய கால மாற்றுக் கடன், முழுவதும் ரத்து. அதே போல், குறுகிய கால மற்றும் மத்தியகாலக் கடன்கள் மீதான அபராத வட்டி ரத்து, மூன்றாவது, முடிக்கப்பட்ட நீண்டகாலக் கடன்களுக்கான வட்டி ரத்து. ஆக, எம்.டி.சி. கடன்களும், எம்.டி.சி. (ஆர்.) கடன்களும் 39 கோடி ரூபாய்க்கு இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறது, [என்று அவர்கள் தெளிவாகவே,

சொல்லியிருக்கிறார்கள். ஒதுக்கீட்டிலே, ''நாபார்டு'' வங்கி, அது கூடாது என்று தெரிவித்த பின்னாலேதான், ஒட்டுமொத்த மாக 10 ஆயிரம் ரூபாய்க்கு விளக்கங்கள் மத்திய அரசிடமிருந்து வந்த பின்னரே, இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என்பதையும் நான் இங்கே கடன் தள்ளுபடி தொடர் பான விளக்கங்களைக் கேட்டவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகி றேன்.

19-35 மணி

அத்தோடு சில அறிவிப்புகளையும் உங்களுக்கு நான் இங்கே கொடுக்க விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையின் மூலமாக இந்த ஆண்டு சிறு மருத்துவமனைகள், நர்சிங் ஹோம் கட்டவும், நவீன மருத்துவ உபகரணங்கள் வாங்கவும் வங்கிகள் மூலமாகக் கடன் வழங்கப்படும். 20-லிருந்து 50 படுக்கைகள் உள்ள அந்த மருத்துவமனைகளுக்கு ரூபாய் 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரையிலும் நிதி வழங்கப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு 14 சதவீதம் வட்டி வசூலிக்கப்படும். விவசாயிகளுக்கு ஒரு சவரனுக்கு 1,800 ரூபாய் வரையிலும் நகைக் கடன் வழங்கப்பட்டது. அதை இப்போது இந்த அரசு ரூபாய் 1,800-லிருந்து ரூபாய் 1,900-ம் ஆக உயர்த்தி இருக்கிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாயக் கூட்டுறவு ஊழியர் பயிற்சி நிலையம் மாதவரத்திலே 2.8 கோடி ரூபாயில் உருவாக்கப்பட இருக் கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு நவீனப் பொறியாளர் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆண்டு அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் ஊதிய விகிதச் சீரமைப்பு பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் உ. ரா. வரதராசன் குறிப்பிட்டார்கள். 'ஸ்ட்ரீம் லைன் கமிட்டி ரிப்போர்ட்' அது சிறிய மாற்றத்தோடு இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்கின்ற நல்ல செய்தியை யும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுபோன்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இராதா அவர்கள் அந்த சுற்றறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தச் சுற்றறிக்கை ஒரு அறிவுரையாகத்தான் ஆங்காங்குள்ள தனி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அது ஒரு கைடுலைன்ஸ். அந்த அளவிலேதான் அதை ஒரு வழிகாட்டுகின்ற நிலையிலே பார்த்து முடிவு செய்ய வேண்டும் என்று அனுப்பப்பட்டு இருக்கிறது. பல இடங்களில் அவரவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது ; நிறைவேற்றப் பட்டுக்கொண்டும் இருக்கிறது. எனவே முழுமையாக நிறை

வேற்றப்படவில்லை என்கிற கூற்று சரியான ஒன்றல்ல. இந்த வழி காட்டுதலை மையமாக வைத்து ஆங்காங்கு தனி அதிகாரிகள் தொழிலாளர் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளில் நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறார்கள். சில கோரிக்கைகளில் மாநிலப் பதிவாளர் மட்டத்திலே பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய வரதராசன் அவர்கள் குறிப்பிடுகின்றபோது இங்கே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு இருக்கக்கூடிய நண்பர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம் உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்டு இருக்கிறது. 7 அம்சக் கோரிக்கையை மையமாக வைத்து ஈடுபட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அது எதற்காக இந்த உண்ணாவிரதம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. அவர்களுடைய அந்த வாதப்படியே அவர்கள் 8—4—1990-லே தான் மாநிலப் பதிவாளர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். முழுமையாக அவர்கள் நிராகரிக்கவில்லை. எல்லாக் கோரிக்கைகளுக்கும் பெரும்பாலும் சாதகமான பதிலைத்தான் அவர்கள் தந்து இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் எதற்காக இந்த உண்ணாவிரதம் அவர்கள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஒரு மாத தாமதம் ஆகிவிட்டதாம். இதிலே தான் நீங்கள் கவனிக்க வேண்டும். 8—4—1990-ல் பதிவாளரோடு பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். பதிவாளர் அவைகளை எல்லாம் கவனிக்கிறேன் என்று சொல்லி கிட்டத்தட்ட எல்லாக் கோரிக்கைகளுக்கும் சாதகமான பதிலைத் தான் தந்து இருக்கிறார்கள். இந்த நிலையில் எதற்காக இந்த உண்ணாவிரதப் போராட்டம், என்ன காரணம் கருதி இந்த உண்ணாவிரதப் போராட்டம் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். எனவே, தொழிலாளர்களுடைய போக்கு என்பதில் அவர்கள் உரிமைகளை போராடிப் பெறுவதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. உரிமைகளை வாதாடுவதிலும், போராடிப் பெறுவதிலும் கிஞ்சித்தும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்த எல்லாக் கோரிக்கைகளுக்கும் சாதகமாகப் பதிவாளர் அவர்கள் பதில்தெரிவித்த பின்னாலே மீண்டும் இங்கே உண்ணாவிரதப் போராட்டம், அதுவும் இந்த மானியம் விவாதத்துக்கு வருகின்றபோது உண்ணாவிரதப் போராட்டம் என்பது தேவையற்ற ஒன்று என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்களுக்குக் குறிப்பிட்டு, இந்த விவாதங்களின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய ஐயப்பாடுகளுக்கு இங்கே விளக்கங்களை எல்லாம் நான் தந்து இருக்கிறேன்; அதுபோன்று வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளவர்களுக்கும் பல்

வேறு விளக்கங்கள் இங்கே எடுத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த விளக்கங்களைப் பெற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு கோரிய தொகையை அரசுக்கு வழங்குமாறு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

19-40 மணி

திரு. எஸ். ஆர்.இராதா : தலைவரவர்களே, ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, தொழிற்சங்கத்திலேயிருந்து பிரச்சினைகள் எழுப்பப்பட்டு, பல்வேறு நிலையிலே விவாதிக்கப்பட்டு, கடைசியாக கூட்டுறவுச் சங்கத்தினுடைய பதிவாளரிடத்திலேயும் விவாதத்திற்கு வந்து, அந்த விவாதத்தின் அடிப்படையிலே இரண்டு தொழிலாளர் தரப்பிலேயும், கூட்டுறவுச் சங்கத்தினுடைய தனி அதிகாரிகள் தரப்பிலேயும், கூட்டுறவுச் சங்கத்தினுடைய பதிவாளர் முன்னிலையிலே இந்த ஊதிய ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கப் பேரவையிலே இதற்குப் பாராட்டு தெரிவித்து, நன்றி தெரிவித்து, வெற்றி விழாவெல்லாம் கொண்டாடியதற்குப் பின்னால், ஐந்து மாதங்களுக்குப் பின்னால் இப்பொழுது அது அறிவுரையாக வழங்கப்பட்டிருக்கிறது என்ற நிலையை எடுப்பது சரியான நிலை அல்ல. ஏனென்றால் இதற்குப் பின்னால் இந்த அறிவுரையும் சரியில்லை என்று வேறு ஒருவர் அறிவுரை சொல்லுகின்ற நிலை வரக்கூடாது. எனவே, அறிவுரை ஒரு இடத்திலேதான் இருக்க வேண்டும். அடிக்கடி எல்லோரும் அறிவுரை சொல்வது நல்லது அல்ல.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது ஒன்றும் ஒப்பந்தம் அல்ல. அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தொழிற்சங்கத்திலே ஒப்பந்தம் என்பது வேறு ; அறிவுரைகள் என்பது வேறு. மாநில அளவிலே உள்ள அதிகாரிகள் சில வழி காட்டும் நெறிகளைத் தங்களுக்குக் கீழே பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்குத் தெரிவிப்பது என்பது சாதாரண மரபுகள்தான். அந்த வகையிலேதான், மாநிலப் பதிவாளர் ஆங்காங்குள்ள தனி அதிகாரிகளுக்குச் சில வழிகாட்டும் நெறிகளை அவர்கள் அறிவுரையாக அனுப்பி வைக்கிறார்கள். இது ஒப்பந்தம் ஆகாது. அதிலே கூடத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, 'நுகர்வோர் கூட்டுறவு—கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை — ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்கள் சீரமைத்தல்—அறிவுரைகள்—வழங்கப்படுகிறது.' அவ்வளவுதான் அந்த அளவிலேதான் இது அறிவுரைக் கடிதமாக அனுப்பப்பட்டு இருக்கிறதேயல்லாமல் இதை ஒப்பந்தம் என்று வேறு வகையிலே மொழி பெயர்க்க வேண்டாம், அதனாலே குழப்பம் அடைய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 16]

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, குழப்பம் அடைய வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால், ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டு, இந்தப் பிரச்சினைகளைப் பேசி முடிவு செய்தவர்கள், இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்து வாரி வழங்கிய வள்ளல் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், குப்புசாமி அவர்களுக்கும், சண்முகம் அவர்களுக்கும், இப்படியெல்லாம் நன்றி தெரிவித்து, விழாக்களெல்லாம் நடத்தப்பட்டு விட்டது. அதற்குப் பின்னாலே மறுபடியும் இது அறிவுரை என்ற நிலைக்கு வரக் கூடாது என்பது தான் என்னுடைய கவலை.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : அறிவுரைகள் என்று நான் சொல்லியவுடனேயே, அவைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன என்ற பொருள்படத் தாங்கள் பேசக்கூடாது. அறிவுரைகள் என்றுதான் சொன்னேன், விளக்கம் சொன்னேன். அறிவுரைகள் ஏற்கப்படவும் செய்யலாம்; அறிவுரைகளில் சில நிராகரிக்கப்படவும் செய்யலாம். அது, ஆங்காங்குள்ள நிலைமை கருதி, ஒரு சங்கம், ஒரு வங்கி என்று சொன்னால், அவைகளிலே இருக்கக்கூடிய நிதி நிலையைக் கருதிதான் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படும். இது அரசாங்க அலுவலர்களைப் போல அல்ல. கூட்டுறவு வங்கிகள், மத்திய வங்கிகளில் எல்லாம் நிதியாதாரத்தை மையமாக வைத்துத்தான் சம்பள விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆங்காங்குள்ள நிதி ஆதாரங்களுக்கேற்ப இந்தச் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்கின்ற அடிப்படையில் இந்த அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தென்னாற்காடு மாவட்டத்திலே, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்காக பணம் ஒதுக்கப்பட இருக்கிறது என்று சொல்லப்பட்டிருந்தது. அதை விருத்தாசலத்திலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருந்தேன். இந்த ஆண்டு ஏதோ அவர்கள் திட்டத்தைத் தயாரித்து, 'நபார்ட்'க்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எந்த இடத்திலே ஏற்பாடு செய்வதற்காகத் திட்டம்? ஓராண்டுக் காலமாக இருந்தால் எவ்வாறு நான்காண்டுத் திட்டத்திலே அதைச் செய்ய முடியுமென்றும் அறிய வேண்டும். அதோடு, இந்தப் புழுங்கல் அரிசி மோட்டா ரகம் பழைய விலைக்கே விற்பதிலே அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது? அதில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, செலவினங்களைக் குறைத்து, போக்குவரத்துச் செலவுகளையெல்லாம் மிச்சப்படுத்தினாலே அந்தப் பழைய விலைக்கே மோட்டா ரகத்தை விற்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய அரசு அனுப்புகின்ற அரிசியை நம்முடைய நண்பர் பூவராகன் அவர்களுடைய யோசனையை ஏற்று அவர்கள் இனாமாகவே அனுப்புவார்களேயானால் அதே விலைக்கு விற்கலாம். அல்லது இப்பொழுது அவர்கள் விற்கிற விலையிலே பாதி விலைக்குத் தந்தாலும் அந்த விலைக்கு விற்கலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பூவராகன் அவர்கள், இந்த ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது ஒரு ஊரிலே ஏற்படக் கூடிய திட்டம் அல்ல. ஒரு மாவட்டம் முழுவதும் ஏற்படக்கூடிய ஒரு திட்டம். அந்த மாவட்டம் முழுவதும் அந்தத் திட்டம் அமல்படுத்தப்படும். அந்த வகையிலேதான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதற்கான ப்ராஜக்ட்ரிப்போர்ட்—பூர்வாங்கமான அறிக்கை—மேலே, தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் ஏற்றுக் கொண்ட பின்னாலே, தென்னாற்காடு மாவட்டம் முழுவதும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரையில் ரேஷன் கடைகளில் விற்கப்படுகிற அரிசியினுடைய விலையைப்பற்றிச் சொல்லிவந்தபோது, அதுவும் மத்திய தொகுப்பிலேயிருந்து வரக்கூடிய அரிசி விலையை விடக் குறைந்த விலைக்குத்தான் விநியோகிக்கிறோம் என்று சொன்னார்கள். மோட்டா ரகம் ரூ. 2.44-க்கு வாங்கி 2 ரூபாய்க்கும், சன்ன ரகம் 3.04 பைசாவுக்கு வாங்கி 3 ரூபாய்க்கும், மிகச் சன்ன ரகம் மட்டும் 3.25 ரூபாய்க்கு வாங்கி ரூ. 3.50-க்கு விற்கப்படுவதாகவும் சொன்னார்கள். மேலும் சொன்னார்கள், மோட்டா ரகம் பெரும்பாலும் மதிய உணவுத் திட்டத்திற்குப் போய்விடுகிறது என்று சொன்னார்கள். மத்திய தொகுப்பிலிருந்து வரக்கூடிய அரிசியினுடைய பெரும் பகுதி மிகச் சன்ன ரகம் என்றும் சொன்னார்கள்.

19-45 மணி

ஆகவே, மோட்டா ரகம் விநியோகத்தில் அரசுக்கு நஷ்டம் எவ்வளவு ? சன்ன ரகத்தில் நஷ்டம் எவ்வளவு? மிகச் சன்ன ரகத்தில் லாபம் எவ்வளவு? மொத்தத்தில் நிகர லாபமா நஷ்டமா என்ற புள்ளிவிவரம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மொத்தத்தில் சத்துணவிற்காக அல்லது ரேஷன் கடைகளில் அரிசி விநியோகத்திற்காக, எல்லாவற்றிற்குமாக நாம் தருகிற மானியம் 300 கோடி ரூபாய் என்பது நம்முடைய நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

1990 ஏப்ரல் 16]

திரு. ரா. சொக்கர் : பர்தர் கிளாரிபிகேஷன் இருக்கிறது. ரேஷன் கடைகளில் மத்திய தொகுப்பிலிருந்து வாங்கக்கூடிய அரிசியை விநியோகம் செய்வதன் மூலமாக தமிழக அரசிற்கு லாபமா நஷ்டமா? நான் சொல்கிறேன். மொத்தம் சுமாராக 15 கோடி ரூபாய் லாபம் அதில் வரும். ஏனென்றால், 9 லட்சம் டன் அரிசி வாங்குவதில் மிகச் சன்ன ரகம் அநேகமாக 6 லட்சம் டன் இருக்குமென்று நினைக்கிறேன். 4 அணா லாபம் என்றால் 15 கோடி ரூபாய் லாபம். ஆகவே மாநில அரசு மத்திய அரசிடமிருந்து குறைந்த விலைக்கு அரிசியை வாங்கி ரேஷன் கடைகள் மூலமாக ஏழை எளியவர்களுக்கு விற்று லாபம் சம்பாதிக்கிறது என்ற பகிரங்கமான குற்றச்சாட்டை மறுக்கமுடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே வணிகர்கள் உலவும் பூமியிலிருந்து வருபவர் நண்பர் சொக்கர் அவர்கள். அதனால் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்து லாப நஷ்டக் கணக்கைப் பார்க்கிறார். இது ஒரு அரசு. அப்படித் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது. மொத்தமாக இந்த உணவிற்காக தருகிற மானியத் தொகை எவ்வளவு என்று பார்க்கி கிறபோது ரூ. 300 கோடியை அது தாண்டுகிற காரணத்தால்தான் நாம் இப்படிப்பட்ட நிலையை எடுத்திருக்கிறோம். குற்றஞ் சாட்டுகிறேன், பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறேன் என்று எல்லாம் பராசக்தி வசனம் பேசிப் பயனில்லை (சிரிப்பு).

***திரு உ. ரா. வரதராசன் :** தலைவர் அவர்களே, உண்ணாவிரதம் இருப்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் அவர்கள் தங்களைத் தாங்களே வருத்திக்கொண்டு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சாதகமான முடிவை அரசு மேற்கொள்ளுமானால் மெத்த மகிழ்ச்சி. கூட்டுறவு இணையத்தைப்பற்றிப் பேசுகிறபோது விளக்கத்தை கோர வேண்டுமென்று இருந்தேன். அங்கே வேளாண் விளைபொருள்களை கொள்முதல் செய்ததில் இணையத்திற்கு எந்த நஷ்டமும் இல்லை. கடந்த காலத்தில் ஜவுளி வகைகளை வாங்கிப் பெருமளவிற்குத் தேங்கி இருந்ததால் நஷ்டம் ஏற்பட்டது அந்த நஷ்டம் ஏற்படாமல் இருக்க எதிர்காலத்தில் என்ன நடைமுறையைப் பின்பற்ற இருக்கிறார்கள்? ஏற்கனவே, நஷ்டம் விளைவித்தவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஜவுளி வாங்குவதில் கொள்கை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பிரபலமான மில்களில் தயாரிக்கப்பட்ட துணிகள் மட்டும் கொள்முதல் செய்யப்படும். துணிகள், தரம் மிக்க மில்களின் நிலை ஆகியவற்றை கருத்தில்கொண்டு துணி கொள்முதல் செய்யப்படும். அதோடு மானுபாக்ச்சரிங் சென்டர்,

எங்கே உற்பத்தி செய்கிறார்களோ அங்கே தான் வாங்கப்படும். ஸ்டாக்கிஸ்ட் அல்லது ரீடெய்லர் மூலமாக, மிடில்மேன் மூலமாக வாங்காமல், எங்கே உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கே முதல் விலைக்கு வாங்கப்படும் என்பது தான் இப்போது வகுக்கப்பட்டிருக்கிற கொள்கை. கடந்த காலத்தில் ஸ்டாகிஸ்ட் மூலமாக, ஏஜண்டுகள் மூலமாக வாங்கியதால் தான் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏஜண்டுகள் மூலமாக வாங்குவதில் விலை அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. முதல் விலையில் வாங்குவதை விட இரண்டாவது நபரிடம் வந்து வாங்குகிறபோது அதிகமான விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. இறுதிக் கட்டத்தில் கன்சூமர்களை, வாங்கி உபயோகிக்கிறவர்களை பாதிக்கிறது. அதைத் தவிர்ப்பதற்குத் தான் முதல் கட்ட விலையில் எங்கே உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கே வாங்கப்படுகிறது.

இதிலே ஈடுபட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு கட்டங்களில் பல நடவடிக்கைகள் இப்படிப்பட்ட புகார்கள் மீது எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான தயவு தாட்சண்யமும் இல்லாமல், தொடர்புடைய, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவர் மீதும் கடுமையான நடவடிக்கை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு : தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் செயலாளர் பதவி என்று இருக்கிறது. அவர்களை மற்ற அரசு அதிகாரிகளைப் போல மாற்றுகிற நிலை இல்லாமல், அவர்கள் அங்கே ஆயுள்காலம் முழுவதும் இருக்கலாம் என்ற நிலை இருப்பதால், அங்கே ஒரு யதேச்சாதிகார நிலை ஏற்பட்டு, வங்கிகளில் சுதந்திரமற்ற நிலை ஏற்பட்டு, தனி அதிகாரிகள் கூட செயலாளர் என்ன சொல்கிறாரோ அதன்படி நடக்கிற நிலை இருக்கிறது. அவர்களை மாற்றுகிற அளவிற்கு, மாவட்ட அளவில் இருக்கிற செயலாளர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றுகிற ஒரு நிலை ஏற்பட்டால் வங்கிகளில் சுதந்திர நிலை ஏற்படும். அந்தவகையில் மாற்றத்தை அவர்களுக்கு ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

19-50 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் ஒரு சங்கத்தினுடைய பை-லாஸ், துணை விதிகளிலே வரக்கூடிய விவரங்கள். அந்தச் சங்கம் எப்படி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது, அதற்கான துணை விதிகள் என்ன என்பதை எல்லாம் இந்த அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 16]

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுமை தூக்கும் தொழிலாளர்கள் இந்த ஆண்டு மட்டும் லாரியிலிருந்து ஏற்றி இறக்குகிறபோது மூட்டை விழுந்து 4 பேர்கள் இறந்து இருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஒருவர் இறந்திருக்கிறார். 5 பேர்கள் இறந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கூட்டுறவிலே வருகிறதா, உணவிலே வருகிறதா ?

திரு. ஜி. பழனிச்சாமி : கூட்டுறவிலேதான் வருகிறது. ஆகவே அந்தக் குடும்பங்கள் நிர்கதியாக இருக்கின்றன. அந்தக் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அந்த 4 பேர்களுடைய பெயர்களை இதுவரையில் எழுதி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களா என்ற தகவலை அவரிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : இல்லை, நான் அந்தமாதிரி அனுப்பவில்லை. ஒருவருக்கு மட்டும் போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டு இருக்கிறது. மற்றவர்கள் தனியார் மருத்துவமனையிலே இருந்து எடுத்துக்கொண்டு போய் அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேலாவது எழுதி அனுப்புவார்களா ?

*திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் ரேஷன் கார்டுகளை இப்போது கொடுக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட 10 பக்கங்கள் இருக்கின்றன. அந்த உபயோகிப்பாளருடைய அத்தனை விவரங்களும் அதிலே இருக்கின்றன, Self-contained record என்பதைப் போல, அது முறைகேடுகளைத் தடுப்பதற்கு வசதியாக இருக்கிறது. அதைப்போல் நம்முடைய மாநிலத்திலும்—அமைச்சர் அவர்கள் அறிவார்கள்—அப்படிப்பட்ட ஒரு Self-contained ration கார்டை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே உள்ளதைப் போல இங்கேயும் அதற்கான விவரங்கள் சேகரிப்பதற்கான முயற்சியில் ஒருமுறை ஈடுபட்டு, எதற்காக நாம் ரேஷன் கார்டுகளில் விவரங்களைச் சேகரிக்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்டு பொதுமக்கள், பல்வேறு விவரங்களைக் கொடுத்ததன்

மூலமாக தமிழகத்தினுடைய ஜனத்தொகை இரட்டிப்பாக ஆகக்கூடிய சூழ்நிலை அன்றைக்கு உருவாகிவிட்டது. எனவே தான் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் இப்போது உள்ள ரேஷன் கார்டுகளை வைத்துக்கொண்டு மேலும் பல விவரங்களைச் சேகரித்து அந்த ரேஷன் கார்டுகளிலே சேர்க்க முடியுமா என் பதைப் பற்றி அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அரிசியினுடைய விலையேற்றத்தைப் பற்றி, அந்த விலையேற்றம் ஆரம்பிக்கப் பட்டபோதே அடுத்தநாளே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த விலையேற்றம் பல லட்சக்கணக்கான ஏழை மக்களை கடுமையாக பாதிக்கும் என்பதை நாங்கள் தெரியப் படுத்தினோம். அதற்கான தீர்மானத்தையும் நாங்கள் அரசாங்கத் திற்கு அனுப்பி வேண்டுகோள் விடுத்தோம், இந்த விலையேற்றத் தைக் கைவிடவேண்டும் என்று. இப்போதும் இந்த மானியத்தின் பேரில் விவாதிக்கும்போதும், இதற்கு முன்னாலே பட்ஜெட் பொது விவாதத்திலும் இந்த விஷயத்தை நாங்கள் சுட்டிக் காட்டி னோம். இந்த விலையேற்றம் பல லட்சக்கணக்கான மக்களை— கடைசியில் 1.75 ரூபாய் விலைக்கு அரிசியை வாங்கி சாப்பிடக் கூடியவர்கள் தான் பெரும் பகுதியான மக்கள்—அவர்களைப் பாதிக்கக்கூடியது. இது சரியில்லை என்றும் எடுத்துக் காட்டினோம். இப்போதும் இந்த விவாதத்தில் பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். நாங்களும் எடுத்துச் சொன்னோம். மாண்புமிகு உறுப்பினர் உ. ரா. வரதராசன் அவர்கள் கடைசியாக இந்தச் சமயத்திலாவது இதற்கு நீங்கள் ஒரு உறுதிமொழி கொடுப்பீர் களா என்று கேட்டார்கள். ஆனால் அரசு சம்பந்தப்பட்ட வரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும், இதை கைவிடுவதற்கு இல்லை என்று உறுதியாக இருக்கிறார்கள் என்பது தெரிய வருவ தால்..........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆக்ஷனுக்கு முன்னாடி பேசிவிடுகிறேன். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இந்த அரிசி விலை உயர்வால் ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்கள். தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியதாகவும் சொன் னார்கள். அந்தத் தீர்மானத்தை நாங்கள் அலட்சியப்படுத்த வில்லை. ஏழைகள் எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தோம். அவர்கள் கேரளாவிலும் இருக்கிறார் கள், மேற்கு வங்காளத்திலும் இருக்கிறார்கள் என்ற தகவல் வந்தது. அங்கே இதைவிட அரிசி விலை அதிகம் என்ற செய்தியும் கிடைத்தது. எனவேதான், அந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, கேரளாவிலேயும், மேற்கு வங்காளத்திலும், இந்த மாதிரியான அரிசி விலையேற்றம் இருக்கிறது என்று சொன்னார்கள். கேரளாவிலும் மேற்கு வங்காளத்திலும் எப்படி அவர்களை, ஏழை மக்களை பாதுகாப்பதற்கு, அவர்களுக்கு இருக்கிற சக்தியை வைத்து அவர்கள் எப்படி வினியோகம் செய்து இருக்கிறார்கள் என்பதை, விளக்கமான விவரத்தை இங்கே நான் வைத்து,விவாதிக்கக்கூட தயார்,என்னை அனுமதித்தால்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதே விலைக்கு இங்கே என்ன வினியோக முறை வேண்டும் என்று சொல்கிறார்களோ, அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். கேரளாவிலும் மேற்கு வங்காளத்திலும் என்ன வினியோக முறை இருக்கிறதோ, அதைச் சொல்லுங்கள். அதைச் செய்கிறோம், விலையை மாத்திரம் ஒத்துக் கொள்ளுங்கள்.

19-55 மணி.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, விலையை மட்டுமல்ல. இங்கு இருக்கும்படியான மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகப்படுத்துவதற்கு எப்படிச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதுதான். விலை என்பது அந்த வாங்கும் சக்தியோடு இணைந்தது. அந்த நிலையும் இருப்பதனுடைய காரணத்தால்தான் நான் சொல்கிறேன். அரசுக்குக் கஷ்டம் இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. அரசுக்கு அதிகப்படியாக பணச் செலவு ஏற்படுகிறது என்பது அல்ல. கேரளாவில் இருக்கக் கூடிய பொருளாதார நிலைமை இதைவிட கடுமைதான். அப்படியிருந்தும் எப்படி அந்த வாங்கும் சக்தியைப் பாதுகாத்துக் கொண்டே, முடிந்த அளவிற்கு பாதுகாத்துக் கொண்டே, அவர்கள் அந்த மக்களுக்கு வினியோகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் நாங்கள் இத்தனையும் கேட்டோமே தவிர, வேறு விதமான அடிப்படையில் அல்ல.

ஆகவே இதற்கு எங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்து நாங்கள் வெளி நடப்பு செய்கிறோம்.

(மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே உறுப்பினர்களுடைய வாங்கும் சக்தி வெகுவாகக் குறைந்து கொண்டிருக்கிறது. (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்கும் சக்தி இருப்பதனால்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். வாங்கும் சக்தியை இழந்தவர்

களானால் நாம் விவாதத்தை முடித்துவிடலாம், எனவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கேரளாவையும் வங்காளத்தையும் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பக்கத்திலே இருக் கின்ற ஆந்திராவிலே இருக்கின்ற அரிசி நிலைமையைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அன்றைக்கே சொல்லிவிட்டேன். சொன்ன பிறகு அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அன்றைக்குச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டை யன் அவர்கள் பேசும்போது வெகு அழகாகக் குறிப்பிட்டார்கள். கர்நாடகத்திலே காங்கிரஸ் ஆட்சிதான். வேறு இடங்களில், கேரளத்திலே வேறு கட்சி ஆட்சிதான். அங்கெல்லாம் விலை அதிகமாக இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகின்றார்கள். ஆந்திராவை பார்த்தீர்களா என்று அழகாகக் கேட்டார்கள். நான் அன்றைக்கே பதில் சொன்னேன். ஆந்திராவில் ரூ. 2. எதற்குத் தெரியுமா? ரூ. 500 மாத வருமானமும் அதற்குக் குறைவாக உள்ளவர்களுக்கு மாத்திரம்தான் ரூ. 2-க்கு. அதற்கு மேலும் ரூ. 501 மாத வருமானம் இருந்தால் கூட, விலை ஏறுகிறது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்ற ஒரு கருத்தை நான் ஏற்றுக்கொள் கிறேன். அதே நிலையை தமிழ்நாட்டில் நீங்கள் உருவாக்கு வீர்களானால், அந்த நிலையை நாங்கள் ஏற்றுக்கொள் கிறோம். ரூ. 500 வரையில் இருக்கிற கார்டுகளுக்கு அந்த பழைய விலையில் நீங்கள் போடுங்கள். அதைப் போடுவதற்கு நீங்கள் ஒத்துக்கொண்டால் நிச்சயமாக நாங்கள் ஆட்சேபணை சொல்லமுடியாது. ஆட்சேபணை சொல்லாமல் ஏற்றுக்கொள் கிறோம். தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் ரூ.500 வரையில் இருக்கிறவர்களுக்காவது அந்த பழைய விலையில் அரிசி போடுவதற்கு முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர்களோடு கலந்து பேசி முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

1990 ஏப்ரல் 16]

(அ) கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

திருவாளர்கள் உ.ரா. வரதராசன், எஸ். டி. உகம்சந்த், மற்றும் கே. ரவி அருணன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,88,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல்.

திரு. எம். சீரங்கன் மற்றும் பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,79,33,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (17—4—1990) காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 19.59 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

61. குறிப்பிட்ட சில பொது வளாகங்களுக்கு எஸ்டேட் அதிகாரிகளை நியமிப்பது குறித்து வருவாய்த் துறையின் 8—12—1988-ஆம் நாளிட்ட 2285-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

96. கோரிக்கை எண். 23—கூட்டுறவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

97. கோரிக்கை எண். 35—உணவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

61. குறிப்பிட்ட சில பொது வளாகங்களுக்கு எஸ்டேட் அதிகாரிகளை நியமிப்பது குறித்து வருவாய்த் துறையின் 8—12—1988-ஆம் நாளிட்ட 2285-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

96. கோரிக்கை எண். 23—கூட்டுறவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

97. கோரிக்கை எண். 35—உணவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

61. குறிப்பிட்ட சில பொது வளாகங்களுக்கு எஸ்டேட் அதிகாரிகளை நியமிப்பது குறித்து வருவாய்த் துறையின் 8—12—1988-ஆம் நாளிட்ட 2285-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

96. கோரிக்கை எண். 23—கூட்டுறவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

97. கோரிக்கை எண். 35—உணவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

இணைப்புகள்

(71-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கூட்டுறவுத்துறையின் 1990–91 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகள் மற்றும் இதர பிரிவு மக்களின் சமூக-பொருளாதார உயர்விற்குக் குறிப்பிடத்தக்கதொரு பங்கினை ஆற்றி வருகின்றன. தற்போது அனைத்துப் பிரிவு மக்களையும் உள்ளடக்கிய தம் பன்முகப் பொருளாதார செயற்பாடுகள் மூலம் அவை மக்களுக்கும் பணியாற்றுகின்றன.

2. பொது முன்னேற்றம் :

விவசாயக் கடனுதவி, வேளாண் விளை பொருள் விற்பனை, பொது விநியோகத் திட்டம் ஆகிய இனங்களில் கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடு குறிப்பிடத்தக்கதாகும். கூட்டுறவுத் துறையின் பத்து முக்கிய திட்டங்களில் 1989–90ஆம் ஆண்டிற்கான திட்டம், 31—1—1990 வரை எய்திய முன்னேற்றம், 1990–91-ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவை கீழே குறிக்கப் பட்டுள்ளன.

வரிசை எண், விவரம் மற்றும் அலகு.	1989–90 ஆம் ஆண்டிற்கான திட்டம்.	1989–90 ஆம் ஆண்டில் 31–1–1990 வரை அடைந்த முன்னேற்றம்.	1990–91 ஆம் ஆண்டிற்கான திட்டம்.
(1)	(2)	(3)	(4)
1 குறுகிய கால வேளாண்மைக் கடன்களை வழங்குதல் (ரூபாய் கோடியில்).	250.00	201.26	260.00
2 மத்திய கால வேளாண்மைக் கடன்களை வழங்குதல் (ரூபாய் கோடியில்).	37.55	23.05	40.00
3 குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண்மைக் கடன்களை வழங்கியதில் மொத்தத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப் பட்டவை (சதவீதம்).	66.00	61.4	67.0

வரிசை எண், விவரம் மற்றும் அலகு.	1989–90 ஆம் ஆண்டிற்கான திட்டம்.	1989–90 ஆம் ஆண்டில் 31–1–1990 வரை அடைந்த முன்னேற்றம்.	1990–91 ஆம் ஆண்டிற்கான திட்டம்.
(1)	(2)	(3)	(4)
4 நீண்டகால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல் (ரூபாய் கோடியில்).	30.00	15.55	35.00
5. நகையீட்டுக் கடன்களை வழங்குதல் (ரூபாய் கோடியில்).	520.00	553.12	580.00
6 சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவுக் கடன் வழங்குதல் (ரூபாய் கோடியில்) ..	15.00	14.49	16.00
7 இரசாயன உரங்களை வழங்குதல் (ரூபாய் கோடியில்).	120.00	78.65	120.00
8 வேளாண்மை விளை பொருள்களை விற்பனை செய்தல் (ரூபாய் கோடியில்).	210.00	156.46	250.00
9 கிடங்கு வசதியின் திரண்ட கொள்திறன் (ஆயிரம் டன்களில்).	677	670	690
10 நுகர்பொருட்களை சில்லறை விற்பனை செய்தல் (ரூபாய் கோடியில்) ..	900.00	813.58	1,100.00

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு :

கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான 1988–89ஆம் ஆண்டிற்கான செலவு, 1989–90 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டமதிப்பீடு, திருத்திய மதிப்பீடு மற்றும் 1990–91ஆம்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 16]

ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

திட்டங்களின் விவரம்.	1988–89 ஆம் ஆண்டில் செலவு.	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1989–90.	திருத்திய மதிப்பீடு 1989–90.	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1990–91.
(1)	(2)	(3)	(4)	(5)
அ. மாநில திட்டப்பணிகள் :				
		(ரூபாய் கோடியில்).		
1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள். ..	21.66	2.05	2.01	2.78
2. விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் ..	0.21	0.01	0.01	0.20
3. நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்	3.70	2.24	2.48	0.10
4. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் ..	0.01	0.01	0.01	0.02
5. கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி	0.02	0.02	0.02	0.03
6. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் ..	1.08	1.10	1.10	1.04
மாநிலத் திட்டப் பணிகளின் மொத்தம்	26.68	5.43	5.63	4.17

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 16

(1)	(2)	(3)	(4)	(5)
ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் மற்றும் கிராமிய மின்வசதிக் கழகம் போன்ற தன்னாட்சி நிறுவனங்கள் நிதி உதவி செய்யும் திட்டங்கள்	6.93	0.34	6.39	1.19
திட்டப் பணிகள் மொத்தம் ..	33.61	5.77	12.02	5.36
இ. திட்டத்தில் சேராத பணிகள் ..	49.12	79.41	87.67	35.58
பெரு மொத்தம்	82.73	85.18	99,69	0.94

கூட்டுறவு வேளாண்மைக் கடன்

(குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்)

4. அமைப்பு—

தமிழகத்தில் குறுகிய காலக் கடன் அமைப்பானது மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைத் கூட்டுறவு வங்கி மாவட்ட அளவில் 16 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மைக்கான கடன்களை வழங்காத சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக) மற்றும் கிராம அளவில் 4.655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அடங்கப் பெற்றது.

(1) தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் அதன் பணிகள் :

1905ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராத கடன் வழங்கலில் குறிப்பிடத்தக்க இன்றியமையாத பணியினை ஆற்றி வருகிறது. இது மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். இவ்வங்கி பருவகால வேளாண்மைப் பணிகளுக்கான குறுகிய கால கடன்கள், வேளாண்மை முதலீட்டுக் காரியங்களுக்கான நடுத்தரக் காலக் கடன்கள், நடுத்தரக் கால மாற்றுக் கடன்கள், நெசவுத் தொழிலுக்கான கடன்கள்

1990 ஏப்ரல் 16]

மற்றும் தானியக் கொதுவைக் கடன்கள் ஆகியவற்றிற்கு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி வழங்கும் கடன்களைப் பெற்றுத் தருகிறது. மேலும், இவ்வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு உரவிற்பனை, பொது வாணிபம் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் ஆகியவற்றிற்கு ஈடு செய்யும் காசுக் கடன் ஒப்பளிப்பு மற்றும் சர்க்கரை, நூற்பாலைகளுக்கு நடைமுறை மூலதனம் காலக் கடன் ஒப்பளிப்பு அளிக்கிறது. மேலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பொது வங்கியியல் தேவைகளுக்காக அவை வங்கியில் முதலீடு செய்துள்ள அரசு/பொறுப்பாட்சியர் கடன் பத்திரங்கள், நிலை வைப்புகள் பேரில் அவற்றின் நடப்புக் கணக்கின் மீது அதிகப்பற்று வசதிக்கு ஒப்பளிப்பு அளித்து வருகிறது. இவ்வங்கி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி (டாப்கோ வங்கி), தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து சாகுபடியாளர் இணையம் ஆகியவற்றிற்கு நிதி வசதியை நேரிடையாக வழங்கி வருகிறது. இவ்வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அவற்றின் பண்ணை சாரா பிரிவுக் கடன் வழங்கலுக்கான தொழில் நுட்ப உதவி புரிய ஒரு தொழில் நுட்பப் பிரிவை ஏற்படுத்தியுள்ளது. இவ்வங்கி, முதன் முறையாக உலக வங்கியிடமிருந்து தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமாகப் பெற்ற கடனுதவியை பெரிய கிடங்குகள் கட்டுவதற்காகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), சேலம் சவ்வரிசி உற்பத்தித் தொழிற்சாலை முதலியவற்றிற்கு வழங்கி வருகிறது. கடனை இவ்வங்கி திருப்பிச் செலுத்துவதற்கு அரசு பொறுப்புறுதி அளித்துள்ளது. தமிழகத்தில் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் கூட்டுறவுக் கிடங்கு வசதி திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனமான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி கிடங்குகளைப் பெற்றுள்ள கூட்டுறவுகளின் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம் ஒன்றைத் துவக்கியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில், இவ்வங்கியின் பங்கு மூலதனம், காப்பு நிதி, வைப்புகள் முதலியவற்றில் அடைந்துள்ள முன்னேற்றத்தைத் தெரிவிக்கும் விவரப்பட்டியல் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்.)

வரிசை எண்.	விவரம்.	கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்றுள்ளபடி.			
		30-6-1987.	30-6-1988.	30-6-1989.	31-1-1990.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ..	553.06	556.10	558.27	558.42
2	காப்பு நிதி	1,544.86	1,604.00	1,778.47	1,778.47
3	விவசாயக் கடன்நிலை நிறுத்தும் நிதி (அரசுக் கடன் உள்ளிட்டது.)	1,750.75	1,838.83	1,957.23	1,950.60
4	இதர ஒதுக்கீட்டு நிதிகள்	578.54	537.15	656.79	942.24
5	வைப்புகள்	25,126.53	27,635.72	31,621.74	36,619.96
6	இந்தியத் தலைமை வங்கியிடமிருந்தும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியிடமிருந்தும் பெற்ற கடன்கள்.	10,910.89	26,336.20	31,873.30	36,952.33
7	இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள்.	57.71	108.25	223.72	[illegible]

8	தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து பெற்ற கடன்கள்.	..	..	173.26	319.15
9	மாநில அரசிடமிருந்து பெற்ற கடன்கள்.	132.59	62.54	193.16	186.01
10	முதலீடுகள்	7,369.39	8,628.77	10,290.97	11,552.23
11	கேட்புக் கடன்கள்	400.00	1,240.00	..	6,150.00
12	வழங்கிய கடன்கள்	31,557.37	48,921.91	52,897.57	57,893.61
13	நடைமுறை மூலதனம்	42,394.92	61,323.71	72,077.16	83,019.34
14	நிகர இலாபம்	195.20	345.76	543.62	481.11 (உத்தேசமானது.)
15	வழங்கிய ஈவுத் தொகை (விழுக்காட்டில்).	15	14	(பங்கு ஈவுத்தொகை இன்னும் பிரிக்கப்பட வில்லை.)	
16	இளைகளின் எண்ணிக்கை	34	35	36	36

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 16

(ii) மத்தியக் கூட்டுறவு வங்கிகள்:

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தம் எல்லையில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிற வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பாகும். அதை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தம் பங்கு மூலதனம் ஆதாயத்திலிருந்து ஒதுக்கிய நிதிகள் மற்றும் இட்டு வைப்புகள் அடங்கப் பெற்ற சொந்த நிதி வளத்திலிருந்தும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மூலமாகப் பெறும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடன் ஒப்பளிப்புகளினின்றும் கடன் வழங்கி வருகின்றன. மேலும் அவை தம் எல்லையிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பிற வகைக் கூட்டுறவுகள் ஆகியவற்றிற்கு நிதி உதவி அளிக்கின்றன.

5. தன்னிறைவு பெற்ற கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல்:

குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடன் அமைப்பின் அடிப்படையாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அமைந்துள்ளன. அவ்வாறான 4,655 வங்கிகள் வேளாண்மைப் பணிகளுக்காக குறுகிய காலக் கடனையும், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தர காலக் கடனையும் வழங்கி வருகின்றன. இவ்வங்கிகள் பெருத்த நிதி உதவித் திட்டத்தின்கீழ் சிறுபாசனக் காரியங்களுக்கானகடன்களையும் வழங்கி வருகின்றன. இவ்வகை வங்கிகளைத் தன்னிறைவு பெற்ற அலகுகளாக மாற்றி அமைப்பதற்கான திட்டத்தின்கீழ், தன்னிறைவு பெறாத நிலையிலிருந்த 142 வங்கிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் 104 தன்னிறைவு பெற்ற அலகுகளாக மாற்றப்பட்டுள்ளன. இன்னமும் தன்னிறைவு பெறாத 185 வங்கிகள் தன்னிறைவு பெற்றவையாக மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வைப்புகள் திரட்டலில் பெருமளவு தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதுடன், கடன் வழங்கலையும் பன்முகப்படுத்தி வருகின்றன. கிராம மக்களைக் கவரும் வகையில், வணிக வங்கிகள் வைப்புகளுக்கு அளிக்கும் வட்டி வீதத்தை விட அவ்வகை வைப்புகளுக்கு 2.5 விழுக்காடு அதிக வட்டி அளிக்க அவை அனுமதிக்கப்பட்டுள்ளன.

6. விவசாயக் குடும்பங்களைக் கூட்டுறவில் சேர்த்தல்:

1979–80 ஆம் ஆண்டின் வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் உள்ள மொத்த விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 71.51 இலட்சம் ஆகும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 61.48 இலட்சம் ஆகும்.

1990 ஏப்ரல் 16]

1989-90 ஆம் ஆண்டிறுதிக்குள் மொத்த விவசாயக் குடும்பங்களில் 90 சதவீதத்தினரையும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் 85 சதவீதத்தினரையும் கூட்டுறவுகளில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் வரை, மொத்த விவசாயக் குடும்பங்களில் 75.8 சதவீதத்தினரும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் 72.8 சதவீதத்தினரும், உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7. ஆதிதிராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்:

ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ்க் கொண்டு வரும் நோக்கத்துடன், அவ்வகைக் குடும்பம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொருவரைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராகச் சேர்ப்பதற்கான திட்டத்தை அரசு 1981-82 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் அவர்கள் வேளாண்மைச் சாகுபடிக்காகக் குறுகிய காலக் கடன்களையும், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்காக நடுத்தரக் காலக் கடன்களையும் பெற்று அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள இயலுகிறது. சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக அரசு அத்தகையவர் ஒவ்வொருவருக்கும் 100 ரூபாய் மானியமாக வழங்கி வருகிறது. இதுவரை ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த 1,10,000 நபர்கள் 110 இலட்ச ரூபாய் அரசு மானிய உதவியுடன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டம் தற்போது மத்திய அரசால் ஏற்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டில் மத்திய அரசு ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த 5,092 நபர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க 5,09,200 ரூபாய் மானியமாக அளித்துள்ளது. 1989-90 ஆம் ஆண்டில், மத்திய அரசு ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த 20,000 நபர்களை கூட்டுறவு இயக்கத்தில் கொண்டு வர 20 இலட்ச ரூபாய் மானிய ஒப்பளிப்பு அளித்துள்ளது.

8. கடன் வழங்குதல்:

வேளாண்மை சாகுபடி பணிகளுக்கான குறுகிய காலக் கடன்கள் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்கள் மேற்கொள்வதற்கான நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குவது கடன் கூட்டுறவுகளின் முக்கியப் பணி ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டில், அதாவது 1984-85 ஆம் ஆண்டிலும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1988-89 வரையிலான ஆண்டு இறுதியிலும் குறுகிய கால மற்றும்

[1990 ஏப்ரல் 16

நடுத்தரக் காலக் கடன்கள் வழங்கியதில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:—

ஆண்டு.	குறுகிய கால வேளாண்மைக் கடன்கள்.	விவசாயம் சார்ந்த துணைத் தொழில் களுக்கான நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் கோடியில்)	
1984–85	110.80	17.35	128.15
1985–86	130.88	20.14	151.02
1986–87	162.45	25.32	187.77
1987–88	186.82	34.03	220.85
1988–89	205.04	40.14	245.18

மேலே குறிப்பிட்ட ஆண்டுகளில் வேளாண்மைக் கடன் வழங்கல் சீராக அதிகரித்து வருவதும், இதுவரை வழங்கப்பட்டதில், 1988–89 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்கள் மிகவும் அதிகமென்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

1989–90 ஆம் ஆண்டில் குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம், 1990 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் நாள் வரை எய்தப்பட்ட முன்னேற்றம் மற்றும் 1990–91 ஆம் ஆண்டிற்கான திட்டம் பின்வருமாறு.—

விவரங்கள்.	1989-90 ஆம் ஆண்டுக்கான திட்டம்.	31-1-1990 வரை எய்தப்பட்ட முன்னேற்றம்.	1990-91 ஆம் ஆண்டுக்கான திட்டம்.
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் கோடியில்)
குறுகிய காலக் கடன்கள்	250.00	201.26	260.00
நடுத்தரக் காலக் கடன்கள்	**37.55**	**23.05**	**40.00**

1990 ஏப்ரல் 16]

9. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதல்:

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் (நாபார்டு) வழிமுறைகளின்படி, வழங்கப்படும் மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்கள் அல்லது குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினரின் கடன் தேவைகள் குறித்து உரிய கவனம் செலுத்தி வருகின்றன. 1988–89 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்க்கு வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தரத் காலக் கடனின் அளவும் 1989–90 ஆம் ஆண்டுக்கான திட்டமும், 1990 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரை எய்திய முன்னேற்றமும் பின்வருமாறு:—

1988–89

வரிசை எண், விவரங்கள். (1)	வழங்கப்பட்ட கடன் தொகை. (2)	வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் இதன் சதவீதம். (3)
	(ரூபாய் கோடியில்)	
1 குறுகிய காலக் கடன்கள்	122.02	59.5
2 நடுத்தரக் காலக் கடன்கள்	37.81	94.2

1989–90

வரிசை எண் (1)	விவரங்கள் (2)	இலக்கு (சதவீதம்) (3)	எய்திய முன்னேற்றம்: 1990 ஆம் ஆண்டு சனவரி திங்கள் வரை வழங்கிய கடன்கள். (4)	எய்திய முன்னேற்றம்: வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதம். (5)
			(ரூபாய் கோடியில்)	
1	குறுகிய காலக் கடன்கள்	75	116.74	58.0
2	நடுத்தரக்காலக் கடன்கள்.	95	20.89	90.6

1990—91 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்க்கான பங்கு குறுகிய காலக் கடனில் 63 சதவீதமாகவும், நடுத்தரக் காலக் கடனில் 95 சதவீதமாகவும் இருக்கும்.

10. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல்:—

கடன் கூட்டுறவுகள் பொதுவாக அனைத்து நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு ஆண்டு மொத்தத் கடன் வழங்கும் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினை ஒதுக்குவதன் மூலம் அவர்களுக்குக் கடன் வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. 1988—89 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களில் 7 சதவீதமும், நடுத்தரக் காலக் கடன்களில் 20 சதவீதமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. 1989—90 இல் குறுகிய காலக் கடன்களில் 10 சதவீதமும், நடுத்தரக் காலக் கடன்களில் 20 சதவீதமும் அளிக்கத் திட்டமிட்டதில், 1990 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரை எய்திய முன்னேற்றம் முறையே 7 சதவீதமும், 18.1 சதவீதமும் ஆகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவின்படி, 1990—91 ஆம் ஆண்டிற்கான குறுகிய காலக் கடன்களில் 11 சதவீதமும், நடுத்தரக் காலக் கடன்களில் 21 சதவீதமும் ஆக இருக்கும்.

11. உணவு தானியங்கள் உற்பத்திச் சிறப்புத் திட்டம் :

நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கென இந்திய அரசு உணவு தானிய உற்பத்திச் சிறப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், அரிசி உற்பத்தித் திட்டத்தைச் செயலாக்கத் தமிழ்நாடு தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1988—89 மற்றும் 1989—90இல் இத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கீழ்க்கண்ட எட்டு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன :—

1. செங்கை-அண்ணா
2. வடாற்காடு
3. தென்னாற்காடு
4. தஞ்சாவூர்
5. திருச்சிராப்பள்ளி
6. புதுக்கோட்டை
7. நெல்லை-கட்டபொம்மன்
8. மதுரை

1990 ஏப்ரல் 16]

வடாற்காடு மாவட்டத்தை வேலூர்—அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் என இரண்டு மாவட்டங்களாகப் பிரித்ததன் விளைவாக நடைமுறைபடுத்தும் மாவட்டங்களின் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், நெல் பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு உரிய காலத்தில் போதுமான பயிர் கடன் வழங்குவது கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியப் பணியாகும்.

மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் நெற்பயிர் சாகுபடிக்கான கடன்கள் வழங்குதல் 9 மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகச் செய்யப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 52.45 கோடி ரூபாய் கடன் வழங்கத் திட்டமிட்டதில், 55.87 கோடி ரூபாய் அளவிற்கு முன்னேற்றம் எய்தப்பட்டது. நடப்பு ஆண்டில் அதாவது 1989–90 இல் இத்திட்டத்தின்கீழ் 63.10 கோடி ரூபாய் கடன் வழங்க திட்டமிடப்பட்டதில் சனவரி 90 வரை 64.04 கோடி ரூபாய் அளவிற்கு, ஆண்டுக் குறியீட்டிற்கு அதிகமாகவே, கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இடு பொருட்களை விநியோகிப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் 800 சில்லரை விற்பனை நிலையங்கள் திறக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 812 சில்லறை விற்பனை நிலையங்களைத் துவக்கியுள்ளன. 1988–89 ஆம் ஆண்டில் 53.86 இலட்ச ரூபாய் பெறுமான சிங்க் சல்பேட் என்ற நுண்ணூட்ட உயிர்ச்சத்தையும், ஜிப்சம் மற்றும் களைக்கொல்லி ஆகிய இடு பொருட்களையும் இவை சலுகை விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் சனவரி 90 வரை அவை 194.70 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மேற்குறித்த இடு பொருட்களை விநியோகம் செய்துள்ளன.

12. தேசிய எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம் :

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கவும் பெருமளவிலான அந்நியச் செலாவணியை ஈடுபடுத்திய சமையல் எண்ணெய் இறக்குமதியை குறைக்கவும், இந்திய அரசு 1984–85ல் தேசிய எண்ணெய் வித்து அபிவிருத்தி திட்டத்தை உருவாக்கியது. மீண்டும் 1988–89 ஆம் ஆண்டில் இந்திய அரசு எண்ணெய் வித்து உற்பத்தி முனைப்புத் திட்டம் என்ற மற்றொரு திட்டத்தைத் தொடங்கியது. தமிழகத்தில், மேலே குறிப்பிட்ட திட்டத்தில் நீலகிரி மற்றும் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களும் அடங்கியுள்ளன. எண்ணெய் வித்துச் சாகுபடிக்காக இனங்கண்டுகொள்ளப்பட்ட பயன் துய்ப்பாளர்களுக்குத் தேவையான குறுகிய காலக் கடன்கள் வழங்குவதே இத்திட்டங்களின்கீழ் கூட்டுறவுகளின் பணியாகும். இத்திட்டங்களில் நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி அடங்கப் பெற்றதாகும்

இத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளிலும், 1989–90-ல் சனவரி 90 வரையிலும் கூட்டுறவு மூலம் வழங்கப்பட்ட கடன்களின் அளவுகள் பின்வருமாறு:—

ஆண்டு.	வழங்கப்பட்ட கடன்களின் அளவு (ரூபாய் கோடியில்)
(1)	(2)
1986–87	15.46
1987–88	23.51
1988–89	28.36
1989–90 (சனவரி 1990 வரை)	26.62

13. தவணை தவறிய கடன்கள் :

கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் 1990 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் நாளன்றுள்ளபடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறிய கடன்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

(ரூபாய் கோடியில்)

நாள்.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	கேட்பில் நிலுவையின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1987 சூன் 30-ல்	436.56	289.33	147.23	33.7
1988 சூன் 30-ல்	434.32	255.29	179.03	41.2
1989 சூன் 30-ல்	628.58	402.15	226.43	36.0
1990 சனவரி 31-ல்.	465.08	143.13	321.93	69.2

மாநிலத்திலுள்ள 16 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியினால் வரையறுக்கப்பட்ட அளவிற்குக் கடன் வசூலில் முன்னேற்றத்தை எய்தி வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி

1990 ஏப்ரல் 16]

யிடமிருந்து 1989-90 ஆம் ஆண்டுக்கான கடன் வசதி பெற்றுள்ளன. 1990–91 ஆம் ஆண்டிற்கு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியிடமிருந்து கடன் வசதி பெறுவதற்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 1990 சூன் 30-க்குள் கடன் வசூலில் வரையறுக்கப்பட்டுள்ள முன்னேற்றம் எய்த வேண்டும். விவசாயிகளின் வேளாண்மைப் பணிகளுக்கான கடன் தேவைகளைப் போதிய அளவில் நிறைவு செய்ய ஏதுவாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியிடமிருந்து மறுநிதி பெறும் பொருட்டுத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வசூல் பணியில் முன்னேற்றம் காண்பது இன்றியமையாததாகும்.

14. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம்:

நாட்டில் சில தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சிக்கெனச் செயற்படுத்துவதற்கெனத் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை, பட்டுப் பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற வேளாண்மை சார்ந்த பிரிவுகள் மற்றும் கைத்தறி, கிராமக் கைத்தொழில், கைவினைஞர் தொழில் போன்ற பண்ணை சாராப் பிரிவுகள் முதலியவற்றில் பன்முகப்படுத்தி பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். சங்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

தமிழகத்தில் இத் திட்டத்தைச் செயல்படுத்த காமராசர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தினை 5 ஆண்டுகளில் 862.57 இலட்ச ரூபாய் செலவில் நிறைவேற்ற அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் 8—10—1989 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் துவக்கி வைக்கப்பட்டது. 1989–90 ஆம் ஆண்டில் இத்திட்டச் செயலாக்கத்திற்காக முதலாண்டு உதவியாக அரசு 111.1525 இலட்ச ரூபாய்கள் ஒதுக்கீடு செய்துள்ளது.

இது போன்ற தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மாவட்டமாகத் தென்னாற்காடு மாவட்டத்தை அங்கீகரித்துள்ளது. இதற்கான திட்ட அறிக்கையினைத் தயாரிக்கும் பணி நடேசன் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தென்னாற்காடு மாவட்டத்திற்கான திட்ட அறிக்கை வரைவு பரிசீலனையில் உள்ளது. இதனைத் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும், அரசும் ஏற்ற பின்னர், இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த வேலூர்—அம்பேத்கார் அல்லது திருவண்ணாமலை—சம்புவராயர் இதில் ஏதாவது ஒரு மாவட்டத்தையும் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தையும் அங்கீகரித்துள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் இசைவுடன் திட்ட வரைவுகளை தயாரிக்கும் பணி தகுதி வாய்ந்த கலந்தாய்வு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும்.

15. உள்நிதி ஆதாரங்களை பெருக்குதல் :

வேளாண்மைக் கடன்களை வழங்குவதற்கானத் திட்டம் அதிகரித்து வருவதற்கேற்பத் தேவையான அளவிற்குக் கடன்களை வழங்குவதற்கு வாய்ப்பாகக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தம் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் காட்டி வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மொத்தப் பங்கு மூலதனம் (அரசு பங்கு முதலீடு நீங்கலாக) 1989–90 இறுதியில் 118.22 கோடி ரூபாயிலிருந்து 1990 ஆம் ஆண்டு சனவரி 31 இல் 129.75 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. அவற்றின் மொத்த வைப்புகள் 1988–89 இறுதியில் 1216.62 கோடி ரூபாயாக இருந்தது. 1990 ஆம் ஆண்டு சனவரி 31-ல் 1418.12 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

16. பங்கு மூலதனத்திற்கு அரசு உதவி :

கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான கடன் பெறும் திறனைப் பெறுவதற்காக, அரசு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் தேசிய கிராமக் கடன் (நீண்ட காலக் கடன் திட்டம்) நிதியிலிருந்து கடன் வசதி பெற்றுக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்கிறது. 1989 மார்ச் 31-ல் நிலவள வங்கிகள் உள்ளிட்ட கடன் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் அரசின் பங்கு மூலதன முதலீடு 82.96 கோடி ரூபாயாகும்.

நீண்ட காலக் கடன்.

17. அமைப்பு :

வட்டம் மற்றும் வட்டார அளவில் உள்ள 181 தொடக்க நிலவள வங்கிகள் மூலமாக தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி விவசாயிகளின் நீண்டகாலக் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகிறது. தமிழகத்தில் நீண்ட கால கடனுதவி அமைப்பு தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியைத் தலைமை நிறுவனமாகவும், பிரதம நிலவள வங்கிகளை தொடக்க நிறுவனங்களாகவும் கொண்ட ஈரடுக்கு அமைப்பாக இயங்கி வருகிறது.

1990 ஏப்ரல் 16]

8. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியும் அதன் பணிகளும்.

கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியைச் சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடுவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி பெறுகிறது. மாநில மத்திய அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கியும் அதன் பிரிவுகளும், வர்த்தக வங்கிகள், தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கி, மற்றும் இதர மாநில கூட்டுறவு நிலவள வங்கிகள் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்கள் முதலீடு செய்கின்றன. நாபார்டு மாநில மற்றும் மத்திய அரசுகள் ஆகியவை சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய் கின்றன. 31—1—1990 அன்று சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முறையே ரூபாய் 49.91 கோடியும், ரூபாய் 82.37 கோடியும் நிலுவையாக உள்ளன. 31—1—1990 அன்று வங்கியின் சொந்த நிதி ஆதாரம் ரூபாய் 66.71 கோடி யாகும். சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களுக்கான காலம் முடிவடையும் போது பத்திரங்களுக்குரிய தொகைகளைத் திருப்பி செலுத்துவதற்காகக் ''கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி'' ஒன் றினை வங்கி பராமரித்து வருகின்றது. 31—12—1989 அன்று இந்த நிதியில் ரூபாய் 20.77 கோடி சேர்ந்துள்ளது.

சிறுபாசனம் மற்றும் சிறுபாசனமல்லாத திட்டங்களுக்கென்று பல பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி தயாரித்துள்ளது. 1963-லிருந்து 31—12—1989 வரை ரூபாய் 190.15 கோடி மதிப்புள்ள சிறு பாசனம், கால் நடைப் பராமரிப்பு, தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, பண்ணைக் காடுகள் மற்றும் இதர திட்டங்களை நாபார்டு அனுமதித்துள்ளது.

நிலவள வங்கிக் கடன்தாரர்களின் கிணறுகள் பொய்த்துப் போனால், அவர்கட்கு மான்யம் வழங்குவதற்காகத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி பொய்த்த கிணறுகள் நிதி ஒன்றைப் பராமரித்து வருகிறது. இதுவரை 3,049 இனங்கட்கு ரூபாய் 2.06 கோடி அளவிற்கு மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களை ஆய்வு செய்யவும், திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயனைக் கணிப்பாய்வு செய்யவும், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுக் குழு ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி அளவில் உள்ளது. இதுவரை 127 கண்காணிப்பு ஆய்வு களும், 40 கணிப்பாய்வுகளும் செய்யப்பட்டு தொடர் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

விவசாயிகட்கு விரிவாக்க பணியாக ''நிலவளம்'' என்ற மாதாந்திர இதழை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிடுகிறது. பாரத நிலவள வங்கி பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நாபார்டின் உதவியுடன் இளநிலை பணியாளர் பயிற்சி திட்டம் ஒன்றினை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி நடத்தி வருகிறது.

19. நீண்ட காலக் கடன் வழங்குதல்:

கிணறுகள் தோண்டுதல், பம்பு செட் நிறுவுதல் போன்ற சிறுபாசன காரியங்கட்கும்; விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க பலதரப்பட்ட காரியங்களுக்காகவும் பிரதம நிலவள வங்கிகள் தொடர்ந்து கடன் வழங்கி வருகின்றன. ஏழாவது திட்டக் காலத்தில் நிலவள வங்கிகள் நீண்டக்காலக் கடன் வழங்க ஆண்டு வாரியாக திட்டமும், சாதனையும் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	குறியீடு.	வழங்கப்பட்ட கடன். (ரூபாய் கோடியில்)
(1)	(2)	(3)
1985-86	20.00	24.19
1986-87	20.00	20.52
1987-88	20.00	30.60
1988-89	27.00	28.94
1989-90	30.00	15.55 (1990 ஜனவரி வரை).

20. கடன்கள் வழங்குவதற்கான நிலவள வங்கிகட்கு புதியவழிகள் :

பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, கோழிப்பண்ணை, போன்ற பலதரப்பட்ட காரியங்களுக்காக மட்டுமல்லாமல், நாபார்டு உதவியுடன் சிறப்பு திட்டங்களின்கீழ் மட்டும் இதுவரை நிலவள வங்கிகள் கடன்கள் வழங்கப்பட்டு வந்தன. ஆயினும், இதர நிதி நிறுவனங்கள் நிதி வசதி அளிப்பதில் ஏற்பட்டுள்ள மாறுதலான நிலைமையை அனுசரித்து கீழ்க்கண்ட புதிய நோக்கங்களுக்காக கடன்கள் வழங்க நிலவள வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

1990 ஏப்ரல் 16]

(i) பண்ணை சாராப் பிரிவுகட்கு கடன் வழங்குதல்:

நாபார்டினால் அறிவிக்கப்பட்டுள்ள மறுநிதி உதவித் திட்டத்தின்படி ஊரக கலைத் தொழிலாளி, சிறு கைத் தொழிலாளி மற்றும் சிறிய அளவிலான வாணிபம் செய்பவர்கட்கு கடன் வசதி செய்துகொடுக்க நிலவள வங்கிகட்கு ஜனவரி 1990-ல் அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வகை நிதியுதவி, கிராம மக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்பு மூலம் தங்கள் வருமானத்தை அதிகரித்து பயன்அடையச் செய்வதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவியை விரிவடையச் செய்ய உதவுகிறது. நாபார்டினால் விதிக்கப்பட்டுள்ள கடன் தகுதி நெறி முறைகளைக் கடைப்பிடிக்காது நிலவள வங்கிகள் இத்திட்டத்திற்கு கடன் வழங்கலாம் என்பது இதன் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தில் ஒரு தனி நபருக்கு ரூபாய் 30,000 வரை கடன வழங்கப்படும். நாபார்டும் 100 சதவிகித மறுநிதி உதவியளிக்கும்.

(ii) கிராம வீடுகட்டும் திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல்:

சென்ற பார்லிமெண்டின் வரவு செலவு கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டுள்ள தேசிய கொள்கைக்கு ஏற்ப, தேசிய வீட்டு வசதி வங்கியின் மறு நிதி உதவியுடன் கிராமப்புறங்களில் புதிய வீடுகள் கட்டுதல், ஏற்கெனவே உள்ள வீடுகட்கு மாற்றம் செய்தல் போன்ற காரியங்கட்கு கடன்கள் வழங்க தமிழ் நாட்டில் உள்ள நிலவள வங்கிகட்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. இதில், அதிகப்படியாக ரூபாய் 20,000 வழங்கலாம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தேசிய வீட்டு வசதி வங்கியினால் விதிக்கப்பட்டுள்ள சில நிபந்தனைகளின் காரணமாக இத்திட்டத்தினை பிரதம நிலவள வங்கிகள் உடனடியாக தொடங்க இயலவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் 65 சதவிகிதத்திற்கு குறையாமல் கடன் வசூல் செய்த வங்கிகளும் ஐந்து ஆண்டுகட்கு மேலாக வசூலாகாத தொகைகள் எல்லாவற்றிலும் சட்ட பூர்வ நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள வங்கிகள் மட்டுமே தேசிய வீட்டு வசதி வங்கியின் நெறிமுறைகளின்படி இத்திட்டத்தில் பங்கேற்க முடியும். எல்லா பிரதம நிலவள வங்கிகளும் இந்த தேசிய அளவிலான திட்டத்தில் பெருமளவில் பங்கேற்பதற்கு ஏதுவாக மேற்கூறிய நிபந்தனைகளுக்கு விலக்கு அளிக்க மத்திய அரசினை மாநில அரசு கோரியுள்ளது.

(iii) நகைக்கடன் வழங்குதல்:

பிரதம நிலவள வங்கிகளின் உறுப்பினர்கள் மற்றும் இதர பொதுமக்களின் நுகர்வு கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இதர இலாபகரமான பணிகள் மூலம் வங்கிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், தமிழ்நாட்டில் முதன் முறையாக, புதிய

முயற்சியாக மத்திய கூட்டுறவு வங்கிகளின் உதவியுடன் நகைக் கடன் தொழில் செய்ய பிரதம நிலவள வங்கிகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. 31—1—1990 வரை பிரதம நிலவள வங்கிகள் ரூபாய் 3.75 கோடி அளவிற்கு நகைக்கடன் வழங்கியுள்ளன.

21 நகைக்கடன்கள்:

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால், நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப் பது அரிதாகிய நிலையில், கடன் கூட்டுறவுச் சங்கங்கள் நகை யீட்டின் பேரில் மாநிலம் முழுவதும் கடன் வழங்கி, கடன் தேவை களை நிறைவு செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றன. தற்போது 3,761 கூட்டுறவு அமைப்புகள் நகை யீட்டுக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1988-89 இறுதி யில் 3,311 கூட்டுறவு அமைப்புக்கள் மட்டுமே இப்பணியில் ஈடு பட்டிருந்தன. 1989-90இல் (சனவரி 1990 வரை) 14.74 இலட்சம் நபர்களுக்கு 553.12 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1988-89ஆம் ஆண்டில் 536.82 கோடி ரூபாய் அளவுக்கு நகையீட்டுக்கடன்கள் வழங்கப்பட்டன. மாநிலம் முழுவதும் அநேகமாக ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள கூட்டுறவு அமைப்புகள் நகையீட்டுக் கடன்கள் வழங்கிவருவதின் மூலம் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் அவசர நிதி தேவைகளை பயன் விளையத்தக்க வகையில் பூர்த்தி செய்து வருகின்றன. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர்கள், குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள வேளாண்மை சமுதாயத்தின் நலன்களை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றி உள்ளன. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த நான்காண்டு களில் எய்தியுள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். சவரன் ஒன்றிற்கு வழங்கப்படும் கடனின் உச்ச அளவு 1,800 ரூபாயாகும்

இச்செயலில் ஈடுபடும் கூட்டுறவுகளை ஊக்குவிக்கும் வகை யில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரும்புப் பெட்டகம் வாங்கக் கடனாக தலா 20,000 ரூபாய் மாநில அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

22 கடனீட்டுப் பத்திரங்களில் அரசின் முதலீடு:

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிடும் கட னீட்டுப் பத்திரங்களில் மாநில அரசு முதலீடு செய்கிறது. 31—1—1990 அன்று மாநில அரசினால் முதலீடு செய்யப்பட்டு 11.78 கோடி ரூபாய் நிலுவையாக உள்ளது. 1990-91 ஆம் ஆண்டிற்கு 120 இலட்சம் ரூபாய் அளவிற்கு அரசு முதலீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 16]

23 தவணை தவறிய கடன்கள்

கடந்த மூன்று ஆண்டுகளில் பிரதம நிலவள வங்கிகளில் உள்ள தவணை தவறிய கடன்கள் விபரம் பின்வருமாறு :—

நாள்.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	கேட்பில் நிலுவையின் சதவீதம்.
	(ரூபாய் கோடியில்).			
(1)	(2)	(3)	(4)	(5)
1987 ஜூன் 30இல் ..	98.78	56.96	41.82	42.3
1988 ஜூன் 30இல் ..	67.85	15.47	52.38	77.2
1989 ஜூன் 30இல் ..	82.13	17.79	64.34	78.3
1990 ஜனவரி 31இல்	77.39	5.10	72.29	93.4

1975-76ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் பெரும் பகுதி வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டதால், பயிர்கட்கு ஏற்பட்ட இழப்பின் காரணமாக கடன்தாரர்களின் திருப்பிச் செலுத்தும் சக்தி பாதிக்கப்பட்டதன் காரணமாக, பிரதம நிலவளவங்கிகள் அணுகு முறை மூலம் மட்டுமே கடன்களை வசூலிக்க வேண்டியிருந்தது. பிரதம நிலவள வங்கிகளில் உயர்ந்துகொண்டே போகும் தவணை தவறிய கடன்கள், தமிழ்நாட்டில் வேளாண்மை அபிவிருத்திக்காக நாபார்டிடம் இருந்து பெறப்படும் சலுகை மறுநிதி உதவியின் அளவினை குறைத்து விட்டதால் மிகுந்த கவலை தருவதாக உள்ளது. மாநிலத்தில் விரைவான வேளாண்மை மேம்பாட்டினை வளர்க்கவும், நீண்டகாலக் கடன்கள் தாராளமாக வழங்கவும், வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியினை எய்த பிரதம நிலவள வங்கிகளின் கடன் வசூலில் அதிகப்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு இதுவே தகுந்த தருணமாகும்.

24 விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்:

இயற்கைச் சீற்றங்களின் கொடுமைகளினின்று விவசாயிகள் பாதுகாப்பு பெற்று பயனடையச் சரியான ஒரு சாதனமாக உள்ள விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் 1985-86-ம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. மைய அரசும் மாநில அரசும் பிரிமியத் தொகையைப் பகிர்ந்து கொள்ளுவதிலும், ஈட்டுத்தொகையை வழங்குவதிலும் 2 : 1 என்ற விகிதத்தில் பங்கேற்கின்றன. பொதுக் காப்பீட்டுக் கழகமும், தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியும் முறையே மைய அரசு மற்றும் மாநில அரசின் முகவர்களாக செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பகுதியில் கூட்டுறவு நிறுவனங்கள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல கிராமிய வங்கிகளால் நெல், கோதுமை, சிறு தானியங்கள், எண்ணை வித்துக்கள், மற்றும் பருப்பு வகைப்

]1990 ஏப்ரல் 16

பயிர்களுக்கு வழங்கப்படும் 100 சதவீதப் பயிர்க்கடன் ஒரு விவசாயிக்கு ரூபாய் 10,000 மேற்படாமல் கட்டாய அடிப்படையில் ஈட்டுறுதி செய்யப்படுகிறது. ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையில் 2 சதவீதம் நெல் கோதுமை மற்றும் சிறு தானியங்களுக்கும் 1 சதவீதம் எண்ணை வித்துப்பயிர்களுக்கும் பிரிமியக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் இணையும் சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மட்டும் செலுத்தினால் போதும். மிகுதி 50 சதவீதம் மானியமாக அவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினை மைய அரசும், மாநில அரசும் சம அளவில் பகிர்ந்து கொள்ளுகின்றன.

இம்மாநிலத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்திப் பயிர்களுக்கு இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. திட்ட ஆரம்ப கால முதல் திட்டம் செயலாக்கப்பட்ட விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்ணும் பருவ காலமும்	இணைந்த விவசாயிகள்	பரப்பளவு	ஈட்டுறுதி செய்த தொகை	வசூலிக்கப் பட்ட பிரிமியம்	வழங்கிய ஈட்டு தொகை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
1 காரீப் 1985	54,829	1,23,141	1,915.00	37.50	56.40
2 ராபி 1985-86	51,364	82,886	1,774.00	31.58	24.63
3 காரீப் 1986	89,044	1,29,659	3,229.07	26.77	43.26
4 ராபி 1986-87	74,830	99,035	2,576.96	44.22	41.86
5 காரீப் 1987	67,436	93,994	2,333.33	42.67	52.05
6 ராபி 1987-88	1,54,168	1,98,512	5,566.98	97.09	70.62
7 காரீப் 1988	செயலாக்கப்படவில்லை.				
8 ராபி 1988-89	43,444	79,850	1,372.97	23.46	18.85*
9 காரீப் 1989	1,07,347	1,73,317	3,429.12	63.55	**

* பொதுக் காப்பீட்டுக் கழகத்தில் இறுதி செய்யப்பட வேண்டி உள்ளது.

** இன்னும் தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

1990 ஏப்ரல் 16]

இத்திட்டம் தற்போது (ராபி 1989-90) குறிப்பிட்டுள்ள விவரப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் செயலாக்கப்படுகிறது.

வரிசை எண்.	பயிர்.	அறிவிக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1	நெல்	230
2	சோளம்	69
3	கம்பு	75
4	கேழ்வரகு	88
5	நிலக்கடலை	138
6	எள்	61
7	சூரியகாந்தி	3

இத்திட்டத்தினைக் காரீப் 90 பருவம்முதல் அதாவது 1–4–1990 முதல் தொடர்ந்து செயலாக்க மைய அரசு முடிவு செய்துள்ளது.

25. நகர்ப்புற மக்களுக்கு கடனுதவி :

தமிழ்நாட்டில் 134 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. அவைகளில் 125 கூட்டுறவு நகர வங்கிகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் நகரங்கள் மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு 1988-89 ஆம் ஆண்டில் 312.21 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கியுள்ளன. 1988-89 ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வங்கிகளிடமிருந்து வைப்புத் தொகைகள் 309.76 கோடி ரூபாயாகும். கூட்டுறவு நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவீதம் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட முன்னுரிமைப் பிரிவிற்கு சேர வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழி முறைகளை வகுத்துள்ளது. முன்னுரிமைப் பிரிவிற்குக் கொடுக்கப்படுகின்ற மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 25 சதவீதம் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். 1988-89 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையான 312.21 கோடி ரூபாயில் 205.57 கோடி ரூபாய் முன்னுரிமைப் பிரிவிற்கு வழங்கப்பட்ட கடனாகும். மொத்தக் கடன் தொகையில் 66 சதவீதம் ஆகும். இது ரிசர்வ் வங்கியில் நிர்ணயிக்கப்பட்ட 60 சதவீதத் தொகைக்கும் அதிகமாகும். நலிந்த பிரிவினருக்கு 96.61 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இது வழி வகைகளில் 25 சதவீதம் என நிர்ணயிக்கப்பட்டிருக்க 47 சதவீதம் அளவிற்குக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்டுள்ள குறுகிய கால கடன் அளவினை திரும்பச் செலுத்த ஏதுவாக, மாநில அரசு நகர கூட்டுறவு வங்கிகளுக்காக 100 இலட்சம் ரூபாய் அளவிற்கு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. 1988-89 ஆம் ஆண்டு 6 நகர கூட்டுறவு வங்கிகளுக்கு 45.25 இலட்சம்

ரூபாய் அளவிற்கு ரிசர்வ் வங்கியினால் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் நகர கூட்டுறவு வங்கிகள் 37.70 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் வசதி பெற்றுள்ளது.

குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் 1990-91 ஆம் ஆண்டில் 16.00 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுகள் மூலம் வேளாண்மை இடுபொருட்கள் விநியோகம்;

26. இரசாயன உர விநியோகம் :

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன்களின் ஒரு பகுதியாகவும், உறுப்பினர் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கு ரொக்கத்திற்கும் சில்லறை விற்பனையை மேற்கொண்டு வருகின்றது. 1989-90 ஆம் ஆண்டில் 120 கோடி ரூபாய் மதிப்பிற்கு 3.50 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) அளவுள்ள இரசாயன உரங்களை விநியோகிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 1989 ஏப்ரல் முதல் 1990 ஜனவரி இறுதிவரை கூட்டுறவுச் சங்கங்கள் 78.66 கோடி ரூபாய் மதிப்பிற்கு 1.78 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) உரங்களை விநியோகித்துள்ளன. முந்தைய ஆண்டில் 1.89 இலட்சம் டன் உரங்களை 81.10 கோடி ரூபாய் அளவுக்கு விநியோகித்துள்ளன.

விவசாயிகளுக்கு அவர்கள் வாழுமிடங்களுக்கு அருகிலேயே தேவையான வேளாண்மை இடு பொருட்கள் கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு 1989-90 ஆம் ஆண்டில் இதுவரை கூட்டுறவுச் சங்கங்கள் 171 கூடுதல் சில்லரை உர விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளன. தற்போது மாநிலத்தில் 6,404 உர விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1990-91 ஆம் ஆண்டில் 120 கோடி ரூபாய் மதிப்பிற்கு 3.00 இலட்சம் டன் (என்.ப்பி.கே.) அளவுள்ள இரசாயன உரங்களை சில்லறை முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனெனில், தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் ஏகபோக நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயிகள் கொள்முதல் மையங்களுக்கு அளிக்கும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 35 மதிப்பிற்கு விவசாய இடு பொருட்கள் வழங்க அனுமதித்திருந்த அரசு தற்போது ரூ. 35 ரொக்கமாக கொடுத்து வருவதே ஆகும்.

27. விதைகள் பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண் உபகரணங்கள் விநியோகம்.

விதைப் பெருக்குத் திட்டத்தைச் செயற்படுத்தி வரும் துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சேவைச் சங்கமும், கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களிலுள்ள மூன்று கூட்டுறவுவிற்

1990 ஏப்ரல் 16]

பனைச் சங்கங்களும் 1988-89 ஆம் ஆண்டில் 52.15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சான்று செய்யப்பட்ட விதைகளை விநியோகித்துள்ளன. 1989-90 இல் ஜனவரி 90 வரை 54.65 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சான்று செய்யப்பட்ட விதைகளை விநியோகித்துள்ளன. துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சேவைச் சங்கம் பூச்சி மருந்துகள் தயாரிக்கும் ஆலை ஒன்றை வைத்துள்ளது. இச்சங்கம் தயாரிக்கும் பூச்சி மருந்துகளை விநியோகிப்பதற்காக, மாநிலத்திலுள்ள அனைத்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் மொத்த விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. 1988-89 ஆம் ஆண்டில் 393.78 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பூச்சி மருந்துகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1989-90இல் ஜனவரி 1990 வரை 434.78 இலட்ச ரூபாய் மதிப்புடைய பூச்சி மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1988-89 ஆம் ஆண்டில் 39.03 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேளாண்மை உபகரணங்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விநியோக்கிக்கப்பட்டுள்ளன. 1989-90 இல் ஜனவரி 1990 வரை 41.41 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேளாண் உபகரணங்கள் விநியோக்கிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்களின் வேளாண்மை இடு பொருட்களின் விநியோகத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1990-91 ஆம் ஆண்டில், 68 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள விதைகள், 500 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பூச்சி மருந்துகள் மற்றும் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேளாண் உபகரணங்கள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு விற்பனை

28. அமைப்பு :

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைக்கப்பட்டு தொடக்க நிலையில் 112 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் உள்ளன. திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், மாவட்ட அளவில் உள்ள ஒரே கூட்டுறவு விற்பனைச் சங்கமாகும்.

29. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் அதன் பணிகளும்

மாநில அளவில் விவசாயிகளின் தலைமை நிறுவனமாக 'டான்பெட்' எனப்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959ல் துவக்கப்பட்டு விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான இடு பொருட்கள் வழங்குவதிலும், வேளாண் விளை பொருள் விற்பனையிலும் பெரும் பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டில் இரசாயன உரங்களை விநியோகிப்பதற்கான மொத்த விற்பனையாளர்களில் ஒன்றாக அது நியமிக்கப்பட்

டுள்ளது. தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களிலுள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் உர விநியோகம் செய்கிறது. தஞ்சையில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரியில் நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கமும் உரங்கள் கொள்முதல் மற்றும் விற்பனையில் மொத்த விற்பனை நிறுவனங்களாக செயல்பட்டு வருகின்றன. கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் வண்டன்மேடு மற்றும் பூப்பாரா ஆகிய இரு இடங்களில் இணையம், சொந்த கிளைகள் நிறுவியுள்ளது. மாவட்ட அளவில் உர விநியோகத்தைக் கண்காணிக்க 14 மண்டல அலுவலகங்கள் செயல்படுகின்றன.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடிக்கு அருகே பாமனி என்ற இடத்தில் உரத் தொழிற்சாலை ஒன்று 1970-ல் துவக்கப்பட்டு என்.பி.கே. மணி உரம் தயாரிக்கப்படுகிறது. இது நாள் ஒன்றுக்கு 120 டன் உற்பத்தித் திறன் கொண்டது. இது தவிர, மாநிலத்தில் 10 இடங்களில் உரக் கலவை நிலையங்கள் உள்ளன. இவ்விணையம், மிளகாய், தனியா, உளுந்து போன்ற வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகிறது. விலை ஆதரவு திட்டத்தின்கீழ் 'நேபட்' நிறுவனத்தின் முகவராக தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. 1976 முதல் பூச்சி கொல்லி மருந்து மொத்த விற்பனையாளராகவும் செயல்பட்டு வருகிறது. 18,100 மெ.ட. கொள்திறன் கொண்ட 23 கிடங்குகள் இதற்குச் சொந்தமாக உள்ளன. இது தவிர, 13,087 மெ.ட. கொள்திறன் உடைய 24 வாடகை கிடங்குகளும் அமர்த்தியுள்ளது. 7,000 மெ.ட. கொள்திறன் கொண்ட 9 கிடங்குகளை ரூ. 82.86 இலட்சம் மதிப்பில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூன்றாவது உலக வங்கித் திட்டத்தின் கீழ் கட்ட உத்தேசித்துள்ளது. மேலும் 14,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 17 கிடங்குகளை 16 இடங்களில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நான்காம் உலக வங்கி கூட்டுறவு சேமிப்பு திட்டத்தின் கீழ் கட்டவும் உத்தேசித்துள்ளது.

டான்பெட் சென்னையில் 1,250 மெ.ட கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன சேமிப்பு நிலையம் மற்றும் பனிக்கட்டி தயாரிப்பு நிலையம் ஒன்றினை நிர்வகித்து வருகிறது. 1988-89 ஆம் ஆண்டில் பழப் பொருள்கள் ஆப்பிள் மற்றும் காய்கறிகள் போன்றவை இந்நிலையத்தில் வைக்கப்பட்டு 72 சதவீதம் உபயோகிக்கப்பட்டு, அதன் மூலம் ரூ. 9.19 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. தவிர ரூ. 2.44 இலட்சம் மதிப்புள்ள 790.485 டன் ஐஸ் கட்டிகள் இவ்வாண்டில் விற்கப்பட்டன. இக்குளிர்பதன சேமிப்பு நிலையம் 1989–90-ல் சனவரி 1990 முடிய 80.95 சதவீதம் பயன்படுத்தப்பட்டு ரூ. 10.57 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

1990–91-ல் சென்னையை அடுத்த கோயம்பேடு என்ற இடத்தில் ரூ. 125 இலட்சம் மதிப்பில் 1,800 மெ.ட. கொள்திறன் கொண்ட குளிர்ப்பதனச் சேமிப்பு நிலையத்தை அமைக்க

1990 ஏப்ரல் 16]

இணையம் திட்டமிட்டுள்ளது. இது மேலும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக நிதி, மற்றும் அரசின் மான்யம் பெற்று ரூ. 37.00 இலட்சம் மதிப்பில் தலா 320 மெ. டன் கொள்ளளவு கொண்ட 3 வெங்காய சேமிப்பு கிடங்குகளை திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் எரியோடு என்னுமிடத்தில் கட்டி வருகிறது.

இது பொது விநியோக திட்டத்தின்கீழ் கடைகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் இந்திய எண்ணெய் கழகத்தின் மொத்த விற்பனையாளராக செயல்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட இனங்களில் டான்பெட் 1988–89 மற்றும் 1989–90-ல் ஜனவரி 1990 முடிய செய்த வியாபாரங்கள் கீழே குறிக்கப்படுகிறது.

விபரம்.	1988–89		1989–90 (ஜனவரி 1990 முடிய).	
	அளவு. (டன்னில்)	மதிப்பு. (ரூபாய் கோடியில்)	அளவு. (டன்னில்)	மதிப்பு. (ரூபாய் கோடியில்)
(1)	(2)	(3)	(4)	(5)
1. உர விநியோகம் ...	1,21,650	56.48	1,30,316	61.38
2. பாமனி உர உற்பத்தி	20,756	..	24,141	..
3. பாமனி உர விற்பனை	21,663	5.54	26,695	6.82
4. டான்பெட் கலப்பு உரங்கள் விற்பனை.	7,930	1.31	5,786	0.92
5. வேளாண் விளை பொருள் கொள் முதல்.	8,331	6.02	7,466	5.54
6. விதை விற்பனை	..	0.09	..	0.15
7. பூச்சி கொல்லி விநியோகம்.	..	1.88	..	2.08
8. வேளாண் உபகரணங்கள் விநியோகம்.	..	0.05	..	0.05
9. மண்ணெண்ணெய் விநியோகம்.	2,856 (கிலோ லிட்டர்).	0.62	2,469 (கிலோ லிட்டர்).	0.52

30. விவசாய விளைபொருட்களை விற்பனை செய்தல் :

மாநிலத்தில் உள்ள 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தமது உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெற உதவி செய்து வருகின்றன. 1988–89 ஆம் ஆண்டில் 180 கோடி ரூபாய் அளவிற்கு வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டு 215.47 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டிற்கு வேளாண் விளைபொருள் விற்பனையை 210.00 கோடி ரூபாய் அளவிற்கு நடத்த திட்டமிடப்பட்டது. 1990 ஜனவரி முடிய சாதனை 156.46 கோடி ரூபாய் ஆகும். 1990–91-ல் வேளாண் விளை பொருள் விற்பனையை 250 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

31. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை தொடக்கக் கூட்டுறவு வங்கிகளோடும் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களோடும் இணைத்தல் :

உற்பத்தியாளர் தம் விளைபொருட்களை விற்பதில் ஆதாயமான வருமானம் பெறவும், நுகர்வோர் இன்றியமையாப் பொருட்களை நியாயமான விலையில் பெறவும் ஏதுவாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒரு பக்கம் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுடனும் மறு பக்கம் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் கடன் பெறும் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, விற்பனைச் சங்கங்களின் கொள்முதல் செயற்பாடுகள் கடன் தாரர்களுடன் இணைக்கப்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் அவற்றிற்குத் தேவையானவற்றை வாங்குவதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சேவையை பெரிதும் பயன்படுத்திக் கொள்கின்றன. 1988–89-ல் வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்ததின் மூலமாக 77.66 இலட்சம் ரூபாய் அளவிற்கு உற்பத்திக் கடன்கள் வசூலிக்கப்பட்டன. இது 1990–91-ல் 125.00 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும்.

32. விளை பொருளீட்டுக் கடன்கள் :

விவசாய உறுப்பினர்கள் தங்கள் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில் காத்திருக்கும் பொருட்டு அவர்களது விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளும் தொடர்ந்து கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வகைக் கடன்கள் 1988–89-ல் 259.56 இலட்சம் ரூபாய் அளவிற்கு வழங்கப்

பட்டுள்ளன. இந்த பயனுள்ள செயல், வரும் ஆண்டுகளில் அதிகப்படுத்தப்படும். 1990-91ல் 400.00 இலட்சம் ரூபாய் அளவிற்கு விளை பொருளீட்டுக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும்.

கூட்டுறவு பதனிடுதல்.

33. பதனிடும் பிரிவுகளை அமைத்தல் ;

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்கு விளை பொருள் பதனீட்டு வசதிகளை குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டு, அச்சங்கங்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு அருகிலேயே பதனிடும் பிரிவுகளை நிறுவியுள்ளது. இதற்காக அவை அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனாகவும் நிதியுதவி பெறுகின்றன. தமிழ்நாட்டில் 111 பதனிடும் பிரிவுகள் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. விழுப்புரத்தில் ரூ. 35 இலட்சம் மதிப்பில் நவீன பருத்தி விதை நீக்கும் இயந்திரம் நிறுவ தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ஒப்புதல் வழங்கியது. அதற்காக 1988-89 ஆம் ஆண்டில் பங்குத் தொகையாக 9.10 இலட்ச ரூபாயும், கடனாக 5.69 இலட்ச ரூபாயும் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயற்பாட்டிற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டதும் எஞ்சியுள்ள கடன் தொகை 17.06 இலட்சம் ரூபாய் 1989-90 ஆம் ஆண்டில் சங்கத்திற்கு வழங்கப்படும். கோயம்பேடு விற்பனை வளாகத்தில் குளிர்பதன அறை ஒன்றை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவுவதற்கான கருத்துருவைப் பரிசீலிப்பதாக தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இசைந்துள்ளது. கோயம்பேடு விற்பனை வளாகத்தில் 125 இலட்சம் ரூபாய் செலவில் 1,800 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன அறை ஒன்றை நிறுவுவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திடமிருந்து பெறப்பட்டுள்ள கருத்துரு தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு விரைவில் பரிந்துரைக்கப்படும். இந்த குளிர்பதன அறை அமைக்கும் திட்டம் எட்டாவது திட்ட வரைவில் முன்மொழியப்பட்டு, 1990-91 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதித் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் தொடங்கி, இரு ஆண்டுக் காலத்தில் இவ்வாலை அமைக்கப்படும், 1990-91 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின் மாநில அரசின் பங்குத் தொகை 20 இலட்சம் ரூபாய் முன்மொழியப்பட்டுள்ளது.

இடங்கு வசதி.

34. ஊரக மற்றும் விற்பனைக் கிடங்குகள் ;

கூட்டுறவுத் துறையில் கிடங்கு வசதிகளை மேம்படுத்துவதற்கான தேவையையும் வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்

காகச் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களையும் கருத்திற் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் கிராம அளவில் ஊரகக் கிடங்குகளையும் மண்டி அளவில் விற்பனைக் கிடங்குகளையும் தொடர்ந்து கட்டி வருகின்றன. இதற்கென கூட்டுறவுச் சங்கங்களுக்கு 45 விழுக்காடு பங்குத் தொகையாகவும் 50 விழுக்காடு கடனாகவும் உதவி வழங்கப்படுகிறது. இதற்கெனத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 75 விழுக்காடு கடன் வழங்குகிறது. வேளாண்மை இடுபொருட்களையும், இன்றியமையா நுகர் பொருள்களையும் வேளாண் விளைபொருட்களையும் சேமித்து வைத்து விற்பனை செய்வதற்குக் கூட்டுறவு சங்கங்கள் இக்கிடங்குகளைப் பயன்படுத்துகின்றன. 31 ஜனவரி 1990 அன்று 5.15 இலட்சம் டன் கொள் திறனுள்ள 4,498 ஊரகக் கிடங்குகளும், 1.55 இலட்சம் டன் கொள் திறனுள்ள 298 விற்பனை-நுகர்வோர் கிடங்குகளும் இருந்தன. 31-3-1989 அன்று 6.65 இலட்சம் டன்னாக இருந்த கூட்டுறவுகளின் மொத்த கிடங்குக் கொள்திறன், 31-1-1990இல் 6.70 இலட்சம் டன்னாக உயர்ந்தது. 1988-89 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 7,000 மெட்ரிக் டன் மொத்தக் கொள் திறனுள்ள 9 கிடங்குகள் கட்டத் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் உதவி அனுமதித்தது. 1989-90 ஆம் ஆண்டில் 16,050 மெட்ரிக் டன் மொத்தக் கொள்திறனுள்ள 150 ஊரகக் கிடங்குகள் கட்ட அரசு உதவி வழங்கியுள்ளது. 24,652 மெட்ரிக் டன் மொத்த கொள்திறனுள்ள 156 ஊரகக் கிடங்குகள் மற்றும் 12 விற்பனைக் கிடங்குகள் (இயல்பான திட்டத்தின்கீழ் 3 கிடங்குகளும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூன்றாம் உலக வங்கித் திட்டத்தின் கீழ் 9 கிடங்குகளும்) தற்போது கட்டுமானத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. 1990-91 ஆம் ஆண்டில் 8,600 மெட்ரிக் டன் மொத்தக் கொள்திறனுள்ள 86 ஊரகக் கிடங்குகள் கட்ட உதவி வழங்கப்படும்.

நுகர்வோர் கூட்டுறவு

35. அமைப்பு :

நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் மத்திய அளவில் 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும் தொடக்க அளவில் 3,843 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளையும் கொண்ட மூன்று அடுக்கு உள்ளதாகும்.

36. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மற்றும் அதன் செயல்பாடுகளும் :

1966 ஆம் ஆண்டில் நுகர்வோர் கூட்டுறவுகளுக்காக மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் துவக்கப்

1990 ஏப்ரல் 16]

பட்டது. இவ்விணையம் தமிழ்நாட்டிலுள்ள பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள், மாவட்ட அளவில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, அவைகளுக்குத் தேவையான அத்தியாவசியமான நுகர்பொருட்களை இறக்குமதி அல்லது ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்து அவைகளுக்குக் கிடைக்கச் செய்தல் போன்றவற்றை தனது தலையாய கொள்கையாகக் கொண்டுள்ளது. இணையத்திற்கு மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மூன்று கிளைகள் உள்ளன. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் தனது அங்கமாக மண்டல விநியோக மையம் ஒன்றினை சென்னையில் துவக்கி செயல்படுத்தி வருகிறது. இணையத்திற்குச் சொந்தமாக 7,000 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள ஒரு கிட்டங்கியும் உள்ளது. தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் தயாரிக்கின்ற பாட புத்தகங்கள், மலிவு விலை குறிப்பேடுகள் ஆகியவற்றை விநியோகிக்கும் ஒருங்கிணைந்த முகவராக இணையம் செயல்பட்டு வருகிறது. இணையத்திற்கு பாலித்தீன் பைகள் தயாரிக்கும் அலகு ஒன்றும் உள்ளது. இணையத்தின் வியாபாரத்தினை உயர்த்தியும், நிதி நிலையை வலுப்படுத்தவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இணையத்தின் வியாபார விளைவுகள் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

வருடம்.	கொள் முதல்.	விற்பனை.	மொத்த இலாபம்.	நிகர நட்டம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1987–88	2,666.21	2,760.00	42.34	44.71
1988–89	887.22	967.55	26.32	69.22
1989–90 (31–1–1990 வரை.)	402.24	446.44	7.32	36.54 (உத்தேசமாக)

37. நுகர்பொருட்கள் சில்லரை விற்பனை :

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லரை விற்பனையின் மதிப்பு 1987–88 ஆம் ஆண்டில் இருந்த 873.43 கோடி ரூபாயிலிருந்து 1988–89 ஆம் ஆண்டில் 1,024.57 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. 1-4-1989 முதல் 31-1-1990 வரை 813.58 கோடி ரூபாய் அளவிற்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

[1990 ஏப்ரல் 16

விற்பனை செய்துள்ளன. 1990-91 ஆம் ஆண்டில் 1,100.00 கோடி ரூபாய் அளவிற்கு நுகர்பொருட்கள் சில்லரை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

38. நியாய விலைக் கடைகள் மூலமாக இன்றியமையா பொருட்கள் விற்பனை செய்தல் :

பொது விநியோக திட்டத்தின் கீழ் 128 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும், 20,198 நியாய விலைக் கடைகள் மற்றும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் 936 நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இந்த 936 நியாய விலைக் கடைகள் 1-10-1989-இல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மாற்றப்பட்டன. அவ்வப்போது அரசால் நிர்ணயிக்கப்படும் அளவு மற்றும் விலையில் அரிசி, சர்க்கரை, கோதுமை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. பொது விநியோக திட்டம் சம்மந்தமாக அரசால் எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் கீழ்வருமாறு :—

(i) நியாய விலைக் கடைகளை சமச்சீர் செய்தல் ;

தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி நியாய விலைக் கடைகளில் கூட்டத்தை தவிர்க்கவும், குடும்ப அட்டைதாரர்கள் சிரமமின்றி அத்தியாவசியப் பொருட்களை பெறவும் தேவைப்பட்ட இடங்களில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளை சீரமைக்க சமீபத்தில் அரசு முடிவு செய்துள்ளது. இப்பணி விரைவில் செய்து முடிக்கப்படும்.

(ii) தாங்கிருப்பு வைத்தல் :

அரிசியில் சில சமயங்களில் ஏற்படும் தட்டுப்பாட்டை சமாளிக்க தாங்கிருப்பு பெருக்க அரசு முனைந்துள்ளது.

(iii) நியாய விலைக் கடைகளை நவீனப்படுத்துதல் :

நியாய விலைக் கடைகளின் தோற்றத்தை உயர்த்தவும், அவைகளை ஒரே தோற்றமுடையனவாக கொண்டு வரவும் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆவின் பால் கூடம், மற்றும் காவல் நிலையம் ஆகியவைகளையும் போன்று நியாயவிலைக் கடைகளை ஒரே மாதிரியான தோற்றம் உடையவைகளாக மாற்றவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய நியாய விலைக் கடைகளை அமைக்க ஒரு மாதிரி வடிவமும் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 16]

(iv) நடமாடும் நியாய விலைக் கடைகள் :

மலைப்பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்து சென்று விநியோகம் செய்ய நடமாடும் ஊர்திகள் அறிமுகப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நான்கு ஊர்திகள் விரைவில் வாங்கப்பட உள்ளன. நடமாடும் நியாய விலைக் கடைகள் வட ஆற்காடு, திண்டுக்கல்-காயிதே மில்லத் மற்றும் நெல்லை-கட்ட பொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

இலவச அரிசி விநியோகம்

1989–90 ஆம் ஆண்டு மாத வருமானம் 300 ரூபாயும் அதற்குக் குறைந்த வருமானமும் உள்ள குடும்ப அட்டைதாரர் களுக்கு 5 தடவை 5 கிலோ இலவச அரிசி தமிழ் புத்தாண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள், மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள், தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை காலங்களில் வழங்கப் பட்டது. 1990–91 ஆம் ஆண்டில் தமிழ்ப்புத்தாண்டு, தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய மூன்று தருணங்களில் மாத வருமானம் 1,000 ரூபாயும் அதற்கு குறைந்த வருமானம் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 5 கிலோ இலவச அரிசி வழங்கப் படும்.

39. சிறப்பு அங்காடிகளும் மற்றும் சிறப்புச் சிற்றங்காடிகளும் மேற் கொண்ட விற்பனை :

மாநிலத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் தற்பொழுது 32 சிறப்பு அங்காடிகளையும் 214 சிறப்பு சிற்றங் காடிகளையும் நடத்தி வருகின்றன. 1988–89 ஆம் ஆண்டில் சிற்றங்காடிகள் 63.07 கோடி ரூபாய் அளவிற்கும் சிறப்பு சிற்றங்காடிகள் 52.27 கோடி ரூபாய் அளவிற்கும் விற்பனை செய்துள்ளன. 1988–89 ஆம் ஆண்டில் 4 பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க 4 நுகர்வோர் கூட்டு றவுச் சங்கங்களுக்கு 1.95 இலட்சம் ரூபாய் அளவிற்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கியுள்ளது.

40. சுய சேவைப் பிரிவுகளைத் துவக்குதல் :

தேவைப்படும் நுகர்பொருட்களின் தரத்தை கண்டறிந்தும், அவற்றின் விலைகளை ஒப்பிட்டு சரி பார்த்த பிறகு, வாங்கும் உரிமையையே நுகர்வோர்கள் விரும்புகிறார்கள். நுகர்வோரின் இந்த மனப்பாங்கினைப் பூர்த்தி செய்யத் தொடங்கப்பட்ட வையே சுயசேவைப் பிரிவுகளாகும். இச் சுயசேவைப் பிரிவுகள்

துவக்குவதற்கான முயற்சிக்கு நல்லதொரு வரவேற்பின் விளைவாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தற்சமயம், மாநிலத்தில் 53 சுயசேவைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை, திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தேனாம்பேட்டையில் உள்ள புதிய காமதேனு சுய சேவைப் பிரிவு தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நவீன முறையில் சுமார் 6,000 சதுர அடிகள் பரப்பளவில் இயங்கும் சுய சேவைப் பிரிவாகும்.

4.1 நலிந்த பிரிவினருக்குச் சேவை :

பின்தங்கிய பகுதியில் உள்ள சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்க்கும், தொழிற் சார்ந்த பணியாளர்களுக்கும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 66 சிறிய கிளைகளும், பெரு நகரங்களின் கூட்டுறவு சங்கங்களில் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் நலிந்த பிரிவினருள் மிக நலிந்தோர்க்கு 100 மிகச் சிறிய கிளைகளும் (மக்கள் அங்காடிகள்) தொழில் சார்ந்த தொழிற்சாலை பணியாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கூலி வேலை செய்பவர்கள், குறைந்த வருமானம் பெறுபவர்கள், பின்தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினர் மிகுதியாக வசிக்கும் பகுதியில் உள்ளவர்களின் மற்றும் குடிசைப் பகுதியில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவு செய்ய 27 சிறிய அளவு விற்பனை நிலையங்களும், மைய அரசின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டன. இரண்டு சிறிய அளவு விற்பனை நிலையங்கள் அமைக்க 1989-90 ஆம் ஆண்டில் மைய அரசானது 1.20 லட்ச ரூபாய் நிதி உதவியாக அளித்தது.

42. நலிந்த கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு புத்துயிர் ஊட்டல் :

மைய அரசுத் திட்டத்தின்கீழ் மாநிலத்திலுள்ள மிகவும் நலிந்த கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு நிதிஉதவி அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 12 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு 151.10 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி வழங்கப்பட்டது. மைய அரசின் நிதி உதவியில் 25 விழுக்காடு நிதி உதவியை பங்குத் தொகையாக மாநில அரசு வழங்குகிறது. இவ்விதம் நிதி உதவி பெற்று புத்துயிரூட்டும் திட்டத்தின்கீழ் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் செயல்பாட்டு முன்னேற்றங்கள் மாநில அளவுத் திட்ட நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. 1990-91ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் நிதிஉதவி பெற திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 16]

43. நடமாடும் ஊர்தி அங்காடிகள் :

நகரத்தின் சுற்றுப்புற எல்லையில் உள்ள தொழில் சார்ந்த பணியாளர்கள், குடிசைப் பகுதியில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக 5 இலட்சம் அளவிற்கு மேல்உள்ள மக்கள் தொகை கொண்ட பெரு நகரங்களிலும், நகரங்களிலும் அமைந்துள்ளதும், ஆண்டொன்றுக்கு குறைந்த அளவு 100 இலட்சம் ரூபாய் அளவிற்கு வரவு-செலவு கொண்டதுமான நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களுக்கு மைய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ் நடமாடும் ஊர்தி அங்காடிகள் அமைக்க நிதி உதவி அளிக்க தெரிவு செயயப்படுகின்றன. சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை நகரங்களில் நடமாடும் ஊர்திக் கடைகள் இயங்கி வருகின்றன. இதுவரை இவ்வங்காடிகள் அமைக்க 6 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

44. மின் சக்தி விநியோகத்தை விரிவாக்குதல் :

கிராமப்புறங்களில் மின் சக்தியைப் பரவலாக வழங்குவதற்காகவும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காகவும் ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கும்பகோணம், திருமயம், வந்தவாசி ஆகிய இடங்களில் இயங்கிவரும் 3 ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்களும், 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நலிந்த பிரிவினருக்காக ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்குத் திட்டத்தின் கீழ் 15,764 மின் இணைப்புகள் உட்பட 78,286 மின் இணைப்புகள் வழங்கியுள்ளன.

நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள் :

45. தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் :

தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பள தொழிலாளர்கள் மற்றும் மலை வாழ் மக்கள் போன்ற நலிந்த பிரிவினரின் நலன் கருதி தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்த வேலைகளைப் பெற்றுத் தருவதன் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்றன. பிற வகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு சேவைகளையோ அல்லது கடன் உதவியையோ அளிக்கின்றன.

[1990 ஏப்ரல் 16

46. வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களுக்கான கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள்:

படித்து வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அவர்களுக்கான கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் படுகின்றன. நவீன பொறியியற் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னையில் ஒன்றும், மதுரையில் ஒன்றும் முறையே 1981–82 ஆம் ஆண்டிலும் 1984–85 ஆம் ஆண்டிலும் அமைக்கப்பட்டது. அரசு ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா 3.64 லட்சம் ரூபாய் நிதியுதவி அளித்துள்ளதுடன் இச்சங்கங்களில் செயலராக, பணியாற்ற ஒரு கூட்டுறவு சார் பதிவாளர் பதவியினையும், இலவசமாக வழங்கியுள்ளது. தற்போது இச் சங்கங்கள் முறையே 35 மற்றும் 27 உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன. இந்த இரண்டு சங்கங்களும் இதுவரை 320 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தப் பணிகளை செய்து முடித்துள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் சென்னையில் இது போன்று மேலும் ஒரு சங்கம் ''பியர்ஸ் பொறியாளர் கட்டுமானக் கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் துவக்கப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டில் மேலும் ஒரு சங்கம் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.

47. பழங்குடியினர் மேம்பாடு :

மாநிலத்தில் 1989 டிசம்பர் 31 அன்று 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 54,259 பழங்குடி உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்களை பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த கடன் வசதி விற்பனை மற்றும் ஏனைய சேவைகளை வழங்கி வருகின்றன. பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அரசு இச் சங்கங்களுக்கு தாராளமாக தொடர்ந்து நிதியுதவிகளை அளித்து வருகிறது. பழங்குடி வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களின் வேளாண்மைக் காரியத்திற்காக தேவைப்படும் நிதியுதவிகளை இந்த பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. அவர்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு பால் பண்ணைத் தொழில் முதலியவற்றிற்கு மத்திய காலக் கடனும் வழங்கப்படுகின்றன. வருவ காலமில்லாத காலங்களில் பழங்குடியினரின் தேவைக்கேற்ப நுகர்வுக் கடன்களும் வழஙகப்படுகின்றது. இவ்வகைக் கடன்கள் 1984–85 ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 4 சதவீத சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்பட்டு வந்தன. 1985 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் பழங்குடி உறுப்

1990 ஏப்ரல் 16]

பினர்களுக்கு வட்டியில்லா கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் வட்டி இழப்பை அரசு மான்யமாக வழங்குகிறது. 1989–90 ஆம் ஆண்டில், பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன் களின் வட்டி இழப்புக்கு 24.75 இலட்ச ரூபாயை மான்ய மாக அரசு வழங்கியுள்ளது. ஆகவே, இவ்வகை பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பழங்குடி உறுப் பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல்வகை நல திட்டங்களில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. இச்சங்கங்கள் செய்துள்ள பல்வேறு சேவைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு.	வழங்கிய கடன்கள்.	கொள் முதல் செய்த வேளாண்மை பொருட்களின் மதிப்பு.	வழங்கிய வேளாண்மை இடு பொருட்களின் மதிப்பு.	கொள் முதல் செயத சிறு வனப் பொருட்களின் மதிப்பு.	விநியோகித்த நுகர் பொருட்களின் மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்).		
1980–81 ..	23.85	1.41	7.31	8.01	33.51
1981–82 ..	48.46	2.53	12.17	7.73	56.46
1982–83 ..	54.23	2.48	9.11	14.19	59.92
1983–84 ..	69.80	3.23	13.90	9.38	77.49
1984–85 ..	76.17	5.28	17.92	14.38	76.48
1985–86 ..	98.48	11.00	26.41	22.15	95.90
1986–87 ..	129.26	14.27	29.20	34.15	104.39
1987–88 ..	166.52	13.85	32.15	54.39	136.20
1988–89..	228.29	16.48	35.66	45.05	167.43
1989–90 .. (சனவரி 1990 வரை)	156.31	13.54	27.13	24.27	154.10

[1990 ஏப்ரல் 16

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.

48. கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரங்களைத் தீவிரப்படுத்துதல்:

மாநிலத்தில் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் விளம்பரம் ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பொறுப்பேற்றுள்ளது. கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரம் செய்தல் ஆகிய பணிகளை இது தீவிரப்படுத்தியுள்ளது. மாநிலத்திலிருந்து வெளிவரும் முக்கியமான வெளியீடுகளில் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியமான திட்டங்கள் குறித்து விளம்பரங்கள் வெளியிட்டு வருகிறது. தொலைக்காட்சி மற்றும் வானொலி ஆகியவற்றை பெரிதும் பயன்படுத்தி ஒன்றியம், கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை பரப்பி வருகிறது. கொள்கைப் பரப்பு பணிகளுக்கு ஒன்றியம் நடமாடும் ஊர்திகளைப் பயன்படுத்தி வருகிறது. கூட்டுறவுக் கடன்களைத் திரும்பச் செலுத்துவதின் அவசியத்தையும், கூட்டுறவு சங்கங்களின் பணிகள் குறித்து எடுத்துரைக்கும் வகையில் சிறு சினிமாப் படங்கள் தயாரித்துள்ளது. அது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கொண்டாடவும், நூலகங்கள் நடத்தியும், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தியும் பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளில் பங்கு கொண்டும் வருகின்றன. மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மாத இதழ்கள் வெளியிட்டும் மாவட்ட அளவில் நூலகங்கள் நடத்தியும் வருகின்றன. மிகச் சிறந்த முறையில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கொண்டாடப்படும் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவின் போது கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

49. கூட்டுறவுப் பயிற்சி :

இளநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலும், மாவட்டங்களிலுள்ள 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் அளிக்கப்படுகிறது. இடைநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும் மதுரைக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியிலும் அளிக்கப்படுகிறது.

தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க விற்பனைச் சங்கங்களின் பணியாளர்களுக்காகக் கிடங்கு வசதிப் பயிற்சியொன்று 15-11-1989 அன்று தொடங்கப்

1990 ஏப்ரல் 16]

பெற்றுள்ளது. இதற்கெனத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் வேளாண்மைக் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. 1,250 பணியாளர்களுக்கு இப் பயிற்சியளிப்பதற்காகத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 71.30 இலட்சம் ரூபாய் ஊக்குதவித் தொகை பெறப்படுகிறது. இவ் வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையத்துக்கு ஒரு கட்டிடம் கட்டுவதற்காக மேலும் 80.00 இலட்சம் ரூபாய், ஊக்குதவித் தொகை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்படும்.

பொது

50. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள்:

1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டமும் 1988 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளும் 13–4–1988 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் 1983 தமிழ்நாடு கூட்டுறவு விதிகள் 1988 ஆகியவற்றின்கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் 1988 இல் இரு முறை ஆணையிடப்பட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க மேலும் ஓரளவு அவகாசம் தருவதற்கெனப் பின்னர் ஒத்திவைக்கப்பட்டன.

கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்துதல் பற்றிப் பின்னர் கருதிய போது, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்துமுன், கூட்டுறவு சட்டம் பற்றிய அர்த்தநாரீசுவரன் குழுவின் பரிந்துரைகள், தேசியப் பால் வள வாரியத் தலைவரின் கருத்துரைகள், பிற கூட்டுறவாளர்களிடமிருந்து வந்துள்ள கோரிக்கைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மேற் குறித்த 1983 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலுள்ள சில வரையறைகளை நீக்கலாமென அரசு உணர்ந்தது. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் மகளிருக்கு 30 சதவீத இடமும் ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீத இடமும் ஒதுக்குவதெனவும் அரசு முடிவெடுத்தது. அவ்வாறே 1989 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தின் (1989 ஆம் ஆண்டின் 36 ஆவது தமிழ்நாடுச் சட்டம் பின்னர் இதற்கு பதிலமர்த்தப்பட்டுள்ளது.) வாயிலாக மேற் குறித்த சட்டத்தின் சில பகுதிகளுக்குத் திருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 19–8–1989 அன்றும் அரசு 1988 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் சில பகுதிகளுக்குத் திருத்தங்கள் அறிவித்துள்ளது.

அதே சமயத்தில், மாநிலத்திலுள்ள அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 31–10–1989 அன்றோ அதற்கு முன்போ தேர்தல்கள் நடத்தி முடிக்கப் படவேண்டுமென அரசு 5–7–1989 அன்று ஆணையிட்டது. அதற்கேற்பத் தேர்தலுக்கான செயல் முறைகள் நிகழ்ந்து கொண்டிருக்கையில், தேர்தல்கள் நடத்துமுன் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் மேற் குறித்த சட்டம் மற்றும் விதிகளுக்கு மேலும் சில திருத்தங்கள் செய்யவும் மேலும் ஓரளவு காலம் அளிக்குமாறு கேட்டு அரசியல் கட்சிகளிடமிருந்தும் பிற நிறுவனங்களிடமிருந்தும் அரசுக்குக் கோரிக்கைகள் வரப் பெற்றன. இக்கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு கூட்டுறவுகளுக்கான தேர்தல்களை 2–10–1989-க்குப் பின்னர் மேலும் நான்கு மாதங்களுக்கு ஒத்தி வைத்து அரசு 29–9–1989 அன்று ஆணையிட்டது.

1983 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 1988 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் ஆகியவற்றின் சில பகுதிகளைத் திருத்துதல் அரசின் பரிசீலனையிலுள்ளது. அனைத்துத் தொடக்க நிலைச் சங்கங்களுக்கான தேர்தல்களை 1990 ஆகஸ்ட் அளவில் தொடங்கி 1990 நவம்பர் அளவில் முடிக்க வேண்டுமென்பது அரசின் கருத்தாகும்.

51. முடிவுரை :

பொது மக்களுக்குப் பணியாற்றும் வகையிலும், குறிப்பாகப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நலிந்த பிரிவினருக்கு இன்றியமையாப் பொருட்களைத் தடையின்றி வழங்குவதை உறுதி செய்யும் வகையிலும் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தைச் சீர்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

I. உணவு தானிய உற்பத்தியும் கொள்முதல் கொள்கையும்.

1. போதிய மழை இன்மையாலும், மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு போதுமான தண்ணீர் வராததாலும் 1989-90ஆம் ஆண்டு நெல் பயிரிடுதல் மிகவும் பாதிக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு தென் மேற்கு பருவமழை தேவையான அளவு இருந்த போதிலும் வட கிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. எனவே, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி ஓரளவு பாதிக்கப்பட்டது.

1990 ஏப்ரல் 16]

2. 1—9—1989 முதல் தஞ்சாவூர் மாவட்டம் முற்றிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, அறந்தாங்கி, ஆவுடையார் கோவில் வட்டங்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முசிறி, லால்குடி, குளித்தலை, அரியலூர், திருச்சிராப்பள்ளி, உடையார்பாளையம் வட்டங்களிலும் ஏகபோக கொள்முதல் முறை அமல் படுத்தப்படுகிறது. ஏகபோக கொள்முதல் உள்ள பகுதி நீங்கலாக ஏனைய பகுதிகளில் 50 சதவீதம் வர்த்தக லெவி முறை நடைமுறையில் உள்ளது.

3. ஏகபோக கொள்முதல் அமலில் உள்ள பகுதிகளில் மட்டும் விவசாயிகளின் நலனைப் பேணும் பொருட்டு, நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 35 ஊக்கத் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது. மேலும், ஒரு நல்லெண்ண அடையாளமாக விவசாயிகளுக்கு பணமாகவே உதவும் பொருட்டு, 1989 ஆம் ஆண்டு இரு முறை, மூன்று ரக நெல்லுக்கும் கீழ்க்காணுமாறு விலைகள் உயர்த்தப்பட்டன.

ரகம்.	1988-89	1989-90 1-9-1989 முதல்	1989-90 16-12-89 முதல்
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் குவிண்டாலுக்கு)		
சாதாரணம் ..	160	175	185
சன்னம் ..	170	185	195
மிகச் சன்னம்	180	195	205

4. 1989ஆம் ஆண்டு சம்பா பருவத்தில் 17.75 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் குறியீட்டு இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, அதில் 9.28 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1989 ஆம் ஆண்டு குறுவையில் 3.04 இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதில் 1.60 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதில் வர்த்தக லெவி முறையில் கொள்முதல் செய்யப்பட்ட 32,000 மெட்ரிக் டன் நெல்லும் அடங்கும்.

5. 1990 ஆம் ஆண்டு சம்பா பருவத்திற்கு 17.42 இலட்சம் டன் நெல் கொள்முதல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 3—4—1990 வரைக்கும், 10.48 இலட்சம் டன் நெல் கொள்

[1990 ஏப்ரல் 16

முதல் செய்யப்பட்டது. இது சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டதைவிட 2.2 இலட்சம் மெட்ரிக் டன் நெல் அதிகமாகும். நடப்பு சம்பாவில், தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை காணாத அளவுக்கு நெல் கொள்முதலாகியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில், இதுவரைக்கும் மிக அதிகப்படியாக கொள்முதல் செய்த நெல் அளவு 8.49 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். நடப்பு ஆண்டில் 22-3-1990 அன்றே இந்த அளவு எட்டியுள்ளது. கணிசமான கொள்முதல் விலை ஏற்றமும், வருவாய்த்துறை மற்றும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட மேம்பட்ட கொள் முதல் டணி நிர்வாகமுமே இதற்கு காரணங்களாகும்.

6. 20-9-1989 அன்று நெல் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல்/அரிசி வர்த்தகச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அரசால் நடத்தப்பட்ட கூட்டத்தில், வர்த்தகர் லெவி திட்டத்தில் வியாபாரிகள் தாமாகவே அரசுக்கு குறுவையில் 50,000 மெட்ரிக் டன்களும், சம்பாவில் 2 இலட்சம் டன்களும் லெவியாக தருவதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வர்த்தகர் லெவி, 50 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட இலக்கினை அடையமுடியாவிடில், மீண்டும் 50 சதவீத வர்த்தக லெவி அமலுக்கு கொண்டு வரப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப 8-10-1989 முதல் வர்த்தக லெவி 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கொள்முதல் முன்னேற்றம் மறு பரிசீலனை செய்யப்பட்டது. நடப்பு சம்பாவில் 30 சதவிகித வர்த்தக லெவி முறையில் கொள்முதல் அளவு எதிர்பார்த்த அளவு இல்லாததையொட்டி, பொது விநியோகம் மற்றும் சத்துணவுத் திட்டத்தைக் கருத்திற்கொண்டு, 8-2-1990 முதல் வர்த்தக லெவி மீண்டும் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

7. நெல்/அரிசி ஆலையாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் கோரிக்கைக்கேற்ப மாவட்டங்களுக்கிடையே எளிதான நெல்/அரிசி நடமாட்டத்தை ஏற்படுத்த கீழ்க்காணும் மாவட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட தனித்தனி உணவு மண்டலங்களாக செயல்பட 8-10-1989 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டன.

(i) இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராஜர் மாவட்டங்கள்.

(ii) கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்கள்.

(iii) மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டங்கள்.

(iv) வடாற்காடு அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள்.

1990 ஏப்ரல் 16]

(v) தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்கள்.

(vi) திருநெல்வேலி கட்ட பொம்மன் மற்றும் சிதம் பரனார் மாவட்டங்கள்.

II. பொது விநியோக முறை :

8. நியாய விலைக் கடைகள் :

8.1. தமிழ்நாட்டில் நன்கு அமைக்கப்பட்ட மிகச் சிறந்த பொது விநியோக முறை செயல்பட்டு வருகிறது. சுமார் 129 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு உதவும் வகையில் மாநிலத்தில் 21,134 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 17,382 நியாயவிலைக் கடைகள் ஊரகப் பகுதிகளிலும், எஞ்சியுள்ள 3,752 நியாயவிலைக் கடைகள் நகரப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன.

8.2. 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் தேதி வரை, மாநிலத்திலுள்ள 21,134 நியாயவிலைக் கடைகளும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வந்தன. இவற்றில் 936 நகர்ப்புறக் கடைகள் 1989 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் தேதி முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

8.3. இந்த அரசு ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடையை ஏற்படுத்தியுள்ளது. தற்பொழுது ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாதவாறு குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என அரசு முடிவெடுத்து இதற்கான ஆணைகளை வெளியிட்டுள்ளது. கடைகளின் இச் சீரமைப்பு படிப்படியாக நடைமுறைப் படுத்தப்படும்.

9. குடும்ப அட்டைகள் :

9.1. தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் 1988ஆம் ஆண்டு சனவரி திங்கள் விநியோகிக்கப்பட்டவை. மேற்கண்டவாறு குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதற்கு முன் மாநிலத்தில் இருந்த மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 119 இலட்சமாகும். 1988 சனவரியில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கியபின் இந்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 129 இலட்சமாக உயர்ந்து விட்டது. அரசு போலி குடும்ப அட்டைகளின் நடமாட்டத்தை அறிந்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போலி அட்டைகளை நீக்கத் தேவையான தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

9.2. சமீபத்தில் இதுவரை குடும்ப அட்டை பெறாதவர்களுக்கு தீவிர தணிக்கைக்குப்பின் குடும்ப அட்டைகள் வழங்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

10. நடமாடும் கடைகள் :

எளிதில் செல்ல முடியாத கிராமங்களில் நடமாடும் கடைகள் நடத்தும் வகையில் வேன்கள் வாங்குவதற்காக மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு கடனாக 7.5 இலட்சம் ரூபாயும், மானியமாக 2.5 இலட்சம் ரூபாயும் வழங்கியுள்ளது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒரு வாகனமும், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் ஒரு வாகனமும் மற்றும் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இரண்டு வாகனங்களும் நடமாடும் கடைகளாக செயல்படும்.

11. விழிப்புப் பணிக் குழுக்கள் :

அரசு ஒவ்வொரு நியாயவிலைக் கடைக்கும் ஒரு விழிப்புப் பணிக் குழுவை ஏற்படுத்தியுள்ளது. நியாயவிலைக் கடை அமைந்துள்ள பகுதியிலுள்ள முக்கிய நபர்கள், பொதுநலத் தொண்டர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், நலிந்த பிரிவினரின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த விழிப்புப் பணிக் குழுக்களின் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த விழிப்புப் பணி குழுக்களில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இக் குழுக்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மாவட்டங்களுக்கும் மற்றும் சென்னை மாநகரத்திற்கும் விழிப்புப் பணிக் குழுக்களை மீண்டும் அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மற்றும் நகராட்சித் தலைவர்களும் இந்த குழுக்களின் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

12. பொது விநியோக முறையின் செயல்பாடு :

பொது விநியோகத்தின் முக்கியத்துவத்தைக் கருதியும், பொருள்களின் சீரான விநியோகத்தைக் கருதியும், நியாய விலைக் கடைகளில் பொருள்கள் களவாடப்படுவதையும் மற்ற முறைகேடுகளையும் களைவதற்காக அவற்றை தீவிர கண்காணிப்பில் வைத்திருத்தல் அவசியம். இதனை கருத்தில் கொண்டு அரசு செயலாக்க அதிகாரிகளுக்கு தணிக்கைக்கான மாத குறியீடுகளை நிர்ணயித்துள்ளது. இந்த தணிக்கைகள் நல்ல பயனை அளித்து, நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டினை பெருமளவில் குறைத்துள்ளது. நியாயவிலைக் கடைகள் தீவிரமாக செயல்படவும் கூட்டுறவுத்துறை அதிகாரிகளுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகளுக்கு மிடையே சுமுகமான உறவினை

1990 ஏப்ரல் 16]

ஏற்படுத்தவும், நியாயவிலைக் கடைகளில் குண்டர்களின் தொல்லையை அகற்றவும், சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவுத் துறை, உணவு பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் ஆகியவர்களுடன் ஆலோசனைகள் செய்யப்பட்டுள்ளன.

13. மக்கள் குறைகளை நீக்குதல் :

13.1. மக்கள் குறைகளைக் களையும் பொருட்டு ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும், ஒரு புகார் பெட்டியும், ஒரு புகார் புத்தகமும், அவர்கள் தங்கள் குறைகளை தெரியப்படுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ளன.

13.2. எடைக் குறைவு, இருப்புக் குறைவு, பொருட்களின் தட்டுப்பாடு போன்றவை பொதுவாக நியாயவிலைக் கடைகள் மீது கூறப்படும் குற்றச் சாட்டுகளாகும். நியாயவிலைக் கடைகளை சோதனை செய்யும் அதிகாரிகளும், கடைப் பணியாளர்களும் கடையில் உள்ள பொருட்களின் இருப்பு மற்றும் அவற்றின் விலை ஆகியவற்றை தெரிவிக்கும் பலகைகள் கடைகளில் கட்டாயம் வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், சரியான நேரத்தில் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்றும், அத்தியாவசியப் பண்டங்கள் கடைகளிலிருந்து காணாமல் போவதைத் தடுக்க வேண்டுமென்றும், அத்தியாவசியப் பண்டங்களை பெறாத குடும்ப அட்டைகளில் பண்டங்களைப் பெற்றதாக கடைப் பணியாளர்கள் குறியீடு செய்வதை தடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நியாயவிலைக் கடைகளில் தேவையான அளவு அத்தியாவசியப் பண்டங்களை இருப்பு வைக்குமாறு கடைப் பணியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். குடும்ப அட்டைதாரர்களை கட்டுப்பாடற்ற பொருட்களை வாங்குமாறு கட்டாயப்படுத்தக் கூடாது என அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தேவையான அளவு அத்தியாவசியப் பண்டங்களை தங்கள் வட்ட கிட்டங்கிகளில் இருப்பு வைத்திருக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பண்டங்களின் தரத்தை கடுமையான தர நிர்ணயம் செய்து தரமான பொருட்களையே வைத்திருக்குமாறு அக்கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொது மக்களின் ஒரு முக்கியமான குறை புழுங்கலரிசி கிடைக்காததாகும். இதுவரை அரசு இந்திய உணவுக் கழகம் வழங்கி வந்த பச்சரிசியையே விநியோகத்திற்கு நம்பி வந்தது. தற்போது கொள்முதல் நன்றாக உள்ளதாலும், ஆந்திராவிலிருந்து அரிசி வாங்கப்படுவதாலும் புழுங்கலரிசியின் இருப்பு சீரடையும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தேவைக்கேற்றவாறு புழுங்கல் அரிசியையும், பச்சரிசியையும் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 16

14. நியாயவிலைக்கடைகள் சோதனை :

உணவுத் துறை எதிர்நோக்கும் சிரமங்களைக் குறித்து ஆராய்வதற்காக மட்டும் முதன் முறையாக சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் மதுரையில் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் ஒரு கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. இக் கூட்டத்தின் முடிவுகளுக்கிணங்க அரசின் மூத்த அதிகாரிகள் மண்டல ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் சில மாவட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவர்கள் மாவட்டத்தில் கொள்முதல் மற்றும் பொது விநியோகம் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து தலைமைச் செயலாளருக்கு தங்களது ஆய்வறிக்கையை அனுப்புகின்றனர். இந்த அறிக்கை உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட்டு இத் துறையால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நியாய விலைக் கடைகளின் ஆய்வு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் பொது விநியோகத்தில் ஈடுபட்டுள்ள துறைத் தலைவர்களிடமிருந்தும் ஒவ்வொரு மாதமும், மண்டல ஆணையாளர்களிடமிருந்து இரண்டு மாதங்களுக்கொரு முறையும் அறிக்கை பெற்று அவற்றினை அரசு ஆய்வு செய்கிறது.

15. அரிசி :

15.1. பொது விநியோகம் மற்றும் சத்துணவு திட்டத்திற்கான மாதாந்திர தேவை ஏறக்குறைய 1.65 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். இத் தேவை உள்ளூர் கொள்முதல், மத்திய ஒதுக்கீடு மற்றும் வெளிச் சந்தையில் வாங்குதல் போன்ற முறைகளில் பூர்த்தி செய்யப்படுகிறது.

15.2. 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை, மாதமொன்றுக்கு மத்திய தொகுப்பிலிருந்து 40,000 டன் வீதம் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மத்திய அரசு 90,000 டன் அரிசியை ஒதுக்கீடு செய்தது. தற்பொழுது மாதமொன்றுக்கு 60,000 டன் அரிசியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது. மாதமொன்றுக்கு 80,000 டன் அரிசியை ஒதுக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. சமீபத்தில் முதலமைச்சருக்கும் மத்திய உணவு அமைச்சருக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தையின் பொழுது மாதாந்திர ஒதுக்கீடு 75,000 டன்களாக உயர்த்துதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நிலைமையை ஒட்டு மொத்தமாக பார்த்தபின், முதற்கண் 3 இலட்சம் டன் அரிசியை இதர மாநிலங்களிலிருந்து வெளிச் சந்தையில் வாங்க அரசு முடிவெடுத்துள்ளது. இவ்வாறு வெளிச் சந்தையில் வாங்கப்படும் அரிசி பொது விநியோகத்தின் இருமாத தேவைக்கான கையிருப்பை ஏற்படுத்துவதாகும்.

15.3. மாத வருமானம் எதுவாக இருந்தாலும் பெரியவருக்கு மாதமொன்றுக்கு தலா 4 கிலோ, சிறுவருக்கு மாதமொன்றுக்கு தலா 2 கிலோ என்ற அலகுகளில் குடும்ப அட்

1990 ஏப்ரல் 16]

டைக்கு மாதத்திற்கு 12 கிலோவிற்கு மிகாமல் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி வழங்கப்படுகிறது. பொது விநியோகத்தில் அரிசி விநியோகிக்கும் முறைகளை தளர்த்த வேண்டும் என்ற பொது மக்களின் முறையீட்டினை ஏற்று, 1-4-1990 முதல் நுகர்வோர் தகுதிக்கேற்ப அரிசியை ஒரே தவணையில் வாங்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. விருப்பினால் நுகர்வோர் மூன்று தவணைகள் வரை அரிசியை பொது விநியோகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஆணை யிடப்பட்டுள்ளது.

16. பொது விநியோகத்தில் அரிசியின் விற்பனை விலை :

16.1. பொது விநியோகத்தில் சாதாரணம், சன்னம், மற்றும் மிகச் சன்ன ரக அரிசி விலை முறையே கிலோ ரூ. 1.75, ரூ. 2.25 மற்றும் ரூ. 2.50 என மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் அரிசியின் அடக்க விலை (Economic Cost) சாதாரணம், சன்னம் மற்றும் மிகச் சன்ன ரகங்களுக்கு முறையே ரூ. 3.73, ரூ. 3.88 மற்றும் ரூ. 4.11 என இருந்து வந்தது. இந்த விலை வித்தியாசத்தை ஈடு செய்ய அரசு ஒரு பெரும் தொகையை மானியமாக ஏற்க வேண்டியிருந்தது. எனவே, 1-3-1990 முதல் அரசு பொது விநியோகத்தில் வழங்கப் படும் அரிசியின் விலைகளைக் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைத்தது ;—

ரகம். (1)	விலை ரூபாய் (கிலோவிற்கு) (2)
சாதாரணம்	2.00
சன்னம்	3.00
மிகச் சன்னம்	3.50

16.2. மேற்குறிப்பிட்ட விலைகள் மத்திய அரசின் விற்பனை விலைகளுடன் ஒப்பிடும் போது நியாயமானவை ஆகும். சாதாரணம் மற்றும் சன்ன ரகங்களின் விலை மத்திய அரசின் விற்பனை விலைகளை விடக் குறைவாகவே உள்ளன. தற்போது அறிவிக்கப்பட்ட விலைகள் அண்டை மாநிலங்களில் நிலவி வரும் விலைகளுடன் ஒப்பிடக் கூடியவை ஆகும்.

17. இலவச அரிசி திட்டம் :

மாத வருமானம் ரூ. 300 மற்றும் அதற்குக் குறைவான வருமானமுடைய அட்டைதாரர்களுக்கு கடந்த ஆண்டு ஐந்து முறை இலவச அரிசி வழங்கப்பட்டது. ஒவ்வொரு முறையும்

சுமார் 83 இலட்சம் அட்டைதாரர்களுக்கு ரூ. 7.50 கோடிச் செலவில் இலவச அரிசி வழங்கப்பட்டது. இத்திட்டம் மக்களால் பெருமளவில் வரவேற்கப்பட்டது. ஆனால், குடும்ப அட்டைகளில் சரியான மாத வருமானம் பதிவு செய்யாததால் உண்மையாகவே தகுதி வாய்ந்த அட்டைதாரர்கள் பலர் இவ்வாய்ப்பினை இழப்பதாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. மேலும் இலவச அரிசி பெறுவதற்கான வருமான வரம்பு மிகக் குறைவானது என்றும முறையிடப்பட்டது. எனவே ரூ. 1,000-ம் மற்றும் அதற்குக் குறைவான மாத வருமானமுடைய அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் இலவச அரிசி பெறலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. இந்த இலவச அரிசி, இனி மேல் தமிழ்ப் புத்தாண்டு நாள், தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகை என ஆண்டுக்கு மூன்று தருணங்களில் வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ 36.00 கோடி செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

18. கோதுமையும், கோதுமை பொருட்களும்.

18.1. இம்மாநிலத்தில் பொதுப் பங்கீட்டு முறையின் கீழ் வழங்குவதற்காக மாதம் தோறும் 30,000 மெட்ரிக் டன் லெவி கோதுமையை இந்திய அரசு ஒதுக்கி வருகிறது. அந்த கோதுமை ஒதுக்கீட்டில் இந்த மாநில குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க 18,000 மெட்ரிக் டன்னிலிருந்து 23,000 மெட்ரிக் டன் வரை மாதம் தோறும் எடுக்கப்படுகிறது. மாநிலத்தில் சம தரைப் பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ கோதுமையும் மலைப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு 30 கிலோ கோதுமையும் வழங்கப்படுகிறது. ஒரு கிலோ கோதுமை ரூ. 2.20 என்ற விலையில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

18.2. தமிழ்நாட்டில் கோதுமை மாவு ஆலைகள் 46 உள்ளன. அனைத்து ஆலைகளின் கோதுமை அரைவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 80,000 மெட்ரிக் டன் ஆகும். கோதுமை மாவு ஆலைகள் தங்களுடைய இரண்டு மாத அரைவைத் திறன் கோதுமையை இருப்பாக வைத்துக் கொளளலாம் என அரசு நிர்ணயம் செய்துள்ளது. கோதுமை மற்றும் கோதுமை சம்பந்தமான உணவான மைதா, ரவா போன்றவைகளை உணவாக மேற்கொள்ளும் மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க கருத்தரங்கு, சமைக்கும் போட்டி முதலியவைகளை அரசு நடத்துகிறது. மேலும் வெள்ளை கோதுமையை பொது மக்கள் விரும்புவதால் இம்மாநிலத்திற்கு வெள்ளை கோதுமையை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். கோதுமையை விநியோகிப்பதற்கு முன்பாக சுத்தம் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. அரசு எடுக்கும் மேற்கண்ட நடவடிக்கைகள் கோதுமை பயன்படுத்தப்படும் அளவை அதிகரிக்க வழிகோலும்.

1990 ஏப்ரல் 16]

19. சர்க்கரை :

மத்திய அரசு 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 1986 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட மக்கள் தொகை கணக்கீட்டின்படி நபருக்கு மாதம் 425 கிராம் என்ற அளவில் சர்க்கரையை மாதம்தோறும் ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசு மாதம் தோறும் ஒதுக்கும் சர்க்கரையின் அளவு சுமார் 22,500 மெட்ரிக் டன். இந்த அரசு நபருக்கு மாதம் 500 கிராம் வீதம் ஒரு குடும்ப அட்டைக்கு அதிகபட்சமாக 2 கிலோ வீதம் வழங்குகிறது. 1—1—1989 முதல் சர்க்கரையின் விலை கிலோ ரூ. 5.25 ஆகும். மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் சர்க்கரை கீழ்க்கண்ட காரணங்களால் போதுமானதாக இல்லை ; (அ) மத்திய அரசு மாதம் நபர் ஒன்றுக்கு 425 கிராம் வீதம் ஒதுக்கீடு செய்கிறது. இந்த அரசு நபருக்கு மாதம் 500 கிராம் வீதம் வழங்குகிறது. (ஆ) குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் தோறும் வழங்குவதோடு கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட விடுதிகள், அனாதை இல்லங்கள், அரசு மருத்துவ மனைகள், தேசிய மாணவர் பயிற்சி முகாம், தேசிய சேவைத் திட்ட முகாம்கள் மற்றும் இதைப் போன்ற மொத்த நுகர்வோருக்கும் சர்க்கரை வழங்கப்படுகிறது. (இ) மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சர்க்கரை ஒதுக்கீடு செய்கிறது. ஆனால் குடும்ப அட்டைகளில் உள்ள மக்கள் தொகையின் எண்ணிக்கை மக்கள் தொகைக் கணக்கெடுப்பை விட அதிகமாக உள்ளது. இந்த அரசு கூடுதல் சர்க்கரை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மைய அரசைக் கேட்டுக் கொண்டு வருகிறது. ஆனால் இந்த அரசின் கோரிக்கையை மத்திய அரசு இதுவரை ஏற்கவில்லை.

20. மண்ணெண்ணெய் :

20.1. ஒவ்வொரு ஆண்டும், கோடைக் காலம், மழைக் காலம் மற்றும் குளிர் காலம் என மூன்று தடவைகளாக, நான்கு எண்ணெய் கம்பெனிகள் மூலம், இம்மாநிலத்திற்கு, மண்ணெண்ணெய், மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1989—90-ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மண்ணெண்ணெய் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப பருவத்திற்குப் பருவம் கீழ்க்கண்டவாறு மாறுபடுகிறது ;

	கிலோலிட்டர்
கோடைக் காலம் (மார்ச் முதல் ஜூன் வரை) . .	61,281
மழைக் காலம் (ஜூலை முதல் அக்டோபர் வரை)	66,057
குளிர் காலம் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை)	73,611

வட மாநிலங்களில் ஏற்படும் தட்ப வெப்ப நிலையில் பெரும் மாறுதலைக் கருத்திற் கொண்டு இவ்வாறு பருவத்திற்குப் பருவம் மாறுபட்ட அளவு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தென் மாநிலங்களின் தட்ப வெப்ப நிலைகளில்

அதிக அளவு மாறுபாடு இல்லாததால் ஒவ்வொரு மாதமும் சீரான அளவு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

20.2. 1990 ஆம் ஆண்டு மார்ச் முதல் ஜூன் வரையிலான கோடைக் காலத்திற்கு ஏறத்தாழ 65,622 கி. லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டுளளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்ணெய்யை மீதம் ஏதும் வைக்காமல் குடும்ப அட்டைதாரர்களுக்கும், மொத்த விற்பனையாளர் களுக்கும் விநியோகம் செயய எல்லா மாவட்டங்களுக்கும், சென்னை நகரத்திற்கும் மறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நான்கு கூட்டுறவுகளையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் 11 கடைகளையும் சேர்த்து மாநிலத்தில் மொத்தம் 529 மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளர்கள் உள்ளனர். இம்மொத்த விற்பனையாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மறு ஒதுக்கீடு செய்கிறார்கள். நியாய விலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளைக் கணக்கில் கொண்டு இக்கடைகளுக்கு, மொத்த வியாபாரிகள் மண்ணெண்ணெய் விற்பனை செய்கிறார்கள்.

20.3. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களுக்கு அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 10 லிட்டரும், நகராட்சிப் பகுதிகளில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 6 லிட்டரும் நகர பஞ்சாயத்து மற்றும் நகரியங்களில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5 லிட்டரும் கிராமப்புறங்களில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 3 லிட்டரும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட தலைமையகம் மற்றும் நகராட்சி பகுதிகளில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 15 லிட்டரும், நகரப் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகரியத்தில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 10 லிட்டரும், கிராமப் புறங்களில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 5 லிட்டரும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

20.4. சென்னையில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு லிட்டர் ரூ. 2.30 வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. மற்றைய இடங்களில், எண்ணெய் கம்பெனிகள் இருக்கும் தூரத்தைப் பொறுத்து, ஒரு லிட்டர் மண்ணெண் ணெய் விலை ரூ. 2.30-லிருந்து ரூ. 2.56 வரை உள்ளது. சென்னை நகரில் தொழில் நுகர்வோருக்கு ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் ரூ. 3.42 வீதம் வழங்கப்படுகிறது.

20.5. மாநிலத்தில் சுமார் 2,841 மண்ணெண்ணெய் கைவண்டிக்காரர்கள் உள்ளனர். சென்னை நகரில் நாளொன்றுக்கு 100 லிட்டர் வீதம் ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கும், மாவட்டங்களில் நாளொன்றுக்கு 50 லிட்டர் வீதம் ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கும் பொது விநியோக முறை

1990 ஏப்ரல் 16]

விலையில் வழங்குவதற்காக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. குடும்ப அட்டைகள் மூலம் பெறப்படும் மண்ணெண்ணெய்க்கு மேல் அதிகம் தேவைப்படுபவர்கள், தங்களது அதிகத் தேவையைக் கைவண்டிக்காரர்களிடம், வாங்கிக் கொள்ளலாம்.

20.6. கூட்டுறவுகளைத் தவிர்த்து, மண்ணெண்ணெய் விற்பனையில் மட்டும் ஈடுபட்டுள்ள சுமார் 2,094 தனியார் சில்லரை வியாபாரிகளும், மாநிலத்தில் உள்ளனர். தங்களது பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு இவர்கள் மண்ணெண்ணெய் விநியோகம் செய்கின்றனர். 600-க்கும் மேற்படாத வகையில் இவர்களுக்கு குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. ..

20.7. மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் முழுவதும் எடுக்கப்பட வேண்டும் என்பதில் இவ்வரசு முழுக் கவனம் செலுத்துகிறது. மண்ணெண்ணெய் விநியோகத்தை தொடர்ந்து கண்காணிக்கவும், தீவிர மேற்பார்வை செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

20.8. மண்ணெண்ணெய் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக, மொத்த வாணிப உரிமம் வழங்குவதில், கூட்டுறவுகளுக்கு முன்னுரிமை தருமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை மைய அரசு ஆராய்ந்து வருகிறது.

21. சமையல் எண்ணெய்கள் :

21.1. ஒவ்வொரு மாதமும் பொது விநியோக முறை மூலம், உதிரியாகவும் மற்றும் பாக்கெட்டுகளிலும் வழங்குவதற்காக, மைய அரசு பாமோலின் எண்ணெயை இம் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது.

21.2. மைய அரசின் தற்போதைய ஒதுக்கீடு ஒரு மாதத்திற்கு சுமார் 2,000 மெட்ரிக் டன்கள் ஆகும். ஒரு மாதத்திற்கு, ஒரு அட்டைதாரருக்கு ஒரு கிலோ சமையல் எண்ணெய் வழங்கினாலும் மாதம் ஒன்றுக்கு இம்மாநிலத்திற்கு சுமார் 13,000 மெட்ரிக் டன்கள் சமையல் எண்ணெய் தேவைப்படுகிறது. படிப்படியாக குறைக்கப்பட்ட சமையல் எண்ணெய் ஒதுக்கீடு மைய அரசின் கவனத்திற்கு பல முறை கொண்டு செல்லப்பட்டு இம்மாநிலத்திற்கு அதிக அளவு எண்ணெய் ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசு கோரப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக, பாமோலின் எண்ணெய் இறக்குமதி நிறுத்தப்பட்டுவிட்டதால் ஒதுக்கீட்டை மேலும் உயர்த்த இயலாது என மைய அரசு தெரிவித்துள்ளது. இருந்த போதிலும், தற்போது ஒதுக்கீட்டின் அளவு 1,250 மெட்ரிக் டன்களிலிருந்து 2,000 மெட்ரிக் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

21.3. ஒரு கிலோ உதிரிப் பாமோலின் விலை சென்னையில் ரூ. 16.25. பிளாஸ்டிக் உறையில் அடைக்கப்பட்ட பாமோலின் சென்னையில் கிலோ ரூ. 17.20-ம் மற்றைய இடங்களில் ரூ. 17.50-ம் ஆகும். 2 கிலோ பாமோலின் டின் விலை சென்னையில் ரூ. 37.90-ம் மற்றைய இடங்களில் ரூ. 38.50-ம் ஆகும்.

22. ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் :

22.1. இது மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட திட்டம். இது இம்மாநிலத்திலுள்ள மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக செயல்பட்டு வருகிறது.

22.2. இந்த திட்டத்தின் அடிப்படையில் அரிசி மற்றும் கோதுமை மலை வாழ் மக்களுக்கு மிகவும் சலுகை விலையில் வழங்கப்படுகிறது. மைய அரசு கோதுமை மற்றும் அரிசியை (சாதாரண ரகம்) கிலோ ரூ. 1.79 மற்றும் ரூ. 2.19-க்கு முறையே விலை நிர்ணயம் செய்துள்ளது. இந்த அரசு மலைவாழ் மக்களின் முக்கிய உணவான அரிசி விலையை மேலும் குறைத்து கிலோ ரூ. 1.40க்கும் கோதுமையை கிலோ ரூ. 1.79க்கும் வழங்கி வருகிறது. 1,74,076 மக்கள் தொகையை உள்ளடக்கிய 38,287 குடும்ப அட்டைகள் உடைய மலை வாழ் மக்கள் இத் திட்டத்தின் அடிப்படையில் பயனடைந்து வருகிறார்கள்.

III. தமிழகத்தில் உணவுப் பொருள்கள் விலைகள் நிலவரம்.

23. அரிசி :

1989—90-ம் ஆண்டில், பருவ காலச் சூழ்நிலைகளின், காரணமாக, சிறிதளவு விலை ஏற்றத்தாழ்வு தவிர அரிசியின் விலையில் குறிப்பிடத் தக்க வேறுபாடு கிடையாது. 1989 ஏப்ரலில் சாதாரண ரக புழுங்கல் அரிசியின் சில்லறை விலை ரூ. 4.59 ஆக நிலவியது. 1989 சூலை திங்களில் ரூ. 4.68 ஆக சிறிதளவு உயர்ந்து நிலவியது. 1990 மார்ச் திங்களில் 4.09 ஆக குறைந்தது. சாதாரண ரக பச்சரிசியின் சில்லறை விலை 1989 ஏப்ரல் திங்களில் ரூ. 4.48 ஆக நிலவியது. 1989 செப்டம்பர் திங்களில் ரூ. 4.73 ஆக உயர்ந்து, 1990 மார்ச்சு திங்களில் ரூ. 4.51 ஆக குறைந்துள்ளது.

24. சிறு தானியங்கள் :

தென்மேற்கு பருவ மழை பாதிப்பின் காரணமாக சிறு தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவற்றின் விலைகள் சிறிதளவு உயர்ந்து காணப்படுகின்றன.

1990 ஏப்ரல் 16]

25. பருப்பு வகைகள்:

25.1. தமிழகத்தில் உற்பத்தியாகும் பருப்பு இம்மாநிலத்தின் தேவைகளுக்குப் போதுமானது அல்ல. பருப்பு விளையும் பெரும் பான்மை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், குஜராத், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வரும் வரத்தைப் பொறுத்து பருப்பு வகை களின் விலையில் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. இந்த மாநிலங் களிலிருந்து குறைந்த வரத்தின் பயனாக, பாசிப்பருப்பு நீங்கலாக அனைத்துப் பருப்பு வகைகளின் விலைகள் ஓரளவு உயர்ந்து காணப்பட்டன.

25.2. 1989 ஏப்ரல் திங்கள் முதல் 1989 செப்டம்பர் திங்கள் வரையிலான காலத்தில் துவரம்பருப்பு விலை ரூ. 9.70 லிருந்து ரூ. 12.05 ஆக உயர்ந்து, பின்னர் 1990 மார்ச் திங்களில் ஒரு கிலோ ரூ. 11.43 ஆகக் குறைந்து நிலவுகிறது. உளுந்தம்பருப்பின் விலை ரூ. 10.35 (1989 ஏப்ரல்) இருந்து ரூ. 11.71 (1989 ஆகஸ்டு) ஆக சிறிதளவு உயர்ந்து பின்னர் 1990 மார்ச் திங் களில் ரூ. 10.37 ஆகக் குறைந்துள்ளது. 1989 ஏப்ரல் திங்கள் முதல் 1989 நவம்பர் திங்கள் வரையிலான காலத்தில் கடலைப் பருப்பின் விலை ரூ. 9.44 முதல் ரூ. 11.71 வரை மாறுபட்டு நிலவியது. 1990 மார்ச் திங்களில், அதன் விலை ரூ. 9.77 ஆகக் குறைந்தது.

26. சமையல் எண்ணெய் (கடலை எண்ணெய்):

தமிழகத்தில் நிலக்கடலை உற்பத்திக் குறைவின் காரணமாக வும், நிலக்கடலை உற்பத்தியாகும் இதர பெரும்பான்மை மாநிலங் களான குஜராத், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து போதிய வரத்து இன்மையாலும், வெளிச்சந்தையில் தேசிய பால் வளர்ச்சி வாரியத்தின் தலையீட்டின் காரணமாகவும் நமது மாநிலத்தில் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் பாமோலின் எண்ணெய் அளவை மைய அரசு ஒரேயடியாகக் குறைத்தமையாலும், கடலை எண்ணெய் விலை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தது. 1989 ஏப்ரல் திங்களிலிருந்து 1989 செப்டம்பர் திங்கள் வரையிலான காலத்தில் கடலை எண்ணெய் விலை ரூ. 22.08-ல் இருந்து ரூ. 28.71 ஆக உயர்ந்தது. அங்காடிகளில் அந்தந்தப் பகுதியிலிருந்து வரப்பெற்ற புதிய அறுவடை வரத்தின் காரணத்தாலும் 1990 மார்ச் திங்களில் கடலை எண்ணெய் விலை ரூ. 25.67 ஆகக் குறைந்தது.

27. நல்லெண்ணெய்

தமிழகத்தில் எள் உற்பத்தி குறைவின் காரணமாகவும், இதர பெரும்பான்மை உற்பத்தி மாநிலங்களிலிருந்து வரத்து குறைவின் காரணமாகவும், எள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டதா லும், நல்லெண்ணெய் விலையும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க

[1990 ஏப்ரல் 16

வகையில் உயர்ந்தது. 1989 ஏப்ரல் திங்களில் ரூ. 24.77 ஆக நிலவிய நல்லெண்ணெய் விலை 1989 செப்டம்பர் திங்களில் ரூ. 27.02 ஆக உயர்ந்தது. பின்னர் 1989 டிசம்பர் வரை இறங்குமுகமாக (ரூ. 25.96) இருந்தது. பின்னர் 1990 மார்ச்சு திங்களில் அதன் விலை ரூ. 28.84 ஆக உயர்ந்தது.

28. தேங்காய் எண்ணெய்:

கேரளாவிலிருந்து தேங்காய் கொப்பரை வரத்து போதுமான அளவு இருந்தமையால், தேங்காய் எண்ணெய் விலை 1989 ஏப்ரல் திங்களிலிருந்து 1990 மார்ச் திங்களில் ரூ. 34.44-ல் இருந்து ரூ. 30.79 ஆகக் குறைந்து உள்ளது.

29. மிளகாய் வற்றல்:

1989—90 ஆம் ஆண்டு காலத்தில் போதிய வரத்தின் காரண மாக மிளகாய் வற்றிலின் விலை ரூ. 22.61-ல் இருந்து ரூ. 12.35 ஆகக் குறைந்துள்ளது.

30. புளி:

புளியின் விலை ஏறக்குறைய ஒரே சீராக ரூ. 9.10 முதல் ரூ. 9.55 ஆக நிலவியது.

31. தனியா (மல்லி):

உற்பத்தி மையங்களிலிருந்து வரத்து குறைவின் காரணமாக தனியா (மல்லி) விலை ரூ. 9.90-ல் இருந்து ரூ. 11.38 ஆக உயர்ந்தது.

32. வெளிச்சந்தை சர்க்கரை:

வெளிச்சந்தையில் சர்க்கரையின் சில்லரை விலை, பிற மாநிலங்களில் கூடுதலாக இருந்தாலும், நமது மாநிலத்தில் கிட்டத்தட்ட ஒரே சீராக நிலவுகிறது. குடும்ப அட்டைதார ருக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிலோ ஒன்று ரூ. 7.50 என்ற விலையில் 5 கிலோ வெளிச்சந்தை சர்க்கரை வழங்குவதற்கு அரசு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டது. இந்த நடவடிக்கை வெளிச் சந்தையில் சர்க்கரையின் சில்லரை விலை யினை கட்டுப்படுத்துவதில் பேருதவி செய்தது. இதனால் 1989 ஏப்ரல் திங்களிலிருந்து 1989 ஆகஸ்டு திங்கள் வரை வெளிச் சந்தை சர்க்கரையின் சில்லரை விலை ரூ. 7.40-லிருந்துரூ.9.31க்கு உயர்ந்தாலும் 1990 மார்ச்சு திங்களில் ரூ. 8.36 ஆகக் குறைந்தது.

33. விலை கண்காணிப்பு:

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தில் அமைந்துள்ள விலை கண்காணிப்புக் குழு, மாநி லத்தில் வெளிச்சந்தையில் நிலவும் இன்றியமையாப் பொருட்

களின் மொத்த விலை, சில்லரை விலை மற்றும் அவை கிடைக்கும் தன்மை ஆகியவற்றைச் சேகரித்து, வெளிச்சந்தை விலை நில வரத்தைக் கூர்ந்து கவனித்து, அரசுக்கு வார அறிக்கை ஒன்றை அனுப்புகிறது.

34. பொது நடவடிக்கைகள்:

இன்றியமையாப் பொருட்களின் விலை உயரும் போது விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இன்றியமையாப் பொருட்கள் அவ்வப் போது சீராக கிடைப்பதை உறுதி செய்வதற்கு மாவட்ட ஆட்சி யாளர்கள், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரம் மற்றும் கிடைக்கும் தன்மை ஆகியவற்றை கூர்ந்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஆந்திர பிரதேசத்தில் அரிசியை கொள்முதல் செய்து வெளிச்சந்தையில் அரிசி விலையைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. இது போன்று கூட்டுறவு நியாய விலைக்கடைகள் மூலம் நியாயமான விலையில் சர்க்கரையை வழங்கியது. மேலும் சமையல் எண்ணெய் விலையைக் குறைப்பதற்கு, அரசு, எண்ணெய் உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் எண்ணெய் மொத்த விற்பனை வியாபாரி களுடன் கூட்டங்கள் நடத்தி உள்ளது. மேலும், ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்கள் நியாயமான விலையில் கிடைப் பதற்காக அரசு ஓட்டல் உரிமையாளர்களை அழைத்துப் பேசி யுள்ளது.

IV. முக்கிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை அமல்படுத்துதல்:

35. இன்றியமையாப் பொருட்கள் சட்டம் 1955 மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டு ஆணைகள் ஆகிய வற்றை தமிழக அரசு அமல்படுத்தி வருகிறது. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு காவல்துறை துணைத் தலை வரின் கீழ், கட்டுப்பாட்டு ஆணைகளை தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. குற்றப் புலனாய்வுப் பிரிவு தவிர, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையும் இச் சட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

36. கைப்பற்றுதல் மற்றும் பறிமுதல்:

1989 சனவரி திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரையிலான காலத்தில் 6,773 சோதனைகள் செய்யப்பட்டுள்ளன. ரூ. 637.23 இலட்சங்கள் மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதே காலத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ள பொருட்களின் மதிப்பு ரூ. 225.96 இலட்சங்கள் ஆகும். இதே காலத்தில் 2,572 முறைகேடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த காலத் தில் 365 இனங்களில் குற்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன

[1990 ஏப்ரல் 16

37 உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்

உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தை மக்கள் நல்வாழ்வு, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் நல்வாழ்வுத்துறை செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தில் 6 உணவு பகுப்பாய்வு சோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. 1989 சனவரித் திங்கள் முதல்--செப்டம்பர் திங்கள் வரையிலான காலத்தில் 14,265 சட்டபூர்வ மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 1,207 மாதிரிகளில் கலப்படம் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் 362 இனங்களில் குற்ற வழக்குகள் தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் கீழ் இந்தக்காலத்தில் ரூ. 91,640 அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் உதவியுடன் கலப்படம் செய்யும் சமுதாய குற்றவாளிகள் மீது தீவிர நடவடிக்கை மேற் கொள்ளப்பட உள்ளது.

38. எடைகள் மற்றும் அளவைகள்:

தரங்கள், நிர்ணய எடைகள் மற்றும் அளவைகள் சட்டம், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமல்படுத்தி வருகிறது. சட்ட பூர்வ அளவையில் கட்டுப்பாட்டாளர் கீழ், 20 தொழிலாளர் நல ஆய்வாளர்களும், இதர களப் பணியாளர் களும் உள்ளனர். 1989 சனவரி முதல் டிசம்பர் வரையிலான காலத்தில், எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட் கள்) விதிகள் 1977-ன் கீழ் 6,741 குற்ற வழக்குகளும், தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் அமல் சட்டம் 1958-ன் கீழ் 9,215 குற்ற வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. இதே காலத்தில் மேற்சொன்ன சட்டங்களில் முறையே ரூ. 7.80 இலட் சங்கள், ரூ. 15.97 இலட்சங்கள் அபராதத் தொகையாக விதிக்கப் பட்டுள்ளன. இத்தகைய சட்டங்கள் அமல்படுத்துதல் தொடர் பாக, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

V நுகர்வோர் பாதுகாப்பு

39. நுகர்வோர்களது நலனை சிறந்த முறையில் பேணிக் காக்கும் பொருட்டு மைய அரசு 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றி உள்ளது.

40 மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழு:

1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை நடை முறைப்படுத்துவதின் முதல் படியாக, மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழுவினை இவ்வரசு அமைத்துள்ளது. இக்குழுவில் மாநில மற்றும் மைய அரசுகளின் அதிகாரிகள், பொதுத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள், வணிகர்கள், பொது மக்கள்

1990 ஏப்ரல் 16]

சட்டப்பேரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இக்குழு இதுவரை 5 மாநில அளவிலான கூட்டங்களை நடத்தி உள்ளது. நுகர்வோர்களது நலனைப் பாதுகாக்க இக்குழு சிறந்த ஆலோசனைகளைக் கூறியுள்ளது.

41. நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றமும், மாநில அளவில் ஒரு மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையமும் அமைப்பதற்கு வழிவகை செய்கிறது. எனினும், இவ்வரசு முதல் கட்டமாக சென்னை நகரில் ஒரு மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையத்தையும், சென்னை, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் ஆறு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களையும் அமைத்து அருகில் உள்ள மாவட்டங்களையும் இவற்றின் அதிகார வரம்பிற்கு உட்படுத்தியும், செயற்படுத்த முடிவு செய்தது. இருப்பினும் இந்திய உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளபடி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை நிறுவ இவ்வரசு தற்போது தீர்மானித்துள்ளது. மாநில ஆணையத்தையும், மாவட்ட அமைப்புகளையும் நிறுவுவது தொடர்பான மைய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

42. நுகர்வோர் கல்வி

42.1. நுகர்வோர்களை பயிற்றுவிப்பதன் தேவையினை நன்கு உணர்ந்த இவ்வரசு மாநில அளவிலான கருத்தரங்குகளையும், மாவட்ட அளவிலான கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. பொதுமக்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பினை கற்பிக்கும் பொருட்டு, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சூலூர் ஆகிய இடங்களில் இதுவரை 4 மாநில அளவிலான கருத்தரங்குகளும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மாவட்ட அளவிலான 2 கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன.

42.2. தற்போது நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விவரங்களை பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறும் வண்ணம் 5 ஆம் வகுப்பு பாடத் திட்டத்திலும், 9 ஆம் வகுப்பு பாடத் திட்டத்திலும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து பாடம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. மாணவர்கள் உணவுப் பண்டங்களில் உள்ள கலப்படத்தை எளிதாக கண்டறியும் பொருட்டு, மாவட்டக் கல்வி அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நடமாடும் அறிவியல் ஊர்திகளுக்கும் சிறிய பகுப்பாய்வு பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

[1990 ஏப்ரல் 16

43. தன்னியலாய் செயல்படும் நுகர்வோர் அமைப்புகள்

43.1. தன்னியலாய் செயல்படும் நுகர்வோர் அமைப்புகளும் தனி நபர்களும் நுகர்வோர் நலனைப் பாதுகாக்க பெரும் முயற்சி மேற்கொண்டு பணியாற்றி வருகின்றன. அவர்களது முயற்சியை பாராட்டவும், அவர்களை இப்பணியில் மேலும் ஊக்குவிக்கவும், மைய அரசு தன்னியலாய் செயல்படும் நுகர்வோர் அமைப்புகளுக்கென தனித்தனியே தேசிய விருதுகளை வழங்கி வருகிறது. இதே போன்று, இந்த அரசும் நுகர்வோர் பாதுகாப்புக்கென மாநில இளைஞர் விருது ஒன்றையும் ஏற்படுத்தி உள்ளது. மேலும் தன்னியலாய் செயற்படும் நுகர்வோர் அமைப்புகள், பயிற்சி முகாம்களையும், கருத்தரங்குகளையும், பட்டறை கருத்தரங்குகள் நடத்துவதற்கும் நிதி உதவி அளிக்கிறது.

43.2. நுகர்வோர் பாதுகாப்பில் சிறந்த பணியாற்றியமைக்காக மைய அரசின் மூன்றாவது பரிசு ரூ. 30,000-ஐ தென்னூரிலுள்ள திருச்சி மாவட்ட நுகர்வோர் குழு பெற்றுள்ளது என்பதை இங்கே குறிப்பிடுவதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கடந்த 17–3–1990 அன்று புது டில்லியில் நடைபெற்ற நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய தேசிய கருத்தரங்கின்போது, இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்களால் இப்பரிசு வழங்கப் பட்டது.

VI. உமிநீக்கி மானியத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் அரிசி ஆலைகளை நவீனமயமாக்குதல்

44. அரிசியில் கூடுதல் கண்டுமுதலைப் பெறுதல், அதிக சத்துள்ள அரிசியைப் பெறுதல், அதிக விழுக்காடு எண்ணெய் சத்து நிறைந்த தரமான தவிட்டைப் பெறுதல் போன்ற அரிசி ஆலைகளை நவீனப்படுத்துவதால் ஏற்படும் பயன்களைக் கருதி, மத்திய அரசு, அரிசி ஆலையிலுள்ள உமிநீக்கி இயந்திரங்களை நவீனப்படுத்துவதற்காக ''உமிநீக்கி மானியத் தொகை திட்டம்'' ஒன்றைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ் 1989–90 ஆம் ஆண்டிற்குள்ளாக 300 அலகுகள் நவீனப்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு அலகும் ரூ. 7,500 மானியத் தொகை பெறும். இத்தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும். மீதியுள்ள தொகையை இத்திட்டத்தினால் பயன்பெறுவோர் ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்திட்டம், மத்திய அரசு இம்மாநில அரசிற்கு கூடுதல் அலகுகளை ஒதுக்குமானால், 1990–91 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1990 ஏப்ரல் 16]

VII. உணவுப் பொருள் வழங்கல் துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு.

45.1. உணவுத் துறையின்கீழ், காவல் துறையைச் சார்ந்த உணவுப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இப்பிரிவு காவல்துறை துணைத் தலைவர் தலைமையில் இயங்கி வருகிறது.

45.2. உணவுப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு இனிமேல் மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் செயல்படாது என்றாலும், மாநில எல்லையோரப் பகுதிகளில் தொடர்ந்து செயலாற்றிவரும் என இவ்வரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இதன்படி, உணவுப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுப் பிரிவு முழுவதுமாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள்கள் கலப்பட தடுப்புச்சட்டத்தை அமுலாக்குவதில் இப்பிரிவினையும் சம்பந்தப்படுத்தலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இந்நடவடிக்கை, கலப்படதாரர்களுக்கு ஒரு சிறந்த எதிர்நடவடிக்கையாக அமையும்.

VIII. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்:

46. நோக்கம்

அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இதன் நோக்கம் கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவு தானியம் மற்றும் இன்றியமையாப் பண்டங்களைக் கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் அரசின் நலம் பயக்கும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அதற்குத் தேவையான மூலதனம், நிதி ஆதாரங்கள் தேடுதல், தொழில்நுட்பம், போதிய சேவைகள், அறிவுரை, உதவி போன்ற பணிகளை செய்தல் ஆகியன. 1972இல் சுமார் 12 கோடி ரூபாய் அளவிற்கு இருந்த விற்பனை, 1988-89ஆம் ஆண்டில் சுமார் ரூ. 751 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

47. நிறுவன அமைப்பு :

இக்கழகத்தின் முதன்மை அதிகாரியாக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரும் அவருக்குக்கீழ் உதவியாக பல அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மண்டலம் ஆக 20 மண்டலங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் மாவட்ட வருவாய் அதிகாரி அல்லது துணை ஆட்சியாளர்கள் நிலையில் உள்ள அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கழகத்தின் மொத்தப் பணியாளர் எண்ணிக்கை 9,963 ஆகும்.

48. நெல் மற்றும் அரிசி கொள்முதல் :

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் ஒரே முகவராக இருந்து நெல் மற்றும் அரிசி கொள்முதல் செய்கிறது. கழகம் காவிரிப் படுகையில் ஏகபோக கொள்முதல் பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம், நெல் கொள்முதல் செய்கிறது. மொத்த வணிகர்கள் கொள் முதல் செய்யும் நெல் மற்றும் அரிசிக்கும் வர்த்தகர் லெவி திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்படுகிறது.

49. நேரடிக் கொள்முதல் நிலையங்கள் :

சிறு விவசாயிகளின் நலன் கருதி காவிரிப் படுகைக்கு உட் பட்ட தஞ்சாவூர் மாவட்டத்திலும் மற்றும் ஏகபோக கொள் முதல் பகுதிகளிலும் கொள்முதல் பணிக்கென 942 நேரடிக் கொள்முதல் நிலையங்களை இக்கழகம் இவ்வாண்டு திறந்துள்ளது. இந்நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வருடாவருடம் செயல்பட்டு வருவதால், பாதுகாக்கப்பட்ட சேமிப்பு வசதிகள், உலர்த்தும் களம், சாலை வசதி, மின் வசதி கொண்ட நிரந்தரக் கட்டிடம் போன்ற எல்லா வசதிகளுடனும் கூடிய நிரந்தர நேரடிக் கொள் முதல் நிலையங்கள் கட்ட கழகம் ஆரம்பித்து அதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் 35 இடங்களில் ரூ. 76 இலட்சம் மதிப்பீட் டுச் செலவில் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டி முடித் துள்ளது. மேலும், 15 இடங்களில் நேரடிக் கொள்முதல் நிலை யங்கள் கட்டும் பணி வெவ்வேறு நிலைகளில் உள்ளன. மற்றும் 1990–91 நிதி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் அரசு நிதியுதவி பெற்று ரூ. 62.50 இலட்சம் மதிப்பீட்டில் 25 நேரடிக் கொள் முதல் நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

50. இன்றியமையாப் பண்டங்கள் விநியோகம் :

கழகம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், 936 கழக அங்காடிகள் மூலமும் இன்றியமையாப் பண் டங்களை விநியோகம் செய்கிறது. மேலும், தமிழக அரசின் சத்துணவு மையங்களுக்கும் மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் இன்றியமையாப் பண்டங் களை விநியோகம் செய்கிறது. காவல் துறையினர் மற்றும் தீய ணைப்புப் படையினர்க்கும் மலிவு விலையில் இன்றியமையாப் பண்டங்களையும் மற்றும் இலங்கை அகதிகளுக்கு அரிசியையும் வழங்கி வருகிறது.

51. நெல் அரவை :

ஆண்டொன்றுக்கு 3,96,000 மெட்ரிக் டன்கள் அரவை செய் யும் அரவைத்திறன்கொண்ட 19 நவீன அரிசி ஆலைகள் கழகத் துக்குச் சொந்தமாக உள்ளன. நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக்

1990 ஏப்ரல் 16]

டன் அரவைத் திறன் கொண்ட எருக்கூர் பகுதி II நவீன அரிசி ஆலை கட்டும் பணி முடியும் தருவாயிலுள்ளது. மேலும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் திம்மாவரம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாறு, தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்லக்குறிச்சி ஆகிய இடங்களில் தற்போதுள்ள நவீன அரிசி ஆலைகளில் கூடுதலாகச் சில இயந்திரங்கள் பொருத்தி ஒவ்வொரு ஆலையிலும் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் புழுங்கல் நெல் அரவை செய்யும் அரவை திறன் உண்டாக்க கழகம் திட்டமிட்டுள்ளது.

52. அமுதம் பல்பொருள் அங்காடி :

கட்டுப்பாடற்ற பொருட்களை நியாயமான விலையில் விநியோகம் செய்ய 95 அமுதம் பல்பொருள் அங்காடிகள் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

53. அமுதம் தவிட்டு எண்ணெய் :

நாளொன்றுக்கு 12 மணி நேரம் இயங்கினால், 5 மெட்ரிக் டன் எண்ணெய் சுத்திகரிப்புத் திறன் கொண்ட அலகோடு கூடிய 20 மெட்ரிக் டன் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலை ஒன்றும் கழகத்தால் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாலையால் உற்பத்தி செய்யும் சமையல் எண்ணெய் ஏற்கெனவே சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளது.

54. இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுபானக் கடைகள் :

தமிழ்நாட்டில் கழகம் 333 கடைகள் மூலம் இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்து வருகிறது. ரூ. 404 இலட்சங்கள் விற்பனை இக்கடைகளின் மாத இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

55. சேமிப்புக் கிடங்குகள் :

கழகம், ரூ. 2,615 இலட்சம் செலவில் 5.24 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட 112 சேமிப்புக் கிடங்குகளை தமிழகத்திலுள்ள 99 வட்டங்களில் கட்டியுள்ளது. தற்போது ரூ. 68 இலட்சம் மதிப்பீட்டில் 11,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த கிடங்குகள் 1990 ஜூன் திங்களுக்குள் கட்டி முடிக்கப்படும். நடப்பு நிதியாண்டில் (1990–91) 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

56. IX. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் :

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 1958–59ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வருகிறது. தமிழ்நாடு முழுவதும் விவசாய விளை பொருட்கள், விதைகள், உரங்கள், விவசாயச் சாதனங்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருள்களுக்கு விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு வசதியை இந்நிறுவனம் அளிக்கிறது.

57. பங்கு மூலதனம் :

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை மைய அரசால் ரூ. 600 இலட்சத்திலிருந்து ரூ. 800 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மூலதனத் தொகையை ரூ. 800 இலட்சத்திலிருந்து ரூ. 1,000 இலட்சமாக உயர்த்த மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பங்கு மூலதனத் தொகை 50 : 50 என்ற விகிதத்தில் மாநில அரசு மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தாலும் செலுத்தப்படுகிறது. 1989ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாள் முடிய இந்நிறுவனத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 5.91 கோடியாகும்.

58. சேமிப்புக் கொள்ளளவு :

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திடம் தற்போது, மாநிலம் முழுவதும் 69 இடங்களில் 5,85,572 மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் சொந்தமாகவும் மற்றும் வாடகை அடிப்படையிலும் இயங்கி வருகின்றன.

59. சேமிப்புத் திறன் அதிகரிக்கும் திட்டங்கள் :

59.1. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கூடுதல் சேமிப்பு இலக்கான 2 இலட்சம் மெட்ரிக் டன்களைவிட அதிகமான சேமிப்பு கிடங்கு வசதிகள் ரூ. 1,063 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப் பட்டுவிடும்.

59.2. 1990-91ஆம் ஆண்டு முதல் தொடங்கும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இந்நிறுவனம் 300 இலட்சம் செலவில் சுமார் 50,000 மெட்ரிக் டன்கள் கூடுதலாக சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28ஆம் நாள் இந்நிறுவனக் கிடங்குகளின் சொந்தமான மற்றும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட சேமிப்பு கிடங்குகளையும் சேர்த்து மொத்தம் 5,91,774 மெட்ரிக் டன்களில் பயன்படுத்தப்பட்ட சேமிப்பு கிடங்குகளின் அளவு 3,20,649 மெட்ரிக் டன்கள் ஆகும். இவற்றின் பயன்பாட்டு அளவு 54 விழுக்காடாகும். 1989-90இல் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மேல்நல்லாத்தூரில் 1989 ஆம் ஆண்டு, மே திங்கள் 5 ஆம நாள் முதல் ஆறுமாத காலம் 60,000 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு தனியார் பிணை காப்பு (Bonded ware house) கிடங்கு வசதியை பிரத்தியேகமாக, மாநில வர்த்தகக் கழகத்திற்கு ஏற்படுத்தி நடத்தியுள்ளது.

1990 ஏப்ரல் 16]

60. நிதிநிலை :

இந்நிறுவனம் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் பின்வருமாறு :—

ஆண்டு.	இலாபம் (வருமான வரிக்கு முன்).
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
1984–85	125.23
1985–86	183.84
1986–87	224.52
1987–88	204.40
1988–89	63.42

61. இதர நடவடிக்கைகள்.

61.1. வாகன முனையம் :

இந்நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மாதவரத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ள அதன் வாகன முனையத்திற்கு அருகிலுள்ள சுமார் 3 ஏக்கர் நிலத்தில் ஒரு சேமிப்புக் கிடங்கு கட்ட உத்தேசித்துள்ளது.

61.2. பூச்சி ஒழிப்புப் பணித் திட்டம் (DESS) மற்றும் விவசாயிகள் விரிவாக்கப் பணித் திட்டம் (FESS):

இந்நிறுவனம் பூச்சி ஒழிப்புப் பணியின் கீழ் சேமிப்புக் கிடங்குகள் தவிர ஏனையக் கிடங்குகளில் பூச்சி ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்தவும் தொடங்கி உள்ளது. இதைத் தவிர, கிராம அளவில் விவசாயிகள் பயனடைய விவசாய விரிவாக்கத் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1990 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் தேதிக்குள் 500 விவசாயிகள் பயனடையும் வகையில் விவசாய விளை பொருட்களை விஞ்ஞான ரீதியாக சேமிக்கவும், உணவு தானியங்களை ஈரம், பறவைகள், வண்டுகள், பூச்சிகள் இவற்றால் ஏற்படும் சேமிப்பு இழப்பினைத் தடுக்கவும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதில் பங்குபெறும் விவசாயிகளுக்கு உலோக குதிர் (Metal Bin) ஒன்றையும் இந்நிறுவனம் இலவசமாக வழங்குகிறது.

61.3. பயிற்சி :

இந்நிறுவனம் விஞ்ஞான ரீதியான சேமிப்பு மற்றும் தானிய பாதுகாப்பு முறைகள் பற்றி இந்நிறுவன ஊழியர்கள், உணவுப் பொருள் வழங்குதுறை அலுவலர்கள், அரசு சார்புடைய நிறுவனங்களான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு வாணிபக் கழகம் மற்றும் அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநில சேமிப்புக் கிடங்கு நிறுவன அலுவலர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS